

கேள்வி நேரம்

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

கேள்வி நேரம்

கலை, இலக்கிய, சமூக, ஆன்மிக, அரசியல் பேட்டிகள்

எஸ். லெக்ஷ்மி நரசிம்மன்

சாயீஸ்வரி
பப்ளிகேஷன்ஸ்

நூலின் பெயர் : கேள்வி நேரம்
பொருள் : கலை,இலக்கிய,சமூக,ஆன்மிக, அரசியல் பேட்டிகள்
ஆசிரியர் : எஸ்.லெக்ஷ்மிநரசிம்மன் ©
முதல் பதிப்பு : 2008 - டிசம்பர்
பக்கங்கள் : 192 டெம்மி சைஸ் 1/8
விலை : ரூ.120
ஒளி அச்சும் வடிவமைப்பும் : எல்.பத்மபிரபா
அட்டைடிசைன் : ஜெ.சுந்தர்
அச்சு : ஸ்ரீ ஜெயம் கிராஃபிக்ஸ் 0 98403 90103
வெளியீடு : சாயீஸ்வரி பப்ளிகேஷன்ஸ்
முகவரி : எண்:2 ஏ / 2 , தாராசந்த் நகர் மெயின்ரோடு விருகம்பாக்கம் சென்னை - 92
ஃபோன் : 044 2377 3311
மொபைல் : 0 98403 25245

Title : Kelvineram
Subject : Interviews
Author : S.Lakshminarasimhan ©
First edition : 2008 - December
Pages : 208 - Demi Size 1/8
Price : Rs.120
Typeset : L.Padmaprabha
Wrapper : J.Sundhar
Printed at : Sri Jeyam Graphics 0 98403 90103
Published By : Sayeeswari Publications No: 2 A / 2, TharachandNagar Main Road Virugambakkam Chennai - 600 092
Phone : 044 2377 3311

1 48-3

உள்ளே.......

முன்னுரை

1 கலை

2 இலக்கியம்

3 சமூகம்

4 ஆன்மிகம்

முன்னுரை

ஒரு பத்திரிகையாளனுக்கு பேட்டி எடுப்பதை விட வேறு ஒரு சுவாரஸ்யமான விஷயம் இருக்க முடியாது. அதில் அப்படி ஒரு அலாதி சுகம்.

சம்பிரதாயமாக நாலு ரெடிமேட் கேள்விகளைக் கேட்டு பதில் பெறுவதல்ல பேட்டி அது ஒரு உரையாடலாக, உளப்பூர்வமாக இருக்க வேண்டும். 'சார்..... பேட்டிய ஆரம்பிக்கலாமா?' என்பது தான் எனது முதல் கேள்வியாக இருக்கும். மற்ற கேள்விகள் எல்லாம் பேட்டி அளிப்பவர்கள் தரும் பதில்களில் இருந்து தானாகவே உருவாகும். இது மாதிரி சந்திப்புகளில் ஒருவித உயிர்ப்பும், சுவாரஸ்யமும் கலந்து இருக்கும்.

பேட்டியின் போது நான் கவனமாக இருக்கும் இன்னொரு அம்சம் 'பாடி லாங்வேஜ்'. நான் நிருபர் என்பதற்காகவே ஒய்யாரமாக சாய்ந்து கொண்டு கால்மேல் கால் போட்டபடி, தடித்த குரலில் கேள்விகளாய் கேட்டு அவர்களை மடக்கிவிட நினைக்க மாட்டேன். ஒரு நிருபரின் சாதனை என்பது அதிக விவரங்களோடு கூடிய ஆழமான பதில்களைப் பெறுவது தான்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் பேட்டி தருபவர்களைத் தாராளமாகப் பேசவிட்டு விட்டு மிக உன்னிப்பாக அவர்களை வேடிக்கை பார்ப்பதிலும் அப்படிப் பார்த்துக் கொண்டே கவனமாகக் குறிப்புகள் எடுப்பதிலும் தான் எனக்கு ஆர்வம் அதிகம்

அதனால், பேட்டியின் போது பெரும்பாலும் நாற்காலியின் நுனியில் உங்கார்ந்து கொண்டு கூர்ந்து கவனிப்பதே எனது வாடிக்கையாகி விட்டது.

திருப்பனந்தாள் ஆதீனம் எஜமான் சுவாமிகளை பேட்டி எடுக்கப் போனபோது நிலைமை வேறு மாதிரி ஆகி விட்டது. அவரைப் பார்த்த முதல் நிமிஷத்தில் இருந்து சுமார் ஒரு மணிநேரம் வரையிலும் என்னை நிற்க வைத்தே பேசிக் கொண்டு இருந்தார். அவரது உதவியாளர்களும் பவ்யமாக கை கட்டிக் கொண்டு கூடவே நிற்கிறார்கள். அவர் என்னை உட்காரச் சொல்லாமல் பேசிக் கொண்டே போகிறார். சரி.... வேறு வழியில்லை...... என்று நினைத்துக் கொண்டு, நின்றபடியே குறிப்புகள் எடுத்த போது, "அதெல்லாம் அப்புறம் எழுதிக்குங்க, முதல்ல அடிப்படையான விஷயத்த பேசுவோம்" என்று தடுத்து விட்டு மேலும் பேசிக் கொண்டே போகிறார்.

நானும் கால் வலிக்க கேட்டுக் கொண்டு இருந்தேன். இந்த விஷயத்தில் இது வரையிலும் எனக்கு வருத்தமோ, சலிப்போ, கோபமோ ஏற்பட்டதில்லை. இதை ஒரு தொழில் நேர்த்தியாகவே நினைக்கிறேன்.

பேட்டியின் போது இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் அவர்கள் பேசும் அன்னஃபிஷியலான, "ஆஃப் த ரெக்கார்ட்" செய்திகள். இது போன்ற செய்திகள் எழுதப்படாதவை. ஆனால் சக நிருபர்களிடமோ, ஆசிரியர் குழுவிலோ கிண்டலடித்துப் பேசப் பயன்படும்.

பேட்டியின் போது சில தர்ம சங்கடங்கள் ஏற்படுவதும் உண்டு. பேட்டி தருபவர்களில் சிலர் ஆர்வ மிகுதியில், அவர்கள் பேசுவதையெல்லாம் நாம் குறிப்பெடுக்க வேண்டும் என ஆசைப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் 'இதை முக்கியமா எழுதிக்கங்க' என்று கட்டாயப்படுத்தி குறித்துக் கொள்ளச் சொல்வார்கள். 'இது தேவையில்லாத 'போர'டிக்கிற விஷயம் சார்...' என்று அவர்களிடம் அப்போது சொல்லவும் முடியாது. வேறு வழியில்லாமல் குறிப்புகள் எடுத்துக் கொண்டு பிறகு அவற்றைத் தேடி நீக்குவதற்குள்ளும் போதும் போதும் என்றாகி விடும்.

இன்னும் சிலர் பேட்டிக்கு வரச் சொல்லிவிட்டு வாயே திறக்க மாட்டார்கள். நடிகர் செந்தில் இந்த ரகம். அவரிடம் பேட்டி கண்டு

இரண்டு பக்கம் மேட்டர் போடுவதற்கு தனி சாமர்த்தியம் வேண்டும்.

எல்லாவற்றையும் மீறி, சமூக, அரசியல் பேட்டிகளில் தான் எனக்கு விருப்பம் அதிகம்.அதை இந்நூலில் பார்க்கலாம்.

தமிழ் பத்திரிகைச் சூழலில், அவர் எப்பேர்ப்பட்ட ஜாம்பவனாக இருந்தாலும் ஒரே பத்திரிகையில் முணுமுணுக்காமல், முகம் சுளிக்காமல் கடைசி வரை நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு விசுவாசமான ஆளாக தொடந்து கை கட்டி இருக்க வேண்டும். ஒரு வேளை நிர்வாகம் தன்னைவிட தகுதி குறைந்த ஒருவரை தனக்கு மேலாக நியமித்தாலும் பொறுமையோடு தான் இருக்க வேண்டும். 'வேல்யூஸ்' பற்றியெல்லாம் பேசக்கூடாது.

பத்திரிகை அலுவலக பதவி அந்தஸ்துடன் நிரந்தர மாத சம்பளம் மற்றும் போனஸ் வாய்ப்புடைய பத்திரிகையாளர்களுக்கே இது தான் கதி என்றால், இதைவிட மோசமான கதி தான் என்னைப் போன்ற ஃப்ரீலான்சர்களுக்கு.

கன்வேயன்ஸ் கூட தரமாட்டார்கள். ஒரு பிட் நியூஸ் வரவேண்டும் என்றாலே பத்து தடவை லோ...... லோ..... என அலைய வேண்டும்,

இவற்றையெல்லாம் தாண்டித் தான் பத்திரிகைத் துறையில் வெற்றி பெற முடியும்.

சம்பந்தப்பட்ட பத்திரிகையின் பொறுப்பான பதவியில் இருக்கும் ஆசிரியர்களால், ஃப்ரீலான்சர்களுக்கு பெரிதாக பண உதவியையோ, பதவி வாய்ப்பையோ தரமுடியாவிட்டாலும் நல்ல மேட்டர் அல்லது நல்ல பேட்டி என்றால் அதை வாங்கி பிரசுரித்து அங்கீகரிக்க அவர்கள் தயங்கியதில்லை.பல்வேறு காலகட்டங்களில் அப்படிப் பிசுரமான பேட்டிகள் தான் இவை.

தராசு, இதயம் பேசுகிறது, விண்நாயகன், அம்பலம்.காம் மற்றும் டைம்ஸ் இன்று -வில் இந்த பேட்டிகள் வெளிவந்தன.

இவற்றை பிரசுரித்து என்னை பெரிதும் உற்சாகப்படுத்திய ஆசிரியர்கள் திரு.மதன், திரு.ராவ், திரு.தராசுஷியாம், டாக்டர். திருப்பூர்கிருஷ்ணன், திரு. மா.முருகன்,ஆகியோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் உள்ள ஆன்மிக பேட்டிகளில் பல நான் தற்போது ஆசிரியராக உள்ள ஸ்ரீ சாயிமார்க்கத்தில் வெளிவந்தவை.

ஸ்ரீ சாயிமார்க்கம் சார்பாக இணைய இதழ் ஒன்றுக்கு நான் அளித்த பேட்டியும் பிற்சேர்க்கையாக இதில் இடம் பெற்றுள்ளது.

இதற்கு முன் எஸ்.எல். நரசிம்மன் என்ற பெயரில் நான் இலக்கிய வாதிகளை பேட்டிகண்டு எழுதிய 'எழுத்தாளர் டைரி' நேர்காணல் தொகுப்பு, சாயிபக்தர்கள் மற்றும் பிரபலங்களை பேட்டிகண்டு எழுதிய 'பயப்படாதே நான் இருக்கிறேன்' பேட்டிகள் தொகுப்பு, பல்வேறு பேட்டிகள் மற்றும் பல்வேறு பத்திரிகைகளில் வெளியான சமகால கட்டுரைகள் அடங்கிய'பெண்ணியம் - சமூகம்' ஆகிய நூல்களுக்கு வாசகர்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது.

அது போன்ற வரவேற்பு 'கேள்வி நேர'த்திற்கும் இருக்கும் என நம்புகிறேன்.

எஸ். லெக்ஷ்மி நரசிம்மன்

கே. பாலச்சந்தர்

இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர், புது வருடம் பிறக்கும் ஒவ்வொரு ஜனவரி முதல் தேதியிலும், ஷூட்டிங் நடத்துவதை இன்று வரையிலும் கட்டாய வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார். தற்போது, புது நூற்றாண்டும் சேர்ந்து கொண்டதில் அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஷூட்டிங் ஏற்பாடுகளில் பிஸியாக இருந்தபோதும், பேட்டிக்காக நாம் அனுகியதும் உடனடியாக ஒப்புக்கொண்டார். அவர் அளித்த பேட்டியில் இருந்து சில பகுதிகள்:

தமிழ் சினிமாவில் வளர்ச்சி எப்படி இருக்கும் என்று எதிர்ப்பார்க்கிறீர்கள்?

தமிழ் சினிமான்னு இல்லை. பொதுவாக சினிமாத்துறையில் ஒரு விதமான வளர்ச்சி என்பது இருந்து கொண்டுதான் இருக்கிறது. நம் தமிழ் சினிமாத் துறையைப் பொறுத்தவரை, அதில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் முதல் தயாரிப்பாளர்கள் வரை பலரும், ரசிகர்கள் பார்வையில் புதிய நூற்றாண்டை நம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் எதிர்ப்பார்த்துக் கொண்டுள்ளார்கள். ஏனென்றால், தற்போது தமிழ் சினிமா பலவித பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. தியேட்டரில் வந்து சினிமா பார்க்கும் ரசிகர்கள் எண்ணிக்கை குறைந்து போய் விட்டதோ என்று எண்ணும்படி வீட்டிலேயே சினிமா பார்ப்பதற்கான வாய்ப்புக் கள் கூடி உள்ளது. வி.சி.டி கேபிள் போன்றவற்றின் இவ்வகை பாதிப்பு அடுத்த நூற்றாண்டிலாவது இல்லாமல் நிலைமை சீராகிவிடும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை.ஏதோ ஒருவித

நம்பிக்கைல தான் நாங்க இருக்கோம். சினிமாத் தொழில்ல உள்ளவனுக்கு வேற தொழில் தெரியாது, அதை நம்பறது தான் வாழ்க்கை. வானம் பார்த்த சிம மாதிரி ஆச்சு சினிமா. வானத்தப் பார்த்து நிக்கற விவசாயி மாதிரி நாங்க இருக்கோம்.

சின்னத்திரை வளர்ச்சியும், அதில் சினிமாவின் தாக்கமும் கூட அந்தப் பாதிப்புக்கு ஒருவகை காரணம்னு சொல்லலாமா?

இங்க பிரச்சனையே பெரிய பட்ஜெட் படம், சின்ன பட்ஜெட் படம்கிறதுதான். அதாவது ஒரு படம் ஓடினா சூப்பர் ஹிட் ஆகும். இல்லாட்டி ஃபிளாப் ஆயிடும். சுமார் ரகம், அதற்கும் மேல் ரகம் னு தினுசா தினுசா படம் எடுக்கறாங்க. ஒரு இயக்குநர்ங்கற முறையில எனக்கு சந்தோஷம் தான். ஆனா, படையப்பாவும் வரணும். முதல்வனும் வரணும். அதேபோல வீடு மாதிரி சினிமாக்களும் கலந்து வரணும். அதற்கு அரசாங்கத்தோட ஒத்துழைப்பு தேவையா இருக்கு. குறிப்பா, வரிப் பிரச்சினை. மற்ற மாநிலங்கள்ல இருக்கிற மாதிரி எட்டு சதவீதமா வரி விகிதத்தைக் குறைச்சா குறைந்த பட்ஜெட் படங்களுக்கும் உயிர் கிடைக்கும். அரசு இதற்கு அவசியம் கை கொடுக்க வேண்டும்.

இது மாதிரி பிரச்சினைகளால் தான் நீங்கள் சின்னத்திரை பக்கம் வந்து விட்டீர்களா?

இதற்கெல்லாம் பயந்து போயோ, மார்க்கெட் இல்லாமலோ நான் சின்னத்திரை பக்கம் வரவில்லை. டிவி. எனக்கு comfortable - ஆக இருக்கிறது. சினிமா- அளவுக்கு டென்ஷன் இல்லை. அதுதான் காரணமே தவிர, சினிமாவில் பிழைக்க முடியாமல் அங்கு போய் விடவில்லை. நான் டி.வி. க்கு வந்தபோது, மார்க்கெட் இழந்து விட்டதாகக் கூறினார்கள். ஆனால், இப்போது சினிமா ஆட்கள் பலர் டிவி.க்கு வந்துள்ளனர். நான் சினிமாவை விட்டுவிட்டதாகவும் அர்த்தம் இல்லை. புது சினிமா எடுக்க உள்ளேன். அந்த முயற்சி பல வருடங்களாகத் தள்ளிப் போடப்பட்டே வந்தது. இப்போது கைகூடி விடும்.

நாயகன் நாயகிக்கு முக்கியத்துவம் தருவதுபோல் அல்லாத விஷுவல் எஃபெக்டுடன் கூடிய சினிமா டிரெண்ட் வருமா?

டிரண்ட்டுன்னு பார்த்தா அப்படியும் இருக்கு. இப்படியும்

கேள்வி நேரம்

இருக்கு. ரஜினி படத்தை உதாரணத்துக்கு எடுத்துக்கிட்டா, அது ரஜினிக்காகத்தான் ஓடும். வெறும் சினிமா பார்த்தே இயக்குநர்களான இளைஞர்கள் இதைச் சரியா புரிஞ்சுக்கனும். சப்ஜெக்டை மட்டும் ஸ்ட்ராங்கா நம்பி படம் எடுக்கற நிலை வரணும். அப்பத்தான் அவங்களும் ஃபீல்டுல நிற்க முடியும்.

ஒரு படம் டைரக்ட் பண்ணிட்டு அடுத்த படத்துல காணாமப் போயிடற சூழல் அப்ப இருக்காது. ஒரு நடிகன் தன்னோட இமேஜையே நம்பி இருக்கணும். ஆனா, டைரக்டர் மக்களோட இமேஜை நம்பி இருக்கணும். நல்ல கதை சொல்றதுல புத்திசாலித்தனமா இருக்கணும். அப்பத்தான் அவங்களுக்கு நல்லது. அதோட, பெரிய பட்ஜெட் பட ஆதிக்கத்தோட போட்டிகளையும் அப்ப சமாளிக்க முடியும். போகப் போக இந்தப் போட்டி அதிகமாகும். இந்தப் பிரச்சினை அப்படியே இருக்காது. ஏதேனும் மாற்றங்கள் ஒருவேளை வரலாம்.

நல்ல கதை என்று சொன்னீர்கள். அது இப்போதைய 'ஃபார்முலா' சினிமாவில் இருந்து எந்த அளவிற்கு வித்தியா சப்படும் என்று எதிர்பார்க்கலாம்?

சின்னச் சின்னதாதான் மாற்றங்களை நாம் எதிர்பார்க்க முடியும். இங்க சக்ஸஸ்ஃபுல் ஃபார்முலான்னு பார்த்தா லவ்தான். லவ்தான் முக்கியம்னு நினைக்கறாங்க. லவ் சப்ஜெக்ட் எடுத்தாதான் படம் ஓடும்னு நம்புறாங்க. அது சரியான காரணமா எனக்குத் தோணலை. மரோசரித்ராவை எடுத்தேன். எல்லோரும் லவ் பக்கம் போனதும் நான் லவ் சப்ஜெக்டை விட்டுட்டேன்.

ஏன்னா, அந்த லவ்ங்குற வரையறைலேர்ந்து சினிமா சப்ஜெக்ட் மாறுபடணும்னு ஆசைப்படறேன். இன்னைக்கு 'முதல்வன்' வேற ஃபார்மட். ஆனா, அதே ஷங்கர் ஆரம்பத்தில் லவ்வை வெச்சுத்தான் எடுத்தார்.

இங்க என்னாச்சுன்னா, எதுக்கெடுத்தாலும் அசத்தணும்.இந்த அசத்தணும்கிற வார்த்தைக்கு எனக்கு அர்த்தம் தெரியலை. அசத்தி அசத்திதான் ஜனங்களைப் பார்க்க வைக்கணும்னு நினைக்கறாங்களே தவிர, கதை சொல்லி ரசிகர்களை இழுக்கணும்கிற சூழ்நிலை இல்லை.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

நல்ல கதையை நல்ல முறைல இன்னைக்குப் படமா எடுத்தா ஓடாதுங்கற நிலை இருக்கு. 6000 பேரை ஒரு ஃப்ரேமுக்குள்ள கொண்டு வரணும். இதுதான் சினிமாவான்னு பார்த்தா இது மட்டும் சினிமா இல்லைங்கறதுதான் என்னோட கருத்து. அதாவது, ஒட்டுமொத்த ரசிப்புணர்வு ஜனங்களுக்குப் பரவலா வரணும். அப்ப அனைத்துவித படங்களும் ஓடும்.அந்த உணர்வு நிலை வந்தா டிரெண்ட் மாறும். அது வருமாங்கறது கஷ்டம்தான். அரங்கேற்றம் மாதிரி இப்ப ஒரு படம் நானே எடுத்தா ஓடுமாங்கறது சந்தேகம்தான்.

சினிமா வளர்ச்சி என்பது ஒருபுறம் இருக்க சினிமாத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மட்டும் பின்தங்கியே உள்ளது. பெப்ஸி தலைவர் என்ற முறையில் இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

தலைவர் என்ற முறையில் இந்த உன்மையை முதலில் ஒப்புக் கொள்கிறேன். இருபதாயிரம் தொழிலாளர்கள் என்றால், அவர்களில் பத்து சதவீதம் பேருக்குக்கூட தொடர்ச்சியாக வேலை இல்லை. மற்ற துறைகளில் இருக்கும் தொழிலாளர்களின் நிலைக்கும் இவர்களுக்கும் இடையே பெரிய வித்தியாசம் ஏதும் இல்லை. ஒரு தொழில் மட்டுமே தெரிந்தவர்கள் வேறு தொழிலுக்குப் போக முடியாத நிலையில், இது போன்ற நிலையும் சேர்ந்து கொள்வது அவர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்குகிறது.

நம் சமூகத்தில் மற்ற துறை தொழிலளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும்போது இவர்களின் நிலையும் உயர வாய்ப்புள்ளது. தொழிலாளர்களின் இந்த வரையறுக்கப்பட்ட சமவிகித வாழ்க்கை நிலை, ஒரு விதமான சமூக விநோதம் தான்.

கலைத்திறமையை, சமூக மாற்றத்திற்கு விழிப்புணர்வுக்குப் பயன்படுத்துவது என்ற நிலை மாறி, சமூக அக்கறை சார்ந்த விஷயங்களை கலை வியாபாரத்துக்குப் பயன்படுத்துவதாக உங்கள் மீது கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி?

உன்னால் முடியும் தம்பி எடுத்தேன். அதைப் பார்த்து திருந்தியவர்கள் பலர். அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்கள் அதற்கு ஆதாரம். 'வானமே எல்லை' படத்தில் தற்கொலை முயற்சி தப்பு என

மனம் திருந்துவதாக எடுத்திருந்தேன். நம்பிக்கையோடு கூடிய Struggling உணர்வுகளையே நான் படம் பிடிக்கிறேன். 'உன்னால் முடியும் தம்பி'யிலேயே தன்னம்பிக்கையின் முக்கியத்துவம் பற்றிச் சொல்லியுள்ளேன். சமூக விழிப்புணர்வு விஷயங்களை ஒரு பெரிய நாவலாக எழுதுவதைவிட அதை விஷுவலாகக் காட்டும் போது பசுமரத்தாணி போல பதிந்துவிடுகிறது. சமூக விழிப்புணர்வுகளுக்கு ஏதோ என்னால் ஆனதைச் சிறுதுளியாகச் செய்துள்ளேன். அதை எப்படி வியாபாரத்துக்குப் பயன் படுத்துவதாகச் சொல்கிறீர்கள்? (சிரிப்பு)

ரஜினி, கமல் இருவரும் நீங்கள் அறிமுகம் செய்து வைத்தவர்கள். அதுபோல் இன்றைய சூழலில் அவர்கள் இடத்தைப் பிடிக்கிற திறமை இருப்பதாக நீங்கள் எந்த இளம் ஹீரோவைக் கருதுகிறீர்கள்?

ரஜினியை நான் அறிமுகப்படுத்தியபோது, அவர் ஒரு முன்னணி நடிகராக வருவார் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், இந்த அளவு எட்ட முடியாத உயரத்திற்கு வருவார் என்று நான் அப்போது நினைத்திருக்க வாய்ப்பில்லை. முன்னேற்றம் என்பது அவரவரின் தனிப்பட்ட திறமையைப் பொறுத்தது என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

அவள் ஒரு தொடர்கதை' பார்த்துவிட்டு பாரதிராஜா எனக்கு அப்போது 12 பக்கத்துக்கு லெட்டர் எழுதியிருந்தாராம். அதேபோல், அவர் நாடகம் போட்ட போது அதைப்பார்க்க என்னைக் கூப்பிட வந்தாராம். இதெல்லாம் எனக்கு அப்போது தெரியாது. பாரதிராஜா சொல்லும் போது கூட எனக்கு அது பற்றி ஞாபகம் இல்லை. இப்போதும் அவரைப் பார்க்கிற போதெல்லாம் "எப்படியாவது உன் லெட்டரைத் தேடி எடுத்துப் பதில் எழுதறேம்ப்பா" என்று சொல்வேன். எதற்குச் சொல்கிறேன் என்றால் பாரதிராஜா இப்படி வருவார் என அன்றைக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஜீனியஸ் என்பது அவரவரின் உள்ளத்திற்குள் உள்ளது. நாம் சொல்வதைவிட, சொல்லாமல் பலர் சாதனைகள் புரியக்கூடும்.

'ரஜினி, என் வழி தனி வழி என்கிறார். அது என்ன வழி என்று சொல்ல வேண்டும்' என்று பேசியிருக்கிறீர்கள். இதற்கு அர்த்தம் என்ன?

அதற்கு அர்த்தம், அவர் அரசியலுக்கு வரவேண்டும் என்று சொல்வதாக அல்ல. அரசியலுக்கு வந்தோ, வராமலோ இவர் ஏதாவது செய்ய வேண்டும். சினிமாவில் இருந்து கொண்டே அவர் இதைச் செய்யலாம். ஏனென்றால் அவர் ஒரு பெரிய சக்தியாக இன்று இருக்கிறார். அந்தச் சக்தி ஆக்க சக்தியாகப் பயன்பட வேண்டும் என்பது என் விருப்பம். அது பற்றி ரஜினி தீர்மானம் பண்ணினால் நல்லது என்று நினைக்கிறேன். இத்தனைக்கும் நான் அவரிடம் இதுவரை அரசியல் பற்றிப் பேசியது கூட இல்லை. ரஜினி தனது 'இமேஜ்' மூலம் புகழ் பெற்று, இன்னும் பல சேவைகள் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். அது எப்படிப்பட்ட வழி என்பதை அவர் தான் சொல்ல வேண்டும்.

இந்த புதிய நூற்றாண்டில் தனிப்பட்ட முறையில் உங்களுக்கு வேறு ஏதேனும் விருப்பங்கள் உள்ளதா?

தனிப்பட்ட விருப்பு என்று பார்த்தால் 2000 ஆண்டு அனைவருக்கும் அமைதியை, நிம்மதியைத் தரும் ஆண்டாக இருக்க வேண்டும். செய்தித் தாள்களில் படிக்கும் வன்முறைச் செய்திகள் மனசை வேதனைப்படுத்துகிறது. சாவு இன்று சகஜமாகிவிட்டது. ஒட்டு மொத்த உலகமே வேறு யார் கையிலோ போய்க் கொண்டிருக்கிறதோ என்று பயப்படும்படி வன்முறை, பயங்கரவாதம் அதிகமாகி விட்டது. பாருங்கள் .இந்திய விமானத்தைக் கடத்திக் கொண்டு போய் அப்பாவி மக்களைத் தீவிரவாதிகள் நாட்கணக்கில் மரண பயத்தில் தள்ளி இருக்கிறார்கள். நினைத்தால் நெஞ்சு வலிக்கிறது. இது போன்ற போக்குகள் மாறி, அமைதி நிலவ ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

நடிகர் விவேக்

இந்திரவிழா ஷூட்டிங்கில் 'பிஸி'யாக இருந்த நடிகர் விவேக் சொன்னார்:

சென்னை அது பாட்டுக்கு அசுர வேகத்துல மாறித்தான் போயிருக்கு. நான் முன்ன பார்த்த மெட்ராஸ் வேற. இப்ப இருக்கிற சென்னை வேற.

சென்னையோட இந்த மாற்றத்துல நெகடிவ், பாஸிடிவ் இரண்டுமே இருக்கு. சென்னையில வீடெல்லாம் பெரிசு பெரிசா இருக்கு. பார்க்க பளபளப்பா அழகா இருக்கு. ஆனா, வீட்டுக்குள்ள போய்ப் பார்த்தா ஃபேமிலி இருக்கமாட்டேங்குது. முன்ன எல்லாம் கூட்டுக் குடும்பத்துல தாத்தா, பட்டி, பெரியம்மா, சித்தி, மாமன், மச்சான்னு ஒரு பட்டாளமே இருக்கும். இப்ப என்னடான்னா புருஷன் பொண்டாட்டியே நேர்ல பார்த்துப் பேசிக்கறது அபூர்வமாயிடுச்சு.

புருஷன் பொண்டாட்டி இரண்டு போரும் கை நிறைய அதிகமா சம்பாதிக்கிறாங்க. சொந்தக் கால்ல நிக்கறதுனால் அப்படியே டைவர்ஸும் வாங்கிக்கிறாங்க.

புதுசு புதுசா ஏராளமான மாடர்ன் மருந்துகள் வந்துடுச்சு. ஆனா வியாதிகள் குணமாகலை. வியாதிகளைத் தீர்க்க முடியாது. கன்ட்ரோல்லதான் வைக்க முடியும்னு வியாக்கியானம் சொல்றாங்க. முன்ன இருந்த ஆரோக்கியம் சென்னையில இப்ப இல்லை.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

டிவி. ஒளிபரப்புகள் எல்லாம் ஏகத்துக்கு மாறிப்போயிடுச்சு. முன்ன ஒலியும், ஒளியும் போடுவாங்க. ஊரே ஒரு டிவி.க்கு முன்னாடி திரண்டு வந்து உட்கார்ந்து காத்திருந்து பார்ப்பாங்க. இப்ப சேனலைத் திறந்தா சுனாமி மாதிரி ஒரே 'ஒலியும் ஒளியும்' தான் கொட்டுது. ஒலியும், ஒளியும்– க்கு முன்ன இருந்த 'வேல்யூ' இப்ப இல்லை.

டாக் ஷோஸ், தங்கம் பரிசு, மொத்தமா பணம் பரிசு ன்னு டிவி.யே வீடா மாறிப்போயிடுச்சு. டிவி.தான் உலகம் ஆயிடுச்சு.அதுலயும் இந்த அட்வர்டைஸ் மென்ட்ஸ். இந்த கமர்ஷியல் பிரேக்ல தான் பல வீடுகள்ல டின்னர் பிரேக்கே நடக்குது. டிவி. பார்த்துக்கிட்டே தட்டுல ஊத்த வேண்டிய சாம்பாரை தரைல ஊத்திடறாங்க.

தென்றலா இருந்த பெண்கள் புயலாயிட்டாங்க. அப்ப எல்லாம் பெண்கள் நைட்டி போட்டுகிட்டு ஒரு ரூம்ல இருந்து இன்னொரு ரூமுக்கு போகவே கூச்சப்படுவாங்க. இப்ப காய்கறி வாங்குறதுக்கு ஒரு சின்ன டவலை மேல போட்டுக்கிட்டு வந்துடறாங்க.

ரியல் எஸ்டேட் படுத்தற பாடு நிஜம்மாவே பயமா இருக்கு. வீடு வாங்கணும், இல்ல வடகைக்கு குடியிருக்கணும்னா திண்டிவனம் இல்லாட்டி விழுப்புரத்துல தான் பார்க்கணும்.மெட்ராஸ்ல ஒருத்தருக்கு சிங்கிள் பெட்ரூம் இருந்தா போதும். அவன் கோடீஸ்வரன் தான். மெட்றாஸை நான் கான்கிரீட் ஃபாரஸ்ட் னு சொல்வேன். தோட்டம் போடுறதுக்கு சுத்தமா இடம் இல்ல. அவங்கவங்க வீட்டு மொட்டை மாடில நெல் பயிரிடணும்னு சட்டம் வந்தாக்கூட நல்லது. தொங்கும் தோட்டம் மாதிரி மொட்டை மாடியிலேயே சுத்தரிக்காய், வெண்டைக்காய்னு பயிரிட்டுக்கலாம்.

மெட்றாஸ் காதலை என்னன்னு சொல்றது? முன்ன எல்லாம் காதலியோட பேரைத் தெரிஞ்சிக்கறதுக்கே லோ...லோ...ன்னு அலைவான். ஏதோ அந்தப் பொண்ணுக்கு அவன்தான் செக்யூரிடி ஆபீசர் மாதிரி வீடு வரைக்கும் பாதுகாப்பா போய் விட்டுட்டு வருவான். இப்ப செல்ஃபோன்லயே கதையை முடிச்சுடறான். ஃபோன் நம்பர் வாங்கி, எஸ்.எம்.எஸ் அனுப்பி, சாயங்காலம் டிஸ்கோ ஆடி ஒரே நாள்ல லவ்வு முடிஞ்சுடறது. பாவம் இவங்களுக்காக இருந்த டிரைவ்இன் உட்லண்ட்ஸையும் இழுத்து மூடிட்டாங்க.

கே. ஜே. ஜேசுதாஸ்

கே. ஜே. ஜேசுதாஸ். இன்னும் பல ஆண்டுகள் கூட தனது தேவாமிர்தக் குரலால் இசை ரசிகர்களை ஈர்க்கக்கூடிய அளவுக்கு இப்போதும் இந்த இசை மனிதரின் குரல் இளமையாய், இனிமையாய் இருக்கிறது. கர்நாடக இசை, திரை இசை இரண்டிலும் வித்தகரான இந்த சாதகப் பறவையிடம் ஒரு சந்திப்பு......

நீங்கள் தமிழ் சினிமாவுக்காக முதன்முதலில் 'பொம்மை'யில் பாடின, நீயும் பொம்மை நானும் பொம்மை.... பாடல் அந்தக் காலத்தில் சூப்பர் ஹிட். அப்படி இருந்தும் தொடர்ந்து வாய்ப்பில்லாமல் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னரே காலூன்றினீர்கள். இந்த இடைவெளிக்குக் காரணம் என்ன?

ஆக்சுவலா' இடைவெளின்னு பார்க்கப் போனா அது தமிழர்களுக்குத்தான். எனக்கு இல்லை. ஏன்னா, அந்தக் காலகட்டத் துல மலையாள சினிமாக்களில் அதிகமாக பாடிக்கொண்டிருந்தேன். அப்படி 'பிஸி'யாக இருந்த நேரம் அது. அதோட, 'நீயும் பொம்மை, நானும் பொம்மை.....' மாதிரி பாடல்கள் அந்தக் காலகட்டத்துக்குப் புதுசு. அந்தளவுக்கு அதுல 'நேச்சுராலிடி' இருக்கும். டைரக்டருக்கும் சரி, எனக்கும் சரி, அந்தப் பாடலைப் பொறுத்தவரை வெற்றிதான். தோல்வி கிடையாது. மக்களுக்கு அந்த 'நேச்சுராலிடி' புரியலைங்கறதுதான் பிரச்சனை.

பிச்சைக்காரனா இருந்தாலும் அவன் கோட், சூட் போட்டுண்டு வரணும்கிற மாதிரியான மனோபாவம் தான் இப்பக்கூட

இருக்கு. அதன் பிறகு, 'காதலிக்க நேரமில்லை' படத்துல பாட வாய்ப்பு கிடைச்சது. அந்தப் பாட்டுக்கு அப்புறமும் ஒரு 'கேப்' வந்தது. அதன் பிறகு 'தெய்வம் தந்த வீடு', 'விழியே கதை எழுது' ரெண்டு பாடல்களையும் ஒரே சமயத்துல பாடினேன். இன்னமும் நல்ல பாடல்களா, மனசுக்குப் பிடிச்ச மாதிரிதான் பாடிண்டு வர்றேன். அதற்காக, பாட்டு 'செலக்ஷன்'ல முக்கிய கவனம் செலுத்தறேன். பாட்டுல தரம் இல்லைன்னா மனசுக்குப் பிடிக்காது. மியூசிக் டைரக்டர்ஸுக்கும் இது தெரியும். அதனாலேயே நான் ஜாஸ்தி பாடறதில்லை. கட்டுப்பாட்டோட பாடறேன்னு சொல்லலாம்.

இந்தக் கட்டுப்பாட்டுக்காக, பாடல்களை எந்த அடிப்படையில் தேர்வு செய்கிறீர்கள்?

கதைத் தேர்வு மாதிரி பாட்டு கேட்டு செலக்ட் பண்ண முடியாது. மியூசிக் டைரக்டர்ஸ்கிட்ட கேட்பேன். 'ஸ்டாண்டர்டா' இருக்கற பாட்டுக்குக் கூப்பிடுங்கன்னு முன்கூட்டியே சொல்லிடுவேன். பாட்டு 'ஸ்டாண்டர்டா' இருக்கணும்கிறதுதான் என் ஆசை. எல்லாப் பாட்டையும் நாமளே பாடணும்கிற மாதிரி எல்லாம் ஆசை கிடையாது. அதனாலதான் ஜாஸ்தி பாடறதில்லை. கொஞ்சம் கூட தரமில்லாம ரொம்பவும் கீழ இறங்கி போயிப் பாடுறது தப்புன்னு நினைக்கறேன். இப்ப பாருங்கோ, தமிழ் தமிழ்னு பெருமையா பேசறோம். ஆனா ஆங்கிலக் கலப்பு, கெட்ட வார்த்தைகள்னுதான் நிலைமை போயிட்டிருக்கு. இது தர்மம் இல்லை. நியாயம் இல்லை. ஒரு அளவுக்கு மூடி வைக்க வேண்டியதை மூடிவச்சுத்தான் ஆகணும். அதையெல்லாம் வெளில காமிச்சுண்டு காசு சம்பாதிக்கணும்னா அது சரி இல்லை. சினிமா பாட்டுன்னு இல்லை, 'பேச்சு' மாதிரி பல விஷயங்களுக்கும் இது பொருந்தும். வெள்ளைக்காரன் தமிழ் பேசற மாதிரி இதெல்லாம் ஒரு ஃபேஷனாகவே ஆயிடுச்சு.

'ஷக்கலக்க பேபி' மாதிரி பாடல்களையும் இதே கோணத்தில் பார்க்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா?

இளைய தலைமுறையினருக்கு அதுமாதிரி பாடல்கள் தேவையா இருக்கு. அது போகட்டும். ஆனா, கலாசாரம், பண்பாடு இதெல்லாம் மாறிப்போற அளவுக்கு நழுவிக் கீழே போயிடக்கூடாது. இப்ப சாப்பாட்டு ரசனை கூட மாறிப் போயிடுத்து. உணவுன்னு பாராட்டப்

படறது நம்ம இட்லிதான். அதை இளைய தலைமுறையினர் மறந்துட்டாங்கங்கறதுதான் விஷயமே. இதை நான் சொல்றதால இதையெல்லாம் எதிர்க்கறேன்னு மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது. மனசுல பட்டதைச் சொல்றேன்.

நீங்க சொல்ற இந்த 'ரியாலிடி', 'ஸ்டாண்டர்டு' எல்லாம் சினிமாத் தயாரிப்பில் எந்த அளவுக்குச் சாத்தியம்?

ரொம்பவும் 'நேச்சுரலா'எல்லாம் பண்ண முடியாது, ஒத்துக்கறேன். ஏன்னா, சினிமாவே ஒரு வகையில் Unnatural ஆகத்தான் முடியும். அப்படி நம்ப வைக்கறது தான் சினிமாவோட சக்ஸஸ். அதனால ஓரளவுக்குத்தான் நேச்சுரலா இருக்க முடியும். அறுபது வயசான ஒருத்தரோட வாழ்க்கையை சினிமாவா எடுக்கணும்கிறதுக்காக அறுபது மணி நேரமா சினிமா எடுக்க முடியும்? அதை மூணு மணி நேரமா எடுக்கறதுதான் சினிமா. சில சினிமா இருக்கு, பல் தேக்கறதையே மணிக்கணக்கா காட்டுவா......

அதாவது, ஆர்ட் ஃபிலிம்னு சொல்றாங்களே?

ஆமாமாம்., தோல்வி அடைஞ்சுட்டா ஆர்ட் ஃபிலிம்தான்.

தமிழ் சினிமாவில் உங்களுக்கு இடைவெளி ஏற்பட்டப்ப மலையாள சினிமாவில் 'பிஸி' யா இருந்ததா சொன்னீங்க.. அதன் பிறகு அந்த இடைவெளி எப்படிச் சரியாயிற்று? இந்த அளவுக்கு வெற்றி பெறுவோம்னு நினைச்சுப் பார்த்த துண்டா?

என்னைப் பொறுத்தவரைக்கும், 'ஹோப்'ங்கறது என்னோட பாட்டுதான். நான், என்பாட்டு, அதுக்கான பிராக்டீஸ்தான் எனக்கு முக்கியம். நாளைக்கு ஒரு மியூசிக் டைரக்டர் கூட்பிடுவார்னு நினைச்சு எதையும் பண்றதில்லை. ஜேசுதாஸ் பாடற பாட்டுன்னா ஜேசுதாஸால மட்டும்தான் பாட முடியும்கிற நிலை இருக்கு. அதுக்காக நேரம் ஒதுக்கி எனக்காகக் காத்திருக்கவும் செய்வாங்க. இந்த மாதிரி சூழல்ல நான்தான் அதைப் பாடணும்னு தலையில எழுதியிருக்குன்னு கூடச் சொல்லுவேன்.இதை அகங்காரமா சொல்லலை. அப்படி அமையும்கிற மாதிரி நிலைமை இருக்குங்கறதுக்காகச் சொல்றேன். அப்படி

அமையாததைப் பத்தியும் நான் கவலைப்பட மாட்டேன். ' ஒவ்வொரு தான்யத்திலேயும், அரிசியிலேயும் அதைச் சாப்பிடுகிறவன் பெயர் இருக்கும்'னு கபீர் தாஸர் எழுதியிருக்கார். அதுமாதிரி ஒவ்வொரு பாடலிலேயும் அதைப் பாடுகிறவரின் பெயர் இருக்கும்னு தமாஷாகக் கூடச் சொல்வேன். இப்படித்தான் நாப்பது வருஷமா சந்தோஷமா பாடிண்டு இருக்கேன்.

இந்த மனோபாவம், நாற்பது வருஷத்துக்கு அப்புறமான முதிர்ச்சியா? இல்லை, ஆரம்பம் முதலே நீங்கள் இப்படிப் பட்டவர்தானா?

ஆரம்பக் கட்டத்திலேர்ந்தே எனக்கு நிறைய அனுபவங்கள் இருக்கு. நான் ரொம்பப் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவன். நண்பர்கள் கூட அவ்வளவா கிடையாது. அறுபதுகள்ல நான் இந்தத்துறையில் முயற்சி செஞ்சப்ப ஒருவேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டிருக்கிறேன். அதை நினைக்கறப்ப இப்ப இருக்கற இந்த நிலைமை பெரிசுதான். இதுபோன்ற அனுபவங்கள் தான் பாடம். கஷ்டப்பட்ட காலத்துல ரயில் பாத்ரூம்லே கூட உட்கார்ந்து பிரயாணம் பண்ணியிருக்கேன். இன்னைக்கு, ஃபிளைட்ல ஃபர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட். இந்த மாதிரி சௌக்கியமாத்தான் இருக்கணும்கிற பிடிவாதமும் எனக்கு இல்லை. எந்த சூழ்நிலைக்கும் தயாரானவன் நான். அப்படிப் பழகியிருக்கேன். அந்தப் பழைய தினங்களை மறந்துவிடக்கூடாது.

எம்.ஜி.ஆருடன் இருந்த அந்தப் பழைய நாட்கள் எப்படிப் பட்டதுன்னு சொல்லுங்களேன்?

நான் அதிகம் பாடியிருப்பது எம்.ஜி.ஆருக்காகத்தான். பாட்டுன்னா அவருக்கு அதிக ஈடுபாடு. அதுக்காக தனிக் கவனம் செலுத்துவார். கவிஞர் கண்ணதாசனுக்கும் அவருக்கும் அரசியல் ரீதியா முரண்பாடும் பிரிவும் இருந்த நேரம் அது.

அந்த நேரத்துலதான், 'ஓடும் மேகங்களே, ஒரு சொல் கேளீரோ'னு கண்ணதாசன் எழுதினார். அது எம்.ஜி.ஆருக்கு ரொம்பவும் பிடிச்சுப்போய், அதுக்காக அதிகமா பணம் கொடுத்துப் பாராட்டுச் சொன்னார். அந்தளவு பெருந்தன்மையானவர். அவர் முதல்வரா இருந்தப்ப, ஃபைல்கள் இருக்கற பெட்டிகளையும் கூடவே எடுத்துண்டு

கேள்வி நேரம்

போறது அவரோட வழக்கம். ஒரு தடவை என்கிட்ட 'எல்லாமே உன்னோட கிளாசிகல் பாட்டுதாண்டா'ன்னு சொன்னார். வெளில பார்க்கறச்ச ஃபைல்கள் உள்ள பெட்டி மாதிரி தெரியும். ஆனா அதற்குள்ள நான் பாடின கேசட்ஸ். அதை மறைக்காம அப்படியே என்கிட்ட சொன்ன பெருந்தன்மை. அதுதான் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் குரலுக்கும் உங்களோட பின்னனிக்கும் எப்படி ஒத்துப் போனது?

அது பத்தி பெரிய சர்ச்சையே நடந்தது. எனக்கு முன்னாடி அவருக்காக டி,எம்.எஸ். பாடிண்டு இருந்தார். அவரை விட்டுட்டு என்னை ஏன் கூப்பிட்டார்ன்னு எல்லாம் சந்தேகப்பட்டாங்க. வேற மாதிரி காரணமும் சொன்னாங்க.என்னைப் பொறுத்தவரைக்கும் எந்த ஒரு காரியத்துக்கும் காரணம் உண்டுங்கறதுதான். காரணம் இல்லாம எதுவும் நடக்காது.

உங்களோட பேச்சுலகூட அப்பப்ப மலையாளம் கலந்து வருது. இந்த நிலைல தமிழ் சினிமாவுக்கு உங்கள் குரல் ஒத்துப்போனது எப்படி?

அந்தக் காலத்துல நான், அனுராதா ஸ்ரீராமோட அம்மா எல்லாம் சேர்ந்து நிகழ்ச்சி நடத்துவோம். அதுல ஹிந்தில நான் பாடறது வழக்கம். அப்படியே தமிழ்ல பாட ஆரம்பிச்சேன். அப்படி ப்ராக்டீஸ் பண்ணித்தான் பாட ஆரம்பிச்சேன். தமிழ் சினிமாவிலேயும் இந்த மாதிரி பயிற்சிதான் உதவியாக இருந்தது.

ஹிந்திப் பாட்டெல்லாம் அப்பவே பாடினதா சொல்றீங்க... இதுல எல்லாம் மொழிப் பிரச்சினை வந்திருக்குமே?

எல்லாத்துக்குமே பழக்கம்தான் முக்கிய காரணம். தமிழ், ஹிந்தி எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் பேசுவேன். பேச்சுத் தமிழுக்கும், இலக்கியத் தமிழுக்கும் வித்தியாசம் உண்டு. எல்லா மொழிக்குமே இந்தப் பிரச்சனை இருக்குது. இதைக் குறையா எடுத்துக்காம, லாவகமா பயன்படுத்தறதுதான் முக்கியம். அதனால - மொழி எனக்கு ஒரு பிரச்சினையே இல்லை. தமிழ் கீர்த்தனைகள் பாடிப் பழகின அனுபவம் எனக்கு இருக்குது தமிழ் பாடல்களை மலையாளத்தில் எழுதிக் கூடப்

பாடுவேன். சொல்லாட்சியும் உச்சரிப்பும் இதில் முக்கியம்.

திருக்கோயிலே' என்ற பாடல் வரியை 'தெருக்கோயிலே' என்று தவறாக உச்சரித்தாக உங்கள் மீது குற்றச்சாட்டு உண்டே? அது பற்றி?

உண்மைதான். ஒப்புக்கொள்கிறேன். அது பழைய கதை. தமிழ் சினிமாவும், மொழியும் பழக்கமாகாத சூழலில் அந்தத் தப்பு நடந்து விட்டது. எனது ஆரம்பகால நாட்களில் நடந்த தப்பு அது. என்கூட இருந்தவர்கள், நன்றாகத் தமிழ் தெரிந்தவர்கள் அதை அப்போதே சுட்டிக் காட்டவில்லை. பிறகு சொல்லிக் காட்டினார்கள். அதுதான் தப்பு. அப்போதுகூட செய்த தவறை ஒப்புக்கொள்ள நான் தயங்க வில்லை. எம்.எஸ். விசுவநாதன் அண்ணாவிடம் கூடச் சொன்னேன். "இதையே சொல்லிச் சொல்லி காட்டாதீர்கள்'' என்று.

அதே மாதிரி ழ, ல, ள-வும் உங்களுக்குச் சரியாக வரவில்லை போலிருக்கிறதே?

இதே மாதிரி ழ, ல, ள பிரச்சனை மலையாளத்திலும் இருக்கிறது. இரண்டு மொழிகளுக்கும் இடையே வித்தியாசம் கூட இருக்கிறது. அது புரியவில்லை. இருந்தாலும், ஓரளவுக்குக் கவனமாக உச்சரிக்க முடியும். இந்த விஷயத்திலும் என்னைப்பற்றி கான்ட்ரவர்சியாகப் பேசினார்கள். ஆனால் நான் அந்தக் குற்றச்சாட்டை ஒப்புக்கறேன். இன்னொரு ஊர்ல இருக்கறப்ப அவங்க சொல்றத ஒத்துக்கறது தப்பில்லையே.

அதே நேரம் தமிழ் சினிமாவில், குறிப்பாக - பாடல்களில் மலையாளிகள்தான் அதிகம் பங்கு பெற்று வருகிறார்கள். என்ன காரணம்?

அதற்குக் காரணம் அவர்களின் முயற்சி. யார் முறையாக முயற்சி செய்தாலும் வெற்றிபெற முடியும். மலையாளிகள் அதிகம் பேர் வருகிறார்கள் என்றால் அவர்கள் செய்த முயற்சிதான் அது.

நீங்கள் கர்நாடக இசைக் கச்சேரியும் செய்து வருகிறீர்கள். ஒரு பக்கம் சினிமா பாட்டு, இன்னொரு பக்கம் - கர்நாடக இசை . இதை எப்படி 'பேலன்ஸ்' செய்கிறீர்கள்?

கேள்வி நேரம்

என்னைப் பொறுத்தவரைக்கும் இசைங்கறது ஒண்ணுதான். கிராமிய இசை, மாடர்ன் இசை, வெஸ்டர்ன் இசைன்னு சௌகரியத்துக்காகப் பிரிக்கூண்டாலும் இசை ஒண்ணுதான். கமகங்களோட வித்தியாச அடிப்படைலதான் இந்தப் பெயர்களே தவிர, இசை என்பது ஒன்றுதான். இதுல பேலன்ஸ் பண்றதுங்கறது எல்லாம் விஷயம் இல்லை. ப்ராக்டீஸ் தான் இதற்கும் முக்கியம்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியன், 'எப்படியும் ஒருநாள் கர்நாடக இசைக் கச்சேரி நடத்துவேன்' என்று தனது ஆசையை அவ்வப்போது கூறி வருகிறார். அதுபோல், கர்நாடக இசை யில் ஏதேனும் சாதிக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்துத் திட்டமிடுவதுண்டா?

நான் சிறு வயதிலிருந்தே கர்நாடக இசையிலும் பாடி வருவதால் எனக்கு இந்தப் பிரச்சினை இல்லை. நிறைய சபைகள்ல பாடினதால எனக்குக் கர்நாடக இசையிலும் அங்கீகாரம் கிடைச்சிருச்சு. எனவே, எனக்கு அப்படி ஆசை கிடையாது.எஸ்.பி. பாலசுப்பிரமணியன் நல்ல ஞானம் உள்ளவர். அவரால் கர்நாடக இசையில்சாதிக்க முடியும் அதிலும் அவருக்குத் தாய்மொழி தெலுங்கு. அதனால் அவரால் நிச்சயம் முடியும்.

டப்பிங்கிற்கும் நடிப்பிற்கும் அவர் முக்கியத்துவம் தராம, இதுக்காகத் தினமும் அரை மணி நேரம் பிராக்டீஸ் பண்ணினா போதும். அவர்கிட்டயே இதைச் சொல்லியிருக்கேன். ஆனா அவருக்கு ஏதாவது ஒரு மாறுதல் தேவையா இருக்கு. எப்பப் பார்த்தாலும் பாடிண்டேவா இருக்க முடியும்? நான்கூட ஒரு மாறுதலுக்காகச் சின்ன வயசுல டென்னிஸ் ஆடினதுண்டு. இதுமாதிரி மாறுதலான நடவடிக்கைகள் மூலமாத்தான் நமக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைக்கும்.

கர்நாடக இசை மாதிரியே, பக்திப் பாடல்களிலும் உங்களுக்கு என தனி முத்திரை உள்ளது. இது எப்படி நேர்ந்தது?

பக்திப் பாடல்னு இல்லை. எந்த வகைப் பாடலா இருந்தாலும் காதல் பாட்டாக இருந்தாலும் அதை அப்படியே உள்வாங்கி அர்த்த பாவத்தோட பாடணும்.

ஆனால், நீங்கள் ஒரு பாடகர்ங்கற நிலையையும் தாண்டி ஒரு பெரிய பக்திமானாகவும் இருக்கிறீர்கள் - இல்லியா?

நீங்க சொல்ற பெரிய பக்தி கூட அனுபவம் சம்பந்தப்பட்டது தான். குடும்பச் சூழல்லேர்ந்து தான் நம்பிக்கையோ, நம்பிக்கையின்மையோ வருது. சூழ்நிலைன்னு பார்த்தா எல்லாமே பகவானோட அம்சங்கள்தான். நல்லவன், கெட்டவன் இரண்டு படைப்புமே கடவுள் அம்சம் தான். அது கூட காரண காரியத்தோடுதான் நடைபெறுகிறது. அந்த வகையில் பார்த்தா பிசாசு, தெய்வம் இரண்டும் நமது மனசுக்குள் தான் இருக்கிறது. வேறு வகையில் சொன்னால் சக்தி என்று கூடச் சொல்லலாம். அதை எப்படி உபயோகப்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம்.

இந்த பக்தி உணர்வை மதரீதியாகப் பார்ப்பது சரியா, தவறா?

சரிதான்.மதம்தானே மனிதர்களைப் பண்படுத்த முடியும். அனைவரையும் சகோதரர்களாகப் பழகத்தானே சொல்கிறது மதம்? துரதிர்ஷ்டவச மாக இங்கே என்ன நடந்து விட்டது என்றால்,'என் மதம், உன் மதம் என்ற போட்டிதான் அதிகரித்திருக்கிறது. 'அடுத்த மதத்துக்காரனா, உடனே கொல்' என்கிற அளவுக்கு நிலைமை பின்னடைந்து விட்டது. இது தப்பு. மதம் என்றாலே எம்மதமும் சம்மதமாகத்தான் இருக்க வேண்டும்.

அதனால் தான் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தும் இந்துமதக் கோட்பாடுகளில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதா?

ஆமாம். கடவுள் எந்த ஜாதி என்று யாராலயாவது சொல்ல முடியுமா? அப்படிப் பொதுவானதுதான் மதமும்.பைபிளும், உபநிஷதங்களும், குர்-ஆனும் இதைத்தான் கூறுகின்றன. அனைத்திற்கும் அப்பாற்பட்ட பரப்பிரம்மத்துக்கு ஏது ஜாதி? இந்த ஜாதியை உண்டாக்கியதே மனிதன்தான். பிரச்சனைக்குக் காரணமும் மனிதன்தான்.கடவுள் நாம் அனைவரும் குடிப்பதற்குத் தான் தண்ணீர் கொடுத்திருக்கிறார். அதை வைத்துக்கொண்டு தரமுடியாது என்று சொல்லக் கூடாது. அது தப்பு.

கேள்வி நேரம்

இங்கே சுகத்திற்காக - கோடி, கோடி, கோடி விஷயங்கள் உள்ளன. அவற்றைச் சமமாக அனுபவிக்க வேண்டுமே தவிர போட்டி போட்டு சண்டைபோடக் கூடாது. அப்படி சண்டை போட்டால் விலைவாசிதான் உயரும்.

நீங்கள் கிறிஸ்துவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு மாற முயற்சி செய்ததாகக் கூறப்படுவது உண்மையா?

இந்தச் சந்தேகம் பலருக்கும் உள்ளது. நான் பிறக்கும் போது ஒரு கிறிஸ்துவனாகப் பிறக்கவில்லை. ஆனால் சிசுவாகத்தான் பிறந்தேன். அதன் பிறகு கிறிஸ்துவ தேவாலயத்தில் கிறிஸ்துவனானேன். அதில் எனக்குச் சந்தோஷம்தான். ஒரு நல்ல மதத்தில் வளர்ந்த திருப்தி. கிறிஸ்டியானிட்டி குறைந்த மதம் என்று நான் ஒருபோதும் கருதியதி ல்லை.

கிறிஸ்துவ மதத்தில் இல்லாத ஏதோ ஒன்றை நான் இந்து மதத்தில் தேடலை. பகவானுக்கு எந்த மதமும் கிடையாது என்பது தான் நான் கண்டறிந்த உண்மை. அதனால் தான் எங்கும் சென்று எந்தக் கடவுளையும் வழிபட ஆசைப்படுகிறேன். ஹஜ் போகக்கூடத்தான் ஆசையா இருக்கு. அவங்க ஒத்துக்க மாட்டாங்க. அதான் பிரச்சனை. இப்ப குருவாயூர்ல ஒத்துக்கலை. நானும் போறதில்லை.

ஒரு முஸ்லீமுக்குத் தொழுகை நடத்துற நேரம் நெருங்கிடுச்சு ஆனா, அப்போதைக்கு மசூதிக்குப் போக முடியாது. அவசர அவசரமா அங்கே இருந்த சர்ச்சுக்குள்ள போயி 'நமாஸ்' பண்ணினதா சரித்திரமே இருக்கு. அந்தப் பெருந்தன்மைதான் இன்னைக்குத் தேவையா இருக்குது. வேண்டுமானா, ஜாதிங்கறதை வீட்டு நம்பர் மாதிரி அடையாளமா மட்டும் வெச்சுக்கலாம்.

அபிராமி ராமனாதன்

திரையுலக வீழ்ச்சிக்கு 'திரையரங்குகளே காரணம்' என்று வெளியான கட்டுரை தொடர்பாக, தமிழ்நாடு திரைஅரங்கு உரிமையாளர்கள் சங்கக் கூடுதல் தலைவரும், 'அபிராமி' குரூப் தியேட்டர் உரிமையாளருமான ராமனாதன் நமக்களித்த பேட்டியில் இருந்து சில பகுதிகள்:

முதலில் இந்த 'Rate of admission' - ஐ எடுத்துக் கொள்வோம்.

M.R.P. எனப்படும் அதிகபட்ச சில்லரை விலையை நிர்ணயித்துக் கொள்ள பொதுவாகவே வியாபாரச் சுதந்திரம் உண்டு. இதைச் சட்டப் படியாகவே வியாபாரிகள் நிர்ணயித்துக் கொள்ள முடியும். ஆனால், திரையரங்குகளில் அப்படிக் கூட நாங்கள் வைத்துக் கொள்ளவில்லை.

சினிமா பார்க்க வருபவர்களின் வாங்கும் சக்திக்கேற்பவே டிக்கெட் விலைகள் உள்ளன.

1956 - ல் பால்கனி டிக்கெட்டின் விலை ரூ. 2. 50 பைசாதான். அப்போது சென்னையில், இப்போது அபிராமியாக இருக்கும் எங்கள் தியேட்டர் பிரேமா பிக்சர்ஸாக இருந்தது. அதோடு, வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி ஆகியவைதான் முக்கிய தியேட்டர்கள். இவற்றில்

எல்லாம் நூறு நாட்கள் படங்கள் ஓடத்தான் செய்தன.இப்போது அப்படி இல்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய விஷயம் தான். ஆனால் இதை திரையுலக வீழ்ச்சியாகவோ, அதற்கு திரையரங்குகள்தான் காரணம் என்று குற்றம் சாட்டுவதையோ ஏற்க முடியாது.பொருளாதாரத்தில் ஏற்றமும் உண்டு, இறக்கமும் உண்டு. அப்படித்தான் எதிலுமே எப்போதுமே ஒருவர் வெற்றியையே சாதித்துக் கொண்டிருப்பார் என்று எதிர்ப்பார்க்க முடியாது. சூழ்நிலைகள் மாறி மாறித்தான் வரும். அப்படித்தான் திரையுலகத்திலும் இப்போது பிரச்சினை உள்ளது.

இதற்குக் காரணம் பற்றாக்குறை தான். சினிமாத்துறையில் தாராளமாகவே செலவு செய்து பழக்கப்பட்டுவிட்டார்கள். இப்போது குறைக்க நினைத்தால் எப்படி முடியும்? அதனால்தான் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்ளக்கூடிய நிலை உள்ளது. இது ஒரு மாதிரி பங்காளிச் சண்டை இந்த நிலை மாறிவிடும்.

உண்மை இப்படி இருக்கும் போது, உங்கள் பத்திரிகைக் கட்டுரையில் திரையரங்குகளைச் சாடியிருப்பது ஏற்க முடியாத ஒன்றாக உள்ளது. டிக்கெட் விலை அதிகம் என்று எழுதியிருப்பதில் உண்மையில்லை. அதற்கும் பொருளாதாரச் சூழலே காரணம்.

Cost of living சம்பந்தப்பட்ட பல விஷயங்களில், டிக்கெட் விலையும் ஒன்று.

1956 - ல் ஒரு மிடில் கிளாஸ் நபருக்கு அதிகபட்ச சம்பளமே 200 ரூபாய்தான். அதில் சினிமாவுக்காக 2.50 ரூபா செலவு செய்ய முடிந்தது இன்று அதிக பட்சம் சம்பளம் வாங்குகிறார்கள். சம்பளம் மட்டுமே இல்லை. பொருட்களின் விலையும் பத்து மடங்காக அதிகரித்து விட்டது.

அன்றைக்கு எட்டு கிராம் தங்கத்தின் விலை 100 ரூபாயாகத்தான் இருந்தது. இன்று?

ஃபியட் காரின் அன்றைய விலை 8000 ரூபாய்தான். இன்று? இப்படி எல்லாமே விலை ஏறியிருக்கும்போது, டிக்கெட்டின் விலையை நாங்களும் முந்நூறு ரூபாயாக அதிகரித்து இருக்க முடியும். அதாவது

அதே பத்து மடங்காக. அதை நாங்கள் செய்யவில்லை.சென்ற ஆட்சியிலாவது, கூட்டத்திற்கேற்ப டிக்கெட் விலையை வைத்துக் கொள்ளும் நிலை இருந்தது. இப்போது நிர்ணயிக்கப்பட்ட விலைதான். இப்படி நியாயமாக நடந்து கொள்ளும் எங்களைக் குறை கூறியிருப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை.

டிக்கெட் விலை குறைவாக இருக்கும் போது தியேட்டர்களில் கூட்டம் வந்தது. இப்போது கூட்டம் குறைந்துவிட்டது என்று சொல்வதும் தவறான கருத்தாகும்.

டிக்கெட் விலை குறைவாக இருந்த காலத்தில், தியேட்டர்களில் சென்று பார்ப்பது மட்டுமே பொழுது போக்காக இருந்தது. இன்று அப்படி இல்லை. டான்ஸ், கிளப், ஸ்போர்ட்ஸ், இன்டர்நெட், டி.வி., வி.சி.டி, என எத்தனையோ பொழுதுபோக்கு வசதிகள் வந்துவிட்டன.

டி.வி.யில் சேனல்களை மாறிமாறிப் பார்க்க முடிகிறது. இது போன்ற காரணங்களாலும்தான் தியேட்டர்களில் இப்போது கூட்டம் அவ்வளவாக வருவதில்லை.

அந்த அளவிற்கு நாங்கள் நலிந்து போயிருக்கிறோம். உயிருக்குப் போராடும் அவலநிலையில் நாங்கள் இருக்கிறோம். சென்ற வருடங்களில் மட்டுமே 270 தியேட்டர்கள் பிரச்சினை தாங்க முடியா மல் மூடப்பட்டுள்ளன.' இதயம் சினிமா' கட்டுரையில் சொல்லியிருப்பது போல வி.சி.டி யால் எங்களுக்கு நேரடிப் பாதிப்பு இல்லைதான். ஆனால், கேபிள் டி.வி. யில் புதிய படங்கள் ஒளிபரப்பப்பட்டு, அதனால் தியேட்டருக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்துதான் உள்ளது.

முன்பு எம்.ஜி. ஆர். படம் பார்ப்பதற்காக, ரத்தம் கொடுத்தவர்கள் கூட உண்டு. அப்போது, ரத்ததானம் என்பது நடைமுறையில் கிடையாது. ஏழு ரூபாய்க்கு ரத்தம் விற்கும் நிலையே இருந்தது. அரசே அதிகாரப் பூர்வமாக ரத்த விற்பனைக்கு அப்போது அனுமதி அளித்திருந்தது.

இதனால் 7 ரூபாய்க்கு ரத்தம் விற்றுவிட்டு எம்.ஜி.ஆர் சினிமா பார்த்தவர்களை நான் கவனித்திருக்கிறேன். இப்போது அப்படி ரத்தம்சிந்தியாவது சினிமா பார்க்க வாருங்கள் என்று சொல்கிற அளவிற்கு நாங்கள் விலையை அதிகரித்து விடவில்லை.இப்போது

எம்.ஜி.ஆர் காலம் மாதிரியும் இல்லை. ஒரு குறிப்பிட்ட ஸ்டாரை மட்டுமே நம்பி அவருக்காக மட்டுமே படம் பார்க்க வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்தே போயுள்ளது.

நல்ல கதையம்சம் இருந்து அதை சுவாரஸ்யமாக எடுத்தால் புது முகங்களை நடிக்க வைத்தே பல நாட்கள் வெற்றிகரமாக ஓட்டலாம். அதுதான் இன்றைய நிலை.

முன்னணி 'ஸ்டார்' கள் நடித்த படங்கள் வேண்டுமானால் முதல் நாளில் இருந்தே நன்றாக ஓடலாம். அதே நேரம், புது முகங்கள் நடித்த நல்ல படங்கள் இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பிறகாவது நன்றாக ஓட ஆரம்பித்துவிடும். ஆக, ஒரு படத்தின் வெற்றிக்கு அதன் கதையம்சமே முக்கியம். அப்படிப்பட்ட படங்களுக்கு இப்போதும் தியேட்டர்களில் வரவேற்பு இருக்கத்தான் செய்கிறது.

இருந்தாலும், எங்களுக்குப் பெரிதாக லாபம் வந்துவிடவில்லை. மிகவும் கம்மிதான்.

ஆனாலும் சிரமப்பட்டுத்தான் இத்தொழிலை நடத்தி வருகிறோம்.

இப்படிப்பட்ட எங்கள் மீது விலை ஏற்றிவிட்டதாக அபாண்டக் குற்றச்சாட்டு. எம்.ஜி.எம், வி.ஜி.பி. யில் எல்லாம் எப்படி கட்டணம் வசூலிக்கிறார்கள்? அதையெல்லாம் தவறென்று யாராவது சொல்கிறார் களா?

சொல்லப் போனால், வி.ஜி.பி, எம்.ஜி.எம்,முக்கு உல்லாசமாகப் போவது போலத்தான் சினிமா தியேட்டர்களுக்குப் படம் பார்க்க வருவதும்.

அந்த அளவிற்கு சினிமா தியேட்டரில் வசதிகள் உள்ளன. வீட்டில் டிவி பார்ப்பவரை விட சினிமா தியேட்டரில் குடும்பத்தோடு வந்து பார்ப்பதும் குதூகலமான அம்சம்தான்.அதற்காக, 30 ரூபாய் டிக்கெட் வாங்குவது ஒன்றும் அதிகம் இல்லை.

தியேட்டர்களில் ஏ.சி. இயங்குவதில்லை என்று ஒரு புகார். ரயில்

கேண்டீனில் கூடுதலாக விலை கொடுத்துச் சாபிடுவதில்லையா? அது போலத்தான் இதுவும்.பெண்கள் கூட்டமாக சினிமா பார்க்க வந்தால், வெளியில் இருந்தே 3 ரூபாய்க்கு பாப்கானையும் வீட்டில் இருந்தே முறுக்கையும் கொண்டு வந்து விடுகிறார்கள்.அது மட்டும் இல்லை. தியேட்டரில் கூட்டம் இல்லாவிட்டால் கேண்டீனிலும் வியாபாரம் 'டல்' அடிக்கும். இன்றைய சமூக, பொருளாதாரச் சூழலில் இதையெல்லாம் 'ஜஸ்டிஃபிகேஷனாக'த் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நடிகர்களின் சம்பளப் பிரச்சினையைக் கூட இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு கோடி ரூபாய் சம்பளம் கேட்கும் நடிகரை வைத்துப் படம் எடுக்க வேண்டும் என்றால், ஒரு கோடி ரூபாய் கொடுத்துத்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் நமது பட்ஜெட்டுக்குத் தகுந்த மாதிரி, பாரதிராஜா, பாலுமகேந்திரா மாதிரி புதுமுகங்களை வைத்துப் படம் எடுத்துக் கொள்ளவேண்டியதுதான்.

இன்னொரு பக்கம், நடிகர்களும் சம்பள விஷயத்தில் 'காம்ப்ரமைஸ்' செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

40 லட்சம் சம்பளம் வாங்கின நடிகர், மார்க்கெட் 'டல்' ஆகி, ஐந்து லட்சத்திற்கு ஒப்புக் கொண்ட உதாரணங்களும் நிறைய உண்டு.

எல்லாமே டிமாண்ட் அன்ட் சப்ளை சம்மந்தப்பட்ட விஷயம் தான். நமக்குத் தேவை என்றால் அதற்கான விலை கொடுத்துத்தான் ஆக வேண்டும். சினிமா தியேட்டரில் போய் படம் பார்ப்பது ஒத்து வராவிட்டால், வீட்டிலேயே இருந்துகொள்ள வேண்டியதுதான்.

சிலோன் மனோகர்

பல வருடங்களுக்கு முன் அறிமுக்மான முதல் தமிழ் பாப் இசைப் பாட்டு அது.இன்னமும் பட்டிதொட்டிகளில் எல்லாம் அதற்கு நல்ல வரவேற்பு.'சுராங்கனி_சுராங்கனி_சுராங்கனிக்க_மாலுகண்ணா வா' என்று சிலோன் மனோகர் மைக்கைப் பிடித்துப் பாடிஆடினால், பார்வையாளர் கூட்டமும் மகுடிக்கு மயங்கிய பாம்புப்போல எழுந்து ஆடவே செய்கிறது. டிஸ்கோ நடனத்தில் முதலில் தமிழ்ப் பாடலைப் பாடியவர் என்ற பெருமையும் சிலோன் மனோகருக்கு உண்டு. எச்.எம்.வி.யும் ஏவி.எம். நிறுவனமும்தான் இவரது டிஸ்கோ, பாப் கேசட் டுகளை முதலில் வெளியிட்டன. இப்போது சென்னையில் முதன் முறையாக பதினைந்து நிமிடத்துக்கு, 'நான் - ஸ்டாப்' பாப் பாடலைப் பாடி சாதனை புரிந்துள்ள சிலோன் மனோகரிடம் இது பற்றிக் கேட்டோம்:

"இதை 'நான் - ஸ்டாப் - பாப்'ங்கறதைவிட 'பாப் மெட்லி'ன்னு சொல்லலாம். 1972 - லேயே இதை இலங்கைல செஞ்சு காட்டினேன். சென்னைல நடத்த இப்பதான் சந்தர்ப்பம் கிடைச்சது. விஜய் டிவியின் கொண்டாட்டம் நிகழ்ச்சில பாடினேன். ஏறக்குறைய பதினைந்து வித்தியாசமான பாட்டுக்கள் இதுல உண்டு.

இதுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. பாப் இசைக்கு தமிழ்நாட்ல நல்ல வரவேற்பு இருக்குங்கறதுக்கு இது நல்ல உதாரணம். அடுத்து 45

நிமிஷத்துக்கு நான் ஸ்டாப் பாப் பாடப்போறேன்...'' என்ற சிலோன் மனோகரிடம், பாப் இசை என்றாலே ஆங்கில வார்த்தைகள் அதிகம் இருக்கிறதே?'' என்று நாய் கேட்டோம்.

அதற்கு அவர், "ஆங்கிலம் இல்லாத ஒன்றைச் சொல்லுங்கள். ஃபார்ம், ரோடு, பஸ், டேபிள்-னு சொல்லிக்கிட்டே போகலாம். ஆஸ்பத்திரிங்கறோம். மருத்துவமனைன்னா சொல்றோம்? தமிழ் தமிழ்னு சும்மா பேசறதுல அர்த்தம் இல்லை. பாண்டிபஜார் போய்ப் பாருங்க. பூக்காரிகூட இங்கிலீஷ் வார்த்தை பேசறா'' என்று சொல்லிவிட்டு,'பாப்' பாட்டு செக்ஸி வார்த்தைகளாக இருக்குங்கறாங்க. செக்ஸ் இல்லாம எதுவும் இல்ல. சாதாரண ரேஷன் கார்ட் அப்ளிகேஷன்ல செக்ஸ் ன்னு போட்டு ஆணா? பெண்ணான்னு எழுதச் சொல்றாங்க. அப்படி கேட்காத நிலை வரட்டும். நாங்க செக்ஸியா பாடாம இருக்கோம்!'' என்றும் அழுத்தமாய் சொன்னார்.

75 - ல் அவர் பாடிய சுராங்கனிக்கு அர்த்தம் கேட்டதும், "மச்சக்கன்னிதா சுராங்கனி. வார்த்தை புரியாத பாடலுக்கு இசைக்குரிய முக்கியத்துவம் உண்டு. அதில் ஒரு சுவாரஸ்யம். முக்காபுலா, முக்காபுலான்னு ரிதத்தோட பாடிக்கிட்டே இருக்கணும். ரசிகர்களுக்கு அர்த்தம் வேண்டாம். ஜாலியா பாடணும் - ஆடணும் -கேட்கணும். மாலு கண்ணான்னா என்ன? அப்படி ரசிக்கறாங்க அந்தப் பாட்டை! எனக்கே அதுல அப்படி என்ன இருக்குன்னு தெரியலை...'' என்று வெளிப்படையாகப் பதில் சொன்னார்.

சிலோன்மனோகர் வெறும் பாடகர் மட்டுமல்ல . "இசை என் உயிர் மூச்சு, நடிப்பு என் லட்சியம்'' என்கிறார் அவர்.

இதுவரை 148 சினிமாக்களில் நடித்திருக்கிறார். தமிழில் முதல் முறையாக மாங்குடி மைனரில் ரஜினியுடன் வில்லனாக நடித்துள்ளார். அவரை சினிமாவில் அறிமுகப்படுத்தியவர் வி.சி. குகநாதன்.

1965 - ல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முதல் தமிழ் சினிமா 'பாச நிலா' விலும் இவர் கதாநாயகனாக நடித்துள்ளார். எம்.ஜி.ஆர்அவரைக் கதாநாயகனாகப் போட்டு 'சூர்யன்'என்று ஒரு சினிமா எடுக்க முயற்சி செய்த தும் பலருக்குத் தெரியாது.

வீரப்பன் காட்டில் பிடிபட்டுள்ள ராஜ்குமார், சிலோன் மனோகர் பேசும் நீண்ட வசனத்தைக் கேட்பதற்காகவே சாப்பிடாமல்

கூட காத்திருப்பாராம்.

ராஜ்குமார் கதாநாயகனாக நடித்த 'ஆப்ரேஷன் டைமண்ட் ராக்கெட்' படத்தில் சிலோன் மனோகர் தான் முக்கிய வில்லன். ராஜ்குமார் நடித்து வெளியான 'தாய்க்குத் தக்க மகா' கன்னடப் படத்திலும் சிலோன் மனோகர்தான் முக்கிய வில்லன்.

"எல்லா பிரபலங்களோடும் சேர்ந்து ஒர்க் பண்ணியிருக்கேன். தமிழ்ல எனக்கு மோகம் வந்ததே கலைஞரோட 'பராசக்தி'வசனம் கேட்டுத்தான். அதே மாதிரி, பாப் இசைன்னா வெறும் ஜாலிப் பாட்டுன்னு பார்க்கறாங்க. பல சமுதாயக் கருத்துக்களை இதன் மூலமா சொல்லிக்கிட்டு வர்றேன். 75 - ல் 'குடிக்காத'ன்னு பாப் பாட்டு பாடினேன்'' என்று சொல்லும் சிலோன் மனோகர், "பிராந்தி, பீர், விஸ்கி போடாத, தூளு கஞ்சா, அபின் அடிக்காத''என்று குடிக்கு எதிரான 'பாப்' பிரச்சாரமும் செய்து வருகிறார்.

இதுவரை கச்சேரி கச்சேரி என்று 18 நாடுகளுக்கும் மேலாக உலகம் சுற்றியுள்ளார்.

அதே நேரம், இனி ஆகாயத்தில் பறக்கப் போவதில்லை என்றும் முடிவெடுத்து விட்டார்.

காரணம்?

தேவா இசைல கானாவையும், பாப்பையும் சேர்த்துப் பாடப் போறேன்!'' என்று பதில் சொன்ன சிலோன் மனோகர், "பாப்பைவிட கானாவுக்கு இப்ப கூடுதல் வரவேற்பு இருக்கு. காலேஜ் பசங்க 'கானா' பசங்களாயிட்டாங்க. காரணம், அந்த வேகம்! எதையும் வேகமா செய்ய றப்ப எதிர்பார்ப்பு இருக்கத்தானே செய்யும். 'காத்தடிக்குது... காத்தடிக்குது'ன்னு பாடினா கேட்கறவங்களும் காத்து மாதிரி ஆடறா ங்க!'' என்றும் பாடியபடியே சொன்னார்.

இவரைப் பற்றி வெளியே தெரியாத இன்னொரு சுவாரஸ்யமான தகவலும் உண்டு.

பி.பி.சி. தமிழோசையில் சில வருடங்கள் செய்தி

வாசிப்பாளராகவும் இருந்துள்ள சிலோன் மனோகருக்கு இசையைப் போலவே ஆன்மிகத் திலும் நாட்டம் உண்டு. கிறிஸ்துவப் பாடல்கள், முத்துமாரி அம்மன் பாடல்கள், இஸ்லாம் பாடல்கள் என மதங்களுக்கு அப்பாற்பட்டு பாடி வருகிறார்.

. ஆண்டவன் கிருபைல இதுவரைக்கும் யார்கிட்டேயும் கை ஏந்தாம இருக்கேன். அப்படி ஒரு நிலை வர்றப்ப உயிரோட இருக்கமாட்டேன். ஆண்டவன் கொடுத்த உயிர், அவனே கொடுத்த குரல், நம்ம என்ன சொந்தம் கொண்டாட?'' என்று தத்துவார்த்தமாகப் பேசும் சிலோன் மனோகர், நடைமுறை வாழ்க்கையில் ஒவ்வொன்றுக்கும் துல்லியமாய் கணக்குப் போட்டு வாழ்பவர்.

தபால் செலவு 3 ரூபாய் என்று பக்கம் போட்டுக் கணக்கு எழுதி வைத்திருக்கிறார். தான் செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவிற்கும் அவரிடம் கணக்கு உண்டு. 'வேண்டுமானால் நீங்களே பார்த்துக்கொள் ளுங்கள் என்று ஒரு நோட்டை எடுத்துக் காட்டினார்.

அதைப் பார்த்த நமக்கு ஏக பிரமிப்பாகி விட்டது.

வீட்டு வேலைக்கு வருபவரின் அட்டெண்டென்ஸ் அது.

எஸ்.எஸ்.ராஜேந்திரன்

நடமாடும் பல்கலைக்கழகம் என அண்ணாவால் அழைக்கப்பட்ட நாவலர் நெடுஞ்செழியனின் மறைவுச் செய்தி, அ.தி.மு.க.விற்கு மட்டுமல்லாது, தமிழ் ஆர்வலர்களுக்கும், திராவிட உணர்வுடையவர்களுக்கும் ஒரு பெரிய பேரிழப்பு. திராவிட இயக்க வரலாற்றில் அண்ணாவிற்கு அடுத்த இடம் வகித்தவர் நெடுஞ்செழியன். அவரது ஆரம்பக் கால நாட்களில் அவருடன் கட்சிப் பணிகளுக்காக அதிக சுற்றுப்பயணம் செய்தவர் நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர் நம்மிடம் பேசியதிலிருந்து:

1943 - ம் ஆண்டு, நாவலரை முதன்முதலாக ஈரோட்டில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது நான் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகக் குழுவில் பால நடிகனாக நடித்துக் கொண்டிருந்தேன். நாவலர் குறுந்தாடியுடன் இருப்பார். பகுத்தறிவுக் கொள்கைகளில் அவருக்கு இருந்த தீவிர ஈடுபாட்டைக் கண்டு அப்போது நான் வியந்ததுண்டு.

கொள்கை உணர்வுகளைப் பேச்சளவில் மட்டுமல்லாது, நடை முறையிலும் பிரசாரம் செய்து செயல்படுத்திக் காட்டியவர் அவர். பட்டி, தொட்டிகளுக்கெல்லாம் பலமுறை நடந்தே சென்று பிரசாரம் செய்திருக்கிறார்.

ஈரோட்டில், பெரியாருடன் அவர் தங்கியிருந்த காலத்தி

லும் பலமுறை சந்தித்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவரது சொல்லாற்றலைப் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறேன்.

அவருடைய பேச்சில் வீரமும் இருக்கும். விவேகமும் இருக்கும். நகைச்சுவை, நையாண்டி எல்லாமும் இருக்கும். படித்தவர் முதல் பாமரர் வரை பலரையும் பேச்சாற்றலால் தன் வயப்படுத்தக்கூடியவர் நாவலர்.

தி.மு.க. வில் அண்ணா இருந்த காலத்திலே கூட அவருக்கடுத்த தலைவராக நாவலர் மட்டும் தான் இருந்தார். அண்ணாவால் மட்டுமின்றி, கட்சிக்காரர்களாலும் மனதார அங்கீகரிக்கப்பட்டவர் நாவலர். அதனால்தான். தம்பி, வா! தலைமை ஏற்க வா!என அண்ணா நாவலரிடம் தான் அமர்ந்திருந்த நாற்காலியைக் கொடுத்தார். இது பலருக்கும் தெரியும். ஆனால், அப்போது நன்றிப்பெருக்கால் நாவலர் அழுதே விட்ட விஷயம் பலருக்கும் தெரியாது.

அதே போல், அவருக்குக் கோபமே வராது. யாரையும் திட்டிப் பேசமாட்டார். பழிவாங்கும் உணர்வு கிடையாது. அந்த அளவிற்குக் குழந்தை போல எளிமையாகப் பழகும் சுபாவம் உடையவர். அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, நானும் அவரும் சிறைச் சாலையில் ஒரே அறையில் அடைக்கப்பட்டிருந்தோம். நான் அப்போது சினிமாவில் அதிக படங்களில் நடித்துக் கொண்டிருந்த நேரம். என்னைச் சிறைச்சாலையில் பார்க்க பலர் வருவார்கள். அப்படி வருகிறவர்கள் கூடைகூடையாகப் பழங்களை எடுத்து வந்து விடுவார்கள்.

அப்பழங்களை சிறையில் இருந்த மற்றவர்களுக்கும் கொடுத்து விடுவோம். அப்படிக் கொடுத்தது போகவும் மிஞ்சியுள்ள பழங்களை நாங்கள் எங்கள் அறையில் வைத்துக் கொள்வோம். நாவலர் தான் என்னைத் தன் கைப்பட

அப்பழங்களைப் பிழிந்து குடிக்கச் சொல்லுவார்.

நீங்கள் ஏன் இதையெல்லாம் செய்கிறீர்கள் என்று கேட்பேன். அதற்கு நாவலர், நான் எப்படி வேண்டுமானாலும் 'அட்ஜஸ்ட்' செய்து கொள்வேன். ஆனால், உன்னால் அப்படி முடியாது. ஏனென்றால் நீ ஒரு நடிகன். உடம்பு தான் உனக்கு முக்கியம். அதனால் தான் உன் உடம்பு கெட்டுவிடக் கூடாது என பிழிந்து தருகிறேன்'என்று பாச உணர்வோடு பேசுவார்.

அப்படி ஒரு தந்தை நிலையிலும் என்னிடம் அன்பு காட்டிய நாவலரின் புகழ், தமிழ் உள்ள அளவும் இணைந்தே இருக்கும்!'' என்றார் எஸ்.எஸ். ராஜேந்திரன்.

நடிகர் கலைமாமணி வி.கே. ராமசாமி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு இணையாக சீனியர் நடிகர் அந்தஸ்து பெற்றிருக்கும் வி.கே.ராமசாமி கலைத்துறையில் நீண்ட காலத்திற்கும் மேலான அனுபவம் பெற்றவர். நாடகக் கலைஞராக நடிக்கத் தொடங்கிய இவர் சினிமா உலகிலும் தன் முத்திரையைப் பதித்தவர். 5000 நாடகங்கள், 1000த்துக்கும் மேற்பட்ட சினிமாக்களில் நடித்தவர். பத்துக்கும் மேற்பட்ட சினிமாக்களைத் தயாதித்தவர் என நீண்ட கலை அனுபவம் உடையவர். தனிப்பட்ட வாழ்க்கையில் மிகவும் எளிமையானவர். தமிழ் நாடக வரலாற்றைப் புள்ளி விவரங்களுடன் மணிக்கணக்கில் மூச்சுவிடாமல் பேசும் ஆற்றலுடையவர். தன்னை வாழ வைத்த தமிழ் நாடக வரலாற்றையும் திரைப்பட வாழ்க்கையையும் பெரிய புத்தகமாக எழுதும் முயற்சியிலும் இறங்கியுள்ளார். ரஜினி-25 சாதனை மலருக்காக பேட்டி கேட்டதும் உடனடியாக ஒப்புக்கொண்டார். அவரது பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

ரஜினிகாந்தின் நடிப்பாற்றலை அருகில் இருந்து பார்த்தவர் நீங்கள். அது பற்றிக் கூறுங்களேன்?

அவரது நடிப்பே வித்தியாசமானது. நடிப்பில் தனித்தன்மையாக விளங்க வேண்டும், தொழிலில் முதலிடம் வகிக்க வேண்டும் என்று அயராது உழைப்பவர். சினிமாவில் அவருடைய வேகமான நடிப்பும் வசன உச்சரிப்பும் ரசிக்கத் தகுந்தவை. தனக்கென்ற ஒரு பாணியை

வகுத்துக் கொண்டு வெற்றி பெற்றவர். மக்கள் இன்று அதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். சிகரெட்டைத் தூக்கிப் போட்டு பிடிப்பது, கைகளை 'ஸ்டைலாய் அசைப்பது' போன்ற அவரது 'மேனரிசங்கள்' மிகவும் பிரபல்யமாகி விட்டது. மக்கள் ஏற்கும்படி அதற்கு மெருகூட்டியவர் ரஜினி. நடிப்புக்காக அவர் உழைத்த உழைப்பு மிகவும் நுட்பமானது. நினைவில் கொள்ளவேண்டியதும் ஆகும். ஷூட்டிங் சமயத்திலும் யாரோடும் அனாவசியமாகப் பேசமாட்டார். தான் உண்டு. தன் வேலை உண்டு என்று அடக்கமாய் இருப்பார்.

ரஜினிகாந்துடன் எத்தனை படங்கள் சேர்ந்து நடித்திருப்பீர்கள்?

பைரவி, ஆறுபுஷ்பங்கள், வேலைக்காரன், நான் மகான் அல்ல, தர்மத்தின் தலைவன், மன்னன், தனிக்காட்டு ராஜா, நல்வனுக்கு நல்லவன், கழுகு, அதிசயப்பிறவி, ராஜா சின்ன ரோஜா போன்ற இன்னும் பல படங்களில் அவருடன் இணைந்து நடித்திருக்கிறேன்.

ரஜினியிடம் தனித்தன்மை என்று எதைப் பார்க்கிறீர்கள்?

எளிமையும் பக்தி உணர்வும்தான் அவரது தனித்தன்மை. எதிலும் பக்தி. தொழில் பக்தி, தேசபக்தி, தெய்வ பக்தி, குருபக்தி, அவரை வாழ வைத்த தமிழ்நாட்டு ரசிகர்களிடம் பக்தி, மக்களிடம் பக்தி என அடக்கமான பண்புடையவர். வயதான பெரியவர்களிடம் அவருக்கு கூடுதலான மரியாதை உண்டு. என்னுடைய வயதுக்கும், கலைத்துறையில் என்னுடைய நீண்ட கால அனுபவத்திற்கும் அவர் கொடுக்கும் மரியாதை என்னை நெகிழ வைத்தது. பிறரைக் கூர்ந்து கவனித்து அடுத்தவர் பேசுவதில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வுடையவர். அவர் பிறர் பேசும்போது பொறுமையாக கேட்டுக்கொண்டிருப்பார். அது ஒரு தனிச்சிறப்புதான். அது போல் எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை.

தமிழ் சினிமாவில் ரஜினி சாதித்தது என்ன?

நான் இந்த நாடகத் தொழிலுக்கு வரும் போது, என்னுடைய முன்னோர்கள், ஏன்டா ராமசாமி, போயும் போயும் இந்தக் கூத்தாடி தொழில்தானா உனக்கு கிடைச்சது? ஏதோ ரெண்டெழுத்து படிச்சு

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

உத்தியோகத்துக்கு போவியா?ன்னு இத்தொழில் பற்றி கேவலமாக சொன்னாங்க. அதாவது, கூத்தாடின்னா அப்ப நல்ல குடும்பத்துல பொண்ணு கொடுக்கமாட்டாங்க. குடியிருக்க வாடகைக்கு வீடு தரமாட்டாங்க. தீண்டத்தகாதவர்கள் மாதிரி நினைப்பாங்க. அப்படி இருந்த காலம் போயி, கலைவாணர் என்.எஸ்.கே, நடிகவேள் எம்.ஆர்.ராதா, சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர் இன்றைய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இன்னும் புகழ் பெற்று கலைத்துறையில் சாதனை புரிந்த கலைஞர்கள் அங்கீகாரத்தைப் பெற்றதால், கலைத்துறையில் சிறப்பான மாறுதல் ஏற்பட்டு கூத்தாடி என்ற அவப்பெயர் நீங்கி விட்டது. அதனால் தான் பெரிய இடத்துப் பிள்ளைகள் வரை இத்தொழிலில் பங்கு பெற்று சீரும், சிறப்புமாக உள்ளார்கள். கலைத்துறையின் இந்த மாற்றத்திற்கு சூப்பர் ஸ்டார் ரஜினி அவர்களின் பங்கு மகத்தானது.

சூப்பர் ஸ்டார் ரஜினி என்ற மகத்தான பெயர் இப்போது குழந்தைகளிடம் படையப்பாவாக மாறியிருக்கிறது இது ஒரு சாதனை தானே.

ரஜினியின் வெற்றிக்கு, கலையுலக சாதனைக்கு அப்பாற்பட்ட வேறு காரணங்கள் ஏதேனும் இருக்க முடியுமா?

உண்டு. அவருக்குப் பொது அறிவு நிறைய இருக்கிறது. எப்படியென்றால், எந்தத் துறையைப் பற்றிக் கேட்டாலும் பதில் சொல்கிறார். ஆன்மிகமா, சரித்திரமா, விஞ்ஞானமா, இன்னும் இதைப் போன்ற பல துறைகளைப் பற்றிய அறிவு அவருக்கு இருக்கிறது. இந்த 25 வருட அனுபவத்தில் திரைப்படத் துறையில் நடிப்பில் மட்டும் அவர் சூப்பர் ஸ்டார் அல்ல. எப்படிப் படம் எடுக்க வேண்டும்? மக்களுக்கு எது பிடிக்கும்? எடுத்த படத்தை எப்படி வியாபாரம் செய்ய வேண்டும்? என்பதிலும் அவர் ஒரு சூப்பர் ஸ்டார்தான். அன்பும், பண்பும், அடக்கமும், பழகுவதற்கு இனிய சுபாவமும் நிறைந்த நிறைவான மனிதர் அவர். இதெல்லாம் நடிப்புக்கு அப்பாற்பட்ட விஷயம் தானே?

அருணாச்சலம் படத்துக்கு நீங்கள் தயாரிப்பாளர் ஆனது எப்படி?

பத்து வருடங்களுக்கு மேல் இருக்கும். உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் இருக்கும் ஆக்ராவில், வேலைக்காரன் என்ற

கேள்வி நேரம்

திரைப்பட ஷூட்டிங், எஸ்.பி. முத்துராமன் டைரக்ஷனில் நடந்து கொண்டிருந்தது. அப்போது நானும் ரஜினியும் நடித்துக் கொண்டிருந்தோம்.

திடீரென்று எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ரஜினி அவர்களை வைத்து ஒரு படம் தயாரிக்கலாம் என்று. காரணம், அப்போது நான் நிறைய படங்கள் தாயரித்துக் கொண்டிருந்த நேரம். நேரடியாக அவரிடம் சொல்ல நேரம் கிடைக்காமல் என் எண்ணத்தை விவரமாக ஒரு கடிதத்தில் எழுதித் தெரியப்படுத்தினேன். அன்று கொடுத்த கடிதத்திற்குத்தான் பத்து வருடங்கள் கழித்து எனக்கு பதில் கிடைத்தது.

எப்படியென்றால், திடீரென்று ரஜினி அவர்கள் வீட்டிலிருந்து எனக்கு ஒரு ஃபோன் வந்தது. அன்று, என்னை ஆள்க்கிய கலைவாணர் என்.எஸ்.கே. நினைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள தயாராகிக் கொண்டிருந்தேன். ஃபோனில் பேசிய ஜெயராமனிடம், (ரஜினி அவர்களின் பி.ஏ.,) நாளை வருகிறேன், கலைவாணர் விழாவுக்கு இன்று போக வேண்டும் அது மிக முக்கியம்' என்று சொன்னேன். அதற்கு அவர், 'ரஜினி அவர்களும் அந்த விழாவிற்கு வருகிறார். இருந்தாலும், நீங்கள் உடன் வந்து பத்து நிமிஷம் பேசிவிட்டுப் போங்கள்' என்றார். எனக்கும் சரி என்று பட்டது. அதனால் அவர் வீட்டுக்குப் போனேன். நானே மறந்து போன அந்த விஷயத்தை ஞாபகப்படுத்தினார். எனக்கு அதிசயமாகக் போய்விட்டது.

அவர் சொன்னார், "நீங்க எடுக்கப் போற ஒரு படத்துல நடிக்கச் சொன்னீங்க. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையால் இத்தனை நாட்கள் கடந்து விட்டது. இப்போ, அதை நிறைவேற்றப் போறேன். அந்தப் படத் தயாரிப்புல நீங்க ஒரு பார்ட்னர். உங்களை மாதிரி கேட்ட ஐந்தாறு பேர்களுக்கு சேர்ந்து ஒரே படமாக எடுத்துத் தர்றேன். அதற்கு நீங்க ஒப்புக்கணும்'' என்று கேட்டுக்கொண்டார். தர்மம் நம் வீட்டுக் கதவைத் தட்டுகிறது என்று நினைத்துக் கொண்ட நான், வலிய வருகிற ஸ்ரீதேவியை வேண்டாம் என்று சொல்ல, நாம் யார் என்று உடனடியாக ஒப்புக் கொண்டேன். அத்தோடு அந்தப் படத்தில் ஒரு வேடம் நான் நடிக்க வேண்டும் என்றும் கேட்டேன். அதற்கு அவர் 'புரொட்யூசரும் நீங்க, அதுல நீங்க ஒரு கேரக்டர் நடிக்கவும் செய்யறீங்க....'' என்று சொன்னார்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

அதுதான் அருணாச்சலம் என்ற திரைப்படம். என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவம். என் நெஞ்சிருக்கும் வரை அவர் நினைவிருக்கும்.

ரஜினியின் இது போன்ற தர்ம சிந்தனைக்கு முன்னோடிகள் என்று யாரைக் குறிப்பிடலாம்?

இந்த உலகில் முன்னோர்கள் விட்டுச் சென்ற எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. தர்மம் என்பது தமிழ்நாட்டு மக்களின் ரத்தத்திலேயே ஊறிப் போயிருக்கிறது. குறிப்பாக, கலைத்துறையில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் என்ற இமயம் இருந்தது. அவர் இருக்கும் வரை கொடுத்துக் கொண்டேயிருந்தார். கடைசியாகக் கொடுத்தது ஞாபகத்தில் கொள்ள வேண்டியது. குடிப்பதற்காக வைத்திருந்த வெள்ளி கூஜாவையும், வெற்றிலை பாக்கு வைத்துக் கொள்ளக்கூடிய வெள்ளி வெற்றிலைப் பெட்டியையும் தானமாய் கொடுத்த அதிசயத்தை அவரிடம்தான் கண்டேன். அதன்பின், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், நடிகவேள் எம்.ஆர். ராதா - இப்படி மக்கள் செல்வாக்கு பெற்ற அத்தனை கலைஞர்களும் தர்மத்தில் சிறந்தவர்கள்தான்.அதில் குறிப்பிடும் படியானவர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். பொதுவாக, கலைத் தொழிலில் ஈடுபட்ட அத்துணை கலைஞர்களுக்கும் தர்மம் செய்யவேண்டும் என்ற எண்ணம்அவர்களின் ரத்தத்தில் ஊறிப்போன ஒன்றுதான். உதாரணமாக, சமீபத்தில் கார்கில் யுத்தத்துக்காக கலைஞர் கள் செய்த தர்மத்தை பார்த்திருப்பீர்கள். இயற்கையின் சீற்றத்தால். மக்கள் எவ்வளவோ இன்னல்களை அனுபவிக்கும் போது அவர்களுக்கு முன் நின்று உதவியவர்கள் கலைஞர்கள்தான். இது நானும் மக்களும் அறிந்த விஷயம்.

ரஜினி அரசியலுக்கு வருவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கலைஞர்கள் ஒரு நாட்டின் பொதுச் சொத்து அப்பேர்ப்பட்ட ஒரு மாபெரும் கலைஞன் ஒரு கட்சிக்கு மாத்திரம் சொந்தமாகிவிட்டால், மற்றவர்களுடைய அன்பை, ஆதரவை இழக்க நேரிடும். ஆதலால், எந்தக் கலைஞனாக இருந்தாலும் சிந்தித்து செயல்பட வேண்டுய விஷயம் இது. எனவே, ரஜினி அரசியலுக்கு வருவதும், வராததும் அவரது தனிப்பட்ட

முடிவைப் பொறுத்தது. இவ்விஷயத்தில் அவர்தான் தீர்மானிக்க வேண்டும். சிக்கலான இந்தக் கேள்விக்கு என்னால் பதில் கூற முடியாது.

நீங்கள் விரும்பி ஏற்றுக் கொண்ட இத்துறையில் இன்னமும் தொடர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். சலிப்பில்லாத இந்த ஈடுபாட்டிற்கு பிரத்யேகமான காரணம் உள்ளதா?

காரணம் என்று பார்த்தால், எங்கள் பரம்பரையே கலைப் பரம்பரைதான். என் தாத்தா வாழவந்தான் செட்டியார், இராமயணத்தில் சீதை வேடம் ஏற்று பெரும் புதழ் பெற்றவர். பெருந்தலைவர் காமராஜரின் தாயார் சிவகாமி அம்மாள்கூட என்னை 'சீத வேஷகாரரோட பேரா' என்றுதான் கூப்பிடுவார். அதேபோல் என் சின்னம்மா மகன்களும் அண்ணனுமாகிய வி.சி. மாரியப்பன் நாடகத்தில் கதாநாயகியாகவும். பாடகராகவும் பங்கேற்று சிறப்பித்தவர். இரண்டாவதாக, என் குருநாதர் ஏ.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் எனக்கு நாடகம் அதிகம் கற்றுக் கொடுத்தார். அதேபோல், கலைவாணர் என்.எஸ்.கே, டி,ஏ.மதுரம், எஸ்.வி. சகஸ்ரநாமம், ப.நீலகண்டன் ஆகியோர் வழிகாட்டிகளாக இருந்துள்ளனர். வஞ்சிக்கோட்டை வாலிபனில் நடித்த டி.கே.ராமச்சந்திரன் தான் நாடகத் துறையில் எனக்குத் தலைவர். அவர் மிக முக்கிய காரணமானவர். அதேபோல், மதுரை ஸ்ரீ பாலகானசபா உரிமையாளர் யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளையும் எனக்கு மூலகர்த்தாவாக இருந்து வழிகாட்டினார். அவரையும் மறக்க முடியாது.

திரைத் துறையில் என் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்தார் ஏ.வி. மெய்யப்ப செட்டியார். இவர்கள் எல்லோரும் என் மனதில் நீங்கா இடம் பெற்றவர்கள். இன்னமும் ஒரு மறக்க முடியாத நபர் இருக்கிறார். அவரை மறக்க முடியுமா? இருக்கும் வரையில்தான்?

உடுக்கன் இழந்தவன் கைபோல
ஆங்கே இடுக்கண் தலைவதாம் நட்பு

என்ற குறளுக்கேற்ப நட்பின் இலக்கணமாய் இருப்பவர் வேறு யாருமல்ல. இன்றைய சூப்பர் ஸ்டார் ரஜினிதான். அவரை எப்படி மறக்க முடியும்?

கலைஞரிடம் நான் மாணவன்

முதல்வர் கலைஞர் கருணாநிதியின் பிறந்த தின கொண்டாட்டம். இந்த வயதிலும் எப்படி இவரால் இவ்வளவு சுறுசுறுப்பாக இருக்க முடிகிறது ? என்று அவரது எதிர்ப்பாளர்களும் பிரமித்துப் போவதுண்டு. முதல்வரின்பிறந்த நாளையொட்டி பிரமுகர்கள் சிலரிடம் கருத்து கேட்டபோது......

கவிக்கோ. அப்துல் ரகுமான்

நான் கலைஞரை அடிக்கடி சந்திப்பதோ, தொலைபேசியில் தொடர்ந்து பேசுவதோ கூட இல்லை. ஆனாலும் கலைஞர், "எனது இதயத்தின் ஆஸ்தானக் கவிஞர்'' என்று தான் என்னைக் கூறுவார்.

கவிதையில் கூட அவரது பாணி வித்தியாசமானது. பாரதியார் எழுதியதை 'வசனக் கவிதை' என்பார்கள். நான் கலைஞர் எழுதுவதை 'கவி வசனம்' என்று சொல்லுவேன். தஞ்சாவூரில் ஒரு கவியரங்கம். எல்லா கவிஞர்களும் தாமதமாக வந்தார்கள். கலைஞர் சரியான நேரத்துக்கு வந்து விட்டார் தனது தலைமை கவிதை உரையில் "என்னை காக்க

வைத்த கவிஞர்களே'' என்று கூறினார். நான் அதற்கும் மேல் தாமதமாக சென்றேன். அவர் இப்படி கூறியிருந்ததைக் கூட கேட்கவில்லை. மேடைக்குப் போனதும் கலைஞர் தான் பாடிய கவிதையை எழுதிக் காண்பித்தார். என்முறை வந்தபோது,

வாக்களித்தோம்
பதவியில் அமர்த்தினோம்
நம்மையெல்லாம்
காக்கத்தான்
வைத்துள்ளோம்
காத்திருக்க மாட்டீரோ?

என்று பாடியதும் கலைஞர் குலுங்கி குலுங்கிச் சிரித்தார். அண்ணாவைப் பற்றி நான் எழுதிய கவிதை ஒன்றும் அவருக்குப் பிடிக்கும்.

விழுகின்ற போதும்
விதையைப் போல விழுபவன்

என்று நான் எழுதியதை கலைஞர் பல இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்.

ஒரு கவியரங்கம் முடிந்து அதில் பங்கு பெற்ற அனைவரும் குரூப் போட்டோ எடுத்துக் கொண்டோம். கண்ணதாசனும் இருந்தார். நான் ஓரமாக நின்று கொண்டிருந்தேன். போட்டோகிராபரைப் பார்த்து நான் விழுவேனா? என்று கேட்டேன். அதற்கு கலைஞர், 'விதையைப் போல விழுவாய்' என்றார்.

அவரது குறளோவியம் போல வேறு எவரால் எழுத முடியும்? நான் கூட பல நேரங்களில் எழுத நேரம் கிடைக்காமல் சிரமப்படுவதுண்டு. ஆனால் கலைஞர் இப்போதும் எழுதிக் கொண்டிருக்கிறார். அரசியல், அரசாங்கம், நிர்வாகம் என்று பல வேலைகளுக்கிடையே இதெல்லாம் ஆச்சரியம்தான். கவியரங்கம் வந்தால் ரயிலில் வருகிற போதே மடமடவென்று எழுதிவிடுவார் கலைஞர்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

சோ. பாலகிருஷ்ணன்
(சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர்)

முதல்வர் கலைஞரைப் பார்த்து ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. அவரது அனுபவம் அப்படி. நான்கு முறை முதல்வராக இருந்து சாதனை படைத்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் என்று பாரபட்சம் காட்டாமல் உரிய மரியாதை கொடுப்பது அவரது சிறப்பு.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்களின் கோரிக்கைகளுக்காக பெரிய அளவில் போராட்டம் நடத்தியபோது அரசு கண்டு கொள்ளவில்லை.

இப் பிரச்சினையை சட்ட மன்றத்தில் கிளப்பினேன். 'மாணவர்களோடு அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்' என வலியுறுத்தினேன். என் கோரிக்கை முதலில் மறுக்கப்பட்டது. நானும் விடாமல் 'ஒரு தடவையாவது பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்றேன். உடனே கலைஞர், "மாணவர்கள் பேச்சுவார்த்தைக்கு வர மறுத்தாலோ அல்லது நியாயமற்ற கோரிக்கைகளை முன் வைத்தாலோ எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு ஏற்கத் தயாரா? என்றார். நானும் சரி என்றேன். அதன் பிறகு பேச்சுவார்த்தை நடந்து பிரச்சனையும் சுமுகமாக தீர்ந்தது.

மறுநாள் கலைஞர் என்னை தொலைபேசியில் அழைத்து "உங்களது முயற்சி நல்ல முயற்சி.நல்ல பலனும் ஏற்பட்டது. பாராட்டுக்கள்" என்றார். அரசியல் ரீதியாக எங்களுக்கிடையே எவ்வளவோ கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கலைஞரிடம் நான் மாணவன்.

மகாகவி பாரதியார் பாடல்கள் தொடர்பாக சட்ட சபையில் அப்போது கேள்வி எழுப்பப்பட்டது. அந்த நேரத்தில் நான் எழுந்து ஒரு கேள்வியை எழுப்பினேன். 'பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் காங்கிரஸ் ஆட்சியின் போது மணிமண்டபம் கட்டப்பட்டது. அது இப்போது முறையாக பராமரிக்கப் படவில்லை. அதே போல் லைப்ரரியில் உள்ள புத்தகங்களும்

களவாடப்பட்டுள்ளன. அரசு இதற்கு ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை? என்று கேட்டேன்.

அதற்கு கலைஞர், "மணிமண்டபத்தை கடைசியாக எப்போது பார்த்தீர்கள்'' என்றார். 'ஆறு மாதம் இருக்கும்' என்றேன். அதற்கு கலைஞர் "பாரதியார் மீது உங்களுக்கு உண்மையிலேயே பற்று இருந்தால், மணிமண்டபத்தை பார்த்த உடனே சொல்லியிருக்க வேண்டும். பாரதியார் மீது உங்களுக்கு உண்மையான பற்று இல்லை. அதனால்தான் இவ்வளவு தாமதமாகப் பேசுகிறீர்கள்'' என்றார் கோபமாக.

அவர் அப்படி பேசிய பிறகு தான் அந்த விஷயத்தின் ஆழம் எனக்குப் புரிந்தது. என் தவறை புரிந்து கொண்டேன். ஒரு பேராசியர் பாடம் நடத்துவது போல் இருந்தது கலைஞரின் அன்றைய பேச்சு''

சுப்புலெட்சும் ஜெகதீசன்
(தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்)

கலைஞரின் மணி விழா சம்பவம் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அப்போது ஒரு பாலத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு, 84 ல் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது அந்த பாலம் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் கலைஞருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

இதை மனதில் கொண்டு கலைஞரின் மணி விழா நிகழ்ச்சி அந்த பாலத்தின் அடியிலேயே நடக்க வேண்டும் என அன்பில் தர்மலிங்கம் நினைத்து அதற்கான ஏற்பாடுகளும் செய்தார். அப்படியே பாலத்தின் அடியில் தான் மேடை போடப்பட்டு நிகழ்ச்சி நடந்தது. அதில் கலந்து கொள்ள கலைஞர் சென்ற போது நானும் அவருடன் சென்றேன்.

எனது தொகுதியான மொடக்குறிச்சி வழியாக கார் சென்றது. அப்போது அவரிடம், 'தஞ்சை மாவட்டத்துக்கு மட்டும் அதிக தண்ணீர்

கொடுக்கிறீர்கள். அதில் பாதியையாவது எங்கள் கீழ்பவானிக்கும் கொடுங்கள்' என்று கேட்டேன்.

உடனே கலைஞர் சிரித்துக் கொண்டே, "தஞ்சை மாவட்டத்தை விட இங்குதான் விளைச்சல் அதிகம், காரணம், இது களிமண் பூமி. தஞ்சையோ மணல்பூமி. தஞ்சாவூருக்கு அதனால்தான் கூடுதல் தண்ணீர் தேவை. இங்கு இது போதும்'' என்று சொன்னதும் எனக்கு ஆச்சரியமாகி விட்டது. மனிதர்களின் தன்மையை மட்டுமின்றி, மண்ணின் தன்மையையும் அவர் அறிந்து வைத்திருந்தார்.

'தடா' வில் கைதாகி மதுரை சிறையில் நான் இருந்தபோது, அவர் என்னைப் பார்க்க வந்த காட்சியை மறக்க முடியாது. கலைஞர் ஒருவர் மட்டும் எங்களை சிறையில் பார்க்கலாம் என்று உயர்நீதி மன்றம் அனுமதி தந்திருந்த நிலையில், சிறைக்குள் இருந்த எங்களைப் பார்க்க அவர் வந்தார்.

முப்பதடி தூரத்தில் மெதுவாக நடந்து வந்த அவரைப் பார்த்ததும் அழுதுவிட்டேன். ஆயிரம் பேருக்கு நடுவே பார்த்து பழக்கப்பட்ட மகத்தான தலைவர் அவர். அப்படிப்பட்டவர் எங்களைக் காண தன்னந்தனியாக நடந்து வந்ததை பார்த்தபோது தாங்கவில்லை.

நான் தி.மு.க.வில் மட்டும் இல்லை, அவரது குடும்பத்திலும் ஒரு உறுப்பினர். கோபாலபுரம் வீட்டுக்குப் போனால், நேராக சமையற்கட்டிற்கே போய் விடுவேன்.

வல்லிக் கண்ணன்

திரு. சின்னக்குத்தூசி அவர்களுக்கு,

என் எண்பதாவது பிறந்த நாளைக்கு வாழ்த்து தெரிவித்தமைக்காக நன்றி! இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம் பற்றி நான் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். பத்து வருட காலமாகவே இது பற்றிய யோசனை உள்ளது. ஆனால், காலம் ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை. 1999-ம் வருடம் முடியும் தருவாயில் உள்ளது. 2000-ல் நான் இருப்பேனா, இருக்கமாட்டேனா என்ற சந்தேகம் முன்பு இருந்தது. ஆனால் இப்போது அப்படி இல்லை. இரண்டாயிரத்தைக் காணும் வகையில் ஆரோக்கியமாக உள்ளேன். எனவே நீங்கள் கேட்டுக் கொண்டபடி தமிழ் இலக்கியம் பற்றி எழுதுவேன்.

இப்படி ஒரு கடிதத்தை பத்திரிகையாளர் சின்னக்குத்தூசிக்கு - மூத்த எழுத்தாளரும், விமர்சகருமான வல்லிக்கண்ணன் எழுதியிருந்தார்.

இன்று 'கடித இலக்கியம்' எனப் பரவலாகப் பேசப்படும் விஷயத்தைக் கடந்த பல ஆண்டுகளாக ஆர்ப்பாட்டம் இன்றி செய்து வருபவர் வல்லிக்கண்ணன்.

தமிழ்நாட்டின் எந்த மூலையில் இருந்து சிறுபத்திரிகையோ, தொகுப்பு நூலோ வந்தால் - அது கையெழுத்துப் பிரதியாக

இருந்தாலும், உடனே மதித்து, தன் கைப்பட கடிதம் எழுதும் வழக்கம் உடையவர். இவர் தந்த உற்சாகத்தில் எழுத்தாளர் ஆனவர்கள் பலர்.

எண்பது வயது பிரம்மச்சாரியான வல்லிக்கண்ணனுக்கு இலக்கியம் தான் முதல் சுவாசம்.அவரது இல்லத்தில் அவரை நாம் சந்தித்தபோது,"1940-ம் ஆண்டு முதலே நான் பலருக்கும் கடிதம் எழுதி வருகிறேன் வயது வித்தியாசம் எதுவும் பார்ப்பதில்லை. எனக்கு அவர்கள் அனுப்பி வைக்கும் படைப்புகளுக்கு முதலில் நன்றி தெரிவிப்பேன். என்னை மதித்தவர்களை, மதிக்கிறவர்களைப் பதிலுக்கு மதிப்பதுதான் மரியாதை, பண்பு.

பிறகு, அதில் உள்ள நிறை, குறைகளைச் சுட்டிக்காட்டுவேன். இலக்கிய ரீதியாக இப்படி தமிழ் நாட்டில் பல ஆயிரம் பேர் எனக்கு நண்பர்கள் ஆகியுள்ளனர். அதைத் தொடர்ந்து எங்களுக்குள் நட்புப் பரிமாற்றம் அதிகரிக்கும். சிலரது நட்பு நின்றுவிடும் இது முறிந்து போனதாக அர்த்தம் இல்லை. அவரவர் வாழ்க்கைச் சூழல் அப்படி.

தனிப்பட்ட விஷயங்கள், நாட்டு நடப்பு, இலக்கிய சர்ச்சைகள், புதிய புத்தகங்கள், சிறு பத்திரிகைகள், கவிதைகள், நண்பர்கள், விமர்சனம் எனப் பல அம்சங்களைக் கொண்டதாக என் கடிதங்கள் இருக்கும். நேரில் சந்தித்துப் பேசுவது போன்ற திருப்தி கடித உறவில் ஏற்படும்.

கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொண்டு பல வருடங்கள் வரை நேர்ப் பழக்கம் இல்லாமலும் இருப்பதுண்டு. எங்காவது, கருத்தரங்குகளில் திடீரெனப் பார்க்கும் போது மனசு குதூகலிக்கும். அதன் பிறகும் பல வருடங்கள் வரை கடிதத்தில் மட்டுமே தொடர்பு கொள்ளும் நிலையும் ஏற்படும். சம்பந்தப்பட்ட நண்பரின் முகம்கூட மறந்து விடும். ஆனால் மனசு முழுக்க அந்த நண்பர் நிறைந்திருப்பார். இது கடித இலக்கியத்தின் வெற்றி'' என்றார்.

நீங்கள் அதிகம் கடிதம் எழுதிய நபர் யார்?

எனது நெருங்கிய நண்பர் தி.க.சி. க்குத்தான். 1941 முதல் இன்று வரை எங்கள் நட்பு தொடர்கிறது. அவரும் என்னைப் போலவே பலருக்கும் கடிதம் எழுதுவார். என் மூத்த சகோதரருக்கும் பல

கடிதங்கள் எழுதியுள்ளேன். இருந்தாலும், தி.க.சி.க்குத்தான் நிறைய எழுதினேன். நான் வெளியுலகில் திரியத் தொடங்கிய 1943 முதல் இவர்களுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினேன்.

பிறகு - நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், என்னோடு தொடர்பு கொண்டு தேவையான தகவல் பெற விரும்பியவர்கள் என்று எண்ணற்ற பேர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். எனக்குக் கதைகள் எழுதுவதைவிட கடிதங்கள் எழுதுவதே பிடிக்கும்'' என்றார் வல்லிக் கண்ணன்.

வரும் புதிய நூற்றாண்டில் யாருக்கு முதல் கடிதம் எழுதுவீர்கள்?

தி.க.சி.க்குத்தான் என்றார் வல்லிக் கண்ணன்.

இலக்கியச் சிந்தனை ஏ.கே.பாரதி

அமைச்சர் ப. சிதம்பரம், அவரது சகோதரரான ப. லஷ்மணன், இந்திய வெளியுறவுத் துறையில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற ஏ.கே, பாரதி ஆகியோரை அறங்காவலர்களாகக் கொண்டு 1970-ஆம் ஆண்டு இலக்கியச் சிந்தனை தொடங்கப்பட்டது.ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை தோறும், சென்னையில் இலக்கிய கூட்டம் நடத்துவதை பல வருட வாடிக்கையாகக் கொண்டிருக்கும் பாரதிக்கு, ஸ்பானிஷ் உள்ளிட்ட ஒரு சில அயல் மொழிகளும் அத்துப்படி. அவரை நேரில் சந்தித்து பேசியவற்றில் இருந்து சில பகுதிகள்:

இலக்கியச்சிந்தனை அமைப்பின் துவக்கம் பற்றிக் கூறுங்களேன்?

அந்தக் கால கட்டத்தில் நாங்கள், (லட்சுமணன், சிதம்பரம், பாரதி) சந்தித்துக் கொள்ளும் போதெல்லாம், பொதுவான விஷயங்கள் பற்றிப் பகிர்ந்து கொள்வோம். நாளடைவில் மற்றவர்களும் பயன் பெறும் வகையில் குறிப்பாக, இலக்கிய அம்சங்களில் கருத்துப் பறிமாற்றம் செய்து கொள்ள ஏதுவாக ஒரு அமைப்பு தேவை என்று உணர்ந்து இலக்கியச் சிந்தனையை தொடங்கினோம். நண்பர்களின் நல்ல சிந்தனையே இலக்கியச் சிந்தனையானது.

கேள்வி நேரம்

சிறந்த சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பது என்பது உங்கள் அமைப்பின் பிரதான அம்சமாக உள்ளது. சிறுகதைளுக்கு முக்கியத்துவம் தரக் காரணம் என்ன?

அப்படி இல்லை. சிறுகதை தவிர்த்த மற்ற விஷயங்களிலும் எங்களுக்கு ஈடுபாடு உண்டு. முதல் கூட்டம் நடந்த போது அதில் கலந்து கொண்ட அகிலன், அம்மாத சிறந்த சிறுகதையாக வசுமதி ராமசாமி எழுதிய கதையைத் தேர்ந்தெடுத்தார். இப்போது வரை அந்த முறை அமைப்பின் செயல்பாடாகத் தொடர்ந்து நீடிக்கிறது.

ஒரு மணி நேரம் நடைபெறும் மாதக் கூட்டங்களில் அரை மணி நேரம் சிறுகதை தேர்வுக்குப் போக, மீதி அரை மணி நேரத்தில் இலக்கியப் பொருள் குறித்த உரை இடம் பெறுகிறது. சிறுகதைத் தேர்வு விஷயத்தில் திறனாய்வாளருக்குத் தரப்படும் முழுச் சுதந்திரம் தான் சிறந்த சிறுகதைகளை அடையாளம் காணப் பயன்படுகிறது. ஒரு சில நேரத்தில், இந்தக் காரணத்தினாலேயே சிறந்த சிறுகதை தேர்வு செய்யப்படாமலும் போவதுண்டு. சிறந்த சிறுகதை எழுதியவருக்கு மட்டுமின்றி திறனாய்வு செய்தவருக்கும் சன்மானம் தருகிறோம். இதுவரை, தேர்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் தொகுப்புகளாக வந்துள்ளன.

சிறுகதைத் தேர்வின் மூலம் ஏற்பட்டிருக்கும் பலன் என்று எஃதைக் கருதுகிறீர்கள்?

சிறந்த சிறுகதைகளை அடையாளம் காண இந்த முயற்சி உதவுகிறது. எழுத்தாளர்கள், திறனாய்வாளர்களின் எழுத்து முன்னேற்றத்துக்கு சிறுகதைத் தேர்வு ஊக்கம் தருகிறது. இன்று பிரபலமாய் இருக்கும் பல எழுத்தாளர்களை இலக்கியச் சிந்தனை உற்சாகப் படுத்தியுள்ளது. மற்ற விருதுகளை விட இலக்கியச் சிந்தனைத் தேர்வை உயர்வானதாக அனேக எழுத்தாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பலன் என்று இவற்றைத் தான் சொல்ல வேண்டும்.

சிறுகதை தேர்வுக்கென நடைமுறை விதிகள், வரையறை என ஏதேனும் உண்டா?

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

தேர்வுக்கு பரிசீலிக்கப்படும் சிறுகதைகள் பதிவு பெற்ற பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்க வேண்டும். அவ்வளவுதான்.

அப்படியென்றால் சிறுபத்திரிகைகளில் பிரசுரமாகும் சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுக்க முடியாதே?

உண்மை தான். ஆனால், அறக்கட்டளைக்கென உள்ள நியதிகளைதான் நாங்கள் பின்பற்ற முடியும்.

இலக்கியச் சிந்தனையின் செயல்பாடுகள் பற்றிக் கூறுங்களேன்?

நட்சத்திர அந்தஸ்து எனப்படும் பிரபல்யம் கிடைக்காத அதே நேரம்ஆழமான படைப்புக்களை உருவாக்கிய எழுத்தாளர்களின் அனைத்துப் படைப்புகளையும் திறனாய்வாளர் ஒருவரைப் படிக்க வைத்து படைப்புக்கள் பற்றிய ஆய்வை விமர்சனப் பார்வையுடன் நூலாக தொகுத்து வெளியிடுகிறோம். 1987 முதல் இதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

கு. அழகிரிசாமி, தேவன், நாமக்கல் கவிஞர், சிதம்பர சுப்பிரமணியன், ஜெகசிற்பியன்,கு.ப.ரா,பிச்சமூர்த்தி,மௌனி, வ.ரா, லக்ஷ்மி, வை.மு. கோதை நாயகி அம்மாள் ஆகியோர் உட்பட பலரைப் பற்றி நூல் வெளியிட்டுள்ளோம். இப்படிப்பட்ட நூலை உருவாக்கப் பயன்படும் திறனாய்வாளரைத் தேர்வு செய்வது தான் சிரமமான காரியம்.

சிறுகதை, எழுத்தாளர் ஆய்வு தவிர, நாவல், நாடகம் தொடர்பாக உங்கள் அமைப்பு என்ன செய்கிறது?

ஒவ்வொரு வருடமும் வெளியான சிறந்த நாவல் அல்லது நாடகம் என தேர்வு செய்து 5000 ரூபாய் பரிசு தருகிறோம். விட்டல் ராவ், ராஜம் கிருஷ்ணன், அசோகமித்திரன், பூமணி, வண்ணநிலவன் போன்ற பலரது படைப்புகள் இவ்விதம் தேர்வு செய்யப்பட்டு கௌரவிக்கப் பட்டுள்ளன. ஒரு ஆண்டில் சிறந்த நூல் கிடைக்கவில்லை என்றால் அந்த ஆண்டு பரிசும் தரப்பட்டதில்லை. 97ஆம் ஆண்டு சி.சு.செல்லப்பா எழுதிய 'சுதந்திரதாகத்'தைச் சிறந்த நூலாகத் தேர்வு செய்தோம். அவர்

பரிசுத் தொகையை வேண்டாம் என்று கூறி மறுத்து விட்டார். ஆனால் பாராட்டை ஏற்றுக் கொண்டார். அப்படியும் நடப்பதுண்டு.

அச்சில் வந்த நூல் என்றில்லை. சிறந்த கையெழுத்துப் பிரதியாக இருந்தாலும் பரிசு தருகிறோம். பாலகுமாரன் எழுதிய மெர்க்குரிப் பூக்கள் கையெழுத்துப் பிரதியாகப் பரிசிலனைக்கு வந்தது தான்.

பாரதி லட்சுமணன் அறக்கட்டளை சார்பாக, ஆண்டு தோறும் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்கள் வரிசையில் ஒருவரைத் தேர்வு செய்து 5000 ரூபாய் பரிசு தருகிறோம்.

இலக்கியச் சிந்தனை சார்பாக 'பிரசுர' முயற்சிகள் ஏதேனும் உண்டா?

சிறுசிறு பிரசுரங்களாக, இலவசமாக அவ்வப்போது வெளியிடுவோம். கைலாசபதி எழுதிய 'பாரதி-பாடபேதம்'' என்பதில் இருந்து தொடங்கினோம். சுப்ரமணியசிவா, நேதாஜி, லாலாலஜபதி ராய், கல்கிஆகியோரின் அரிய படைப்புகளை வெளியிட்டுள்ளோம். அ.ச.ஞானசம்பந்தம் எழுதிய பிரத்யேகக் கட்டுரை ஒன்றையும் வெளியிட்டுள்ளோம்.

வரா.1930-ம் ஆண்டு அலிபுரம் சிறையில் இருந்தபோது 'செயில் டைரி' என்ற தலைப்பில் நிறைய எழுதியுள்ளார். அதில் இருந்த 'கோகுலத்தின் (கு) தர்க்கம்' என்ற கதையை அவரது கையெழுத்து வடிவத்திலேயே வெளியிட்டோம்.

இலக்கிய சிந்தனையின் எதிர்காலத் திட்டம் என ஏதாவது...

அடாது மழை பெய்தாலும் சரி, மூன்று பேர் வந்தாலும் சரி இதுவரை மாதாந்திர கூட்டம் நடக்காமல் இருந்ததில்லை. அகிலனில் ஆரம்பித்து, பி.எஸ்.ராமையா, வல்லிக்கண்ணன், சிட்டி, தி.க.சி, சுஜாதா, வாலி, வைரமுத்து, அப்துல் ரகுமான் எனப் பெரும்பாலானவர்கள் எங்கள் கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளனர். இவற்றை தொய்வில்லாமல் தொடர்ந்து செய்தாலே போதும். அது தான் இப்போதைய திட்டம்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

இந்த அமைப்பைத் தீவிரமாக இயக்கி வரும் உங்களின் எழுத்து அனுபவம் பற்றி கூறுங்களேன்?

எனக்கு வாசிப்பு அனுபவம் தான். பிறர் எழுத நான் படிப்பேன். இனிமேல் தான் எழுத வேண்டும். இன்னொன்று. கலை நிகழ்ச்சிகளையும் இலக்கியச் சிந்தனை நடத்துவதுண்டு.
பூர்ணம் விசுவநாதன், கோமல் நாடகங்களை நடத்தியுள்ளோம். 'பத்மா சுப்ரமண்யம் நாட்டியம் நடத்தியுள்ளோம். இந்திரா பார்த்தசாரதியின் 'அற்றது பற்றெனில்' சிறந்த கதையாகத் தேர்வு பெற்றது. அந்தப் பரிசளிப்பு விழாவிலேயே அக்கதை நாடகமாகவும் நடத்தப்பட்டது.

மீசை முருகேசனின் இசைக் கச்சேரியையும் நடத்தியுள்ளோம். ஆண்டு தோறும் தமிழல்லாத பிறமொழி வல்லுநர்களையும் படைப்பாளிகளையும் அழைத்து வந்து ஆண்டு விழாவில் உரையாற்றச் செய்கிறோம். அப்படி உரையாற்றியவர்களில் சிலர்தான், தகழி, குஷ்வந்த் சிங், சிவராம் காரந்த், யு.ஆர். ஆனந்த மூர்த்தி, மகாஸ்வேதா போன்றோர்.

ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அலி

ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அலி மிகவும் எளிமையானவர். சகஜமான மனோபாவத்துடன் மற்றவர்களுடன் இனிமையாகப் பழகக் கூடியவர். இவரது முன்னோர்கள் இந்து கோயில்களுக்கும் நிலங்களை தானம் செய்துள்ளனர். ஐம்பதி ஏழாவது சதந்திர தினத்தையொட்டி, இந்து -முஸ்லீம் ஒற்றுமை, மத நல்லிணக்கம் ஆகியவை பற்றி முகமது அலி நமக்களித்த போட்டி வருமாறு:

ராஜ வம்சத்தை சேர்ந்தவர் நீங்கள். இந்த ஜனநாயக முறையை யும் அரசியல் அமைப்பையும் எப்படிப் பார்க்கிறீர்கள். இவை சரியாக இருக்கிறதா?

முகமது அலி: நான் தற்போது பெயர் அளவுக்குத் தான் இளவரசன். உண்மையான இளவரசன் கிடையாது. மன்னர் காலம் முடிந்து விட்டது. நான் மன்னர் வம்சத்தைச் சேர்ந்த ஆளாக இருப்பினும், இந்த ஜனநாயக முறையை மனதார வரவேற்கிறேன். மதித்து நடக்கிறேன். உலக அளவில் இந்தியாவிற்கு மட்டுமே இப்படி ஒரு தனிச் சிறப்பு. இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். அரசியலைப் பொறுத்தவரையில், தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதற்கு மாற்று ஏற்பாடு, நல்லவர்கள் எல்லாம் பெரிய அளவில் அரசியலில் பங்கேற்க முன் வர வேண்டும்.

'அரசியலா ? நமக்கு ஏன் வம்பு ?' என்று ஒதுங்கி விடக்கூடாது. அது ஒன்றுதான் மாற்று வழி. அதுவும் இல்லாவிட்டால் நிலைமை மேலும் மோசமாகிவிடும்.

இந்து-முஸ்லீம் பிரச்சனை ஒய்ந்த பாடில்லையே ஏன்?

முகமது அலி: அடிப்படையில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பிரச்சனை ஏதும் இல்லை என்றே கருதுகிறேன். அவர்கள் சகோதர, சகோதரிகளாகத் தான் பழகி வருகின்றார்கள். எங்கோ ஒரு மூலையில் நடக்கும் சம்பவத்தை பெரிதுபடுத்தி இந்து-முஸ்லீம் பிரச்சனை என்று முத்திரை குத்தி விடுகின்றார்கள்.

ஆனாலும், பயங்கரவாதம்... குறிப்பாக, வெடி குண்டு வைத்தல் போன்ற விஷயங்களில் முஸ்லீம்களின் பங்கு இருக்கிறதே.....

முகமது அலி: 'இஸ்லாம்' அது போன்ற விஷயங்களை ஏற்கவில்லை. வலியுறுத்தவும் இல்லை. இஸ்லாம் என்றாலே அமைதி என்றுதான் அர்த்தம். இதுபோன்ற வன் செயல்களில் ஈடுபடுமாறு குர்-ஆனில் எங்காவது சொல்லப்பட்டிருக்கிறதா? அப்படி அதில் ஒருவரி கூட கிடையாது.

பிறகெப்படி இது போன்ற செயல்கள் நடக்கின்றன? முஸ்லீம் பயங்கரவாத நடவடிக்கைளில் ஈடுபடுவதாகத்தானே ஒரு சூழல் நிலவுகிறது?

முகமது அலி: அப்படி இருக்கும் சூழ்நிலை என்பது கூட ஒரு வித மாயத் தோற்றம் தான். உங்கள் வீட்டருகில் இருக்கும் யாரேனும் ஒரு முஸ்லீம் சகோதரர் இதுபோன்ற பாவச் செயலில் ஈடுபட்டதைப் பார்த்திருக்கிறீர்களா? பார்க்க முடியாது. ஆனாலும் அப்படி ஒரு 'இமேஜ்' இருக்கக் காரணம், மேற்கத்திய நாடுகளும், மீடியாவும் தான். மேற்கத்திய நாடுகளின் தவறான பிரச்சாரம் தான் இது போன்ற பொய்யான எண்ணங்களுக்குக் காரணமாகின்றன.

பயங்கரவாத செயல்களை ஒதுக்கி வைத்துப் பார்த்தால் கூட இந்து-முஸ்லீம் பிரச்சனை என்பது தீராமல் தானே உள்ளது?

கேள்வி நேரம்

முகமது அலி: நீங்கள் குறிப்பிடுவதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் கூட, அப்படி ஒரு பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்றே விரும்புகிறேன். இந்துக்களும், முஸ்லீம்களும் சகோதரர்களாக மகிழ்ச்சியோடு சமாதானமாக வாழ விரும்புகிறேன். மகாத்மா காந்தியும் அப்படித் தான் விரும்பினார். ஆனால், அவரையும் மறந்து விட்டார்கள். அவரது போதனையையும் மறந்து விட்டார்கள். அதற்குக் காரணம் இங்கிருக்கும் அரசியல்வாதிகள்.

எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்?

முகமது அலி: அவர்களுக்கு சீட்டு முக்கியம். முஸ்லீம்களுக்கு எதிரான பிரச்சாரத்தை கிளப்பி விட்டால் மதத்தின் பெயரில் ஓட்டு வாங்கலாம். அதுதான் அவர்களின் முயற்சி. ஆனால் இந்தியர்கள் அவர்களின் தவறான நோக்கத்திற்கு துணைபோக மாட்டார்கள். இங்கு மெஜாரிடி இந்துக்கள் 80 சதவீதம் உள்ளனர். பிறகேன், இந்துமதம் சார்ந்த ஒரு அரசியல் கட்சி முழு வெற்றி பெற முடியவில்லை? அதனால்தான் அரசியல்வாதிகள் மதத்தை வைத்து விளையாடுகிறார்கள் என்கிறேன்.

அயோத்தி விஷயம் குறித்து.....

முகமது அலி: நீதிமன்றத்தில் விவகாரம் உள்ளது. அதன் தீர்ப்பின்படி செயல்படலாம். தனிப்பட்ட முறையில் என் கருத்து அங்கு ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டி ராம்ரஹீம் மருத்துவமனை என்று பெயர் வைக்கலாம். இந்து-முஸ்லீம் மட்டுமின்றி கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தோரும் வந்து சிகிச்சை பெறலாம்.

ஸ்ரீசாயி மார்க்கம் வாசகர் ஒரு முறைஅயோத்திபிரச்சனைக்கு தீர்வாக, இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக அவதாரம் எடுத்த ஷீரடி ஸ்ரீ சாயிபாபாவின் கோயிலை அங்கு நிர்மாணித்து விடலாம் என்று எழுதியிருந்தார். ஷீரடி பாபா பற்றி என்னநினைக் கிறீர்கள்?

முகமது அலி: கடவுளுக்கு நிகரான மகானைப் பற்றி நான் நினைக்க என்ன இருக்கிறது? அவர் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக அவதாரமாய் வந்தவர் எனத் தெரியும். அவரது உபதேசங்கள் மேலும் மேலும் பரப்பப்பட வேண்டும். அப்போது தான் மக்களுக்கு தெளிவு

ஏற்படும். நான் ஒரு சில பாபா ஆலயங்கள் சென்று வழிபட்டுள்ளேன். பாபா ஆலயம் என்று இல்லை. நான் இந்துமதக் கோயிலுக்கும் போவேன். ஜெயேந்திர சுவாமிகளும் ஒருமுறை இங்கு அரண்மனைக்கு வந்திருக்கிறார். எனக்கு எந்த பேதமும் கிடையாது. கடவுள் ஒன்றுதான். பெயர்களும் முறைகளும் தான் வேறு. அந்த வகையில் பாபாவையும் நான் வழிபடுவேன்.

இந்திய மேம்பாடு எப்படி இருக்கும்?

முகமது அலி: மேலும் சிறப்பாக இருக்கும். நாம் முன்பு பேசிய விஷயங்கள் எல்லாம் மறைந்து நல்ல தீர்வு ஏற்படும். இந்தியா மென்மேலும் முன்னேறும்.

இதில், ஆன்மீகத்திற்கு எந்த அளவு பங்கு இருக்கும்?

முகமது அலி: இப்போது இருப்பதை விட அதிகமாகவே இருக்கும். அதற்கு முன் ஒரு விஷயத்தைப் பற்றி தெளிவு படுத்த விரும்புகிறேன். ஆன்மிகம் வேறு. மதம் வேறு. ஆன்மிகம் என்பது என் உள் மனதில் இருப்பது. உங்கள் உள் மனதிலும் இருப்பது. இது பரிசுத்தமானது. இதனால் இருவர் சுதந்திரமும் பாதிக்கப்படாது. இதையே மத சார்பின்மை என்றும் கட்சி சார்பின்மை என்றும் சொல்லலாம். மதச்சார்பின்மை தான் இந்தியாவின் சொத்து. இது நீடிக்க வேண்டும். அதனால்தான் உலகிலேயே, இந்தியாவில் மட்டும் இஸ்லாமியர்கள் நிம்மதியாக வாழ முடிகின்றது. இதற்குக் காரணம் இந்தியாவில் பரவலாக அதே நேரம் அமைதியாகக் காணப்படும் ஆன்மிக உணர்வு. இந்த உணர்வில் இந்தியர்களாகிய நாம் அனைவரும் சங்கமிக்க வேண்டும்.

இதற்கு உங்களின் பங்கு என்னவாக இருக்கும்?

முகமது அலி: தனிப்பட்ட நான் ஒன்றும் எதையும் பெரிதாக செய்துவிட முடியாது. இதற்கு ஒரு கூட்டு முயற்சி தேவை. அப்படி ஒரு முயற்சி மேற்கொண்டு இருக்கிறோம். Harmony India என்கிற சேவை அமைப்பைத் தொடங்கியுள்ளோம். India is one; Indians are one" என்பதே இதன் தாரக மந்திரம். இதன் தலைவராக ஹிந்து என். ராம் இருக்கிறார். நான் பொதுச் செயலாளராக இருக்கிறேன்.

தா. பாண்டியன்

இந்தியா போன்ற நாடுகளில் கூடிய விரைவில் உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி எம் .எஸ். சாமிநாதன் அண்மையில் எச்சரித்துள்ளார். இது எந்த அளவிற்கு உண்மையாக இருக்க முடியும் என்பது பற்றியும் பொதுவுடைமைக் கட்சித் தலைவரும், முன்னாள் எம்.பி.யுமான தா.பாண்டியனிடம் கேட்டோம்:

உணவுப் பஞ்சம் ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரித்திருப்ப தில் உண்மை இருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரை, நகர்ப்புற வளர்ச்சி காரணமாக வயல்களின் பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. மக்கள் தொகை காரணமாகவும் நெருக்கடி ஏற்படலாம். இது போன்ற சூழ்நிலையில், ஒரு மாநிலத்தில் பஞ்சம் என்றால், இன்னொரு மாநிலத்தில் விளைச்சல் என்றும் இருக்கும்.

எனவே, இந்த எச்சரிக்கையை மத்திய மாநில அரசுகள் புரிந்து கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போதிருந்தே அதற்காகத் திட்டமிட வேண்டும். இப்போதைய நிலையில் இந்தியா முழுவதுமே உணவு தான்ய விஷயத்தில் பஞ்சாபை மட்டுமே நம்பி உள்ளது'' என்றபடியே பேச ஆரம்பித்தார் தா. பாண்டியன்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

பீகார் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் - வளமான மண்ணும், வளமான நீர் வளமும் உள்ளது. ஆனால், அதற்கேற்ற விளைச்சல் அங்கு இல்லை. காரணம், அங்கு நீர்ப்பாசனத் திட்டங்களில் முறை இல்லாததுதான். ஆனால், நம் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் பிரச்சனை வேறுவிதமாக உள்ளது.

கோதாவரி, கிருஷ்ணா, வைகை, காவிரி ஆகிய தென்னக நதிகளை மகாநதியுடன் இணைக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதற்காக, தொழில்நுட்ப ரீதியில் கணக்கெடுப்பும் முடிந்து, வரை படமும் வரையப்பட்டது. ஆனாலும் ஆட்சியாளர்கள் இதற்கு முக்கியத்துவம் தரவில்லை.

அண்மையில், அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை வல்லுநர்கள் இது விஷயமாய் கூடிப் பேசினார்கள். தென்னக நதிகளை இணைக்கும் திட்டம் நிறைவேறினால், மூன்றரை கோடி ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்' என அவர்கள் தெரிவித்துள்ள னர்.

இப்போது, மொத்த உற்பத்தியே 20 கோடி டன்தான். ஆனால் தென்னக நதிகளை இணைத்தால், மற்ற நாடுகளின் பஞ்சத்தையும் நம்மால் போக்க முடியும். ஆனால் நம் அரசியல்வாதிகள் அதைச் செய்ய மாட்டார்கள் என்ற தா. பாண்டியனிடம், "எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றோம்.

"உதாரணமாக, நம் முதல்வர் கருணாநிதியே கூட இத்திட்டம் பற்றி வாய் திறக்கமாட்டார். ஏனென்றால் இத்திட்டம் காரணமாக இவருக்கு விளம்பரம் கிடைக்காது. தொழில் நுட்ப வல்லுநர்களுக்குத் தான் பேர் கிடைக்கும். சமத்துவபுரம் திறப்பதில், வள்ளுவர் சிலை திறப்பதில் வருவது போன்ற பேர், விளம்பரம் இதில் அவருக்கு வராது. வள்ளுவர் போதித்ததே உலகளாவிய சிந்தனையைத்தான். ஆனால் வள்ளுவர் வழியில் நிற்பதாகக் கூறும் இவர்கள் தென்னக நதி இணைப்பு பற்றிப் பேசமாட்டார்கள். இது எப்படி சரியாக இருக்கும்? இவர்கள்,1330 குறட்பாக்களில் அரைகுறள் கூட படிக்காத பாமரர்கள் என்றுதான் சொல்லுவேன்.

ஆழ்கடலில் எண்ணெய் எடுக்கிறோம், விண்வெளியில்

பறக்கிறோம். என்னதான் பறந்தாலும், முதலில் பசிக்குச் சோறுதான் முக்கியம். அதற்கு உத்தரவாதம் இல்லை என்றால் அதைவிட வேறு அவமானம் எதுவும் கிடையாது. வயிற்றுக்குச் சோறு கிடைக்காத நாடு ஒரு போதும் முன்னேற முடியாது. இங்கே தற்போது இருக்கிற விநியோக முறைகூட தவறுதான். மக்களிடம் விழிப்புணர்வு இல்லாததால் இவையெல்லாம் சகஜமாகிவிட்டன.

சாராயம் காய்ச்சுகிறவனும் சமூக விரோத வழிகளில் சம்பாதிப்பவனும் தான் தேர்தல் சந்தையில் வெற்றி பெற முடியும். எனவேதான். அரசியல்வாதிகள் இது போன்ற உருப்படியான திட்டங்களைக் கை கழுவி விடுகிறார்கள். இது நாட்டுக்கு நல்லதல்ல.

தமிழ் நாட்டிலாவது பரவாயில்லை. கருணாநிதி இத்திட்டம் பற்றி வாய் திறக்காமல் மட்டும் இருக்கிறார். ஆந்திராவில் அப்படி இல்லை. தென்னக நதி இணைப்பிற்கு பகிரங்கமான எதிர்ப்பே அங்கிருந்து வருகிறது.

நதி இணைப்பிற்கு முக்கியமான கால்வாய் வெட்ட, கையளவு நிலம் கூடத் தர முடியாது என அம்மாநில அரசு பிடிவாதம் பிடிக்கிறது. தென்னக நதிகளை இணைத்து விட்டால், இது போன்ற பிடிவாதத்துக்கோ, காவிரி நீரை வைத்து அரசியல் பண்ணுவதற்கோ வாய்ப்பு இருக்காது.

ஆனால், ஒரிஸ்ஸாவில் நிலைமை தலைகீழாக உள்ளது. 'வேண்டிய அளவு தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள்' என அம்மாநிலம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிற போதும் யாரும் கண்டு கொள்வதாக இல்லை, ஏனென்றால் அங்கு பத்து சதவீதம் நீர் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மீதி தொண்ணூறு சதவீதம் நீர், கடலில் கலப்பதால்தான் புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீரழிவுகள் அங்கு நடக்கின்றன.

ஒரு புத்திக் கூர்மை உடைய அரசாக இருந்தால், தென்னக நதி இணைப்பு போன்ற நல்ல திட்டங்கள் மூலம், வறுமையில் வாடும் பிற நாடுகளுக்கும் வாரி வழங்கும் வள்ளலாக இந்தியாவை மாற்ற முடியும்.

உள்ளூரில் எடுத்துக் கொண்டால். உழுவதற்கு வாய்ப்பும்,

மேய்ப்பதற்கு ஆடும் மாடும் இருந்து விட்டால் போதும், ஜாதியைக் காரணம் காட்டி சண்டை போடும் போக்கு தானாகக் குறைந்து விடும். எனவே, தென்னக நதிகளை இணைத்து விட்டு, இஸ்ரேல் நாட்டு நவீன விவசாய முறைப்படி இங்கும் செய்து நாம் தன்னிறைவை எட்ட வேண்டும்.

ஆனால், இதுபோன்ற நல்ல காரியங்கள் பற்றி நமது அமைச்சர்களோ - அல்லது, தென் மாநில முதல்வர்களோ கலந்து பேசுவதே கிடையாது.

ஒருவேளை இதே நிலை நீடிப்பதன் மூலம், அதன் காரணமாக வேண்டுமானால் பஞ்சம் வரலாமே தவிர, நம் நாட்டில் இயற்கை ஆதாரங்கள் இல்லை...அதனால் பஞ்சம் வந்துவிட்டது...என்று சொல்வது போன்ற சூழ்நிலை ஏற்படாது என்றே நினைக்கிறேன்.

டாக்டர் கமலா செல்வராஜ்

டெஸ்ட் டியூப் பேபி சாதனை படைத்த மகப்பேறு நிபுணர் டாக்டர் கமலா செல்வராஜ் பேசுகிறார்:

மருத்துவத்துறையில் அயல்நாடுகளில் இருப்பது போன்ற அதிவேக வளர்ச்சி இங்கும் வரும் நூற்றாண்டில் ஏற்படும். சோதனைக் குழாய் மூலம் அதிக குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளது.

குழந்தை உற்பத்திக்குத் தேவையான உயிரணு, கருமுட்டை ஆகியவை சூப்பர் மார்கெட்டில் கிடைப்பது போல எளிதாகக் கிடைக்கும். இப்படி தேர்வு செய்து குழந்தையை பெறுவதன் மூலம், விருப்பத்திற்கேற்ற குழந்தையைப் பெற முடியும். அவ்வளவு ஏன்? ஆணை கர்ப்பமடைய வைத்து குழந்தை பெறுவதற்கான சாத்தியம் கூட வரும் நூற்றாண்டில் உண்டு.

இந்தியக் கலாசாரத்திற்கும், குறிப்பாக 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண்பாடு உள்ள தமிழ்நாட்டிற்கும் சோதனைக் குழாய் குழந்தை என்ற விஷயம் சரிப்பட்டு வருமா?

இப்போது, எங்கள் மருத்துவ மனையிலேயே 500-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உண்டாகியுள்ளன. நீங்கள் சொல்வது போன்ற

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

'சென்டிமென்ட்ஸ்' எல்லாம் வேகமான விஞ்ஞான யுகத்தில் இல்லாமல் போய்விடும். கலாசாரம் கலாசாரம் என்கிறார்கள். சினிமாவில் இல்லாத கலாசார மோசடியா? காதல்...காதல்...காதல் தானா சினிமா? வன்முறை, ஆபாசம், குரோதம், இவைதானே சினிமா? இதையெல்லாம் விட்டு விட்டு சோதனைக்குழாய் தப்புன்னா எப்படி சரியா இருக்கும்? எல்லாத் தையும் விடுங்க. குழந்தை பெத்துக்க முடியாதவர்களை யோசிச்சுப் பாருங்க. அவங்க வாழ்க்கைல சந்தோஷம் தர்ற விஷயம்தான் சோதனைக் குழாய் குழந்தை முறை.

பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த அரசு முயற்சி எடுக்கறப்ப, இப்படி மேலும் குழந்தைகளைப் பெத்துக்கலாமா?

குழந்தை இல்லாதவங்கதானே பெத்துக்கறாங்க. அதை ஏன் தடுக்கணும்? அதிக குழந்தைகள்னு பார்த்தா கூட படிக்காத மக்கள் கிட்ட தான். படிச்சவங்க ஒண்ணோ இரண்டோ தான் பெத்துக்கறாங்க. அதுக்கு மேல பெத்தா அதைத் தடுக்க அரசே நடவடிக்கை எடுக்கலாம்., இனியும் பெத்தா சலுகை கிடையாது - 'கட்' ங்கற மாதிரி சொல்லிடணும்.

செயற்கைக் கருத்தரிப்பு குழந்தைங்கறதைவிட தத்து எடுத்து வளர்க்கறது கூட சரியா இருக்குமே?

தத்து எடுக்கறதுலதான் ஏகப்பட்ட ஃபார்மாலிடீஸ் இருக்கே. தத்து எடுக்க ஒரு நீதிபதி சான்றிதழ் கொடுக்கணும்கிறாங்க. நீதிபதிக்கு அந்தத் தம்பதிகளோட குறை எப்படி தெரியும்? 'இவங்களுக்குக் குழந்தை இல்ல, அதுல சில பிரச்சினை இருக்கு, அதனால தத்து எடுக்கலாம்'னு ஒரு டாக்டர்தானே சொல்லணும். இது மாதிரி பல பிரச்சினைகள் இருக்கு.

இதுபோன்ற விஞ்ஞான வளர்ச்சியும், தேவையும் அவசியம் என்று ஒப்புக் கொண்டாலும் கூட, ஏதோ ஒருவகையில் பெண்களின் நல்லொழுக்க மனோபாவத்தில் மோசமான பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறதே?

அதுக்குத்தான் செக்ஸைப் பத்தி பள்ளிக்கூட நிலையிலேயே சொல்லிக் கொடுங்கன்னு சொல்றேன். ஒரு பெண்ணுக்கோ, ஆணுக்கோ செக்ஸ் உணர்வு வர்றப்ப அதப் பத்திச் சொல்றது தப்பு இல்ல. ஏன்னா,

கேள்வி நேரம்

செக்ஸைத் தவிர்க்க முடியாது. அதே போல செக்ஸை தொழிலா பண்றவங்களுக்கும் மருத்துவ ரீதியான பாதுகாப்பு தரணும். அப்ப தான் எய்ட்ஸையும் கன்ட்ரோலுக்குக் கொண்டு வரமுடியும்.

உங்களோட சோதனைக் குழாய் குழந்தைமுறை மட்டுமில்லை பொதுவா, 'மெடிக்கல்' துறை, சேவை மனப் பான்மைஇல்லாமல், வர்த்தக ரீதியில் இருப்பதாகச் சொல்லப் படுகிறதே?

உண்மையிலேயே சர்வீஸ் பண்ணணும்னு எம்.பி.பி.எஸ். படிக்கறது வேற, பணம் பண்றதுக்காகப் படிக்கறதுங்கறது வேற. எம்.பி.பி.எஸ். சேர்ந்துட்டு ஒழுங்கா படிக்காத பல பேர் இருக்காங்க. கேட்டா, வரதட்சணை கிடைக்கும்... பார்த்துக்கலாம் னு கேஷுவலாச் சொல்ற தவறான அபிப்பிராயம் இருக்கு. இதை ஆரம்பத்திலேயே கட்டுப் படுத்தணும். அதே மாதிரி மருந்துக் கம்பெனிகள். ஒரே மருந்து ஐந்து, ஆறு பேர்ல வருது. ஏன் அப்படி 'லைசென்ஸ்' தரணும்? அதைக் கட்டுப்படுத்தணும். எங்களைப் பொறுத்த வரை நாங்க இதை 'பிசினசா' செய்யலை..... அவ்வளவுதான்.

முன்னாள் அமைச்சர் சுந்தரம்

அமைச்சர்கள் என்றாலே ஏதோ அபூர்வப்பிறவிகள் போன்ற பிரமை உள்ளது. உண்மையிலேயே அவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை யாராவது ஒரு அமைச்சர் கூடவே இருந்து பார்த்து எழுத வேண்டும்.'' என்று இதயம் பேசுகிறது ஆசிரியர் திடீர் உத்தரவு போட்டார். அடுத்த நிமிஷமே எந்த அமைச்சரோடு தொடர்பு கொள்ளலாம் என்று யோசித்தோம். 'மனுக்கள், பிரச்சினை சம்பந்தப்பட்ட அமைச்சர் என்றால் ரொம்ப நல்லது' என்று ஆசிரியர் சொன்னது ஞாபகத்துக்கு வரவே, பால்வளத்துறை அமைச்சர் க.சுந்தரத்தைத் தொடர்பு கொண்டு கேட்டோம். "ஒரு அரை நாளாவது உங்ககூட இருந்து, நீங்க எப்படி செயல்படறீங்க என்று கிட்ட இருந்து பார்க்கணும் சார்'' என்று விளக்கமாகச் சொன்னதும் அமைச்சர் சுந்தரம், இவ்வளவுதானே, தாராளமா பாருங்க, எங்க அரசாங்கம் தான் ஒளிவு மறைவு இல்லாமச் செயல்படுதே.... நாளைக்குக் காலைலயே வந்துடுங்களேன்'' என்றார்.

மறுநாள் விடியற்காலை அமைச்சர் வீட்டில் ஆஜரானோம். அந்த விடியற்காலை நேரத்திலும் அமைச்சரைப் பார்க்க கூட்டம் வந்து கொண்டேயிருக்கிறது.

கேள்வி நேரம்

கூட்டத்தைத் தாண்டி உள்ளே சென்ற நம்மை அமைச்சர் சுந்தரம் சிரித்துக் கொண்டே வரவேற்றார். கூட்டமும் காத்துக் கொண்டிருந்தது.

அமைச்சர் க.சுந்தரம் முதலில் சட்டமன்ற உறுப்பினர். பிறகு, ஆதி திராவிட நலத்துறை அமைச்சர். அதன் பிறகு பால்வளத்துறை அமைச்சர் இப்போது, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளராகவும் இருக்கிறார். இவ்வளவு பெரிய பதவிகள் இருந்தும், முகத்தில் எந்த வித டென்ஷனும் இல்லாமல், தன்னைப் பார்க்க வருபவர்களிடம் சிரித்த முகத்தோடு மனுக்களைப் பெற்றுக் கொள்கிறார். நம்பிக்கையான பதிலாகச் சொல்லி அனுப்புகிறார்.

“பேசிக்கிட்டே மத்தவங்களையும் பாத்துடுவோமே?'' என்று நம்மிடம் சொன்னஅமைச்சர்,அதேநேரத்தில்,மனுக்களோடு வந்திருந்தவர்களின் கோரிக்கைகளையும் காது கொடுத்துக் கேட்டார். ஒவ்வொரு மனுவிலும், எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி கையோடு குறிப்பெழுதி, உதவியாளர்களிடம் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

பொன்னேரி தொகுதி பழைய நாபாளையம் கிராமத்தில் இருந்து வந்திருந்த சாவித்திரி என்பவர் வேலை கேட்டு மனு கொண்டு வந்திருந் தார். அதைப் படித்துப் பார்த்த அமைச்சர், ‘வேலைதானே வாங்கிட லாம், தைரியமா போயிட்டு வாங்க’ என்று கூறி அனுப்பி வைத்தார்.

“அமைச்சர் அளவுல முயற்சி பண்ணினாத்தான் அரசாங்க வேலை கிடைக்கும்னு தெரிஞ்சு வந்திருக்காங்க போலிருக்கே'' என்று சிரித்துக் கொண்டே நாம் கேட்டதும் “அதான் இல்லை. எல்லோருக்கும் அரசாங்க வேலை தர்றதுன்னா அது நடைமுறை சாத்தியம் இல்லாத விஷயம். என்கிட்ட வர்ற மனுக்கள்லயே வேலை கேட்டு வர்றதுதான் அதிகம். என்ன பண்ண முடியும்? இல்லைன்னு சொல்லி திருப்பியா அனுப்ப முடியும்? அதனால் அவங்க தர்ற மனுக்களை அக்கறையா வாங்கி வெச்சுப்பேன். அவங்கவங்க தகுதிக்கேத்த மாதிரி ‘பிரைவேட்ல வேலை வாங்கித் தந்துடுவேன். ‘கவர்மெண்ட் வேலைதான்னு அடம் புடிக்கக்கூடாதுன்னு முதல்லயே ‘ஸ்ட்ரிக்டா’ சொல்லிடுவேன். நம்மள நம்பி வந்துட்டாங்க. ஏதாவது உருப்படியா செய்யணும். அதான் நம்ம பாலிசி'' என்று சிரித்துக் கொண்டே விளக்கினார் அமைச்சர் சுந்தரம்

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

'சோழவரம் போகணும் சார், மணி ஆயிடுச்சு '' என்று அமைச்சரின் உதவியாளர் கருணாநிதி வந்து கைக் கடிகாரத்தைக் காட்டி ஞாபகப் படுத்தவே, "சரி, போகலாம் சார், வாங்க... என்று அமைச்சர் நம்மையும் அழைக்க, நாமும் 'சரி' என்று தலையாட்டியபடியே அவரோடு கிளம்பினோம்.

புகைப்படக்காரரர், அமைச்சரின் உதவியாளர் ஜெக்குமார், பாதுகாப்பு அலுவலர் சிவகுமார் என அனைவரும் ஒரே காரில் ஏறிக் கொண்டோம். முன்னாலும், பின்னாலும் வாகன அணிவகுப்பு பந்தா எதுவும் இல்லாமல் அமைச்சரின் கார் மட்டும் சோழவரம் நோக்கிக் கிளம்பியது.

அடையாறில் இருந்து கிளம்பிய அமைச்சரின் கார். சென்னை மவுண்ட் ரோடு, ஸ்டெர்லிங் ரோடு, கீழ்ப்பாக்கம், நியூ ஆவடி ரோடு என போய்க் கொண்டே இருந்தது. ஐ.சி.எஃப். அருகே செல்லும்போது காரை நிறுத்தச் சொன்னார் அமைச்சர்.

கார் நின்ற வேகத்தில் அதிலிருந்து இறங்கிய அமைச்சர் 'குடிசை மாற்று வாரியக் கட்டடங்களைப் பார்ப்போம், வாங்க'' என்று கூறி நம்மையும் உடன் அழைத்தார்.

அமைச்சரை 'திடீர்' என்று பார்த்த மாத்திரத்தில் அங்கிருந்த அதிகாரிகள் 'அட்டென்ஷனி'ல் நின்று விட்டனர். அமைச்சர் தான் அவர்களை 'சும்மா பார்க்கலாம்னு வந்தேன். வேலை எல்லாம் எப்படி நடக்குது? என்று சிரித்தபடியே பேசி சகஜ நிலைக்குக் கொண்டு வந்தார்.

எக்ஸிக்யூடிவ் என்ஜினீயர் மாசிலாமணி, குடியிருப்புகள் பற்றி அமைச்சரிடம் விளக்கினார். ஒரு வீட்டுக்குள் சென்ற அமைச்சர் நம்மையும் கூப்பிட்டுக் காட்டினார்.

பார்க்கறதுக்குச் சின்ன வீடு மாதிரி தெரியும். ஆனா, இதுவே தி.நகர்ல வாடகைக்குப் போனா ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மேல ஆகும். ஆனா, கலைஞர் போட்ட திட்டத்தால, ஏழைக் குடிசைவாசிகளுக்கு இலவசமாகவே இந்த வீடுகள் கிடைக்குது. இந்த வீட்டோட அமைப்புல ஒரு விசேஷம் இருக்குது. பாத்ரூம் கதவு பார்த்தீங்கன்னா, முழுக்க முழுக்க பி.வி.சி. பைப்ல செஞ்சு போட்டது.

கேள்வி நேரம்

எவ்வளவு தண்ணி பட்டாலும் ஒண்ணும் ஆகாது.. என்றார் அமைச்சர். இந்தக் குடியிருப்பில் மட்டும் 552 வீடுகள் உள்ளன. ஏற்கனவே இந்த இடத்தில் குடிசைவாசிகளாக இருந்தவர்களுக்காக மட்டும் மாற்று ஏற்பாடாக அரசே இக் குடியிருப்புகளைக் கட்டித் தருகிறது. மொத்தம் ஐந்து கோடி ரூபாய்க்கும் மேல் செலவு.

குடியிருப்பின் அருகிலேயே ராட்சதக் கிணறு ஒன்றும் தோண்டப் பட்டு, கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. அதைப் பார்வையிட்ட அமைச்சர், தண்ணில உப்பு கலந்து வந்தா தோண்டறத நிறுத்துங்க......என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பிறகு, அமைச்சரின் கார் சோழவரம் நோக்கிக் கிளம்பியது. காரிலேயே அமைச்சரோடு ஒரு 'மினி பேட்டி' வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றவே, பால் வளத்துறை பற்றியும், ஆவின் பால் பற்றியும் அவரிடம் கேட்டோம். அதற்கு அமைச்சர் சுந்தரம், "நம்ம வாழ்க்கையிலேயே மறக்க முடியாத அளவுக்கு ஒரு புகார் வந்தது'' என்று சிரித்துக் கொண்டே அது பற்றி சொல்ல ஆரம்பித்தார்.

வீட்ல பி.ஏ. க்கள் வராட்டி நானே போன் அட்டண்ட் பண்றது வழக்கம். அதுவும் காலங்கார்த்தால போன் வந்தா நான் தான் எடுப்பேன். அப்படி ஒரு தடவை விடியற்காலை ஆறு மணிக்கு ஒரு போன் வந்தது.

போன்ல பேசினவர், அமைச்சர் இருக்காரா? ன்னு கேட்டார். 'அமைச்சர் தான் பேசறேன்'ன்னு சொன்னதும், காபி சாப்டீங்களா'ன்னு கேட்டார். நானும் 'சாப்பிட்டாச்சே'ன்னு சொன்னேன். அதுக்கு அவரு, நான் இன்னும் காபி சாப்பிடலை'ன்னார். எனக்கு அவர் என்ன சொல்ல வர்றார்னே புரியலை. ஏன் சாப்பிடலைன்னு கேட்டேன். 'ஆவின் பால் இதுவரைக்கும் வரலை'ன்னு அவர் சொன்னவுடன் தான் அவரோட புகார் புரிஞ்சது. அப்புறம் அதிகாரிகளிடம் பேசி, பால் சப்ளை பண்ண உடனே ஏற்பாடு செஞ்சேன்.

பால்வளத்துறை அமைச்சராக இருந்தாலும் இவர் 'ஆவின் பால்' பயன்படுத்துவதில்லையாம். "ஏன் நன்றாக இருக்காதா?'' என்று நாம் கிண்டலாய் கேட்க அதன் ரகசியத்தைப் போட்டு உடைத்தார்

அமைச்சரின் உதவியாளர் ஜெய்குமார்.

பால் வளத்துறை அமைச்சரா இருந்துக்கிட்டு ஆவின்பால் பயன்படுத்தினால் யாராவது தப்பா பேச வாய்ப்பு இருக்கு. அதனால, இப்பவும் வீட்ல கறந்த பால்தான் அவர் பயன்படுத்துகிறார். சமயத்துல அமைச்சரே பால் கறந்துடுவாரு'' என்றார் உதவியாளர் ஜெய்குமார். அமைச்சர் சுந்தரம் அடிப்படையில் ஒரு கிராம விவசாயி என்பதால், தோட்டம் வளர்ப்பது, விவசாயம் பார்ப்பது, பால் கறப்பது போன்றவற்றில் எல்லாம் படு கில்லாடியாம். ஆட்கள் இல்லாத சமயத்தில் தானே புகுந்து விளையாடி விடுவாராம்.

சோழவரம் திருமண மண்டபம் ஒன்றில், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடம் அமைச்சர் சுந்தரம் குறை கேட்பதற்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சர் மண்டபத்திற்குள் சரியான நேரத்தில் நுழைய, உடனடியாகக் குறை கேட்கும் படலம் தொடங்கியது.

சோழவரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் த.மா.கா.வைச் சேர்ந்த எஸ்.ஆர். வரதராஜூலு. அவரையும் சேர்த்து முப்பத்தி ஒன்பது ஊ.ஒ. தலைவர்கள் புகார் மனுக்களோடு வந்திருந்தனர். வரதராஜூ லு தலைமையுரையில் பேசும்போது, அமைச்சர் சுந்தரம் கட்சி வித்தியாசம் இல்லாமல் செயல்படுவதாகப் பாராட்டிப் பேசினார். பிறகு, ஒவ்வொரு தலைவராகப் புகார்களைக் கொடுக்க, ஒவ்வொன்றையும் வரி விடாமல் படித்துப் பார்த்தார் சுந்தரம். ஒவ்வொரு துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அங்கேயே வந்திருந்ததால் 'உடனடி ஆக்ஷன்' எடுக்கும் படி அப்போதே அவர்களுக்கு உத்தரவிட்டார் அமைச்சர்.

முப்பத்தொன்பது ஊ.ஒ. தலைவர்களில் 12 பேர் பெண்கள்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு தலைவரும் அமைச்சரிடம் புகார் மனுக்களைத் தர, அவைகளைச் சிரித்துக் கொண்டே வாங்கிக் கொண்டார் சுந்தரம்.

அப்படி இப்படி என்று புகார் மனுக்களைப் பெறவே ஐந்து மணி நேரம் ஆனது. கடைசியாக அரை மணி நேரம் நின்று கொண்டே

பேசினார் அமைச்சர்.அவரைத் தொடந்து அதிகாரிகளையும் அவரே பேசச் சொல்ல ஒவ்வொரு அதிகாரியாகப் பேசி முடிக்க மணி மூன்று ஆனது.

இறுதியாக, 'குடும்பப் பாதுகாப்பு நிதி'த் திட்டத்தின் கீழ், பணியில் இறந்து போன பம்ப் ஆபரேட்டர் ஒருவரின் மனைவியிடம் ஒரு லட்ச ரூபாய்க்கான 'செக்' கைக் கொடுத்தார் அமைச்சர்.

அடுத்ததாக 'மீஞ்சூரி' லும் இதே போன்ற குறை கேட்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் அமைச்சர்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், அமைச்சரின் பாதுகாப்புக்கென ஒரு போலீஸ்காரர்கூட அருகில் இல்லை. தவிர, 'அமைச்சர் வாழ்க' போன்ற தொண்டர்களின் கோஷமும் இல்லை. புகார் மனுக்களைக் கொடுத்தவர்களில் ஒருவராக, கடைசி வரை எளிமையாக அவர்களின் பிரச்சனைகளை அமைச்சர் காது கொடுத்துக் கேட்டார் என்பதே பிரமிப்பாக இருந்தது.

மறுநாள் புதுக்கோட்டை கூட்டத்தில் கலந்து கொள்ள இருந்ததால், அவசரமாக ரயில்வே ஸ்டேஷன் செல்ல வேண்டிய நிலையில் இருந்தார். அவரது நெருக்கடியான பிஸியான 'ஷெட்யூலை'ப் புரிந்து கொண்ட நாம், நன்றியோடு கை குலுக்கி விடை பெற்றோம்.

டி. என். சேஷன்

தேர்தல் நெருங்கி வருகிறது. அடையாள அட்டை வழங்குவதில் ஏகக் குளறுபடிகள். இது பற்றிப் பேசலாம் என்று முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி. என். சேஷனிடம் பிரத்யேகமாய் பேட்டி எடுத்தோம்:

நீங்கள் தேர்தல் கமிஷனராக இருந்தபோது பல சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்தீர்கள். அவை எந்த அளவிற்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன?

தேர்தல் கமிஷன்கிறது ஒரு பெரிய அமைப்பு. அதை விமர்சனம் பண்றது நல்லதில்லை. தப்பாக்கூட இருந்தாலும், சிலவிஷயங்களைக் குறிப்பிட விரும்பறேன். நான் கமிஷனரா இருந்தப்ப, தேர்தல்ல பணத்தோட ஆக்ரமிப்பைக் கட்டுப்படுத்தினேன். இந்த பண ஆக்ரமிப்பை தேர்தல் கமிஷன் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. இது நடைமுறைக்கு வரணும்னா பார்லிமெண்ட்ல சட்டமா போட்டு மத்தவங்களும் ஒத்துழைப்பு தரணும்.

நல்லா ஞாபகம் இருக்கு. 89 - ல வி.பி.சிங் பிரதமரா இருந்தப்ப காலம் சென்ற தினேஷ் கோஸ்வாமி சட்ட அமைச்சரா இருந்தார். அப்ப

கேள்வி நேரம்

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பா ஒரு பில் பாஸ் பண்றதுன்னு முடிவாச்சு. ஆனா, அதுக்கப்பறம் இதுநாள் வரைக்கும் அது பத்தி பேச்சே இல்லை. இதை எதுக்குச் சொல்றேன்னா, தேர்தல் சட்டத்தில் அடிப்படையா சில மாறுதல்களைச் செய்தாத்தான் உண்மையான சீர்திருத்தத்தை அடைய முடியும்கிறதுக்காகத்தான்.

அதேமாதிரி, தேர்தல்ல நிற்கறவங்க இன்கம்டாக்ஸ் துறைக்கு செலவு விவரங்களை காட்டணும்னு அப்பச் சொன்னேன். அவங்க காட்டற அக்கவுண்ட்டை அப்படியே ஏத்துக்கமாட்டோம். அது சரியா, தப்பாங்கிற 'செக்கிங் சிஸ்டம்' எல்லாம் அப்ப இருந்தது. இப்ப அதெல்லாம் பண்றாங்களான்னு சந்தேகமாத்தான் இருக்கு.

மேடை, பந்தல், சுவர் விளம்பரம், மீட்டிங் பத்தி எல்லாம் என் 'பீரியட்'ல கண்டிப்பான அணுகுமுறை இருந்தது. இப்ப அப்படி இருக்குதான்னு எனக்கு நம்பிக்கை இல்லை.

சுவர் விளம்பரம், பண ஆதிக்கம், அதிகாரத் துஷ்பிரயோகம் பத்தி எல்லாம் நான் அரசு அதிகாரிகளை வெச்சே பிரச்சாரம் பண்ணியிருக்கேன். இப்ப அதுமாதிரி பிரச்சாரம் ஆறதில்லை. இப்பவே பாருங்க. சென்னைல பல பொது இடங்கள்ல அரசியல் கட்சிகள் தேர்தலுக்காக 'ரிசர்வ்' பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. ரயில் பயணத்துல தான் 'ரிசர்வேஷன்' னு சொல்வாங்க. அது மாதிரி ஆயிடுச்சு.

நீங்க சொல்ற கட்டுப்பாடுகள்ல, ராத்திரி 10 மணிக்கு மேல பிரச்சாரம் பண்ணக்கூடாதுங்கறதும் ஒண்ணு. ஒரு குறைந்த பட்ச பிரச்சார காலகட்டத்துல, ராத்திரி, பகலா பிரச்சாரம் பண்ணினாத் தானே முடியும் ? அதோட, ஜனநாயக உணர்வு களுக்கு எதிரான ஒரு விஷயம் மாதிரியும் இது இருக்கு. விடியற்காலை நேரத்துல பக்தி பிச்சாரம் எல்லாம் நடக்கறப்ப, தேர்தல் பிரச்சாரம் மட்டும் எப்படி இடையூறா இருக்க முடியும்?

பக்திப்பிரச்சாரத்தையும் இதையும் ஒண்ணா பார்க்கக் கூடாது சொல்லப் போனா பக்திங்கறது பிரச்சாரம் இல்ல. பக்தர்களே ஆசைப்பட்டு, அவங்களா முடிவு பண்ணி, அப்படி செய்றாங்க. தேர்தல் பிரச்சாரம் அப்படி இல்லை. ஜனங்களை ஓட்டுக்காக இவங்க தேடிப்

போறாங்க. அப்படி போறப்ப குழந்தைகள், வயோதிகர்களுக்கு எல்லாம் இடையூறு இருக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான் 10 மணிக்கு மேல பிரச்சாரம் கூடாதுன்னு சொல்றது. வேணும்னா 11 மணி வரை கூட பிரச்சாரம் வெச்சுக்கலாம். அதுக்காக, விடிய விடிய பேசிக்கிட்டே இருப்பேன்னா அது நல்லதுக்கு இல்ல.

வாக்காளர் அடையாள அட்டை விஷயமும் நீங்கள் கொண்டு வந்ததுதான்- அதில் ஏன் இவ்வளவு குளறுபடிகள்?

அதுக்கு ஒரு பெரிய வரலாறே இருக்கு. 1951 தேர்தல் சட்டத்துல அடையாள அட்டை இல்லாம யாரும் ஓட்டு போடக்கூடாதுன்னே தெளிவா சொல்லப்பட்டிருக்கு. 1992-ல நரசிம்மராவ் பிரதமரா இருந்தப்ப, தேர்தல் பற்றி என்கிட்ட எழுத்து மூலமா ஆலோசனை கேட்டார். நான் பல விஷயங்களை எழுதிக் கொடுத்தேன். அதுல ஒண்ணுதான் இந்த அடையாள அட்டையும்.

அதுக்கு மத்திய சர்க்கார்லேர்ந்து மாநில சர்க்கார் வரைக்கும் எதிர்ப்பு. லாலு பிராசாத், நான் ஏதோ போட்டோ கம்பெனியோட காண்ட்ராக்ட் வெச்சிருக்கேன்னே சொன்னார். ஜோதிபாசு, பிஜூ பட்நாயக் எல்லாம் எதிர்த்தாங்க. 3000 கோடி ரூபா செலவாகும்னு எல்லாம் சொல்லி எதிர்ப்பு தெரிவிச்சாங்க.

கடைசில பார்த்தா, மேற்கு வங்காளத்துலதான் இதுக்கு full support முதல்ல எதிர்ப்பு தெரிவிச்ச ஜோதிபாசு அப்புறம் சரின்னு ஒத்துக்கிட்டார். அங்க 90 சதவீதத்துக்கு அப்பவே அடையாள அட்டை கொடுத்துட்டாங்க.

அப்படி எடுக்கப்பட்ட புகைப்படங்களில் ஏகப்பட்ட தவறுகள் இருக்காமே?

உண்மைதான். ஆம்பளபேர்ல பொம்பள போட்டோவும், பொம்பளபேர்ல ஆம்பள போட்டோவும் இருந்திருக்கு. தப்பித் தவறி போட்டோ சரியாக வந்துட்டா, பேர் சரியா இருக்காது. அட்ரஸ் சரியா இருக்காது. வாக்காளர் லிஸ்ட் வச்சு போட்டோ எடுங்கன்னா அதுலயும் சிக்கல். செத்துப் போனவன் பேர் இருக்கும். உசிரோட இருக்கிறவன் பேர் இருக்காது. ஒரிசாவுல ஒரு அட்டைல, நாயோட

போட்டோ இருந்துச்சாம். இதையும் மீறி அட்டைகளை விநியோகக்கறதுல தாமதம், அலட்சியம். இப்படி எத்தனையோ குறைபாடுகள்.

உங்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை இருக்கா?

அது ஒரு தனிக் கதை. செப்டம்பர் மாசம்னு நினைக்கிறேன். இங்க, பக்கத்துல உள்ள இடத்துல அடையாள அட்டைக்கு போட்டோ எடுக்கறதா வந்து கூப்பிட்டாங்க. கார்ல வந்து கூட்டிட்டு போறதாவும், இல்லாட்டி வீட்லயே வந்து எடுக்கறதாவும் சொன்னாங்க. 'நான் சாதாரண மனுசன்தான், சலுகை எதுவும் வேண்டாம்'னு சொல்லிட்டு, நானும் என் ஒஃய்ப்பும் அந்த இடத்துக்குப் போனோம். டிஜிட்டல் கேமரால போட்டோ எடுத்தாங்க. எடுத்துட்டு உடனே அடையாள அட்டையும் கொடுத்தாங்க. அதுல என் போட்டோ என் போட்டோ மாதிரி இல்ல. உடனே, 'இதுல உள்ள போட்டோ என் மாதிரி இல்ல. இத வெச்சு ஓட்டு போடப் போனா நம்ப மாட்டாங்க'ன்னு குறிப்பு எழுதி அட்டையை அங்கேயே திருப்பிக் கொடுத்துட்டு வந்துட்டேன்.

ஏற்கெனவே அடையாள அட்டை எடுத்தவர்களுக்கும் திரும்ப போட்டா எடுக்கிறார்களாமே?

அதான் சொன்னேனே, அடையாள அட்டை விநியோகமும் சரியா நடக்கலைன்னு, ஏற்கனவே எடுத்தது எங்க கிடக்கோ? எல்லாம் பண விரயம்.

ஒரே நாள்ல தேர்தல் நடத்தணும்கிறது பத்தி என்ன நினைக்கறீங்க?

திரும்பத் திரும்ப சொல்றேன். ஒரே நாள்ல தேர்தல் நடத்தலாம். முடியாதுன்னு இல்லை. ஆனா, அதுல ஒரே ஒரு பிரச்சினைதான். ஒரே நாள்ல தேர்தல் நடத்தற அளவுக்கு, நம்மகிட்ட பந்தோபஸ்துக்குப் போலீஸ் பலம் கிடையாது. அதனாலதான் சில சில பகுதிகளாப் பிரிச்சு வெவ்வேறு நாட்களில் தேர்தல் நடத்தறது. காரணம், ஒரு பகுதில பந்தோபஸ்து வேலைகளை முடிச்சுட்டு, இன்னொரு பகுதிக்கு அந்தப் போலீஸ்காரங்க இடம் மாறிப் போக கால அவகாசம் வேணும்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

தேர்தல் வெவ்வேறு நாட்களில் நடந்தாலும், ஓட்டு எண்ணிக் கையும் முடிவு அறிவிப்பும் தாமதமாகக் காரணம் என்ன?

இப்ப தமிழ்நாட்டை தென் ஜில்லாக்கள், வட ஜில்லாக்கள்-னு பிரிச்சு வெவ்வேறு தேதிகள்ல தேர்தல் நடக்கறதா வெச்சுப்போம். முதல்ல தென் ஜில்லாக்களுக்குத் தேர்தல் முடிஞ்சாச்சு. வட ஜில்லாக்களுக்கு தேர்தல் நடக்க நாலு நாள் அவகாசம் இருக்கு. அதுக்குள்ள தென் ஜில்லா தேர்தல் முடிவு வந்துட்டா, அதோட பாதிப்பும், வெற்றி பெற்ற கட்சியின் செல்
வாக்கும் வட ஜில்லா தேர்தலைப் பாதிக்குமா? பாதிக்காதா? கண்டிப்பா பாதிக்கும்.முன்ன எல்லாம் தனித்தனி ஓட்டுப் பெட்டியா எண்ணுவாங்க. அப்படி எண்ணப்பட்ட ஓட்டுக்களோட வெற்றி, தோல்வி காரணமா குடிசைகளுக்கு நெருப்பு கூட வெச்சிருக்காங்க. அதனால தான், Mixing of ballot papers- ங்கற சிஸ்டத்தை கொண்டு வந்தேன். இந்தத் தாமதமெல் லாம் மக்களோட நன்மைக்காகத்தான்.

எலெக்ட்ரானிக் வோட்டிங் சிஸ்டத்துல முன்பிருந்த தவறுகள் நடக்காமல் தவிர்க்கப்படுமா?

எலெக்ட்ரானிக் வோட்டிங்கிற்கான 'மெஷின்களே' இப்ப பிரச்சனையா இருக்கே.அன்னிக்கு மக்கள் தொகை 40,50 கோடி. இன்றைய நிலை எப்படியும் ஒன்பது லட்சம் மெஷின்களாவத தேவைப்படும். அதுக்கு எப்படியும் எட்டரை கோடி ரூபாய்கிட்ட செலவாகும். என்ன பண்ணப் போறாங்களோ தெரியலை.

இது அதிகப்படியான செலவு இல்லியா?

பேலட் பேப்பர்ஸ் வெச்சு நடத்தற தேர்தல்ல, ஆயிரம் ரூபாய் செலவுன்னா, அதுல ஐநூறு ரூபாய் பேப்பர்ஸுக்கே செலவாயிடும். பத்திகைகளுக்கு நியூஸ்பிரின்ட் செலவு மாதிரி தான். அந்தச் செலவை 'கம்பேர்' பண்றப்போ, இரண்டே தேர்தல்ல இந்த எட்டரை கோடி ரூபாயை ஈடுகட்டிடலாம். நஷ்டம் ஒண்ணும் வந்துடாது. ஆனா, முதல்ல செலவு பண்ணித்தான் ஆகணும்.

ஸ்ரீ பெரும்புதூர் ஜீயர்

ஸ்ரீ பெரும்புதூர் ஸ்ரீ வரத எதிராஜ ஜீயர் சுவாமிகள் வாழும் ராமானுஜர் என்று போற்றப்படுபவர். இவர் விமானப் படையில் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தன் மனதிற்கு பட்டத்தை தைரியமாக எடுத்துக் கூறி பல்வேறு எதிர்ப்புகளுக்கும், சர்ச்சைகளுக்கும் ஆளானவர். இவருக்கு இருந்த அச்சுறுத்தல் காரணமாக அரசின் பாதுகாப்பும் இவருக்கு அளிக்கப்பட்டது. தற்போது, அரசின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையிலும் தன் மனதில் பட்டதை தைரியமாகப் பேசி வருகிறார் ஜீயர் சுவாமிகள். "கண்களை மூடிக்கொண்டு தவம் இருப்பது மட்டும் அல்ல ஆன்மிகவாதியின் வேலை. எந்தத் தவறையும் சுட்டிக் காட்ட வேண்டிய தைரியமும் ஒரு ஆன்மிகவாதிக்கு முக்கியம்." என்றும் கூறுகிறார் ஜீயர் சுவாமிகள். அவர் நமக்களித்த பேட்டியிலிருந்து:

ஸ்ரீ பெரும்புதூர் ஆதிகேசவ பெருமாள் ஜீயர் மடம் தொன்மையான மடங்களுள் முக்கியமான ஒன்று. எழுநூறு வருட பாரம்பரியம் கொண்டது. திருப்பதி, ஸ்ரீரங்கம், காஞ்சிபுரத்திற்கு இணையான மடம். இங்கே ஏற்றத் தாழ்வு பார்ப்பதில்லை. ஜாதி, மத, பேதம் பார்ப்பதில்லை. ராமானுஜர் வகுத்த வழிகாட்டிய பாதையைத் தான் நாங்கள் இங்கே பின் பற்றுகிறோம். அதனாலேயே பலருக்கும் எங்களைப் பிடிப்பதில்லை. ஆனாலும் நாங்கள் உண்மையான நாராயண சேவையைத் தொடர்ந்து செய்தே வருகிறோம். வைணவ பிரச்சாரம், அன்னதானம், பெருமாள் சேவை ஆகியவையே எங்கள் குறிக்கோள்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

ஆழ்வார்களில் பலரும் பிராமணர் அல்லாதவர்கள் தான். பிராமணர் என்ற மமதை வேண்டாம் என்பதற்காகத்தான் ராமானுஜர் வைணவம் என்ற ஜாதி, மத, பேத மற்ற புதிய தத்துவத்தை கொண்டு வந்தார். துரதிர்ஷ்டவசமாக அவரது பேரைச் சொல்பவர்களும் அதைப் பின்பற்றுவதில்லை. இங்கே ராமானுஜர் பாதையைத் தான் பின்பற்றுகிறேன்.

தமிழ்மறை - பிரபந்தசேவை இங்கு நடைபெறுகிறது. இதில் பிரபந்தம் அறிந்த எவரும் பங்கு பெறலாம். பிரபந்தம் தெரியாதவர் பங்கு பெற்று பின் தெரிந்து கொள்ளலாம். தமிழ் முறையில் இங்கு சமத்துவம் மலர்கிறது.எத்தனையோ எதிர்ப்புக்கிடையில் என்சேவை தொடர்கிறது. அச்சுறுத்தலும், அவமரியாதையும் எனக்கு ஒரு பொருட்டல்ல. ராமானுஜ சேவையே எனக்கு மிக முக்கியம்.

கர்நாடகத்தில் ஸ்ரீஇராமானுஜர் திருவடித் துதித்து வாயினால் அவருக்குகந்த திருக்குலத்தவர்கள் வயல்வேலின் சுரங்கங்கள் என மகிழ்ந்தோம்.மைசூர் திருநாராயணபுரம் வைணவர்கட்கு ஞான மண்டபமாக நிர்மாணித்தார் ஸ்ரீ இராமானுஜர். அதனால் உலகப் புகழ் பெற்றது. ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீமந் நாராயணனே முதல் தெய்வம் என்று தத்துவ மிட்டு, கோயில் நிர்வாகம், ஒழுக்கம், நேர்மை, பக்தி எனும் வயலில் பாரதம் / உலக மாந்தர்கள் தொழிலால் பிரிக்கப்பட்டிருக்கிறோம். தவிர ஏற்றத் தாழ்வு காணவில்லை என்று செயலில் காட்டி வலியுறுத்தியதால் இங்குள்ள வைணவர்களை தென்னகத்தை விட்டே வெளியேறச் செய்தார்கள். ஏன்? இவர் கோன்கீழ் நாம் குடி வாழ இயலாகாது ஆதலின் இவரை மாய்ப்பதே நலம் என அவரை அச்சுறுத்தி கேலி செய்து பொய் அவதூறுகளைப் பரப்பி ஸ்ரீ ராமானுஜரை வற்புறுத்தி வெளியேறச் செய்தார்கள்.

முன்னோர் வழிப்படியே ஸ்ரீ ராமானுஜர் தாமும் பின்னேர்ந்தபடி திருநாராயணபுரத்தில் செய்த தொண்டு செல்வப்பிள்ளை என்னும் திருநாராயணனுக்கு வைரக்கிரீடமாகும், அவைகளே வைரமுடி உற்சவமாக கொண்டாடப்படுகிறது போலும்.இராமானுஜரின் புரட்சி கருத்துக்களை பாராட்டாதார் யாரும் இலர். இராமானுஜர் என் வாழ்க்கைக்கு முன்னோடி என தேசப்பிதா மகாத்மா காந்தி சொன்னார். திருக்குலத்தார் என்று இராமானுஜரால் அழைக்கப்பட்டதை அரிஜன் எனப் பெயரிட்டு ஆலயப் பிரவேசத்தையும் அனுமதித்தார்.

கேள்வி நேரம்

"முக்தி என்பது ஒரு சாராருக்கென்று இருக்கையிலே
தமிழ் நாடு தன் தவப் பயனால் நம்பி
இராமானுஜனை ஈன்றதன்றோ"

என்று பாவேந்தர் பாரதிதாசன் போற்றி புகழ்ந்துள்ளார்.

இராஜாராம் மோகன்ராய், சுவாமி விவேகானந்தர், மகாகவி பாரதியார் ஆகியோர் இராமானுஜர் புகழ் பாடியவர்களே.இன்றும் பல மேல் நாட்டவர் ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா இயக்கத்தவர், இராமானுஜரின் புரட்சி கருத்துக்களை பரப்பி வருகின்றனர்.

2000-வது ஆண்டில் தமிழ்நாட்டின் அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி, பாரதப் பிரதமருக்கு விஞ்ஞான அறிவுரை செய்து விண்கலங்களை உருவாக்கியவருக்கு, "இராமானுஜர் விருது" வழங்கி, இராமானுஜருக்கு சிறப்பு சேர்த்தார்.

ஆயினும் ஸ்ரீபெரும்புதூர் ஆண்டுவிழாவில் திருக்குலத்தவர்கட்கு தேர்வடம் பிடிக்கும் முதல் உரிமை, முதல் மரியாதையுண்டு. நாம் துறவறம் ஏற்ற 1983ஆம் ஆண்டு முதல் இன்றுவரையிலும் பல எதிர்ப்புகள், அச்சுறுத்தல்கள், அவமரியாதைகள் மேலும் தொடர்ந்தாலும், திருக்குலத்தவர்களுக்காக நாம் இராமானுஜர் வழியிலேயே தான் பணி தொடர்வோம்

ஷீரடி சாயிபாபா ஒரு மகா அவதார புருஷர். அவரை இறைவனின் அவதாரம் என்றே சொல்லலாம். பக்தி மார்க்கத்தில் புதிய மார்க்கத்தை கொண்டு வந்தவர். மகாராஷ்டிர மாநிலத்தில் மட்டும் இன்றி, இந்தியா முழுவதும் அவர் அருள் பாலித்து வருகின்றார். அவரால் ஆசி பெற்ற பக்தர்கள் பலர். அவர் மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட மகான். மத ஒற்றுமையை வலியுறுத்த வந்த மகான். அவர் நம் தேசத்தின் பொக்கிஷம். சாயி பக்தர்கள் அனைவரும் நலமாய் செழித்து வாழ எம்பெருமானை வேண்டி ஆசி கூறுகிறேன்.

பங்காரு அடிகளார்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்திற்குள் நுழைந்ததுமே எதிர்பாராத பக்தி உணர்வில் மௌனமாகி பக்தர்கள் 'அம்மா அம்மா' என்று பரவசப்பட்டனர்.இந்தச் சூழ்நிலையில் அடிகளாரை எப்படிப் பேட்டி எடுப்பது என்று உண்மையிலேயே குழம்பிப் போயிருந்தோம்.

அதே குழப்பதோடு அடிகளாரின் அறைக்குள் சென்றால் அவராகவே முந்திக் கொண்டு பேச ஆரம்பித்தார். தான் ஒரு பெரிய மகான் என்றெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் ஏதோ ஒரு நண்பனிடம் பேசுவது மாதிரி அதே நேரம் பிரவாகமாய் பேச ஆரம்பித்தார் அடிகளார். நாமும் சகஜமாய்க் கேள்வி மேல் கேள்வி கேட்க எல்லாவற்றுக்கும் பொறுமையாகவும் சிரித்துக் கொண்டும் பதில் சொன்னார் அடிகளார்:

எத்தனையோ மகான்கள் இந்த பூமியில் அவதரித்திருக்கிறார்கள்.த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம்,விவேகானந்தரின் யோகநெறிகள் என்று பல சித்தாந்தங்கள் உள்ளன. அந்த வகையில் அடிகளாரின் ஆன்மீகக் கோட்பாடு என்ன?

அன்பு, பண்பு, பாசம், உழைப்பு, சத்யம் இவைதான் மனித வாழ்க்கையின் அடிப்படையே. அவையே நமக்கும் கோட்பாடு. பூமியில் விதைக்கப்பட்ட நெல் முளைக்க வேண்டுமானால் நிலத்தில் ஈரத்தன்மை இருக்க வேண்டும். அதுபோல ஆன்மிகத்தில் ஒருவன் முன்னேற

வேண்டுமானால் அவன் மனதிலும் ஈரம் இருக்க வேண்டும். மனதில் ஈரம் இருந்தால்தான் தர்ம சிந்தனைகள் வரும். அப்போதுதான் தீய எண்ணங்கள் விலகி நல்ல உணர்வுகள் ஏற்படும்.

வீட்டில் அன்றன்று சேரும் குப்பைகளை அன்றன்றே ஒழித்து விட வேண்டும். பண்டிகை நாட்கள் வரட்டும், அப்போது சுத்தப்படுத்திக் கொள்ளலாம் என்று இருந்தால் வீடு என்ன ஆகும். அது போலத்தான் மனதில் ஏற்படும் தீய எண்ணங்களை உடனக்குடனே அகற்றி நல்வழி ஏற்படுத்திக் கொண்டுவிட வேண்டும்.

ஆன்மிகத்தில் இவ்வாறு உணர்ந்து செயல்படும்போதுதான் அது உள்ளத்துக்கு உரமாக மாறும். இதுவே நமது ஆன்மிகக் கோட்பாடு.

இன்றைய மாறிவரும் வேகமான வாழ்க்கைச் சூழலில், சமுகச் சூழலில், சோதனைகள் மிகுந்த காலகட்டத்தில், சாதாரண மக்களுக்கு ஆன்மிகம் சாத்தியமா?

எத்தனை சோதனைகள் வந்தாலும் பொறுமையைக் கடைப் பிடித்து அடிமேல் அடிவைத்து ஆன்மீகத்தில் ஈடுபட்டால் தெய்வத்தை நெருங்க முடியும். நெருக்கத்தை உணர முடியும். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் பொறுமையைக் கடைப்பிடிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் உள்ளத்தில் தெளிவு ஏற்படும். .

நடப்பட்ட பயிர் கண்ணெதிரே வளர்கிறது. அந்தப் பயிருக்கு சாணி, எரு, உரம் இட்டு வளர்க்கிறோம். சாக்கடை நீரானாலும் பயிர் வளர்கிறது. அப்படி வளர்ந்த உணவு தானியத்தை சாப்பிடுகிறோம். அது வளர்ந்த இடம், அதற்குப் போட்ட எரு, சாணி இவை பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்வதில்லை.அதுபோலவே ஆன்மீகத்திலும் சாத்தியமா? சாத்தியம் இல்லையா? என்றெல்லாம் ஆராய்ச்சிபண்ண வேண்டியதில்லை. உள்ளத்தை கள்ளமின்றி வளர்க்கும் போது எல்லாமே சாத்தியம்தான்.

பக்தியை வளர்த்துக் கொள்ளும்போது ஆசார, அனுஷ்டானங்களே சமயத்தில் இடையூராக இருக்கிறதே?

ஆசாரம் தூய்மைன்னா அது முதலில் உள்ளத்துக்குள்ள வரணும். மனிதன் தான் ஜாதியை கொண்டு வந்தான். கடவுள் ஜாதியைத் தரல. பொதுவாக, மதக் கோட்பாடுகளை உருவாக்கியதே குருமார்கள் தான். நமது கோட்பாடு மனிதநேயம் தான். நம்மிடம் வருபவர்கள் யாராக இருந்தாலும் வழிபாட்டுக்குத் தடை ஏதும் இல்லை. தெய்வத் தைப் புரிந்து கொள்ளும் உரிமை எல்லோருக்கும் உண்டு. மனித நேயத்தோடு கூடிய பக்திதான் சிறந்தது. அதுதான் தொண்டின் அடிப்படை. மற்ற எல்லாவற்றையும் விடுங்கள். ஒருவர் மனதில் பக்தி உணர்வு தோன்றிவிட்டால் அதை தெய்வமே அங்கீகரித்துவிட்டால் ஆசாரம் ஒரு தடையாக இருக்காது. உள்ளத்தையே கோயிலாக மாற்றிவிட்டால் பிரச்சனையே இல்லை.

அடிப்படையில் அதாவது உருவ அமைப்பில் நீங்கள் ஒரு ஆண். ஆனால் உங்களை 'அம்மா' வாக வழிபடுகிறார்கள். இது எப்படி?

இதை வழிபடுகிறவர்களிடம்தான் கேட்க வேண்டும். (சிரிக்கிறார்_)

உங்களுக்குப் பெண் பக்தர்கள் அதிகம் இருக்கிறார்களே?

அதையும் அவர்களிடம் தான் கேட்க வேண்டும்.

இல்லை_ நான் கேட்பது ஆதிபராசக்தி இயக்கத்தில் பெண்களே அதிகமாக இருக்கிறார்களே என்பதுதான்....

பெண்களுக்குத் தாய்மை உணர்வும் குடும்பத்தைக் கட்டிக் காக்கின்ற பக்குவமும் அதிகம். அவர்களுக்கு நம் இயக்கத்தில் நூறு சதவீதம் உரிமைகள் கொடுத்துள்ளோம். அவர்களும் உரிமையோடு செயல்படுகிறார்கள்.

குறிப்பாகப் பெண்களைப் பொறுத்தவரையில் அந்த 3 நாட் களிலும் வழிபடலாம் என்ற உங்களின் சிந்தனை எந்த அள விற்குச் சரியாக இருக்க முடியும்?

இயற்கையைப் பொறுத்தவரை எல்லாமே படைப்புக்கள்.

கேள்வி நேரம்

கடவுளைப் பொறுத்தவரை எல்லாமே குழந்தைகள். கடவுளுக்கு எந்த பேதமும் இல்லை. ஆண், பெண் என்று பேதம் காட்டி வழிபாட்டு உரிமையைத் தடுக்கக் கூடாது. அதிலும் மூன்று நாட்கள் என்பது சாதாரண விஷயம். அதுவும் ஒரு கழிவுதானே.உதாரணத்துக்கு நமது வீட்டில் வளரும் பசுவை எடுத்துக் கொள்ளுங்கள். பசுவிடம் வித்தியா சம் என்று ஏதாவது பார்க்கிறோமா? அப்படிப் பார்க்காமல் தானே பால் குடிக்கிறோம். பசுவிற்கு ஒரு நியதி, பெண்களுக்கு ஒரு நியதி, இது எப்படி சரி?

உங்களுக்கு முன் இருந்த சித்தர்கள் எல்லாம் வாழ்க்கையின் சூன்யத்தைப் பற்றி 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்ற வகையில் பார்த்தார்கள். நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

தர்ம நெறிதான் வாழ்க்கை. வாழ்க்கை முறையை தர்மத்திலிருந்து பிரிக்கக் கூடாது. வாழ்க்கையில் எல்லோருக்குமே பிறப்பும், இறப்பும் சகஜம்தான். நதி ஓடுவது போல வாழ்க்கை போய்க் கொண்டே இருக்கிறது. போகிற போக்கில் நாமும் போனாலும் நமக்கென்று வாழ்க்கை நெறி உண்டு. அதைத்தான் தர்மம் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன். தர்மம் நம்மைத் தாங்கும், நமது வாழ்க்கையைத் தாங்கும்.

ஆலமர விழுதுகள் வீணானவை என்று எண்ணக் கூடாது. ஆலமரம் உறுதியாக இருக்கக் காரணமே அதன் விழுதுகள்தான். அதுபோல, வாழ்க்கை உறுதியாக இருக்க வேண்டும் என்றால், தர்மம் என்ற விழுதுகள்தான் காரணம். ஏதோ வேண்டாத செலவினமாக தர்மத்தை நினைத்துவிடக்கூடாது. தர்மத்தை சத்தியத்தோடு செய்தால் வாழ்க்கையின் அர்த்தம் புரியும்.

மனிதர்களுக்கு முகங்கள்தான் வேறு வேறு. ஆசை ஒன்றுதான். எல்லோருக்கும் ஆசை இருக்கிறது. இதையெல்லாம் புரிந்து கொண்டால் வாழ்க்கையும் தானாகப் புரிந்து விடும்.

அப்படியென்றால் வாழ்வியல் சிக்கல்களுக்கு ஆன்மீகம்தான் தீர்வு என்கிறீர்களா?

ஆன்மிகம் என்றுதனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டியதே யில்லை. உண்மையான உழைப்பு ஆன்மீகம். சத்தியமான மனசும்

ஆன்மீகம். மனசை அடக்கிக்கொள்கிற பக்குவம் வந்தாலே அது ஆன்மீகம்தானே. பூமியில் ஒரு விதை விதைக்கப்படுகிறது. விதைத்த பின்பு அது பார்ப்பவர் கண்களுக்குத் தெரிவதில்லை. அந்த விதை முளைத்துச் செடியாகிப் பயிராகிப் பலன் தரும்வரை காத்திருக்கிறோம். ஆன்மீகத்திலும் இன்று விதைக்கப்படும் விதை நல்ல பலன்களைத் தருவதற்கும் ஒரு காலம் உண்டு. அதுவரை பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும். ஒரு நெல்லைப் பார்க்கும்போது அதன் பயிர் தெரிவதில்லை. அது விதைக்கப்பட்டு முளைத்து வந்தபின்தான் நெற் பயிராகிறது. கதிராகிறது. உணவாகிறது. ஆலமர விதை முளைத்து வளர்ந்து மரமான பின்புதான் நிழல் தருகிறது.

அதுபோலவே மனிதனைப் பார்த்தால் அவன் செயல்கள் தெரிவதில்லை. ஆனால் அவன் செயல்படும்போது, பலருக்கும் பயனுள்ளவனாக மாறுகிறான். அந்தச் செயல்கள் நல்ல செயல்களாக அமையும்படி அவனுடைய எண்ணங்களும் செயல்பாடுகளும் போற்றி வளர்க்கப்பட வேண்டும். இதற்கான பயிற்சிதான் ஆன்மீகம். அந்த வகையில் வாழ்க்கைக்கு ஆன்மீகம் உதவுகிறது என்பதுதான் உண்மை.

ஆன்மீக ஞானம் இருந்தாலும் சமூகத்தில் அமைதி இல்லாத நிலைதானே உள்ளது?

அமைதி உனக்குள்ளேயே தான் இருக்கிறது. அதைக் கெடுத்துக் கொள்ளச் சொன்னது யார்? கடவுளா? இல்லையே?நீயே தானே அமைதியின்மையை ஏற்படுத்திக் கொண்டாய். சின்னக் குழந்தைக்குக் கூட டென்ஷன் ஏன்? அளவு கடந்த ஆசைதான். கட்டுப்பாடு இல்லாத மனசுதான் உணவையும் கட்டுப்படுத்தி உண்ண வேண்டும். மனத்தையும் கட்டுப்படுத்தி வாழ வேண்டும். எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ வேண்டும். அப்படியெல்லாம் வாழ்வதை விட்டு விட்டு சோதிடம் பார்த்தும் குறை தீரவில்லை, கோயிலுக்குப் போயும் குறை தீரவில்லை என்று வருந்துவதில் பயனில்லை.

இப்போதெல்லாம் ஆசை என்பது போதையாகி விட்டது. பதவி போதை, புகழ் போதை, பணப் போதை, அதிகார போதை இப்படி எங்கெல்லாம் போதை தேடிப் போகிறோமே அதை முதலில் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.அப்போது அமைதி தானாக வந்துவிடும், ஆன்மீகம் என்றால் என்ன என்றும் தெரிந்துவிடும்.

கேள்வி நேரம்

நீங்கள் ஆன்மீகத் தீர்வை முன் வைக்கிறீர்கள், இன்னொரு புறம், விஞ்ஞானத்தில் அபாரமான வளர்ச்சி ஏற்பட்டிருக் கிறதே?

விஞ்ஞான வளர்ச்சியிலும் கூட ஒருவித கட்டுப்பாடு வேண்டும். விஞ்ஞானம் இயற்கையை மீறினாலும் அழிவு தான். பஞ்ச பூதங்கள் இயற்கையானவை. பஞ்ச பூதங்களின் ஆற்றலை உணர்வதுதான் ஆன்மீகம். இயற்கை சக்திக்குக் கட்டுப்பட்டவை. கடல் பொங்கினால் என்ன ஆகும்? எரிமலை வெடித்தால் என்ன ஆகும்? காற்று புயலாக மாறினால் என்ன ஆகும்? அது மாதிரிதான் விஞ்ஞானமும். கட்டுப் பாட்டை மீறினால் நல்ல தில்லை. அப்படி விஞ்ஞானத்தை கட்டுப் பாட்டில் வைத்திருப்பது தான் மெய்ஞானம்.

ஆனால் மெய்ஞானம் இன்று வேறு மாதிரியாகப் போய்க் கொண்டிருக்கிறதே?

ஆமாம். மெய்ஞானம் பொய் ஞானம் ஆகிவிட்டது. பொய்ஞானம் பேய் ஞானம் ஆகப் போகிறது.

இப்படி ஆன்மீக சிந்தனை பொய்யாக மட்டும் இல்லாமல் 'கமர்ஷிய' லாக்கப் படுவது பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

சில பேர் அப்படி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆன்மீகம் என்னும் நல்ல சக்தியை தீய சிந்தனையோடு பயன் படுத்தினால் ஒரு கட்டத்தில் அதுவே அவர்களுக்கு எதிராகத் திரும்பிவிடும். ஆன்மீக சக்திக்கு நாம்தான் அடிபணிய வேண்டுமே தவிர, அந்த சக்தியை அடிபணிய வைக்க முயற்சி செய்யக்கூடாது.

ஆன்மீக சக்தியை வலியுறுத்தும் நீங்கள் உருவ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தருகிறீர்களே?

காலம் காலமாகவே மக்கள் உருவ வழிபாடு செய்து பழகி விட்டார்கள். ஒரு ஆற்றைக் கடக்க, அதன் போக்கிலேயே சென்று மறுகரையை அடைவது சுலபம். அதுபோல, அவர்கள் வழிபாட்டின் போக்கிலேயே சென்று பிறகு உண்மை நிலையை உணர வைத்து அவர்களையும் தொண்டு நிலைக்கு வர வழைப்பதே நம் எண்ணம். இயற்கையின் இறைத்தன்மையை இப்போது மக்களும் உணர

ஆரம்பித்து விட்டார்கள்.

உருவ வழிபாடு என்று வரும்போது கூடவே போலிச் சாமியார் களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறதே?

இதற்கு மக்களின் பழக்க, வழக்க எண்ணங்கள்தான் காரணம். அவர்களின் பேராசையால் தான் போலிச் சாமியார்கள் உருவாகிறார் கள். ஆன்மீகம் என்பது பச்சை மண்பாண்டம் மாதிரி. காமம், குரோதம், கோபம், பேராசை, வெறி போன்ற துர்குணங்கள் அப்பாண்டத்தில் தளும்பிக் கொண்டிருக்குமானால், அது உடைந்து சிதறித்தான் போகும். அப்படி ஆன்மீக உணர்வு சிதறிப் போவது போலிச் சாமியார்களுக்கு வசதியாகி விட்டது.

போலிச் சாமியார்கள் விஷயம் ஒருபுறம் இருந்தாலும் மதத் தலைவர் களையும், மடாதிபதிகளையும், தனி மனிதர்களை யும் வணங்குவது என்பது எந்த அளவிற்குச் சரி?

முதலில் நான் ஒரு மனிதன். சாதாரண மக்கள் தொண்டன் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மற்றபடி ஒவ்வொரு மனிதனும் தாய், தந்தை, குருவை வணங்க வேண்டும் என்று ஆன்மீகத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. தாய், தந்தை, குருவும் மனிதர்கள்தானே. ஆகவே, இவர்கள் ஸ்தானத்தில் இருப்பவர்களை வணங்குவதில் தப்பில்லை.

'குரு'ஸ்தானம், குரு பரம்பரை என்று வரும்போது, மடாதி பதிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையே வேறுபாடு இருப் பதாக நினைக்கிறீர்களா?

மடாதிபதிகள் உருவாக்கப்பட்ட குருமார்கள். சித்தர்கள் அப்படி இல்லை.

பக்தி மார்க்கத்தில் நீங்கள் பல பெரிய மாறுதல்களைச் செய்திருக்கிறீர்கள். ராமானுஜர் இப்படித்தான்.....

(குறுக்கிட்டு) நம்முடையது தனி பாணி. பெரியவர்களுடன் ஒப்பிடாதீர்கள்.

இயக்குனர் ஆர். சி. சக்தி

உணர்ச்சிகள், சிறை போன்ற வித்தியாசமான சினிமாக்களை இயக்கிய பிரபல இயக்குனர் ஆர்.சி. சக்தி சாயி பக்தரும் கூட. இவர் சாயிபாபாவை புரிந்துகொண்ட விதமும் வித்தியாசமானது. 'பக்தியும், சமூக அக்கறையும் வெவ்வேறானவை அல்ல' என்கிற பார்வை உடையவர் ஆர்.சி. சக்தி. அவர் பேட்டி தந்த போது குறிப்பாக, சாயி பாபா என்று சொல்லும் போதெல்லாம் கண்களில் நீர் கொப்பளிக்க மிகவும் நெகிழ்ச்சியாகவே காணப்பட்டார்:

எல்லா விஷயங்களையும் எல்லோரிடமும் பகிர்ந்து கொண்டு விட முடியாது. சில விஷயங்களை உணர மட்டுமே முடியும். அவற்றை பிறரிடம் பகிர்ந்து கொள்ள முடியாது. சாயி பாபா மீதான பக்தியும் அப்படித்தான். எனக்கு உணர்த்திய விஷயம் எது என்று எனக்குத் தெரிந்தால் போதும். அவரது அனுக்ரஹம் எனக்குப் பூரணமாக இருக்கிறது. பாபா இப்படிப்பட்டவர் என்று யாரோ கூறி அவரை நான் ஏற்று வழிபடவில்லை. இன்னொருத்தர் சொல்லி பாபாவை நான் நம்பவில்லை. யாருடைய புத்தகம் படித்தோ, எவருடைய பேச்சைக் கேட்டோ நான் அவரிடம் செல்லவில்லை. பாபாவே எனக்குள் உணர்வு ரீதியாக ஏற்படுத்திய மாறுதல் இது. அதை விவரிக்க முடியாது. எப்படி விவரிப்பது என்றும் தெரியவில்லை. தவிர, நான் உணர்ந்து கொண்டு ஏற்பட்ட அனுபவங்கள் அனைத்தும் 'பிரைவஸி' யானது. அதை வெளியில் எப்படிச் சொல்வது? ஒரு வேளை வெளியே சொன்னாலும் அந்த உணர்வு ரீதியான அனுபவங்கள் . 'டைலூட்' ஆயிடுமோன்னு பயமா இருக்கு.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

சாயி பாபாங்கற பிரக்ஞை எனக்கு, என் வாழ்க்கையில் 'லேட்'டா வந்தது. ஆனாலும், எனக்கு நம்பிக்கை ஏற்பட்ட பிறகு அவர் என்னுடனேயே இருக்கிறார், இருந்திருக்கிறார், இருப்பார் என்று உணர முடிந்தது. சாயி எனக்குள் புகுந்து விடவில்லை. அவர் எனக்குள் இருந்து கொண்டே தான் இருக்கிறார். சாயி பாபா இந்த 'சக்தி'யை விட்டு விடுவதாக இல்லை. எனக்குள் இருக்கிற விஷயமே எனக்கு தெரியாமல் இருந்தது. உணர்வு ரீதியாக புரிந்து கொண்ட பின் அனைத்துமே சாயி பாபாவின் இயக்கமாகவே தெரிகிறது. ஆனாலும், பாபாவுடனான தொடர்பு நூல் எது என்று புரியவில்லை.

1983-84ன்னு நினைக்கிறேன். செய்தி அறிவிப்பாளர் ஷோபனா ரவி மயிலாப்பூர் பாபா கோயிலுக்கு முதன் முதலாக என்னை அழைத்துப் போனார். ஏதோ பாபா கோயில் என்கிற நினைப்பு மட்டுமே அப்போது இருந்தது. இந்த அளவிற்கு பக்தி, நம்பிக்கை எல்லாம் கிடையாது. சொல்லப் போனால் கடவுள் நம்பிக்கையே கிடையாது. அப்போது பாபா கோயிலுக்குள் போனபோது கூட பாபா சிலையைப் பார்த்து நான் பரவசமடைந்து விடவில்லை. பின்னர் படிப்படியாக அவருடன் தொடர்பு ஏற்பட்டது.

அதன் பிறகு ஏற்பட்ட நம்பிக்கையைத் தொடர்ந்து அதற்கு முன் நடந்த சம்பவங்களை கோர்வைப்படுத்திப் பார்த்தபோது தான் பாபா நம்முடன் எப்போதுமே இருந்து வருகிறார் என்ற உண்மை புரிந்தது.

உதாரணத்துக்கு இரண்டு சம்பவங்கள்:

1957 ஆம் ஆண்டு சென்னையை நான் வேடிக்கை பார்க்க வந்தபோது முதன் முதலாக சென்னையில் தங்கியது இப்போதும்'லஸ் கார்னரில்' இருக்கும் சாயி லாட்ஜில் தான். இரண்டாவதாக, திருமணம் ஆன சில மாதங்களில் வீடு வாங்க தீர்மானித்தேன். வீடு அமைந்ததும் இதே சாயி நகரில் தான். இவ் விஷயங்களை பின்னாட்களில் பொருத்திப் பார்த்த போது சாயி பாபாவின் செயலே இவையென உணர முடிந்தது.

சாயி பாபாவிடம் எனக்குள் ஏற்பட்டிருக்கும் உணர்வு பக்தியா, மூடநம்பிக்கையா, அதீத நம்பிக்கையா எது என்று தெரியவில்லை. ஏதோ ஒரு சரணாகதி. இரண்டறக் கலந்து விட்டது போன்ற உணர்வு.

கேள்வி நேரம்

எதையுமே அவருடன் இணைத்துப் பார்க்க வேண்டும் என்கிற உந்துதல். கடவுள் நம்பிக்கை வந்த பிறகும் மற்ற கடவுள்களை விட்டு விட்டு இவரைத்தான் வணங்கத் தோன்றுகிறது. சிவனா, பெருமாளா, அம்மனா யாரைப் பார்த்தாலும் சாயி பாபா என்றே கூறி வணங்க முடிகிறது. அவரே இதற்கான காரணகர்த்தா என்று மனதார நம்புகிறேன். இது சரியா, தப்பா அறிவியல் பூர்வமானதா போன்ற விவாதத்திற்கு நான் தயாராக இல்லை. அனைத்தும் அவரே என்கிற உணர்வு எனக்குள் பதிந்து விட்டது. இதற்கும் அவரே பொறுப்பு.

பாபாவை எப்படி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கான உரிமையை அவரிடம் இருந்து நானே எடுத்துக் கொண்டேன். அதில் தப்பில்லை. தாத்தா, அப்பா, அம்மா, நண்பன் போன்ற அனைத்து வார்த்தைகளும் ஒன்று சேர்ந்த ஒன்று தான் பாபா. அப்படிப்பட்டது தான் எனக்கும் அவருக்குமான உறவு.

இத்தனைக்கும் ஒரு மணி நேர பூஜை, வியாழக்கிழமை விரதம், பஜனை போன்ற பழக்கங்களும் எனக்குக் கிடையாது. அவரைப் பற்றிய புத்தகங்களும் படித்ததில்லை. ஆனாலும், எல்லாவற்றையும் மீறிய ஒரு அழுத்தமான நம்பிக்கை அவரைப் பற்றி. அந்த நம்பிக்கையில் மிகச் சிறப்பாக வாழ்கிறேன். நல்லதாக நடக்கும் என்று நம்பும்போது எல்லாம் நல்லபடியாக நடக்கிறது. அவநம்பிக்கை வரும்போது நம்பிக்கை கரைந்து விடுகிறது. அப்போது நினைத்தது நடக்கவில்லை என்று சொல்வது தவறு

பாபாவிடம் முழு சரணாகதி அடைகிற எவருக்கும் இந்த நம்பிக்கை வரும். ஏனென்றால், அப்படி சரணாகதி அடைந்தவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பும், அக்கறையும் பாபாவிற்குத் தோன்றிவிடும். இதில் நமது பங்கு ஒன்றுமில்லை. எல்லாம் அவரே.

அவர் வாழ்வின் சாராம்சமே மனித நேயம்தான். உலக மாந்தரை நீங்கள் நேசித்தால் அவர் உங்களை நேசிப்பார். அவர் ஒரு மனிதர் அல்ல. அவர் ஒரு சத்தியம்; அவர் ஒரு மார்க்கம்.

எல்லாமே பாபா தான் என்றாகி விட்டது. சந்தோஷம் வந்தாலும்

அவருக்குத்தான் வழிபாடு. கஷ்டம் நேர்ந்தாலும் அவருக்குத்தான் திட்டு. அவர் புகழ்ச்சியை மட்டும் ஏற்றுக் கொள்பவர் இல்லை. நான் திட்டினாலும் வாங்கிக் கொள்வார். எனக்கும் அவருக்குமான உறவு அப்படிப்பட்டது. என் குழந்தைகள் என்னிடம் ஏதாவது கேட்டால் கூட, "பாபாவிடம் கேளுங்கள்'' என்று தான் சொல்வேன்.

பாபாவிடம் எனக்குப் பிடித்த விஷயமே அவர் கடைசி வரை, மக்களோடு மக்களாகவே கலந்து இருந்தார். மக்கள் பிரச்சனைகளில் தலையிட்டு தீர்வு கண்டார். ஞானமார்க்கம், வேதாந்தம் என்று கூறி, மனித வாடையே வேண்டாம் என்று அவர் ஒதுங்கிப் போய் உட்காரவில்லை. மந்திர, தந்திரம் செய்து பயமுறுத்தவில்லை. விளக்கு எரிக்க எண்ணெய் கிடைக்காத போதே, தண்ணீரில் எரிய வைத்து அற்புதம் செய்தார். அடிப்படையில் மிக எளிமையான பாபா, "எல்லோரையும் நேசியுங்கள்'' என்று தான் வலியுறுத்தினார்.

அவரைப் போல ஒரு Social Worker வேறு கிடையாது. மனிதகுல சேவைக்கும், மனிதப் பிறவிக்கான அர்த்தத்தையும் தன் வாழ்க்கை மூலம் விளக்கிக் காட்டிய பாபாவிற்கு மரணமோ, மறைவோ கிடையாது. அவரை நம்புகிற வழிபடுகிற மனிதர்கள் இருக்கும் வரை அவர் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.

கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்பவர்களும், ஏழைக்கு சாப்பாடு போடுபவர்களும், தான் சாயி பக்தர்களாக இருக்க முடியும். பாபா பக்தன் என்று சொல்லிக் கொண்டு பிறருக்கு காலணா தராதவன் சாயி பக்தனாக இருக்க முடியாது. பிறருக்கு உதவுவதில் நம்மால் முடிந்தவரை உதவுவோம் என்று பங்கெடுப்பவனே சாயி பக்தன். இது ஒன்றும் போதனை இல்லை. இதுதான் தர்மம். இதுதான் வாழ்க்கைச் சட்டம்.

நான் இதுவரை ஷீரடி போனதில்லை. அவர் கூப்பிடவில்லை என்ற கவலையும் இல்லை. போக வேண்டும் என்ற பரபரப்பும் இல்லை அவரது உபதேசங்கள் கடைபிடிக்கப்படுகின்ற எந்த இடமும் அவர்இருக்கும் இடம் தான்.

அவர் பாபாவை கும்பிட்டார்; அதனால் பணக் காரர் ஆனார். அவர்

கேள்வி நேரம்

பாபாவை கும்பிட்டு எம்.எல்.ஏ. ஆனார், மந்திரி ஆனார் என்று நாமும்அதுபோல் எதையாவது பெற வேண்டும் என பாபாவை வழிபட்டால் அது பக்தி அல்ல. பக்தி மனதில் வர வேண்டும். பிறகு பாபாவே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்.

பாபா மீதான என் பக்தி என்பது Just one minute. அப்போது, உண்மையான சத்தியமான சந்திப்பு நடக்கும். ஒரு 'கரண்ட்' பாஸ் ஆகும். நெகிழ்வாக இருக்கிற எவர் நெஞ்சிலும் பாபா நிறைவாக இருக்கிறார்.

பாபா என்னை வழி நடத்துகின்றார். இயக்கு கின்றார். எப்படி என்று கேட்டால் சொல்ல முடியாது. அது ஒரு உணர்தல். பலமுறை அவரது எச்சரிக்கையை கேளாமல் Suffer ஆகியுள்ளேன்.

பாபா ஆள் அனுப்பியோ, கடிதம் போட்டோ எல்லாம் என்னை இயக்குவதில்லை. மனதில் ஒரு நிமிடம் தோன்றி மறையும் உணர்வு அது. அப்படித் தோன்றும்போது அதை நிலைப்படுத்திக் கொள்வதே என்னைப் பொறுத்தவரை பக்தி. வழி காட்டுதல் கிடைக்கும் போதே பற்றிக் கொள்ள வேண்டும்.

பாபாவை வழிபடுகிறவர்களுக்கு கஷ்டம் வரக் கூடாது என்றெல்லாம் இல்லை. கஷ்டம் வரும் போகும். கஷ்டத்திலிருந்து காப்பாற்று என்று வேண்டுவதற்கு பாபா இருக்கிறார். அவரால் அது முடியும். தன்னை நம்பியவர்களை அவர் கை விட்டதில்லை.

"நிகழ்வுகளை நாம் நடத்துவதில்லை. அப்படி நினைப்பது தவறு. நமக்கான டைம் டேபிள் எப்போதோ எழுதப்பட்டது. விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கத்தான் முடியும்; படைத்து விட முடியாது. Next என்பது பொதுவானது. Next என்பதற்கான விடை தெரிந்து அதற்குத் தேவையின்றி முற்றுப் பெறும்போது தான் விடை தெரியும்.

ராஜாஜியும் மறைந்தார்; பெரியாரும் மறைந்தார்; மறைவுக்கு அடுத்த

அவர்களின் நிலை என்ன? அந்த Next எது? எங்கிருந்தோ, யாராலோ, எதற்காகவோ அனுப்பப்பட்டுள்ளோம். அதேபோல், எங்கிருந்தோ, எதற்கோ, யாராலோ அழைக்கப்படுவோம். இடையில் நடப்பவை நம்மால் அல்ல. நாம் கருவிகள். எந்தக் கருவியை எப்படி பயன்படுத்துவது என 'மெக்கானிக்' மட்டுமே அறிவான். கருவிகள் இயக்கப்படலாம். இயங்க முடியாது.

அலைவரிசையை கண்டு பிடிக்கும் ஞானம் ரேடியோ கருவிக்கு உண்டு. ஆனால், எதிரில் உட்கார்ந்திருப்பவனின் மனநிலையை நம்மால் அளவிட அல்லது கண்டுபிடித்து விட முடியாது. நாம் பிறவி எடுத்துள்ளோம். நாம் பிறவிகள் தான். அதற்கான பெருமையை காப்பாற்றி, அதற்கான அர்த்தத்தை கண்டு பிடிக்க வேண்டும். மாறாக, தொழில் செய்கிறோம். டாக்டராக, விஞ்ஞானியாக, ஆசிரியராக, டைரக்டராக, கிளீனராக, நடிகராக இங்கே எல்லோருமே தொழில் சார்ந்த லாபம் தேடுபவர்கள் தான். ஆனால், அடிப்படையில் நாம் பிறவிகள். தொழிலில் வேண்டுமானால்நான் பெரியவன்; என்னிடம் பணம் இருக்கிறது என்பது போல் வேஷம் போடலாம். பிறவிக்கான அர்த்தம் தேடும்போது அங்கு வேஷம் எடுபடாது. நான் வேடதாரி ஆகிவிடாத அளவிற்கு பாபா எனக்கு வழி காட்டுகின்றார். புரிந்து கொண்டதால் என்னால் சுலபமாக வாழ முடிகிறது'' என்றும் சொன்னார் ஆர்.சி. சக்தி.

தருமபுர ஆதீனம்

“அம்பிகையைச்சிறப்பாக வழிபடுதற்குரிய நாள்கள் நவராத்திரி எனப்படும். இது மாதந்தோறும் அமாவாசையை அடுத்துள்ள ஒன்பது நாட்களில் வரினும், இரண்டு நவராத்திரிகளையே சிறப்பாக எடுத்துக்கூறுவர் பெரியோர். ஒன்று கோடைக்காலத்தில் பங்குனி அல்லது சித்திரை மாத அமாவாசையை அடுத்து வரும் ஒன்பது நாட்களில் கொண்டாடப்படுவது. இது வசந்தருதுவில் வருதலால் வசந்த நவராத்திரி எனப்படும். பிறிதொன்று பலராலும் சிறப்பாகப் போற்றப்படும் நாவராத்திரியாகும். இது சரத் காலத்தில் வருவதால் சாரதா நவராத்திரி எனப்படும். வசந்த ருதுவும், சரத் ருதுவும் எமனுடைய இரண்டு கோரைப்பற்களுக்குச் சமமானவை என்று கூறுவர். இவ்விரு ருதுக்களும் வெம்மை மிகுதியாலும், தண்மை மிகுதியாலும், முறையே அம்மை, காலரா முதலிய நோய்கள் பெருகி மக்களைத் துன்புறுத்தும் காலங்களாகும்.

இக்காலங்களில் உலக மாதாவாக விளங்கும் அம்பிகையை வழிபடுவோர் அந்நோய்களினின்றும் நீங்கி அனைத்து நலங்களையும் பெற்று வருகின்றனர். மேலும் மக்கட்கு ஓர் ஆண்டு தேவர்கட்கு ஒரு நாளாதலின் உத்தராயணத்தில் வரும் தை மாதம் முதல் ஆனி மாதங்களைத் தேவர்கட்குப் பகற் பொழுதுதென்றும், தக்ஷிணாயணத் தில் ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறு மாதங்களை இரவுப் பொழுதென்றும் கூறுவர்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

உபாசனை

மனிதன் எந்தத் தெய்வத்தைத் தியானித்து உபாசனை செய்கின்றானோ அந்தத் தெய்வத்தின் அருளைப் பெறுவான். மன்னர்களும் படைவீரர்க
ளும் போருக்குச் செல்லும் காலங்களில் பொற்றவை எனப்படும் துர்க்கையை வழிபட்டுச் செல்வம் பெற்றுச் சிறந்தனர். கலைமகளைப் போற்றிக் கல்வியறிவு பெற்றுக் களித்தனர் என்கின்ற விபரத்தைத் தொல்காப்பியம் முதலிய நூல்கள் காட்டுகின்றன.

நம் நாட்டில் இம்மூன்று தெய்வங்களும் முக்கோணவடிவில் இருந்து அருள் புரிந்து வருவதைக் காணலாம். இந்தியாவின் வட கிழக்கு முனையில் உள்ள (காளிகட்டம்) கல்கத்தாவில் காளியைச் சிறப்பாக மக்கள் வழி படுவதால் வீர உணர்வு அம்மக்களிடம் சிறந்திருப்பதைக் காண்கின்றோம்.

வடமேற்கில் உள்ள பம்பாய் மாநில மக்கள் திருமகளை வழிபடுவதால் அங்குள்ள மக்கள் செல்வச் செழிப்புடையவர்களாய் விளங்குவதைப் பார்க்கிறோம். தமிழக மக்கள் சரசுவதியை வழிபடுவதால் ஞானத்தில் மேம்பட்டவர்களாய் விளங்குகின்றனர். இவ்வாறு அம்பிகை பல்வேறுகோலங்கொண்டு உயிர்கட்கு நலம் செய்யும் நிலைகளை எண்ணும் நல்விழாவாக நவராத்திரி அமைகிறது.

நவராத்திரி ஒன்பது நாள்களும் ஒன்பது சக்திகளை முறையே நினைத்து வழிபடும் விழா. ஒன்பது சக்திகள் மகேசுவரி, கௌமாரி, வாராகி, மகாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி, பிராமி, நரசிம்ஹி, சாமுண்டி எனப்படுவர். இவர்களில் முதல் மூவர் துர்க்கை அம்சமாகவும் விளங்குவதால் துர்கை, இலக்குமி, சரசுவதி ஆகிய முப்பெருந் தேவியர்க்குரிய வழிபாடாக நவராத்திரி கொண்டாடப்படுகிறது.

நவராத்திரி நாட்களில் விரதமிருந்து திருக்கோயிலுக்குச் சென்று அம்பிகையை வழிபட்டும், வீடுகளில் அம்பிகையை எழுந்தருளச் செய்து ஆராதனை செய்தும், தேவி மகாத்மியம் அபிராமி அந்தாதி முதலிய நூல்களை ஓதியும், ஓதச் செய்து கேட்டும் வழிபடுவோர் எண்ணற்ற நலன்களை எய்துவர்.

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வறியா

கேள்வி நேரம்

மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

தீபாவளி

தீபாவளித் திருநாள் அன்று கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று பெரியவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டு மகிழும் நேரம், இருள் நீங்கிக் கீழ்வானில் ஒளிக்கதிர்கள் கோலமிடும் புலர்காலை. உடலைப்பற்றி நின்ற அழுக்கு நீங்க எண்ணெய் தேய்த்து நீராடி, உலகைப் பற்றி நிற்கும் அழுக்காகிய இருள் நீங்க தீபங்களை ஏற்றி, உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்க இறைவன் திருவருளைச் சிந்தித்து புத்தாடை உடுத்தி, இனிப்புக்கள் உண்டு, மத்தாப்பு ஒளி சிதற வெடிகள் வெடித்து நாடே மகிழ்ந்திருக்கும் இந்திய தேசியத் திருநாள் தீபாவளி.

இந்தியா ஒரே நாடு, நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதற்குக் கட்டியம் கூறுவது போல் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்து சமயப் பெருமக்கள் மகிழ்வுடன் கொண்டாடும் உன்னதப் பெருநாள் இது.

தமிழகத்தில் தீபாவளி

தீபாவளி தமிழ் மக்களாலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் கேளிக்கை நிறைந்த நன்னாள். தமிழர்கள் கொண்டாடும் பெருவிழாக்கள் பலவும் பௌர்ணமியை ஒட்டியே அமையும். தீபாவளி மட்டுமே அமாவாசையை ஒட்டி வருகிறது. எனவே, வட இந்திய மாநில மக்களால் கொண்டாடப் பெற்றுவந்த தீபாவளிப் பண்டிகை ஆங்கிலேயர் வருகையை ஒட்டி இந்தியா ஒரே நாடாக உணரப் பெற்ற காலத்தில் தமிழ் மக்களாலும் சிறப்பாக ஏற்றுக் கொண்டாடப் பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது.

லக்ஷ்மி பூஜை

தீபாவளிப் பண்டிகை பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலோ, புராணங்களிலோ ஏதும் குறிப்புகள் இல்லை. தீபாவளி என்ற சொல்லை தீப + ஆவளி என்று பிரித்து, தீபவரிசை எனப் பொருள் கூறுகின்றனர்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

தீபாவளி நாளில் விடியல் பொழுதில் வரிசைப்பட தீபங்களை ஏற்றிவைத்து விழா எடுப்பது வட மாநிலங்களில் இன்றும் வழக்கில் உள்ளது.

தீபாவளி நன்னாளினை வட இந்திய மக்கள் லக்ஷ்மி பூஜையாகக் கொண்டாடுகின்றனர். தென்னாட்டினர் கேதார கௌரி நோன்பாகக் கொண்டாடுகின்றனர்.

புராண வரலாறு

தீபாவளியைக் குறித்த வடிமொழிப் புராண வரலாறு ஒன்று காணப்படுகிறது. பிரளய வெள்ளத்திலிருந்து பூமியைக் காப்பதற்காக வராக அவதாரம் எடுத்த திருமாலுக்கும், பூமாதேவிக்கும் பிறந்தவன் நரகாசுரன் என்பான். இவன் பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பெறற்கரிய வரங்களைப் பெற்றான். வரபலம் பெற்ற செருக்கால், இந்திரனை எதிர்த்துப் போராடி அவனது காதணி முதலியவற்றைக் கவர்ந்து கொண்டான். தன் குடிமக்களையே துன்புறுத்தி, அவர்கள் செய்யும் நன்மைகளையும் தடுக்கலானனான் செய்வதறியாது திகைத்த தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டு அரற்றினர். சிவ பெருமான் திருமாலை அழைத்து தண்டு, தனு, வாள், சங்கு, சக்கரம் ஆகிய பஞ்ச ஆயுதங்களையும் அவருக்கு வழங்கி, இவற்றின் துணையால் நரகாசுரனைக் கொல்லுமாறு பணித்தருளினார். தீமை புரிந்தொழுகும் நரகாசுரனைச் சினந்து கொன்றுவிட வேண்டாம் என பூமாதேவி திருமாலிடம் வேண்டியிருந்தாள். திருமாலும், நீயே அவனைக் கொல்லும்படி கூறினால் மட்டுமே கொல்வேன் என உறுதி அளித்தார். கிருஷ்ணாவதாரத்தில் பூமாதேவி சத்தியபாமாவாகப் பிறந்திருந்தாள். முன்னைப் பிறப்பின் தொடர்ச்சி அறியாத சத்தியபாமா நரகாசுரனின் கொடுமை கண்டு, தன் மகன் என அறியாது அவனைக் கொல்லுமாறு வேண்டினாள்.

பூமிதேவி வேண்டுதல்

திருமால் நரகாசுரனோடு போராடி இறுதியில் அவனை வீழ்த்தினார். இறக்கும் தருவாயில் நல்லறிவு வரப்பெற்ற நரகாசுரன் தான் செய்தன யாவும் குற்றமே என்பதை உணர்ந்து திருமாலிடம் மன்னிப்பு வேண்டினான். திருமாலும் மன்னித்து வேண்டிய வரம் கேள் என அருள்

செய்தார்.

நரகாசுரன் "தான் உயிர்விடும் இந்நாளில், ஆசாரம் உள்ளவர்களாயும் ஒழுக்கம் உள்ளவர்களாயும், கொலை முதலிய பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்து எண்ணெய் முழுக்காடி, கோடி ஆடை உடுத்திக் கடவுளை வழிபடுவோர்க்கு எல்லா நலன்களும் அருளுக'' என வேண்டி நின்றான். அவனை ஈன்ற பூமிதேவியும் தன் குமாரனின் பிழை பொறுக்க வேண்டினாள். திருமாலும் இவர்கள் வேண்டுகோளையும் ஏற்று நரகாசுரனுக்கு அருள் பாலித்தார். அக்கதை பாகவதத்திலும் கூறப்பட்டுள்ளது.

நரகாசுரன் கொல்லப்பட்ட நாள் ஐப்பசித் திங்கள், தேய்பிறை, அமாவாசைக்கு முற்பட்ட சதுர்த்தசி விடியலாகும். அவன் வேண்டிய வாறு மக்கள் ஆண்டு தோறும் தீமை அகன்ற மகிழ்ச்சி வெளிப்பாடா கத் தீபாவளி திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

தீபாவளி தத்துவம்

மக்கள் உள்ளங்களில் தோன்றுகின்ற தீய குணங்களும் செயல்களுமே அவர்களுக்குப் பகையாய் அமைந்து துன்பங்களைத் தருகின்றன. அத்தீய குணங்கள் இறையருளால் அழிக்கப்படுகின்றன என்பதே நரகாசுரன் வரலாற்றின் தத்துவமாகும். பத்ம புராணத்தில் தீபாவளி நாளில் செய்யப்படும் பூஜை நரகத்தினின்றும் காத்தலால், இந்நாள் நரக சதுர்த்தி என வழங்கலாயிற்று என்று கூறப்பட்டுள்ளது.

ஐதீகங்கள்

எண்ணெய் தேய்த்து முழுகுவது எல்லா நாளிலும் கூடாது ஆனால், தீபாவளி அன்று மட்டும் நாள், கிழமை பாராது, பொழுது விடியுமுன்னரே, இருள் நேரத்தில் எண்ணெய் முழுக்காடும் வழக்கம் உள்ளது. அன்று மட்டும் வைகறைப் பொழுதில் எண்ணெய்யில் இலக்குமிதேவியும், தண்ணீரில் கங்கையும் கலந்து நின்று காப்பதாக ஐதீகம். இள வெந்நீரிலும் கங்கை உறைவதாக ஐதீகம். தீபாவளி காலை நீராட்டு கங்கை நீராட்டுக்கு இணையானது என்பர். இதனால் பலர் காசி சென்று கங்கையிலேயே நீராடிக் கொண்டாடுகின்றனர்'' என்றார் தீபாவளி விளக்கம் அளித்தார் தருமபுர ஆதீனம்.

பாடகி எஸ். ஜானகி

பிரபல பின்னணிப் பாடகி எஸ். ஜானகி, தமது குரல் வளத்தால் பிரமிப்பூட்டும் சாதனைகள் பல படைத்தவர்; 19 வயதில் பாடத் தொடங்கிய அந்த 'இசைப் பேரொளி' இன்று வயதான நிலையிலும், பாடிப்பாடி ரசிகர்களை வசிகரம் செய்கிறது. ரசிகர்களுக்கும் சரி, சினிமாத் துறையினருக்கும் சரி, எஸ். ஜானகி என்றால் 'அம்மா'தான். எஸ். ஜானகியைப் பற்றி அவ்வளவாகத் தெரியாத ஒரு விஷயம், அவர் மிகச் சிறந்த பாபா பக்தர் என்பது. அவரது திரை உலக சாதனைகளுக்கு பாபாவின் பரிபூரண ஆசியே முக்கிய காரணம் என்கிறார் அவர். டாக்டர் ஒருமுறை செய்த தவறு காரணமாக, எஸ். ஜானகி ஏறக்குறைய இறந்தே போய்விட்ட நிலை. "அப்படி செத்துப் போன தன்னை பாபாதான் உயிர் கொடுத்து பிழைக்க வைத்தார்" என்று கண்ணீர் மல்க கூறுகிறார் எஸ். ஜானகி. தன் வாழ்வில்ஏற்பட்ட சோகங்கள், சாதனைகள் பற்றியும், அப்பேர்ப்பட்ட தருணங்களில் பாபா எப்படி யெல்லாம் உடன் இருந்து அருள் புரிந்தார் என்பது பற்றியும் எஸ். ஜானகி நமக்களித்த பிரத்யேக பேட்டியில் இருந்து சில பகுதிகள்:

1959ஆம் வருஷம் எனக்கு கல்யாணம் நடந்தது. அப்ப எங்க மாமியார் ஒவ்வொரு வியாழக் கிழமையும் பாபா பஜனை நடத்துவார். நானும் அப்பலேர்ந்து பாபாவை கும்பிடுவேன். ஆனா, இப்ப இருக்கிற அளவிற்கு அப்ப தீவிர பக்தை கிடையாது.

கேள்வி நேரம்

இப்ப ஒரு அஞ்சாறு வருஷமா பாபா மேல தீவிர ஈடுபாடு ஏற்பட்டு இருக்கு. அதுக்கு காரணம், குமார் பாபா. அவர் பூந்தமல்லி பைபாஸ் ரோட்ல பாபாக்கு கோயில் கட்டி, அன்னதானம் பண்ணிக்கிட்டு இருக்கார். பலருக்காகவும் அவர் பாபாக்கிட்ட வேண்டிப்பார். நிறைய பேருக்கு நல்லது செஞ்சிருக்கார்.

ஆரம்பத்துல அவர் சினிமால மியூசிக் டைரக்டரா இருந்தார். ஷீரடி பாபா மேல இருந்த பக்தினால மியூசிக் டைரக்டர் தொழிலை விட்டுட்டு பாபா தான் மூச்சுன்னு இருக்கார். சாதாரண குமாரா இருந்த அவர் இன்னைக்கு குமார் பாபாவா பலருக்கும் குறைகளை நிவர்த்தி செய்கிற மகானா இருக்கிறார்.

அவரோட மியூசிக்ல நான் சில பக்திப் பாடல்கள் பாடி இருக்கேன். அவர் குமார் பாபாவா மாறினது பின்னாடி தான் எனக்குத் தெரியும்.அப்படி ஒரு சமயத்துல எனக்கு கடுமையான வயித்து வலி. வயித்து வலிக்குதேன்னு சொல்லி உதவிக்குக் கூட யாரையும் கூப்பிட முடியாத அளவுக்கு அப்படி ஒரு வலி. அந்த நேரத்துல தான் குமார் பாபாவுக்கு போன் பண்ணினேன். போன்ல தட்டுத் தடுமாறி விஷயத்தை சொன்னேன். அதுக்கு குமார் பாபா, நான் இருந்த இடத்துலயே பாபாவை நினைச்சுக்கிட்டு இருக்கச் சொன்னார். அஞ்சே நிமிஷத்துல வயித்து வலி சரியாயிடும்னும் சொன்னார். ஆச்சரியம் பாருங்க. இரண்டே நிமிஷத்துல வயித்து வலி சரியாயிடுச்சு. குமார் பாபா எனக்காக பாபாக்கிட்ட அப்படி பிரார்த்தனை பண்ணியிருக்கார். அதுலேர்ந்து எனக்கு எப்ப எந்த பிரச்சனைன்னாலும் குமார் பாபாக்கிட்டதான் முதல்ல சொல்லுவேன்.

அமெரிக்கால ஒரு தடவை நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொண்டு இருந்தேன். இன்னொரு முக்கியமான விஷயம் உங்களுக்கு சொல்லணும். நல்ல குரல் வளம், நல்லா பாடுறேன்னு நீங்க நினைப்பீங்க, உண்மைதான். பாடுற திறமை இல்லைன்னா 'ஷைன்' பண்ண முடியுமா என்ன? அதே நேரம், எனக்கு நாற்பது வருஷமா பிரீத்திங் பிராப்ளம். மூச்சு தான் பிரச்சனையே.

அமெரிக்கா நிகழ்ச்சிக்கு போனபோதும் மூச்சு விட முடியாம திண்டாடினேன். போதாக்குறைக்கு இதயத்துல அடைப்பு ஏற்பட்டுச்சு.

அதனால மூச்சு அப்படியே நின்னுக்கும். ரொம்ப சீரியஸான கண்டிஷன். அந்த நிலைலயும் ஆஞ்சநேயரை கும்பிடறேன். அவர் தானே வாயு புத்ரன். அவர் தானே மூச்சு, சுவாசத்தை கொடுக்க முடியும்.

ஆஞ்சியோ டெஸ்ட் எல்லாம் எடுத்து ஒன்பது நாள் ஐசி யூனிட்ல இருந்தேன். அடைப்பு ஏற்பட்டதற்கு முதல் நாள் தான் ஐந்து மணி நேர Programme பண்ணினேன். அடுத்ததா வாஷிங்டன்ல நிகழ்ச்சி. அதுக்குள்ள தான் IC யூனிட்டுக்கு வந்தாச்சு. நிகழ்ச்சிய எப்படி பண்ணப் போறோமோங்கிற பதட்டம். உடனே அங்கேர்ந்தே குமார் பாபா கிட்டே போன்ல பேசினேன். "கவலைப்படாத நிகழ்ச்சி நல்லா நடக்கும்னார்" குமார் பாபா.

நிகழ்ச்சி நடத்தறவங்களோ "நீங்க பாடக்கூட வேண்டாம்; வந்து நின்னா போதும்கிறாங்க" ஆஸ்பத்திரி டாக்டர்களோ என்னை அனுப்ப முடியாதுங்கறாங்க, ஏன்னா அப்ப சுகர் வேற இருந்தது. சுகர் இருந்தா Silent Heart Attack வரும்னாங்க. பயந்து போயிட்டேன். சைலன்டா வந்தா நமக்கு எப்படித் தெரியும்? அதுவே பயமாயிடுச்சு. ஆனாலும், குமார் பாபா ஃபர்ஸ்ட் கிளாஸா நடக்கும்னு சொன்னார்.

அந்த தைரியத்துல லலிதா சகஸ்ரநாமம் சொல்லிக்கிட்டு நிகழ்ச்சிக்கு போனேன். இரண்டு டாக்டர்ங்க கைத்தாங்கலா பிடிச்சுக்கிட்டு இருந்தாங்க. பக்க வாதம் வந்துடுமோங்கற பயத்துல அவங்களும் கூடவே நின்னாங்க. சரியா மூச்சு விட முடியலை. அடைக்குது. அப்ப நிகழ்ச்சி நடத்தவறவங்க என்னை மேடை ஓரமா கூட்டிக்கிட்டு போய் side -ல தனியா நிற்க வெச்சாங்க. அங்க side -ல ஒரு தனி Hall இருந்தது. அங்க போய் பாபா பாபான்னு கத்தறேன். நீ இவ்வளவு தானா? உன்னை நம்பினா இதான் கதியா? நீ ஒரு மோசக்காரன்; பாபான்னு நம்பறதே வேஸ்ட் - டுன்னு கத்தறேன். அது தனி Hall-ங்கறதால நான் கத்தினதை யாரும் கேட்கலை. நான் கத்தக் கத்த மூச்சு விட முடிஞ்சுது.

அப்பறம் டாக்டர்ங்க கைத்தாங்கலா மேடைக்கு அழைச்சிக்கிட்டு போனாங்க. ஆனா, எனக்கு ரொம்ப பலவீனமா இருந்தது. ஆடிக்கிட்டே இருக்கேன். ஆனா, ஆச்சர்யம் பாருங்க, மைக்கைப் பிடிச்சு, அன்னமாச்சார்யா வோட நமோ நாராயணா பாட்டைப் பாடறேன். ஒரு

சிரமமும் இல்லை. மூச்சு நல்லாவிட முடிஞ்சுது. மனசோட ஆழத்துலேர்ந்து லயமா பாட முடிஞ்சுது. தொடர்ந்து மூணு மணி நேரம் அதே மேடைல பாடினேன். இது தான் பாபாவோட 'மிரகிள்' - அதிசயம்கிறது."ஆனா நிகழ்ச்சி முடிஞ்சதும் திரும்பவும் பலவீனமாயிட்டேன். 21 மணி நேர பயணம் வேற. வீல் சேர்ல தான் ஏர்போர்ட் வந்தேன். எப்படி வீடு வந்து சேருவேன்னு தெரியலை. அப்புறம் குமார் பாபாக்கிட்டதான் போன்ல சொன்னேன். அவர் எப்பவும் போல கவலைப்படாத நல்லபடியே வருவேன்னு சொன்னார். அதே மாதிரி நல்லபடியா வீடு வந்து சேர்ந்தேன்.இது எல்லாம் பாபாவோட அருள்தான். அவரை நம்பினா, அவர் கைவிடவே மாட்டார் என்றார் எஸ். ஜானகி.

" 2002 மே மாசம் 16ஆம் தேதி. நான் செத்தே போயிட்டேன். உண்மையிலேயே செத்துப் போயிட்டேன். பாபா தான் உயிர் கொடுத்து பிழைக்க வெச்சார்.கன்னத்துல இரண்டு பக்கமும் பல் வலி. நுங்கம்பாக்கத்துல உள்ள டாக்டர்கிட்ட போய் காட்டினேன். இரண்டு பக்க பல்லையும் எடுக்கணும்னு சொன்னாங்க. சரின்னோம்.

ஆனா, அங்க பென்சிலினும், ஆஸ்பிரினும் கொடுத்தாங்க. நான் அது எனக்கு அலர்ஜி வேண்டாம்னு சொன்னேன். ஆனா, அந்த டாக்டரோ, அதெல்லாம் பயப்படாதீங்கன்னு சொல்லி கட்டாயப்படுத்தி அந்த மாத்திரைகளை கொடுத்தாங்க. வேற வழி இல்லாம சாப்பிட்டேன். ஆனா, பயந்த மாதிரியே ஆயிடுச்சு. கண்ணு இரண்டும் வீங்கிடுச்சு. மயக்கமா வருது. மூச்சடைக்குது, பேச்சே வரலை. ஏறக்குறைய 'பல்ஸ்' டவுன் ஆயிடுச்சு. அப்பவும் குமார் பாபாக்கிட்ட தான் பேசத் தோணுது. தெளிவா பேச முடியாம அவர்கிட்ட போன்ல உளர்றேன். பேசறப்பவே, ரிசீவர் நழுவுது. அதுக்கு அப்புறம் என்ன நடந்ததுன்னே தெரியாது. 'அன்-கான்சியஸ்' ஆயிட்டேன். நாம செத்துட்டோம்னு தான் கடைசியா நினைச்சேன்.

அப்புறம், குமார் பாபா நான் சொன்னது எதுவும் புரியாததால் என் சொந்தக்காரங்ககிட்ட விசாரிச்சு இருக்கார். என்னோட அக்கா பையன்தான் அவருக்கு விஷயத்த சொன்னது. அவன் தான் என் பையனுக்கும் தகவல் சொன்னது.உடனே, என் பையன் 45 நிமிஷத்துல என்னை மலர் ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கிட்டு போயிட் டான். அங்க ஒருநாள் IC யூனிட்ல இருந்தேன்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

அப்ப செத்த பிணமா, நீலக்கலர் -ல நான் இருந்திருக்கேன். உடம்பு ஐஸைவிட ஜில்லுனு இருந்ததாம். கீழ் வரிசை பல் எல்லாம் இறுகி வாயத்திறக்க முடியாம இருந்ததாம். டாக்டர்கள் பலவந்தமா வாயைப் பிரிச்சு இருக்காங்க. அப்படி இழுத்ததுல இப்ப கீழ் பல்லும் வலிக்குது. தொண்டையும் வலிக்குது.மலர் ஆஸ்பத்திரில டாக்டர் அனந்த பத்மனாபன் தான் என்னை கவனிச்சுக்கிட்டார். அவருக்கே நான் எப்படி பிழைச்சேன்னு ஆச்சரியம். பாபா தான் உயிர் கொடுத்தார். நான் அப்படித்தான் நம்பறேன்.

அதுக்குத் தகுந்த மாதிரி குமார் பாபா, பாபா கிட்ட அழுதிருக்கார். அவர் அழுதது இதுதான் முதல் தடவை. ஆனா, அவர் பாபாகிட்ட வேண்டிக்கிட்டப்ப பாபா தலைலேர்ந்து பூ விழுந்திருக்கு. உடனே, ஜானகி உயிர் பிழைச் சுட்டான்னு குமார் பாபா சொல்லியிருக்கார்.அதன் பின்னாடி, வீட்டுக்கு வந்தப்புறம் எனக்கு தூக்கமே வரலை. பெரிய அவஸ்தையா இருந்தது. குமார் பாபாகிட்ட சொன்னேன். ராத்திரி சரியா பத்து மணிக்கு தூக்கம் வரும்னார்.

அந்த நேரம் பார்த்து பி.பி. ஸ்ரீனிவாஸ் வந்துட்டார். பேசிக்கிட்டே இருக்கார். அதுவும் கவிதையைப் பத்தி பேச ஆரம்பிச்சுட்டா நிறுத்த மாட்டார். பேசிக்கிட்டே இருக்கார். எனக்கோ தூக்கமா வருது. அப்பதான் குமார் பாபா சொன்னது ஞாபகம் வந்தது. வேற வழி இல்லாம ஆட்டோ வரவழைச்சு அவரை அனுப்பிட்டு நிம்மதியா தூங்கினேன்.அந்த அளவுக்கு பாபா தான் எனக்கு எல்லாமே. அவர் எனக்குள்ளவே இருந்து எனக்காக நல்லது செய்றார்.

எனக்கு கிருஷ்ணன் மேல அபார பக்தி. கிருஷ்ணனைப் பத்தி தெலுங்குல நானே எழுதி பாடியிருக்கேன் என்று சொன்ன எஸ். ஜானகி,

நான் உன்னை காணமுடியாவிட்டாலும்
உன் கருணை கிடைக்காவிட்டாலும்
கிருஷ்ணா உன்னை விடமாட்டேன்

என்ற அர்த்தம் பொருந்திய பாடலை நம்மிடம் பாடிக் காட்டினார்.பாடி முடித்ததும், “அப்படி கிருஷ்ணனைப் போலவேதான் பாபாவும். “கிருஷ்ண ராம சிவ மாருத்யாதி ரூப சாயி” என்பதில் துளியும் சந்தேகம் இல்லை” என்று சிரித்தபடியே பேசி முடித்தார் எஸ். ஜானகி.

குன்றக்குடி வைத்தியநாதன்

பத்மஸ்ரீ விருது பெற்ற வயலின் இசை மேதை குன்றக்குடி வைத்தியநாதன், ஷீரடி சாயி பாபா பக்தரும் கூட. அவர் தன் குலதெய்வம் குன்றக்குடி முருகன் பற்றியும், பாபா பற்றியும் நம்மிடம் பகிர்ந்து கொண்டார்:

எனக்கு ஒன்பது வயதாக இருக்கும் போது குன்றக்குடியில் எங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ்ந்த காலம் ஒரு பொற்காலம். எனது சகோதரிகள் சுப்புலெக்ஷ்மியும், சுந்தரலெக்ஷ்மியும் கர்நாடக வாய்ப்பாட்டு பாடுவார்கள். மூத்த சகோதரர் கணபதி சுப்பிரமணியம் மிருதங்கம் வாசிப்பார். எங்கள் குடும்ப நண்பர் ராயர் அவர்களுக்கு வயலின் வாசிப்பார்.

நான் விடியற்காலை எழுந்து என் தந்தைக்கு பாத சேவை செய்வேன். சந்தியாவந்தனம் செய்வது,வேத பாட சாலை போவது, என் தந்தையின் நித்ய பூஜைக்கு பாரிஜாத மலர்கள் பறித்து வருவது இவை தான் எனது அன்றாடப் பணிகளாக இருந்தன. அதேபோல், குன்றக்குடி மலை மீதிருக்கும் சண்முக நாதர் திருக்கோயிலில் நடைபெறும் தினசரி பூஜையில் கலந்து கொள்வதும், பிரசாதம் வாங்கிக் கொண்டு மலையில் இருந்து இறங்குவதும் எனது தினசரி செயல்களில் ஒன்றாகும்.

மற்றபடி, நான் ஒரு பிரகாசமான சிறுவனாக அப்போதைக்கு இல்லை. இதனால் கவலைப்பட்ட என் அம்மா, என் தந்தையிடம் "அவனுக்கு

ஏதாவது ஒரு கலையைக் கற்றுத் தரக் கூடாதா?'' என்று கவலையோடு கேட்பார். தந்தையோ, "கவலைப் படாதே! கடவுள் அவனுக்கு தகுதியையும், திறமையையும் தருவார்'' என்பார்.

அப்போதெல்லாம் குன்றக்குடி சண்முகநாதர் ஆலயத்தில் மாதம் தோறும் நடைபெறும் கிருத்திகை திருவிழாவின் போது எனது சகோதரி களின் கச்சேரியும் நடக்கும். அப்படி ஒருமுறை கச்சேரி நடந்தபோது வயலின் வாசிக்கும் ராயர் வரவில்லை. மறுநாள் அவர் வந்தபோது, என்தந்தை அவரிடம் விளக்கம் கேட்டார். அதற்கு கோபம் அடைந்த ராயர், "ஓய், ராமஸ்வாமி சாஸ்திரி! உன் மகள்கள் பாடலாம்; மகன் மிருதங்கம் வாசிக்கலாம்; ஆனால், வயலினுக்கு என்ன செய்வீர்?'' என்று கேட்டிருக்கிறார். அந்த நேரம் பார்த்து, நான் சண்முகநாதர் ஆலயத்தில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்தேன். நான் உள்ளே நுழைந்து கொண்டிருக்கும் போது, என் தந்தையார் என்னைக் காட்டி, "இவனை மிகப் பெரிய வயலின் வித்வானாக்கிக் காட்டுகிறேன்'' என்று ராயரிடம் சவால் விட்டார்.

அப்பேர்ப்பட்ட என் தந்தையே என் குருநாதரும் ஆவார்.

குரு வழிபாட்டில் முக்கியமானவர் ஷீரடி சாயி பாபா. அவரது அருளும், ஆசியும் எனக்குக் கிடைத்தது நல்அதிர்ஷ்டம் ஆகும். எங்கள் குல தெய்வம் சண்முகநாதர் எப்படியோ அப்படியே ஷீரடி சாயி பாபாவும். அவரை வணங்காத நாள் கிடையாது என்று சொல்லும் அளவிற்கு அவரிடம் பக்தி வைத்துள்ளேன்.

எடிட்டர் மோகன் பேட்டி

'ஸ்ரீ ஷீர்டி சாயி பாபா' என்கிற தமிழ் டப்பிங் திரைப்படம் சாயி பக்தர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இதன் தயாரிப்பாளர் எடிட்டர் மோகன் தெலுங்கு சினிமா இண்டஸ்ட்ரியில் மிகவும் பிரபலமானவர். 1979 முதல் சினிமாத் துறையில் இயங்கி வரும் எடிட்டர் மோகன் தமிழ் ரசிகர்களுக்கு ஜெயம், எம். குமரன் S/o. மகாலக்ஷ்மி, சந்தோஷ் சுப்ரமணியம் ஆகிய வெற்றிப் படங்களைத் தந்துள்ளார். தமிழ் சினிமாவின் நவீன ஹீரோக்களில் முக்கியமானவரான ஜெயம் ரவி, எடிட்டர் மோகனின் மகன்.

'ஸ்ரீ ஷீர்டி சாயி பாபா' சினிமா பற்றி பேட்டி வேண்டும் என்று எடிட்டர் மோகனிடம் கேட்டதும், "சினிமாத் துறையில் பல வருடங்களாக எடிட்டராக, தயாரிப்பாளராக இருந்து வருகிறேன். தெலுங்கில் பத்துக்கும் மேற்பட்ட வெற்றிப் படங்களை தந்துள்ளேன். இவை மூலமாக பணம் சம்பாதித்துள்ளேன்; புகழ் சம்பாதித்துள்ளேன். ஆனால், ஸ்ரீ ஷீர்டி சாயி பாபா படம் ஒன்றில் தான் மனநிம்மதியையும், ஆத்ம திருப்தியையும் அடைந்தேன்'' என்றபடியே உற்சாகமாய் பேச ஆரம் பித்தார்.

இத்தனைக்கும் " ஸ்ரீ ஷீர்டி சாயி பாபா'' படத்தில் Commercial லாபம் எதுவும் இல்லை. பண நஷ்டம் தான். இருந்தாலும், நல்ல விஷயங்கள் நாலு பேருக்குப் போய்ச் சேர வேண்டும் என்கிற எண்ணம் காரணமாகவே

அப்படத்தை தயாரித்தேன்'' என்ற எடிட்டர் மோகனிடம், எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்க ஷீரடி பாபாவைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் பற்றிக் கேட்டதும், "அதற்கு முன் ஒரு உண்மையை சொல்லி விடுகிறேன். நீங்கள் நினைப்பது போல எல்லாம் நான் தீவிரமான சாயி பக்தன் கிடையாது. பாபா ஆட்கொண்டு விட்டார் என்றெல்லாம் பெரிதாகப் பேசத் தெரியாது. அடிப்படையில், நான் அமைதியான சுபாவத்துடன் கூட்டத்திலிருந்து கொஞ்சம் தூரமாய் ஒதுங்கி இருப்பவன். ஒரு சினிமா தயாரிப்பாளர் என்கிற முறையில் ஷீர்டி சாயி பாபா தெலுங்குப் பட 'பிரிவியூ'விற்குப் போயிருந்தேன். படம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இப்படி ஒரு மகானா? என்று ஆச்சரியப்பட்டேன். அவரது உபதேசங்கள் அனைத்தும் மதம் பிடிக்காத, மதங்களை மீறிய விஷயங்கள். அது எனக்குப் பிடித்திருந்தது. அதனால், அந்த நல்ல விஷயங்களை தமிழிலும் கொடுக்க வேண்டும் என முடிவெடுத்தேன். கூடவே, இப்படத்தை வியாபார நோக்கில் லாபம் எதிர்பார்த்து செய்யக் கூடாது என்றும் உறுதியாக இருந்தேன்'' என்றார்.

அவரே, "இப்படத்தில் பாபாவாக நடித்த விஜயசந்தருக்கு குரல் கொடுத்தவர் ஹேரான் ராமசாமி. அவர் ஒரு டப்பிங் ஆர்டிஸ்ட் இல்லை. ஆனாலும், அன்போடு ஒப்புக் கொண்டார். அதேபோல், இசை - இளையராஜா. எஸ்பி. பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ் என பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் இதில் பங்கேற்றது பெருமைக்குரிய விஷயம்'' என்றவர் மேலும் தொடர்ந்து, "இத்தனைக்கும் அக்கால கட்டத்தில் இப்போது போல நான் வசதியாக இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருகிற நேரம். தாராளமான நிலையில் இல்லை. ஆனாலும், லாப எதிர்பார்ப்பு இல்லாமல் ஷீர்டி பாபா படத்தை மிகவும் மன ஈடுபாட்டுடன் எடுத்தேன்.

எல்லா தியேட்டர்களிலும் பாபா சிலைகள் வைத்தேன். அவற்றில் பல இன்றைக்கும் ஆராதனை செய்யப்பட்டு வருகின்றன. பல இடங்களுக்கு இலவசமாகவே வினியோகித்தேன். அதில் எனக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆனால், அதை நான் நஷ்டமாக கருதவில்லை. லாபம் வேறு விதமாக வந்தது. படம் பார்த்தவர்கள் நேரிலும், போனிலும் கண்ணீர் விட்டு உருகினார்கள். அதேபோல், இன்றும் எங்காவது புதிய சினிமா தியேட்டர் திறந்தால், முதலில் ஷீர்டி சாயி பாபா படத்தை ஓட விட்டு, அதன் பிறகே மற்ற படங்களில் கவனம் செலுத்துகிறார்கள். காரணம் கேட்டால்,

தங்களின் பாவங்கள் தொலைந்து நன்மை ஏற்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்'' என்றார்.

ஷீர்டி சாயி பாபா சினிமா எடுத்துக் கொண்டிருக்கும் போது உங்களுக்கு ஏதாவது வியப்பான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்டதும்,

"இந்த சினிமா எடுத்ததும், அது திரையரங்கு களில் வெளி வந்ததுமே ஒரு பெரிய மிரகிள்தான்'' என்ற எடிட்டர் மோகன், "ஒரு வழியா படத்தை எடுத்து முடிச்சாச்சு. ஆனா, ரிலீஸ் பண்ண முடியலை. பல லட்சங்கள் முடங்கிப் போச்சு. ரிலீஸ் பண்ணியும் லாபம் வரலை. இதுவே மிரகிள்தான்'' என்றார் சிரித்துக் கொண்டே.

'ஸ்ரீ ஷீர்டி சாயி பாபா' சினிமா வெளியிடப் பட்ட முதல் நாள் பெண்களுக்கு இலவசமாக அனுமதி தரப்பட்டுள்ளது. பாபாவைப் பற்றிய நல்ல விஷயங்களை எப்படியாவது கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்கிற எண்ணம்தான் அதற்கும் காரணம்'' என்றார் எடிட்டர் மோகன்.

டாக்டர் அறிவொளி

பட்டிமன்ற மேடைகளுக்கு அறிவார்ந்த அழகு சேர்த்தவர் டாக்டர் அறிவொளி. ஜோதிடம், சாஸ்திரம் போன்றவற்றில் நிபுணர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சைவ சித்தாந்தம், மெய்கண்ட சாஸ்திரம் ஆகியவற்றில் தேர்ச்சி உடையவர். அனைத்திற்கும் மேலாக ஸ்ரீ வித்யா உபாசனை செய்பவர். அதற்காக தீக்ஷை பெற்றவர். தற்போது திருச்சியில் வசித்து வரும் டாக்டர் அறிவொளி பேசியவற்றிலிருந்து:

வாழ்வாங்கு வாழ பெரியோர்கள் ஆசீர்வதித்துள்ளனர். ஆனால், எப்படி அப்படி ஒரு வாழ்வை வாழ்வது? அதற்கு நாம் என்ன செய்வது? பெரிதாக ஒன்றும் செவய்து விட வேண்டாம். தெய்வத்தை வழிபட்டாலே போதும்.

கடவுளிடம் பிரார்த்தனை செய்தாலே போதும். பிரார்த்தனைக்கு வலிமை அதிகம். பிரார்த்தனையின் மூலம் கர்ம வினையின் பாரத்தை குறைக்க முடியும். கர்ம வினையின் சுமையைத் தான் குறைக்க முடியுமே தவிர, கர்மாவில் இருந்து எவராலும் தப்பிவிட முடியாது. கர்மாவை அனுபவித்தே ஆக வேண்டும். இரும்பை தனியாக தூக்கினால் கணமாக இருக்கும். அதே இரும்பை தண்ணீருக்குள் வைத்திருந்தால் சுமை தெரியாது. அப்படித்தான் கர்மாவும்.

கேள்வி நேரம்

பிரார்த்தனையில் மூழ்கி கர்மாவின் சுமையை குறைக்கலாம்.

பிரார்த்தனை செய்வதற்குப் பதிலாக நம்மில் பலர் கர்மாவைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விடுகிறோம். நமக்கு முன் நடப்பதை நாம் சிந்தித்துக் கொண்டிருந்தால் ஞானம் குறைந்து விடும். அறிவு வேறு, ஞானம் வேறு.கடவுள் வழிபாடு, கர்மவினை என்பதெல்லாம் முன்னோர்கள் சொன்னவை. பின்பற்ற வேண்டியது தான் நமது வேலை. ஆராய்ச்சி செய்தால் இருக்கிற வேலை கெட்டுவிடும்.

அறிவுக்கப்பாற்பட்ட ஏதோ ஒன்று உள்ளது. அது தெரிந்து விட்டால் தப்பிக்கப் பார்ப்போம். மனித சுபாவத்திற்கும் தெரியாமல் நடக்கும் செயலைத்தான் இறைவன் செயல் என்றும் இறைவன் திருவிளையாடல் என்றும் கூறுகிறோம்.

உலக இயக்கம், உலக உயிர்கள் இவை அனைத்தும் ஏதோ ஒரு ரெகுலேசனில் போய்க் கொண்டிருக்கிறது. அதைத்தான் கர்மா, வினை என்று கூறியுள்ளார்கள்.

கர்மா, வினை என்பது எல்லோருக்கும் விதிக்கப்பட்டது. அது அதனதன் படிதான் நடக்கும். ஒருவன் கோடீஸ்வரன், இன்னொருவன் ஏழை என்றால் அது அதுதான். அது அப்படித்தான்.

ஆண்டவன் எல்லாரையுமா கொலைக்கரனாகப் படைக்கிறான்? கொலை செய்வதற்கென்று சிலரைத் தான் தேர்ச்சி செய்கிறான். கொலை செய்வது ஒன்றும் சாமான்யமான சமாசாரம் இல்ல. எல்லாமே கர்மா. கர்மா தான் எல்லாமே.

கர்மாவில் இருந்து தப்பிக்க கடவுளை வழிபட வேண்டும். கடவுள் என்பது என்ன?

கடவுள் என்றால் ஒளி பொருந்தியவன். ஒளி என்றால் என்ன?

எல்லா ஒளியுமே சூரியனுக்குள் அடக்கம். சூரியனே பெரிய ஒளி. சூரிய கிரணங்களோ ஒளிக்கோர்வை. சூரியன் இயற்கை, கடவுளுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றால், சூரியனில் ஒளியைக் கொண்டு போய் வைத்தது யார்? அல்லது எது? ஒரு சின்ன தீக்குச்சிதான். அதை

உரசினால் தீப்பற்றி எரிகிறது. தீக்குச்சிக்குள் கிரணங்களை டெபாசிட் செய்தது யார்? அப்படிப்பட்டவர் தான் கடவுள் என்றால் அதில் எதற்கு இவ்வளவு முரண்பாடுகள்?

பிரம்மன் தொகுத்ததே வேதத்தின் சாரம் என்கிறோம். வேதம் உண்மை. வேதத்தின் சாரம் உண்மை என்றால் பிரம்மனும் உண்மைதான். அதில் வேதம் தான் முக்கியமே தவிர, பிரம்மன் முக்கியம் அல்ல.

நிச்சியிக்கப்பட முடியாத ஏதோ ஒன்றை நம்ப முடியாவிட்டாலும், நிச்சயிக்கப்பட முடியாத ஏதோ ஒன்றுதான் இருக்கவேண்டும் என்பதையாவது நம்பித்தானே ஆக வேண்டும்.

அதற்கு கடவுள் என்று பெயர் வைத்தால் என்ன ஆகிவிடப் போகிறது?

குறை எதுவும் இல்லை என்பதுதான் அதற்கான பதில். காரணம் இன்றி காரியம் இல்லை. காரணம் என்று ஏதோ ஒன்று உள்ளது. அறிந்தவர்கள் அறியட்டும். அறியாதவர்கள் அமைதியாகவே இருக்கலாமே!

அறிவு அறிவு என்கிறோம். அறிவு எங்கிருந்து வந்தது? 'அறிவொன்றே தெய்வம்' என்றார் பாரதியார்.

அந்த அறிவே கடவுள். காரணம் எல்லாம். அதை உணர்தலே ஞானம். ஞானத்தை செயல்படுத்தலே ஆன்மிகம். ஆன்மிகம் என்பது தான் சரியானது. ஆன்மீகம் என்பது தவறு. எதிர்மறை அர்த்தம் தரக்கூடியது. அழிவைத் தரக்கூடியது என்று பொருள். ஆன்மிகம், சமஸ்கிருத வார்த்தை. தமிழ் வார்த்தையும் கூட. கமலம் என்பது போல. கமலம் என்ற வார்த்தை சமஸ்கிருதம், தமிழ் இரண்டிலும் உண்டு.

ஆனிமிகமும் அப்படித்தான். அது அப்படித்தான். அது வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

பாண்டிச்சேரி முன்னாள்
முதலமைச்சர் ந. ரங்கசாமி

அரசியலில் கர்மவீரர் காமராஜரின் எளிமை பற்றியும் கக்கனின் எளிமை பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், நேரில் பார்த்ததில்லை. அதே நேரம், அவர்களைப் பற்றி கேள்விப்பட்ட தற்கும் மேலான ஒரு எளிமையை பாண்டிச்சேரி முதலமைச்சர் ந. ரங்கசாமியிடம் காணமுடிந்தது. அவர் ஒரு சாயிபாபா பக்தர் எனக் கேள்விப்பட்டு ஸ்ரீசாயிமார்க்கம் பேட்டிக்காக முன் அனுமதி கேட்டபோது, அப்படியெல்லாம் ஒரு சிஸ்டம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு அர்த்தம் அவர் அப்பாயிண்ட்மென்ட் தர மாட்டார் என்பதல்ல. அப்பாயிண்ட்மென்ட் இல்லாமலே அவரை எப்போது வேண்டு மானாலும் யார் வேண்டுமானாலும் சந்திக்கலாம் என்பதே அர்த்தம். தினமும் காலையில் பைக்கில் நகர்வலம் வரும் ந. ரங்கசாமி, ஏதேனும் ஒரு டீக்கடையில் டீ குடித்தபடியே பொதுமக்களை சந்தித்து அவர்களின் குறை கேட்பதை வழக்கமாய் கொண்டுள்ளார். தனக்கென அவர் பந்தோபஸ்து ஏற்பாடுகளைக் கூட வைத்துக் கொள்ளவில்லை.

லாஸ்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் கட்சிக்காரர்களும் பொதுமக்களும் எப்போதும் வந்த வண்ணம் இருப்பார்கள். யார் வேண்டு மானாலும் மாடியில் உள்ள அவரது அறைக்கு நேரடியாகச் சென்று அவரை சந்திக்க முடியும். யாரும் தடுக்க மாட்டார்கள்.

பாண்டிச்சேரி சட்டசபை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அறையிலும் அதே நிலை. பொதுமக்கள் முதல் வி.ஐ.பி.கள் வரை எவரும்

அவரை எளிதாக சந்தக்கலாம். முதலமைச்சர் அறையில் மற்றவர்களின் செல்போன்களுக்கும் அனுமதி உண்டு. முதல்வருக்காக பயந்து செல்போனை ஆப் செய்ய வேண்டியதில்லை. முதல்வருக்கு வரும் எந்த ஒரு ஃபோன் காலையும் தட்டிக் கழிப்பதில்லை. தானே ரிசீவரை எடுத்து பேசுகிறார்.

பொதுமக்கள் கொண்டுவரும் மனுக்களை நிதானமாகப் படித்துப் பார்த்து பொறுமையுடன் பதில் சொல்கிறார். அவர்களின் கோரிக்கைகளை அக்கறையுடன் கேட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கிறார். தவறான கோரிக்கை, தவறான மனு என்றால் அப்போதே நேரடியாகவே மறுத்து விடுகிறார். போனஸ் விஷயமாக அவரைப் பார்க்க வந்த ஒருவர் கம்பெனி நஷ்டத்துக்கு நாங்களா காரணம்? நீங்க அவங்களுக்கே சப்போர்ட் பண்றீங்க என்று நேருக்கு நேர் கை நீட்டி காரசாரமாக விவாதம் செய்வதையும், அதையும் சிரித்த முகத்துடன் கேட்டுக் கொள்ளும் முதல்வரின் சகஜமான மனோபாவத்தையும் அங்கே பார்க்க முடிந்தது.

ஸ்ரீ சாயிமார்க்கம் பேட்டிக்காக அவரது அறைக்குள் சென்றபோது, அவரது பெரிய டேபிளில் சிலைவடிவில் வீற்றிருந்த ஷீர்டி ஸ்ரீ சாயிநாதரின் தரிசனம் கிடைத்தது. பாபாவை வணங்கியபடியே முதல்வர் ந. ரங்கசாமியுடன் பேட்டி தொடங்கியது.

ஆசிரியர்: இந்த பாபா சிலை உங்களுக்கு எப்படி கிடைத்தது?

முதல்வர்: இந்த பாபா சிலை வர்றதுக்கு முன்னாடி இந்த சின்ன பாபா சிலையை (டேபிளில் உள்ள இன்னொரு பாபா சிலையை காட்டி) நண்பர் ஒருத்தர் கொடுத்தார். அந்த சிலை வந்ததிலேர்ந்து ஒரு மாறுதல். ஒருவிதமான வசிகரத்தை உணர முடிஞ்சது. அதுக்கப்புறம்தான் இந்த பெரிய பாபா சிலை வந்தது. பழனில அசோக்ஜிங்கற நண்பர் தியான மண்டபம் ஒண்ணு ஆரம்பிச்சார். அங்கதான் இந்த பாபா சிலை இருந்தது. நான் அப்ப அங்க போயிருந்தேன். சிலையை அசோக்ஜீ என் வீட்ல கொண்டு வந்து கொடுத்துட்டார். வீட்ல கொஞ்ச நாள் இருந்தது. அப்புறம் இங்க கொண்டு வந்துட்டேன்.

ஆசிரியர்: அப்படின்னா, இந்த சிலைதான் உங்களுக்கு பாபா மேல் பக்தி வரக் காரணம். இல்லையா?

முதல்வர்: நீங்க நினைக்கற மாதிரி தீவிர பக்தின்னு எல்லாம் சொல்ல முடியாது. ஒரு ஈடுபாடு இருக்கு. பக்தியும் இருக்கு. இந்த சிலையை பாாக்கறப்ப ஒரு சாந்தம் தெரியுது. மனசுக்கும் நல்லா இருக்கு. இந்த சிலை வந்தப்புறம் இங்க பெரிய காலாப்பட்டு கிராமத்தில் இருக்கிற பாபா

கேள்வி நேரம்

கோயிலுக்கு ஒரு நிகழ்ச்சிக்காக போயிருந்தேன். திருமதி சம்பத் உமாபதி கட்டின கோயில் அது. அந்தக் கோயில்ல போய் பாபாவை கும்பிட்டேன். மக்களுக்கு நல்லது செய்யணும்னுதான் பாபாகிட்ட வேண்டிக்கிட்டேன்.

ஆசிரியர்: பாபா விஷயம் சரி. இதுக்கு முன்னாடி உங்களோட வழி பாட்டுமுறை எப்படி இருந்தது? அதாவது பக்திங்கற விஷயத்தை பத்தி நீங்க எப்பேர்ப் பட்ட மனநிலைல இருந்தீங்க?

முதல்வர்: சரியா சொல்லணும்னா, 1990க்குப் பிறகுதான் பக்தி முழுமையடைஞ்சது. ஸ்ரீ சத்குரு அப்பா பைத்திய சுவாமிகள்னு ஒரு மகான் இருந்தார். அவர் திருச்சி ஜமீன் பரம்பரையை சேர்ந்தவர். அவர்கிட்ட ஆசாரம் எதுவும் கிடையாது. யார் வேணும்னாலும் அவர் காலைத் தொட்டு வணங்கலாம். விபூதியை நம்ம நெத்தில பூசிவிட்டு முதுகுல தட்டிக் கொடுப்பார். அவரோட இந்த எளிமை எனக்குப் பிடிச்சிருந்தது. அவரை அடிக்கடி போய் பார்ப்பேன். ஆசிர்வாதம் பண்ணுவாரு. அவர்தான் என்னை தேர்தல்ல நில்லுடான்னு சொன்னார். அதன் பிறகு அப்பப்ப கிடைச்ச ஆன்மிகத் தொடர்புனால பக்தி இருந்துகிட்டே இருக்குது. நினைச்சா கோயிலுக்குப் போவேன். அதுவும் மனசுல தோணனும். முருகன் கோயிலுக்கு அதிகம் போவேன். மாரியம்மன் கோயிலுக்கும் போவேன். அதே மாதிரி, திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு வருஷா வருஷம் போயிருவேன். அதுவும் கோயிலுக்கு உள்ள போகமாட்டேன். வெளிலேருந்து கும்பிட்டபடியே வந்துடுவேன். ராகவேந்திரரும் எனக்குப் பிடிக்கும். மூணு தடவை மந்திராலயம் போயிருக்கேன்.

ஆசிரியர்: அதிகாரத்துல இருக்கிற ஒரு மாநில முதலமைச்சருக்கு எத்தனையோ பொறுப்புகள் பிரச்சனைகள் இருக்கும். பந்தோபஸ்தும் தேவைப் படும். ஆனா, நீங்க எதைப் பத்தியும் அலட்டிக்காம கூலா இருக்கீங்களே, எப்படி?

முதல்வர்: அப்படியே பழகிட்டேன். இரண்டாவது இது ஒரு சின்ன மாநிலம். பந்தோபஸ்து எல்லாம் ஒரு பிரச்சினையே கிடையாது.

ஆசிரியர்: கர்மவீரர் காமராஜர் மாதிரி இருக்கணும்னு இப்படி வித்தியாசமா இருக்கீங்களா?

முதல்வர்: காமராஜர் கூட கம்பேர் பண்ற அளவுக்கு நான் ஒண்ணும் பெரிசா செஞ்சுடலை. அவர் எனக்குப் பிடிச்ச தலைவர்.

ஆசிரியர்: அவரை நேர்ல பார்த்த அனுபவம் ஏதாவது சொல்லுங்களேன்?

முதல்வர்: ஒரு தடவை தேர்தல் சீட் சம்பந்தமா போய் பார்த்து இருக்கேன். அதுவும் இன்னொருத் தருக்காக. சின்ன வயசுலேர்ந்தே நான் காங்கிரஸ் தான். காமராஜர்தான் என் தலைவர்.

ஆசிரியர்: நீங்க என்னதான் எளிமையான முதல்வரா இருந்தாலும், அரசியல், அதிகாரம்னு வர்றப்ப, ஏதாவது ஒரு இடத்துல சமரசம் செய்துக்கணும்கற ஒரு நெருக்கடி வருமே?

முதல்வர்: அதையெல்லாம் தாண்டித்தான், மீறித்தான் செயல்படறோம். என்னைப் பொறுத்த வரைக்கும் மக்களுக்கு நன்மை செய்யணும். நலத் திட்டங்கள்ல கவனம் செலுத்தணும். நல்ல எண்ண மும், உண்மையான மனசும் இருக்கறப்ப எப்பேர்ப் பட்ட நெருக்கடியா இருந்தாலும் சமாளிச்சுட முடியும்.

ஆசிரியர்: நீங்க கல்யாணம் பண்ணிக்காம இருக்கறது கூட ஒரு வகையான முன்தீர்மானம்னு..... அதாவது, காமராஜர் மாதிரியேன்னு எடுத்துக்கலாமா?

முதல்வர்: அப்படியெல்லாம் கொள்கை ஒண்ணும் கிடையாது. கல்யாணம் பண்ணிக்கலை அவ்வளவுதான்.

சுவாமி கௌதமானந்தா

ராமகிருஷ்ணமடத்தின் தலைவர் சுவாமி கௌதமானந்தா அளித்த பேட்டி:

மெய்ஞான அறிவும் தெளிவும் பெற மக்கள் என்ன செய்ய வேண்டும்?

நோயற்ற வாழ்வு வாழ சில விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். அதுபோல மெய்ஞான அறிவு பெற சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். குளத்து நீரை பாசி மறைத்திருக்கிறது. அதுபோல் நம்மிடமுள்ள ஆன்ம ஒளியை காம - காஞ்சனம் (பெண், பொன் ஆசைகள்), கோபம், விருப்பு, வெறுப்பு, கெட்ட நடத்தை, உலக பற்றுகள் போன் றவை மறைத்திருக்கின்றன.

சாலையில் பயணம் செய்யும் வாகனங்களுக்கு சாலை விதிகள் இருக்கின்றன. அவைகளை சரியாகப் பின்பற்றினால் பயணம் பாதுகாப்பாகவும் விபத்து இல்லாமலும் இருக்கும். அதுபோல் உபநிஷதங்கள், பகவத் கீதை, ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் போன்ற அருள் நூல்கள், 'மனிதன் வாழ்வில் கொள்ளத்தக்கவை இவை - தள்ளத் தக்கவை இவை' என்று தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய சாஸ்திர விதிகளை நாம் போற்றிப் பின்பற்ற வேண்டும். இவ்வாறு ஆன்மிக சாதனை என்ற ஆன் மிகத் துறையில் ஓயாமல், சலிக்காமல், அயராமல், உரிய காலம் வரும்வரை பொறுமையுடன் உழைக்க வேண்டும். உழைப்பு என்பதுதான் வெற்றிக்கு உரிய ஒரே விலை.

இவ்வாறு தவம், வைராக்கியம், தியாகம், அஹிம்சை, சத்தியம், சுயநலன்களை விட்டுக் கொடுப் பது, கருணை, இனிய பேச்சு, புலனடக்கம், பொறுமை போன்ற அறநெறிகளையும் நற்பண்புகளையும் அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்து நாம் கடைப் பிடிப்போமானால், நம்முள்ளே என்றும் இருக்கும் மெய்ஞான அறிவும் தெளிவும் இயல்பாகவே வெளிப்படுகின்றன.

மாறிவரும் இன்றைய அதிவேக சூழ் நிலைக்கு ஏற்ப, இயற்கை யின் சவால்களுக்கு ஏற்ப மனித குலம் ஆன்மிக ரீதியில் எந்த வகைகளில் எல்லாம் உயர்நிலை அடைய முடியும்?

மனிதன் மனிதனாக வாழ, மனிதன் தெய்வ மாக வாழ, உதவுவதே ஆன்மிகம். ஆன்மிகச் சிந்தனைகள் அனைத்தும் மனித மேம்பாட்டிற்காகவே அமைந்தவை. மனிதன் அறிவோடும் புகழோடும் ஒழுக்கத்தோடும் பக்தியோடும் வாழ வழிகாட்டுவது ஆன்மிகம். முறையான தெய்வ சிந்தனையால் உயர்ந்த சிந்தனைகளும் பண்பாடும் நம்மிடையே மலரும்.

· அமைதிப் பூங்காவாக வாழ்க்கை அமைய வேண்டுமானால் மனித குலம் அன்பையும் அஹிம்சையையும் தெய்வ பக்தியையும் கைக்கொள்ள வேண்டும். எங்கெல்லாம் சூதும் வஞ்சகமும் பொறாமையும் பெருகி துன்பக்காடாக உள்ளதோ, அங்கெல்லாம் இந்த லட்சியத்திலிருந்து மனிதகுலம் விலகிச் சென்றிருப்பதைக் காணலாம். மனித குலத்தின் நல்வாழ்க்கைக்கு ஆணி வேர் அன்புதான்.

மனிதன் காற்றை மட்டும் சுவாசித்து வாழ்வ தில்லை. மாறாக உன்னதமான லட்சியங்களாலும் நல்ல நம்பிக்கைகளாலும் வாழ்கிறான். இறைவனை உள்ளத்தில் இருத்தி வாழும்போதுதான் மனிதன் மாண்புடையவன் ஆகிறான். மனிதனை நெறிப் படுத்தி வழிப்படுத்தி வாழ்விக்க வந்தவையே மதங்கள். தெய்வப் பண்பாட்டுடன் மனிதன் வாழ்ந்தால் அவன் வாழ்வு சிறப்பதோடு அவன் வாழும் சமுதாயமும் சிறக்கும்.

ஆன்மிக ரீதியில் இந்தியாவை ஒருங்கிணைக்க முடியுமா?

கேள்வி நேரம்

பலவிதமான மொழிகளையும், பலவித மான பருவ கால நிலைகளையும், பலவிதமான உணவு பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ள கோடிக் கணக்கான மக்களின் ஒரு சங்கமமே இந்தியா. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவை, இந்திய மக்களை இணைக்கும் ஒரு பாலமாக இருந்து வருவது ஆன்மிகமே. கடந்த சில நூற்றாண்டுகளாக அது இந்திய மக்களால் சிறிது காலம் மறந்துவிடப்பட்டிருந்தது. சுவாமி விவேகானந்தர் தனது இந்திய சுற்றுப் பயணத்தில் கண்டது இந்த ஆன்மிக சக்தியையே. அந்த சக்தியே இந்தியாவை ஒருங்கிணைத்து காலம் காலமாக வாழ வைத்திருந்ததை அவர் கண்கூடாகக் கண்டார். மீண்டும் அந்த ஆன்மிக சக்தியின் மூலம் இந்தியா ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இந்தியா முழுவதற்கும் பொதுவான உபநிஷதங்கள், பகவத் கீதை போன்ற சாஸ்திரங்களின் செய்தியான வலிமை, நம்பிக்கை, சுயநலமின்மை, ஆன்மா போன்ற உயர்ந்த கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்து அதனை பின்பற்றுவதன்மூலம் இது சாத்தியமாகும்.

விஞ்ஞான யுகமான இன்றைய கால கட்டத்தில் ஆன்மிகவாதி களின் பங்கு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? அது எப்படியெல்லாம் உலகிற்கு பயன்படும்?

மனிதன் உயர்ந்த மனிதனாக வாழ, மனிதன் தெய்வமாக வாழ, உதவுவதே ஆன்மிகம். ஆன்மிகச் சிந்தனைகள் அனைத்தும் மனித மேம்பாட்டுக் காகவே அமைந்தவை; அதனால் உயர்ந்த சிந்தனைகளும் பண்பாடும் நம்மிடையே மலர்கின்றது. ஆன்மிகம் முன்பும் தேவைப்பட்டது; எப்போதும் தேவைப்பட்டுகிறது - எப்போதும் தேவைப்படும். அதன் தேவை இன்றைய விஞ்ஞான யுகத்தில் மிகமிக அதிமுக்கியத் துவம் வாய்ந்ததாகிறது. விஞ்ஞானத்தின் மூலம் நாம் விதவிதமான வ்ளர்ச்சிகளைக் காண்கிறோம். அத்தகைய வளர்ச்சிகளை அழிவிற்கும் சுயநலத் திற்கும் அல்லாமல் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் உபயோகப்படுத்தும் திறனைத் தருவது ஆன்மிகப் பண்பாடுதான். அது ஒன்றே நமது சகோதரத்துவத்தை செயல்முறையில் நடைமுறைப் படுத்தி மேன்மக்களாக நாம் வாழ வழிவகை செய் கிறது.

இளைஞர்களின் சக்தியை தேச வளர்ச்சிக்காக எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

உடலில் வலிமையும் உள்ளத்தில் தெளிவும் கொண்டவர்களாக குழந்தைகளை நாம் வளர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் புது யுகம் படைக்கும் வீரத் திலகங்கள் தோன்றுவார்கள். அதனால் இந்தியாவில் வளமாக எதிர்காலம் அமையும்.

இன்று கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்கள்தான் நாளைய எதிர்கால இந்தியாவின் தூண்களாக விளங்கப்போகிறார்கள். எனவே கல்வி ஒரு நாட்டின் வளங்களில் முதலிடம் பெறுகிறது. ஒழுக்கமும் பண்பும் கல்வியோடு சேர்த்து மாணவர் களுக்கு தந்தால், 'அறிவு' மட்டும் வளர்ந்து சமுதாயத் தில் குழப்பங்களையே ஏற்படுத்தாமல் நாட்டின் மீது பக்தி, மதிப்பு, மரியாதை ஏற்படும். இளைஞர்களை நாம் அப்படி வளர்க்க வேண்டும்.

காலையும் மாலையும் ஜபம், தியானம், பிரார்த்தனை ஆகியவற்றை தத்தமது மத நெறிக்கேற்ப பழகுவது என்பதை கல்வியின் ஒரு அங்கமாக கல்வி நிறுவனங்கள் அமைக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட்ட இளைஞர்கள் தாங்களாகவே எந்த ஒர தூண்டுதலுமின்றி நாட்டின் வளர்ச்சிக்காக வழிமுறைகளைக் கண்டுபிடித்து நடைமுறைப் படுத்துவார்கள். அத்தகைய நூறு இளைஞர்கள் இருந்தால் உலகத்தையே மாற்றிக் காண்பிக்க முடியும் என்றார் சுவாமி விவேகானந்தர்.

மலேசியா வாசுதேவன்

பிரபல பின்னணிப்பாடகர், நடிகர் மலேசியா வாசுதேவன் மிகச் சிறந்த பாபா பக்தர். "பாபாவிற்கு முதலில் நான் பக்தன், பிறகு தான் எல்லாம்'' எனக்கூறும் மலேசியா வாசுதேவன், ஸ்ரீ சாயிமார்க்கம் இதழுக்கு பேட்டி கேட்டதும் உடனே சரி என ஒப்புக்கொண்டார். பாபா என்றதுமே மடை திறந்த வெள்ளம் போல், பிரவாகமாய் பேச ஆரம்பித்த மலேசியா வாசுதேவன்:

"ஆரம்பநாட்களில் என் இறைவழிபாடு என்பது, மற்ற எல்லோருக்கும் இருப்பது போலவே இருந்தது. கோவில்களுக்கு எல்லாம் போவேன். ஆனால் அப்போதெல்லாம் பாபாவை வழிபட்டதில்லை. முதன் முறையாக, பி.பி. நாராயணன் என்பவர் தான் எனக்கு ஷீர்டி சாயி, சத்ய சாயி ஆகியோரின் படங்களைக் கொடுத்தார். அப்போது தான் பாபாபற்றி தெரிந்து கொண்டேன். பாபா படங்கள் கொடுத்த அந்த நண்பர் மலேசிய நாட்டுப் பிரமுகர். அகில உலக தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். கம்யூனிசக் கோட்பாடுகளில் ஈடுபாடு உடைய அவர் பாபா மீது தீவிர பக்தி உடையவராக இருந்தார். அவர் பாண்டிச்சேரி அரவிந்த ஆஸ்ரமத் தலைவராகவும் இருந்துள்ளார். அவர் பாபா படங்கள் கொடுத்த பிறகே நான் பாபாவை வணங்க ஆரம்பித்தேன். இப்போது எனக்கு எல்லாமே பாபாதான் என்கிற அளவிற்கு பக்தி அதிகரித்துள்ளது. இப்போது உங்களிடம்

பேசுவது கூட பாபாவின் செயலே என்று நம்புகிறேன்.'' என்று தீர்மானமாய்க் கூறியபடியே தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

'இங்கு நடந்து கொண்டிருப்பவை எல்லாமே ஏற்கனவே எழுதப்பட்டவை. சினிமா பாணியில் சொல்வதென்றால், திரைக்கதை - வசனம் எழுதப்பட்டாயிற்று. பிறப்பு, இறப்பு, பாவம், கர்மா ஆகிய அனைத்துமே இறைவனின் இயக்கத்தில் இருப்பவை. எது நடந்தாலும் அது இறைவனின் ஆணையே. நமது தற்போதைய செயல்கள் யாவும் முன் ஜென்மத் தொடர்ச்சியே. லாபமோ, நஷ்டமோ, இன்பமோ, துன்பமோ அனுபவித்தே ஆக வேண்டும். துன்பம் நேரும் போது இறைவனைக் குறை கூறி மேலும் பாவ மூட்டையை சுமக்கக் கூடாது. எப்போதும், நேர்மை, தெய்வீகம் ஆகியவற்றை பற்றிக் கொண்டு செயல் படவேண்டும். அப்போது தான் அடுத்த ஜென்மத்திலாவது நிம்மதியைப் பெறமுடியும். அடுத்த ஜென்மம்தானே, அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றோ, அடுத்த ஜன்மத்தை யார் பார்க்கப் போகிறோம் என்றோ நினைத்து விடக் கூடாது. இப்போது செய்யும் தர்மம் நம்மை எப்போதும் காப்பாற்றும். இந்த முன் ஜென்ம விஷயம் பற்றிச் சொல்லும் போது வேடிக்கை கலந்து ஒரு உண்மை தெரியவரும். அதாவது, நமக்கு ஏதேனும் கடுமையான நெருக்கடி வரும்போது, போன ஜென்மத்துல என்ன பாவம் செஞ்சேனோ என்று நம் வாயால் நாம் தான் கூறுகிறோம். முன் ஜென்ம விஷயத்தை நாமே உறுதிப்படுத்திக் கொள்கிறோம். உண்மை அப்படி இருக்கும் போது கர்மாவை பாவத்திற்குரிய வினையை அது கஷ்டமாக இருந்தாலும் அனுபவித்து தான் அதை கொஞ்சம் கொஞ்சமாகக் கடக்க வேண்டும்.

அது ஒன்றும் கஷ்டமான விஷயமல்ல. பக்தி எனும் பாதையில் செல்லும் போது அக் கஷ்டங்கள் விலகிவிடுகின்றன. பக்தியின் மூலம் கஷ்டங்களை மட்டுமல்ல பாவ, கர்மாக்களையும் விலக்க முடியும். நல்ல எண்ணம், புனிதமான தெய்வீக நிலை, சத்திய நெறி, தர்ம சிந்தனை ஆகியவற்றோடு வாழ்ந்தால் தெய்வமே நம்மைத் தேடி வரும். தெய்வத்திடம் நாம் பூரணமாகச் சரணடைய வேண்டும்.

வெற்றிக்கான முயற்சியை மட்டும் நான் செய்வேன். அதை நிறைவேற்றுவது இறைவன் மட்டுமே. நான் நானாக மட்டுமே இருக்க முடியாது. நான் கால் ஊன்றி நடக்கக் காரணமும் இறைவனே. அந்த நினைப்பு என்பதே இறைவன் கொடுத்தது தான். அது நமக்கு

சொந்தமானதல்ல. இந்த உடல் உட்பட எதுவும் நமக்கு சொந்தமானதல்ல. என்று, 'நான்' எனது' என்று பெருமை கொள்கிறோமோ அன்று வளர்ச்சி என்பது முற்றுப் பெறுகிறது. மனதில் நல்ல எண்ணம் இருந்தால் பாலை வனத்திலும் நீரைக்காண லாம். நல்லது எதையும் பெற இறைவழிபாடு மட்டுமே

ஷீரடி சாயிபாபாவிடம் அவர் ஈர்க்கப்பட்ட விதம் பற்றிக் கூறும் போது, "பாபா என்னை உயர்த்திக் கொண்டே இருக்கிறார். அவரே என்னைப் புகழடைய வைக்கின்றார். (லௌகீக மகிழ்ச்சியை வைத்து அல்ல) நிரந்தரமான வார்த்தைகளால் இதை நான் நிச்சயப்படுத்துகிறேன். எப்போதும் பாபா என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். அந்த அளவிற்கு மிகத் தீவிரமாக பாபா என்னை ஈர்த்துக் கொண்டுள்ளார். அவரே என் சத்குரு. என் சத்குருவே எனக்குத்தாயும் தந்தையுமாவார். அனைத்துத் தெய்வங்களின், அனைத்து மகான்களின், அனைத்து அவதார புருஷர்களின், அனைத்து சித்தர்களின் ஆசியையும், அருளையும் சத்குரு சாயியின் உருவில் பெறுகிறேன். இதுவரையில் ஒன்பது தடவை ஷீரடி சென்று வரும் பாக்கியம் பெற்றுள்ளேன். உலகத்திலேயே மிகவும் பிரமாதமான, உள்ளம் கவரக்கூடிய ஒரு இடம் இருக்கிறது என்றால், அது ஷீரடி மட்டும் தான். அத்தகைய காந்தர்வ சக்தி மிக்க புனிதமான தலம் ஷீரடி. ஷீரடிக்குப் போனால், அங்கிருந்து திஷரும்பிவரவேண்டும் என்கிற எண்ணம் தோன்றாத படிக்கு அன்பு மயமான தலமாக உள்ளது ஷீரடி

நான் முதலில் சினிமா காரணமாக ஷீரடிக்குப் போனேன் என்றாலும், அந்த முதல் பயணத்திலேயே எனக்கு இத்தகைப பேரானந்தமான அனுபவம் கிடைத்தது. அப்படி ஒரு மாற்றமுடியாத பக்திப் பிணைப்பு. பாபாவை என் மனதில் பிரதிஷ்டை செய்துள்ளேன். ஆத்மார்த்தமான பிரதிஷ்டை வேறு. வெறுமனே வணங்குதல் வேறு, அகத்தில் இறைவனை பிரதிஷ்டை செய்ய வேண்டும். அத்தகைய ஆழமான பக்தி இருக்கும் போது சோதனைகள் நமக்கு ஒரு பொருட்டாகாது. ஷீரடி சிறிய கிராமம் தான். ஆனால் அதன் மகிமை மாற்ற முடியாத பெருவியப்புக்குரியது. அதற்குக் காரணம் பாபாவின் ஈர்ப்பு சக்தி. அச்சக்தி பாபாவிடம் மட்டுமே இருப்பது, இந்த ஆனந்தம் அதை அனுபவித்த பக்தர்களுக்கு மட்டுமே புரியக் கூடியது'' என்று உணர்ச்சிமயமாய் பதில் சொன்னார்.

அவரே மேலும் தொடர்ந்து, ஸ்ரீ சத்ய சாயியையும் நான் வணங்குகிறேன். அவரது அறுபதாம் ஆண்டு விழாவில் பிரசாந்தி நிலையத்தில் பாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் அங்கு சென்றது அதுதான் முதல் முறை. ஆனால் பாபா என்னிடம் தமிழில் விசாரித்து பேசினார். பிறகு, கொடைக்கானலில் அவரை தரிசித்தேன். அடிப்படையில், நான் தெய்வங்களிடமும், மகான்களிடமும் வித்தியாசம் பார்ப்பதில்லை. எல்லாம் சக்தி வடிவங்கள் எல்லாராலுமா மகான்களாக முடியும்? பாவமே செய்யாதவர்கள் தான் இந்த ஜன்மத்தில் மஹான்களாக அவதரித்துள்ளனர். அதனால்தான் அவர்களிடம் சக்தி உள்ளது. விஷ்ணுவும், ஏசுவும், அல்லாவும் ஒரேசக்திதான். நதிகள், சங்கமிப்பது கடலில்தான். நான் கடலை மட்டும் பார்க்கிறேன். அவரைப்பிடிக்கும். இவரைப் பிடிக்காது என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. பிடிப்பதும் பிடிக்காததும் அவரவர் இஷ்டம். அவரவர் உரிமை. ஒருவரின் உரிமையில் அடுத்தவர் தலையீடு தேவையற்றது. பங்காரு அடிகளாரை வழிபடுபவர்கள் அவரைத்தான் வழிபடுவார்கள். அவரது ஆன்மீக ஈர்ப்பு சக்தி அது.

ஆதி சங்கரர், ரமணர், அகத்தியர் எல்லாம் எந்த சக்தியின் வடிவங்கள்? சக்தி ஒன்றுதானே? ஏரி, கிணறு, குளம், நதி, ஆறு, கடல் என்று பார்த்தாலும் தண்ணீர் ஒன்றுதான். எது நல்லது. எது கெட்டது என்று பிரிக்க நமக்கு என்ன தெரியும்? ஷீரடி சாயிபாபாவின் பக்தன் நான். அவர் என்னை தவறாக வழிநடத்தமாட்டார் என்று திடமாக நம்புகிறேன். அப்படியிருக்க, எனக்குக் கவலையோ, சந்தேகமோ கொஞ்சமும் கிடையாது என்றவரிடம், ஆன்மீகத்திலும் போலித்தனம் கலந்துவிடுகிறதே என்று கேட்டதற்கு "நமக்கு நோக்கம் கடல்தான். புனித நதிகளும் கடலில் தான் கலக்கின்றன. அதே மாதிரிதான், ஒரு சில நேரங்களில் சாக்கடை நீரும் அழுக்கு நீரும் கூட கடலில் கலந்ததும். அழுக்கு நீங்கி கடல் நீராகவே மாறிவிடுகிறது. அது கடலுக்குரிய பெருமை. மகிமை'' என்று பேசி முடித்தார் மலேசியா வாசுதேவன்.

நாகை. முகுந்தன்

பிரபல ஆன்மிக சொற்பொழிவாளர் நாகை. முகுந்தன் புலவர் கீரனிடம் உடன் இருந்தவர். இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் மகாபாரத, ராமாயண கதைகளைக் கூறியவர். கூறி வருபவர். பாபா பக்தரும்கூட. 2000-ல் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர். ஆன்மிக எழுச்சி பற்றி அவர் கூறிய கருத்துக்கள்:

ஆன்மிகம் என்று பார்க்கிற போது, இங்கே பக்தி இருக்கிறது. அதுவும் பயபக்தி. விஷய ஞானத்துடன் கூடிய தெளிவான பக்தி இல்லை. பிரதோஷம் ஆனாலும் சரி, வியாழக்கிழமை பாபா கோயில்கள் என்றாலும் சரி, சனிக்கிழமை ஆஞ்சநேயர் கோயில் என்றாலும் சரி, கூட்டம் வருகிறதே தவிர, பக்தி உணர்வுடன் மட்டும் வரக் கூடிய கூட்டம் கம்மி. ஏதாவத ஒரு விண்ணப்பத்தோடும், கோரிக்கையோடும் தான் கோயில்களுக்குப் போகும் பழக்கம் இருக்கிறது. நாம் எடுத்த பிறவியின் பயனை அடைய வேண்டும் என்கிற மாதிரியான நிஷ்காம்ய பக்தி இங்கே இல்லை.

கிரிவலம்... கிரிவலம்....என்று திருவண்ணாமலையை சுற்றிச் சுற்றி வருகிறோம். அண்ணாமலையாருக்கே இதனால் தலை சுற்றி விடும் போல. இன்றைய அதிவேக காலகட்டத்தில, நவீன வாழ்க்கை முறையில், பணம்.... பணம்... என்று அலைகிற வேகத்தில் உண்மையான ஆன்மிக அக்கறையை எதிர்ப்பார்க்க முடியாது. அதே நேரம் அதற்குரிய

விழிப்புணர்வை இளைஞர்களிடம் பெரியவர்கள் தான் ஏற்படுத்த வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பெரியவர்கள் இந்த விஷயத்தை இளைய தலைமுறையினர்க்கு எடுத்துச் சொல்வதில்லை. கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து தனித்தனிக் குடும்பங்கள் ஆகியதால் அதுவும் ஒரு காரணமாகும். ஆனால் நாம் எளிதாக இதற்கும், தலைமுறை இடைவெளி ஜெனரேசன் கேப் - என்று அதன் மேல் பழியைப் போட்டுவிட்டு தப்பித்து விடுகிறோம்.

கந்தபுராணத்தை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இதில் சிவன் மூத்த தலைமுறை. முருகன் இளையதலைமுறை. பிரணவத்தின் பொருள் சிவனுக்குத் தெரியாதா? என்ன? முருகனுக்குத் தெரிந்திருக்கிறதா என்று சோதிப்பதே சிவனின் நோக்கம். இளைய தலைமுறைக்கு எது தெரியும்? எதைத் தெரிவிக்க வேண்டும்? என்கிற தெளிவு பெரியவர்களுக்கு இருக்க வேண்டும்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களும் மனித வாழ்வியலை மையப்படுத்தி தான் வழிகாட்டுதல்களாக உருவாக்கப்பட்டன. மனிதருள் மகாபாரதம் என்பது தான் உண்மை. ஐந்து புலன்களை தான் பாண்டவர்கள்; நூறு கௌரவர்கள் தான் முடிவற்ற உலகியல் இன்பங்கள். மனத்தை மையமான குறியீடாகக் கொண்டவள் தான் பாஞ்சாலி. இன்பத்தை நாம் அனுபவிக்கும் போது ஏதேனும் ஒரு வகையில் அவமானம் தானாக வரும். அப்போது மனம் கூக்குரலிட்டு தனக்குள்ளாக அழும். அது போன்ற நேரங்களில் வீரம் உதவாது; உறவு முறை உதவாது;அறிவு உதவாது; விவேகம் மட்டுமே உதவும்.

அறிவு - விதுரன் , உறவு - பீஷ்மர் (தாத்தா) , வீரம் - துரோணர்.

-இவர்கள் யாருமே பாண்டவர்களுக்கு உதவ வில்லை. விவேகம் என்கிற பண்பாக இருந்த கிருஷ்ணன் தான் உதவ முடிந்தது.விவேகம் இல்லாததால் தான் பாண்டவர்கள் சூதில் தோற்றார்கள். அன்றாட நமது வாழ்விய லுக்கும் இது பொருந்தும். நம் மனதிற்குள்ளேயே தினம் தினம் குருக்ஷேத்ரப் போர் நடந்து கொண்டு தான் உள்ளது. இது நல்லதா? கெட்டதா? இப்படி செய்யலாமா? வேண்டாமா? என மனதிற்குள் தினந்தோறும் யுத்தம் நடக்கிறது.

கேள்வி நேரம்

தினசரி வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை எப்படி எதிர் கொள்வது என்பதை கதை கதையாக சொல்லியுள்ளார் கள்.பிரச்சினைகளை எதிர்கொள்ளாதவன் அப்போதே தோல்வி அடைந்தவன் ஆகின்றான்.

பீஷ்மருக்கும், தர்மருக்கும் இல்லாத பிரச்சினைகளா நமக்கு?

ஆன்மிகம் இத்தகைய வழிகாட்டுதலை தருவதை நாம் நமது வரும் தலைமுறைக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பேசுவது ஈஸி; பணம் இல்லாமல் எப்படி வாழ்வது? என்று கேட்கலாம். அதற்கு பணத்தைப் பற்றிய தெளிவு வேண்டுமே தவிர, பணத்தைப் பற்றிய பயமோ, பணம்.... பணம்.... என்று அதன் பின்னாலேயே ஓடிக்கொண்டு இருப்பதோ நமக்கு எந்த வகையிலும் உதவாது.இப்படிப்பட்ட ஆன்மிக எழுச்சி உண்டாக கடவுளை பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ ராமானந்த சரஸ்வதி

புதுக்கோட்டை சத்குரு கோபால கிருஷ்ணபாகவதரின் பேரனும், சத்குரு சஞ்சிவி பாகவதரின் மகனுமான ரவிபாகவதர் இப்போது சன்யாச தீக்ஷை பெற்று ராமானந்த சரஸ்வதியாகி விட்டார். மதுரையில் இருக்கும் ராமானந்த சரஸ்வதி நமக்களித்த பேட்டி:

பஜனை வழிபாடு, பாகவத தர்மம், உஞ்ச விருத்தி என்ற வழிபாட்டு முறை இருக்கும் போது தனியாக சன்யாசம் ஏற்க வேண்டியதன் அவசியம் என்ன?

சிறு வயதிலிருந்தே பஜனை சம்பிரதாயத்தில் நான் இருந்திருந்தாலும் அப்போதிருந்தே எனக்கு ஆன்மிகம் என்றால் தனி நாட்டம் உண்டு. குறிப்பாக, சித்தர்களைப் பறிறிய ஆர்வம் அதிகம் உண்டு.

இரண்டாவது போதேந்திராள், சைதன்ய மகா பிரபுவில் இருந்து ஹரிதாஸ் கிரி சுவாமிகள் வரை பலரும் சன்யாச தர்மத்தையும், பாகவத தர்மத்தையும் சேர்த்தே கடை பிடித்து வந்தார்கள். நானும் அந்த வழியில் சேர்ந்து கொண்டேன். அவ்வளவுதான்.

கேள்வி நேரம்

சித்தர்களைப் பற்றிய ஆர்வமும், ஈடுபாடும் எப்படி வந்தது?

எனது மிருதங்க குரு கோபால் பிள்ளை சித்தர்களைப் பற்றி அடிக்கடிபேசுவார். அவர்தான் எனக்கு சித்தர்களைப் பற்றிய ஆர்வத்தை தூண்டி விட்டார். இன்னொருவர் ஷெரீஃப் பாய். அவர் தான் நார்த்தா மலையில் இருந்த ஒரு சித்தரிடம் என்னை அழைத்துப் போனார். அந்த சித்தரை மற்றவர்கள் பைத்தியம், கிறுக்கன் என்றெல்லாம் சொல்வார்கள். அவரும் பார்ப்பதற்கு அப்படித்தான் இருப்பார். பத்து, பதினைந்து கிழிந்த சட்டைகளை ஒரே நேரத்தில் போட்டிருப்பார். நீண்ட ஜடாமுடி. கையில் ஒரு கம்பி. அட்ணக்கால் போட்டு உட்கார்ந்திருப்பார்.

பௌர்ணமி தோறும் அவருக்கருகில் இருக்கும் ஒரு சட்டியில் பால் ஊற்றினால் அனுக்ரஹம் செய்வார். அனுக்ரஹம் இல்லாவிட்டால் பால் சட்டியை கையில் உள்ள கம்பால் தட்டிவிட்டு விடுவார். நான் ஒரு பௌர்ணமி அன்று அவரைப் பார்க்கப் போய் ஆசி கேட்டேன்.

முதலில் முறைத்தார். பிறகு, அவர் இயற்கைக் கடன் கழித்தார். அதை என் கைகளில் பெற்றுக் கொள்ளச் சொன்னார். நானும் அப்படியே செய்தேன். மேலும், அதை என் இரு கண்களிலும் ஒத்திக் கொண்டேன். பார்த்தால் அவை சந்தனம். நன்றாக மணம் வீசியது. உடனே அவர் நாற்பத்து எட்டு பௌர்ணமி ஹோமம் செய்யுமாறும், ஐம்பது வயதுக்குள் வீட்டை விட்டு வந்துவிடுவே என்றும் சொன்னார். நான் எழுபத்தி மூன்று ஹோமங்கள் செய்தேன். அவர் சொன்ன மாதிரியே வீட்டை விட்டும் வந்து விட்டேன். அவரது சந்தனம் இன்றும் என்னிடம் உள்ளது. எனது அந்தரங்க பூஜையில் (குஹ்ய பூஜை)யில் அதை வைத்துள்ளேன். வெளி பூஜையில் (பாஹ்ய பூஜை) அது தெரியாது.

இப்படியெல்லாம் நடக்கும் என்று முன்பே நினைத்துப் பார்த்ததுண்டா?

இப்போதுதான் ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றின் தொடர்ச்சி என்று புரிகிறது.1969-லேயே கோபால கிருஷ்ண பாகவதர் எனக்கு உஞ்ச விருத்தி உபதேசம் தந்தார். பனிரெண்டு, பதின் மூன்று வயதிலேயே பரம்பரைமந்திர உபதேசம் கிடத்தது.1970-ல் புதுக்கோட்டையில் விபூதி

பாபா மூன்று பீஜாக்ஷர மந்திரங்களை உபதேசம் செய்தார். அப்போது அதைப் பற்றி சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் விளையாட்டாக இருந்து விட்டேன். விபூதி பாபா குதிரை வண்டியில் தான் போவார். வருவார்.அந்தக் குதிரையோடு எல்லாம் பேசுவார். நான் அவரது கைகளைப் பிடித்து அவரை குதிரை வண்டியில் ஏற்றி விடுவேன். அதில் ஒரு சந்தோஷம். மற்றபடி, இப்படி ஒரு நிலை வரும் என நான் முன்கூட்டி நினைத்துப் பார்த்ததில்லை.

உங்கள் வழி, உங்கள் தாத்தா, அப்பா கடைப்பிடித்த வழிகளுக்கு மாறாக உள்ளதே?

எல்லாமே இறைவனை அடையக்கூடிய வழிகள்தான். அவர்கள் தாத்தா, அப்பா என்பதை விட சத்குருக்கள் என்பதுதான் சரியானது. கோபால கிருஷ்ண பாகவதரும், சஞ்சீவி பாகவதரும் எனது சத்குருக்கள். அவர்கள் காட்டிய இறை வழியைத் தான் பின் பற்றி நடக்கிறேன்.

உங்களை சன்யாசியாக்க தூண்டிய சக்தி எது என்று சொல்ல முடியுமா?

அதற்கு முன் இன்னொரு விஷயத்தை சொல்ல வேண்டியுள்ளது. எனக்கு முப்பது, முப்பத்தி ஐந்து வயதாக இருக்கும் போது, விபூதிபாபா என் சொப்பணத்தில் வந்தார். நான் சொன்னதை செய்ய மாட்டியா? என்று கேட்டார். எனக்கு அவர் அப்படி கேட்டது பற்றியோ, அவர் கனவில் வந்தது பற்றியோ குறிப்பாக எதுவும் புரியவில்லை. சாதாரண கனவு தானே என்று பேசாமல் இருந்து விட்டேன். பல வருடங்களுக்குப் பிறகு, சிட்லபாக்கம் சாயி விபூதி பாபா சமாதிக்கு சென்ற போது தான் அந்தப் பழைய கனவு ஞாபகத்திற்கு வந்து உலுக்கியது.

சென்னை குரோம் பேட்டையில் நான் இருந்த போது, விபூதி பாபா சமாதிக்குப் போக நினைத்துக் கொண்டிருந்தேன். அன்று சாயந்திரமே அம்பத்தூர் வெங்கட்டா என்பவர் என் வீட்டிற்கு வந்து விபூதி பாபா படத்தை தந்து விட்டுப் போகிறார். எனக்கு ஏக ஆச்சரியம்மறுதினமே விபூதி பாபா சமாதிக்குப் போனேன். அங்கே சமாதியில் ஏதோ லைட் பளிச்சென மின்னுவது போல ஃபிளாஷ் அடித்தது. விபூதி பாபாவை வணங்கி நாகராஜ பாபாவிடம் இருந்து விபூதி பிரசாதம் வாங்கி வந்தேன். அப்போது என் பூர்வாஸ்ரம மகளுக்கு

கேள்வி நேரம்

பிரசவ நேரம். இக்கட்டான நிலையில் எல்லோரும் பயந்து போயிருந்தனர். நான் விபூதி பாபா சிலையில் வந்த விபூதியை இட்டு விட்டு தைரியமாக இருந்தேன். பிரசவம் குறையின்றி நடந்தது. அதன் பிறகு நான்கைந்து மாதத்திலேயே விபூதி பாபா கூறிய சிறுவயது மந்திரம் கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகத்திற்கு வந்து விட்டது. அதன் பிறகுதான் சன்யாசம் பெற்றுக் கொண்டேன்.

எப்படி சன்யாசம் பெற்றீர்கள்?

பவானி ஆற்றங்கரையில் வைதீக முறைப்படி சன்யாசம் பெற்றேன். காவி உடை தரிக்கும் முன்பாக படிக்கரையில் விபூதிபாபா படத்தை வைத்து வணங்கி அவரிடம் காவி உடைகளை சமர்ப்பணம் செய்து அதன் பிறகே அவற்றை அணிந்தேன். தயானந்த சரஸ்வதி சுவாமிகள் எனக்கு ராமானந்த சரஸ்வதி என்று பெயரிட்டு ஆசி புரிந்தார். சன்யாசம் பெற்ற பல மாதங்களுக்குப் பிறகு விபூதி பாபா சங்சல்பத்தின் பேரில், நான் ஒரு நாகசாயியை உருவாக்கி வழிபட்டு வருகிறேன்.

ஷீரடி பாபாவிடம் உங்களுக்கு ஈடுபாடு எப்படி?

கோபாலகிருஷ்ணபாகவதர் காலத்தில் இருந்தே ஷீரடி சாயிபாபா வழிபாடு இருந்து வருகிறது. ஷீரடிக்கும் போய் வந்துள்ளேன். மதுரை சாயி அன்பர் இராம. குணசேகரன் தந்த சாயிபாபா சிலையை தினமும் பூஜித்து வருகிறேன்.

திருப்பனந்தாள் ஆதீனம்

ஆன்மிகம் - அதன் விளக்கம்....

ஆத்மா - ஆன்மா (soul) எனும் வேர்ச் சொல்லிலிருந்து உருவானது ஆன்மிகம். அதை ஒரு பொருள் தரும் சொல்லாகக் கருதி, விளக்கிவிட முடியாது. கடவுள் நம்பிக்கை கொண்ட பலர் மேற்கொள்ளும், ஏற்கும் ஓர் இயக்கம், அல்லது செயல்பாடு என்று பொருள் சொல்லலாம். அண்மையில் வடிக்கப்பட்ட (Coined) சொல்தான் ஆன்மிகம். பழங்கால இலக்கியங்களில் இச்சொல் இல்லை.

நவீன ஆன்மிகத்தால் பாரம்பரிய ஆன்மிகத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு - அதை எப்படிச் சரி செய்வது?

ஆன்மிகத்தில் நவீனம், பாரம்பரியம் எனும் அமைப்போ, பிரிவினையோ கிடையாது. தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியங்கள், புராணங்கள், சமயச் சான்றோர் பாடல்கள், சிற்றிலக்கியங்கள் வழியாக உணரப்பட்ட ஒருவகைக் கடவுள் நம்பிக்கை சார்ந்த செயல்பாடு. மற்றொன்று இப்போது வாழ்வோர் காணும் தெய்வீகம் சார்ந்த நடைமுறைகள். எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது

என்று சொல்வது முழுவதும் பொருந்தியதன்று. பழமை - புதுமை - இவற்றுக்கு இடையே எப்போதுமே இடைவெளி ஏற்படுவது இயல்பே. அறிவியலும் Every action there is an equal and opposite reaction (Newton's III Law) என்று சொல்கிறதே.

அசுர வேக விஞ்ஞான வளர்ச்சியால் ஆன்மிகத்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு?

வினாவின் தொடக்கச் சொல்லே (அசுர) ஓரளவு விடை சொல்லி விடுகிறது. 'அசுர வேகம்' எனில் 'தீமை விளைவிப்பது, விரைந்து அழிதல் இயல்புடையது' - எனும் பொருளை அடைமொழி மட்டுமே உணர்த்திவிடுகிறதே. ஓர் அணுகுண்டு, மனித உழைப்பும் ஆக்கச் சக்திக்குப் பயன்படின் விளையும் நலம்? கருத வேண்டும். பாதிப்பு பெரிய அளவில் இல்லை. ஏனெனில் முழுவதும் அறிவியல் சார்ந்து வாழ்வோரும் மன உளைச்சலில் ஈடுபட்டு இறுதியாக நிறைவடைவது ஆன்மிகத்தில்தான்.

சைவம், தமிழ் பற்றிய சுவாமிகளின் பார்வை......

நீரின் குளிர்மை, தீயின் வெம்மை, பாலின் வெண்மை போல சைவம் - தமிழ் இவை இரண்டும் பிரிக்க இயலாதவை. கூடாதவை.

உலகெங்கும் புதுமைப்பட்டு, பரந்து பட்டு, பேசப்பட்டு, பேணப்பட்டு, போற்றப் பெறும் சமயம் சைவம். வாழ்வியலோடு ஒப்ப வருவது. அன்பை மட்டுமே ஆதாரத் தளமாகக் கொண்டது. 'யாவற்குமாம் இறைவற்கொரு பச்சிலை' - எனச் சமயத்தை எளிமையாக்கியது. 'பணி செய்து கிடப்பது என் கடனே' - எனத் தொண்டினை முன்னிறுத்தியது.

தமிழ் தொன்மைமிக்கது. உலகில் அதிகமாகப் பேசப்பெறும் மொழிகளில் 16 - ஆவது இடம் பெறுவது. இனிமை, நீர்மை - இதன் இலக்கணம். காலம் குறிப்பிட முடியாத காலத்துத் தோன்றி மரபுகள் அழியாதவாறு பேணப்பட்டு வருவது. சைவத்துடன் சமமாகப் பரவியது. பரப்பப்பட்டது.

மக்களுக்கு ஆன்மிகம் மற்றும் வழிபாட்டு நெறிகளை உணர்த்த

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

வேண்டிய பாங்கு?

ஆன்மிகம் ஒரு பெரிய ஆலமரம். அதன் பல்வேறு கிளைகள் போலப் பல சமயங்கள் ஊடே தழைத்து நிற்கும் மரம் போன்றது வழிபாடு.

சுற்றுச் சூழல், கால நிலை, கற்ற கல்வி அல்லது கல்லாமை, பொருளாதார வசதி வாய்ப்புக்கள், வாழ்வியல் குறை, நிறைகள், விரக்தி மனப்பான்மை, தவறான வழிகாட்டல் போன்றவற்றால் ஆன்மிகம், வழிபாட்டு நெறிகளில் பல பிரிவுகள், வேறுபாடுகள் தோன்றுவது இயற்கை.

'நில்லாவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு'
'எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல்'
'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்'
அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும் நெஞ்சம் வாழி நினை'

எனும் ஞானியர்தம் வாக்கும் அவர்தம் வாழ்வியலுமே, இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டியோர் வாழ்க்கையே சரியான வழிகாட்டு நெறிமுறையாகும். இவற்றைச் சொல்வதும், கேட்கச் செய்வதுமே மெய்யை உணர சரியான வழியாகும்.

ஆன்மிகம் - பல பிரிவுகள் உள்ளன. அதன் வேற்றுமை - ஒற்றுமை.

ஆன்மிகம் என்பது ஒரே அமைப்புதான், அதில் பிரிவு இல்லை. சமயம், நெறி, மார்க்கம் மதம் என்பதில்தான் பல பிரிவுகள். இதில் ஒற்றுமை உண்டு. அன்பை அடிப்படையாகக் கொண்டவையே. எவையும் வன்முறையை வலியுறுத்தாதவையே. மனிதனின் உயர்விற்கு வழிகாட்டுபவையே எல்லாமும்.

வேற்றுமை எனில் அது வேதத்தை உடன்படுபவை, ஏற்காதவை என இருவகையில் அடங்கிவிடும். அகம், அகப்புறம், புறம், புறப்புறம் எனச் சமயப் பிரிவுகளும் இதனை அடிப்படையாகக் கொண்டவையே.

கேள்வி நேரம்

ஆதிசங்கரர் - விவேகானந்தர் போன்ற புதிய மகான்கள் சமீபகாலத்தில் ஏன் உருவாக வில்லை?

உருவாகவில்லை என்று சொல்ல இயலாது. சாயிபாபா, இராகவேந்திரர், இரமணர் முதலானோர் பின் வந்தவர்கள்தானே எப்போதும் உருவாகிக் கொண்டிருக்க வேண்டும் என்பது நியதியில்லை. 'பரித்ராணாய சாதூநாம்' என்னும் கீதை தொடர் வாக்கியம், 'அநீதி மேலோங்கி நியாயம் காயப்படுத்தப்படும்போது நான் அவதரிக்கிறேன்' என்று சொல்வதனால், தேவை என்று இறைவனுக்குத் தோன்றும் போது மகான்களை அவரே உருவாக்குவார்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் உள்ள பக்தி எழுச்சி தற்போது இல்லையே - ஏன்?

இயற்கைச் சூழல், அரசியல் அமைப்பு, வாழ்வியல் நெறி, வசதிகள் இவற்றின் அடிப்படையில் நோக்கும்போது நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலம் எழுச்சியடைய வேண்டிய இன்றியமையாமை உடைய காலமாக இருந்தது. பிறரால் அழுத்தப்படும் போது உணர்வுகள் பீறிட்டு எழுவது இயல்புதானே? தடுக்கப்படும் அணையில் அடங்கும் நீர், வெளியில் விட்டதும் வேகம் கொள்வதைப் பார்க்கிறோம். இயற்கையோடு இயைந்து, இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும், பக்குவம் அக்கால மனிதர்களுக்கு இருந்தது. இலக்கு இல்லாமல் 'பொருள் ஒன்றே பொருள்' - எனப் பரபரக்கும் இன்றைய வாழ்வியல் அமைப்பில் எழுச்சி என்பது குறையவே சாத்தியக் கூறுகள் அதிகம். மேலும் இப்போது எழுச்சியில்லை என முழுவதும் உறுதி சொல்ல முடியாது இருக்கிறது. ஆனால் அது முறையான - முழுமையான - எழுச்சி இல்லையென்று வேணுமாயின் சொல்லலாம்.

சைவ நெறி - சமய நெறி - விளக்கம்?

சமய நெறி - பலப்பல விருப்பம் உடையவராய் பதைபதைக்கும் மானிடரைப் பக்குவப்படுத்துவது, சமையல் - சமைப்பது என்பதற்கு அரிசி, காய் போன்றவற்றை உண்பதற்கேற்ப பக்குவம் செய்வது போல, மனித மனங்களை இறைநெறிக்கு ஏற்ப பக்குவம் செய்வது சமயம். உண்பது, உடுப்பது, உறங்குவது, சுகம் அனுபவிப்பது இவற்றுக்கு மேலாக அவர்தம் வாழ்வியலுக்கு அர்த்தம் உள்ளது என்பதைக்

காட்டுவது சமயநெறி. பலவிதமான செய்கைகள், நெறிப் பாடுகள் அடங்கியது, எனினும் சுருங்கச் சொல்லின், 'அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்' என்பதே சைவ நெறி.

சாயிபாபா பற்றிய சாமிகளின் பார்வை?

எளிமை, தனக்கென வாழாது பிறர்க்கென முயலும் சால்பு, எவ்வுயிரிடத்தும் அன்பு செய்யும் பாங்கு, குற்றமே செய்யினும் குணமெனக் கொள்ளும் குணம் - இவற்றை மொத்த உருவாக்கினால் அது 'சாயி' எனலாம். அண்மையில் அவதரித்து அற்புதங்கள் நிகழ்த்திய மகான். பல்லாயிரம் உள்ளங்களை நன்நெறிப் படுத்திய சீலர், தெய்வமாகப் பல்லாயிரம் உள்ளங்களில் கோயில் கொண்டவர்.

மடத்தின் வரலாறு - சுவாமிகளின் பீடம் ஏற்றுக்கொண்ட விபரம்?

காசித்திருமடத்தின் 20-ஆவது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆட்சிக் காலத்தில் திருமடத்தின் இளவரசாகப் பட்டம் ஏற்ற நாம், அவர்கள் பரிபூரணம் எய்தியபின், 1972-இல் திருமடத்துத் தலைமைப் பீடத்துக்கு வந்தோம்.

சாருபாலா தொண்டைமான்

திருச்சி மாநகராட்சி மேயர் சாரு பாலா தொண்டைமான் புதுக்கோட்டை அரச வம்சத்தைச் சேர்ந்தவர். மிகச்சிறந்த சாயி பாபா பக்தர். திருச்சியில் அவரை சந்தித்த போது.....

"நேற்று தான் ஷீரடியில் பாபாவை தரிசனம் செய்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வந்தேன். எல்லாருக்கும் நல்ல தரிசனம். நான் நாலு வேளை ஆரத்தியும் பார்த்தேன். மனசுக்கு ஆனந்தமாக இருந்தது'' என்ற சாருபாலா தொண்டைமானிடம் அவர் பாபாவிடம் ஈர்க்கப்பட்ட விதம் பற்றிக் கேட்டதற்கு,

எங்க தொண்டைமான் வம்ச பரம்பரைக்கே புதுக்கோட்டை திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் தேவி தான் ஆதர்ஷ தெய்வம். எங்க மன்னர்களை பிரகதாம்பாள் தாஸ்னு தான் கூப்பிடுவாங்க.

குலதெய்வம்னு பார்த்தால் பேரையூர் நச்சாந்துப் பட்டிக்கு பக்கத்துல இருக்கிற பரணிக்குடிப் பட்டிதான். இப்படிப்பட்ட பாரம்பரிய வழிபாட்டுக்கு நடுவே பாபா என்னை ஆசீர்வதிக்கிறதை மிரகிள்னுதான் செல்லணும். பாபா தன்னோட பெருங்கருணையால் என்னை ஆட்கொண்டிருக்கிறார்'' என்று சொல்லி விட்டு, "புட்டபர்த்தி

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

சத்ய சாயிபாபாவைத் தான் நான் முதல்ல கும்பிட ஆரம்பிச்சேன். குழந்தை பாக்யம் வேணும்கிறதுக் காக அவரை பிரார்த்தனை செய்தேன். அவரோட அருளால் குழந்தையும் பிறந்தது. பாபா எனக்கு பாத நமஸ்காரம் பண்ண சான்ஸ் கொடுத்திருக்கிறார். பலமுறை ட்ரீம்ஸ்ல வந்து வழிகாட்டியிருக்கிறார். அந்த கைடன்ஸ் தான் எனக்கு பெரிய உதவியா இருக்கிறது. நானும் பாபா சர்வீஸுக்காக கொடைக்கானல், புட்ட பர்த்தி எல்லாம் போயிருக்கேன். எல்லாமே சுவாமியாப் பார்த்து தந்த வாய்ப்புகள் தான்'' என்றார். சாருபாலா தொண்டைமானுக்கு வேதாத்ரி மகரிஷியிடமும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு.

"வேதாத்ரி மகரிஷியின் ஆழ்நிலை தியானப் பயிற்சியும் எடுத்திருக்கிறேன். குண்டலினி போன்ற யோகங்களை தெரிந்து கொள்ள முடிந்திருக்கிறது. வேதாத்ரி மையத்தில் நயனதீட்சை வரை பெற்றிருக்கிறேன். தவம், தியானம் என்பது பற்றியெல்லாம் எதுவுமே தெரியாமல் இருந்த எனக்கு ஆழ்நிலை பற்றிய அறிவைத் தந்ததே வேதாத்ரி மகரிஷிகள் தான்'' என்று நன்றியோடு கூறுகிறார் சாருபாலா தொண்டைமான். தற்போது திருச்சியில் ஒரு கோடி ரூபாய் திட்டச் செலவிலான வேதாத்ரி மகரிஷி அறிவுத் திருக் கோயில் கட்டுமானப் பணிகளுக்கான அறக்கட்டளை தலைவராகவும் சாருபாலா தொண்டைமான் இருக்கிறார்.

"ஆன்மிகம், தியானம் என்று நேரம் ஒதுக்கிக் கொள்வதால் தான் என்னால் மிகத் தெளிவாக செயல் பட முடிகிறது. பரபரப்பான டென்ஷன் மிகுந்த வேலைகளுக்கு இடையே என்னால் நிம்மதியாகவும், மனஅமைதியோடும் இருக்க முடிகிறது என்றால் அதற்கு இந்த ஆன்மிகமே அடிப்படை. நான் எதற்கும் குழம்புவதில்லை. செய்யும் செயலில் தெளிவாகவும், உறுதியோடும் இருக்க முடிகிறது. ஆன்மிகம் தந்த பலம் அது'' என்று கூறும் சாருபாலா தொண்டைமான் தன் வீட்டிலேயே வேதாத்ரி மகரிஷி தவமையத்தையும் நிறுவியுள்ளார். வாரத்தில் இரண்டு நாட்கள் இங்கு தியானப் பயிற்சி வழங்கப்படுகிறது.

சாருபாலா தொண்டைமான் மேயராக பதவி ஏற்பதற்கு முன் திருச்சி மேக்குடி ஷீரடி சாயிபாபா ஆலயம் சென்று வணங்கியுள்ளார்.

"நான் மேயரா ஜெயிச்சதும் உடனே மேக்குடி சாயிபாபா கோயிலுக்குத் தான் போனேன். அங்க பாபாவை வணங்கிய பின்னாடிதான் மேயரா பொறுப்பு ஏத்துக்கிட்டேன்'' என்றார் சாருபாலா தொண்டைமான்.

டாக்டர் ராமதாஸ்

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தலைவர் செயலாளர் என்று பெரிய அளவிலான பதவிகளில் இல்லா விட்டாலும் கூட இன்னும் அக்கட்சியின் 'ஏகோபித்த' தலைவர் அவர்தான். கட்சியின் கடைசித் தொண்டன் முதல், அக்கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் வரை, அனைவருமே ராமதாஸ் பேச்சுக்கு மறுப்பு சொல்லாமல் அப்படியே கேட்கிறார்கள்.

ஈழப்பிரச்சினை, மத்திய அரசில் பங்கு என்பது தவிர, அடுத்து வரஇருக்கும் தமிழக பொதுத் தேர்தலிலும் ராமதாஸ் எடுக்கும் முடிவு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த நிலையில், திண்டிவனம் - பாண்டிச்சேரி சாலையில் உள்ள தைலாபுரம் பண்ணை வீட்டில் 'ரிலாக்ஸாக' இருந்த அவரை இதயம் பேசுகிறது சார்பில் பிரத்யேகமாக பேட்டி கண்டோம்.

இதயம் : அடுத்து வர இருக்கும், பொதுத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு, ஒருவித முக்கியத்துவம் இருக்கும் போல பேசப்படுகிறதே?

டாக்டர். ராமதாஸ்: உண்மையில்தான். பாட்டாளி மக்கள் கட்சியின்

துணையோ, ஆதரவோ இல்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சியைப் பிடிக்க முடியாது. தி.மு.க. வாகட்டும், அ.தி.மு.க. வாகட்டும் இரண்டில் எதற்கு வெற்றி வாய்ப்பு அமைந்தாலும், இக்கட்சிகள் எங்களின் ஆதரவில்லாமல் ஆட்சி ஏற முடியாது இப்போதே தமிழ்நாட்டில் நாங்கள் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறோம். தேர்தலின் போது இரண்டாவது பெரிய கட்சியாகி விடுவோம்.

இதயம்: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அ.தி.மு.க.விற்கு ஆதரவு தரும் சூழ்நிலை கூட உருவாகலாம் இல்லையா?

ராமதாஸ்: இல்லை. இப்போதுள்ள படியே தி.மு.க. கூட்டணியிலேயே தொடர்வோம். அ.தி.மு.க. வுடன் கூட்டணி இல்லை.

இதயம்: அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்வதற்காக பூர்வாங்கப் பேச்சுக்கள் தொடங்கி விட்டதாகவும், உங்கள் கட்சிக்கு 35 இடங்களை ஒதுக்கித்தர ஜெயலலிதா சம்மதித்து விட்டார் என்றும் கூறப்படுகிறதே?

ராமதாஸ்: அவை பொய்யான, கற்பனையான தகவல். அப்படி எதுவும் பேசப்படவில்லை.

இதயம்: தி.மு.க. கூட்டணியிலேயே பா.ம.க. நீடித்தாலும், தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் ஏதும் வராதா?

ராமதாஸ்: தொகுதிப் பங்கீடு பற்றி இப்போது பேசுவதற்கு இல்லை. அவையெல்லாம் தேர்தலின்போது கவனிக்கப்பட வேண்டியவை.

இதயம்: தேர்தலுக்குப் பிறகு கூட்டணி அரசு தான் ஏற்படும் என்ற நிலை உருவானால், உங்களின் முடிவு என்னவாக இருக்கும்?

ராமதாஸ்: தமிழ்நாட்டிற்கு கூட்டணி ஆட்சி ஒத்துவராது என்பதுதான் எங்களின் நிலை.

இதயம்: அப்படியென்றால், ஆட்சிப் பொறுப்பேற்கும் கட்சிக்கு எப்படிப்பட்ட ஆதரவை அல்லது எதிர்ப்பைத் தெரிவிப்பீர்கள்?

கேள்வி நேரம்

ராமதாஸ்: முன்னே சொன்னபடி, எங்கள் ஆதரவில்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது. கூட்டணி அரசில் பங்கேற்றால் தான் ஆதரவு தர வேண்டும் என்றெல்லாம் கட்டாயம் இல்லை.

இதயம் : தேர்தலின் போதும் தி.மு.க.வுடன்தான் கூட்டணி தொடரும் என்று சொன்னீர்கள். ஆனால், பா.ம.க.விற்கும், தி.மு.க.விற்கும் இடையிலான உறவில் ஒரு விரிசல் இருப்பது போல தெரிகிறதே?

ராமதாஸ்: எனக்கும் அது ஏனென்று புரியவில்லை. எங்களைப் பொறுத்தவரை மிகத் தெளிவாக இருக்கிறோம். அதனால் தி.மு.க. தரப்பில்தான் அதறிகுப் பதில் சொல்ல வேண்டும்.

இதயம் : அதே போல் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி கூட உங்களை பகிரங்கமாகத் திட்டி வருகிறாரே?

ராமதாஸ்: நோ கமெண்ட்ஸ்.

இதயம்: இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எல்.டி.டி.ஈ.யினரை பகிரங்கமாக ஆதரிக்கிறீர்கள். இது எந்த அளவிற்கு சரி?

ராமதாஸ்: இந்த விஷயத்தில் எல்.டிடிஈ.யினரை நாங்கள் நேரடியாக ஆதரிப்பதாக மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது. அடிப்படையில், அங்கு பாதிக்கப்படும் தமிழர்களுக்கு ஆதரவான போக்காகத்தான் பார்க்க வேண்டும். தனி ஈழம் உருவானால், அடுத்ததாகவே, தமிழ்நாடும் சேர்ந்து அகண்ட தமிழகம் உருவாகும் என்பதெல்லாம் பொய்யான கருத்து,

இந்திய ராணுவ பலத்தை நினைத்துப் பார்த்தால் இப்படியெல்லாம் பயப்பட வேண்டிய தேவையில்லை. சிங்கள கைக்கூலிகள் கிளப்பிவிட்ட விஷமப் பிரசாரம் இது. அந்த வகையில்தான் அங்கு போராடும் தமிழர்களுக்காக ஆதரவு தருகிறோம். அந்த தமிழர்களுக்கு எல்.டிடிஈ. தலைமை தாங்குவதால், தமிழர்களுக்கே ஆதரவு தரக்கூடாது என்பது எப்படி சரியாகும்?

இதயம்: இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியைக் கொன்ற இயக்கம் அது. அந்தவகையில் எல்.டி.டி.ஈ. ஆதரவு என்பது எப்படி சரியாகும்?

ராமதாஸ்: இப்போதும் சொல்கிறேன். ராஜீவ் காந்தி கொலை நடந்திருக்கக் கூடாது. ராஜீவ் கொலையுண்டவுடன், அந்தச் சம்பவத்தை கண்டித்து முதலில் அறிக்கை விட்டவன் நான். ஆனால், ராஜீவ் கொலை விஷயம் தொடர்பாக பல நிகழ்வுகள், பல சந்தேகங்கள் இப்போதும் உள்ளது. அப்படி இருக்கையில், அதைக் காரணம் காட்டி, எல்.டி.டி.ஈ யினர் தலைமையில், தமிழர்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தை அங்கிகரிக்காமல் இருக்க வேண்டிய தில்லை.

இதயம்: இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இவ்வளவு வேகமாகச் செயல்படும், நீங்கள் இங்குள்ள தமிழர்கள் பிரச்சனைகள் பற்றி கண்டு கொள்வதாகவே இல்லையே, ஏன்?

ராமதாஸ்: என்ன பிரச்சனை?

இதயம்: இங்குள்ள தமிழர்களின் குறிப்பாக சிறு நகரங்கள், கிராமங்களில் வாழும் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் உயராமல் இருப்பதே ஒரு முக்கிய பிரச்சனைதானே? அதற்கு என்ன தீர்வு காணப் போகிறீர்கள்?

ராமதாஸ்: இப்போதைய நிலையில் எதிர்கட்சியாக இருக்கிறோம். அந்த அளவிற்கு முடிந்தவரை செய்து கொண்டுதான் இருக்கிறோம். நீங்கள் சொன்னது போன்ற பல பிரச்சனைகளில், பல கட்டங்களில் அதிக போராட்டங்கள் நடத்திய ஒரே கட்சி நாங்கள் தான்.

இதயம்: ஆனால் மத்திய அரசில் உங்கள் கட்சி இடம் பெற்றுள்ளது. அதிகபட்சமாக செய்ய முடியுமே?

ராமதாஸ் : அதிகபட்சமாகக் கூட முடிந்தவரை தான் செய்யமுடியும். ஏனென்றால், இது கூட்டணி ஆட்சி. இதில் Disadvantages - ம் உண்டு. எல்லாவற்றையும் நேரடியாகப் பேசி விட முடியாது. கூட்டணி தர்மம் என்று ஒன்று உள்ளது.

கேள்வி நேரம்

இதயம்: பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக என்று உருவான உங்கள் கட்சி பி.ஜே.பி தலைமையிலான பல கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அரசில் பங்கேற்றதே முதல் Disadvantage தானே....

ராமதாஸ்: அந்த அளவிற்கு எதிர்மறையாக பார்க்க வேண்டியதில்லை. இன்று, தலித் மக்களுக்கு ஆதரவான எத்தனையோ சட்டங்கள் உள்ளன. எல்லாம், பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணி அரசால்தான். இன்றைக்கு, அக்கட்சியின் தமிழ்நாட்டு தலைவரே கூட ஒரு பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்தான்.

ஏதோ உயர்ஜாதி கட்சியுடன் நாங்கள் சமரசம் ஆகிவிட்டோம் என்பதெல்லாம் வெற்று பிரசாரம்.

இதயம்: தனிப்பட்ட முறையில் நீங்கள் அரசியல் பொறுப்பில் உட்கார்வதில்லை என்று தீர்மானமாக இருக்கிறீர்கள். அதே நேரம், உங்கள் தலைமையிலான கட்சி, ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கிறது. இந்த முரண்பாடே ஒரு வகை சமரசம் தானே?

ராமதாஸ்: என்னைப் பொறுத்த வரை, நேரடி அரசியலில் பங்கேற்பதில்லை என்றே இருக்கிறேன். அதே நேரம் நான் சமுதாய இயக்கம் நடத்த வில்லை. அரசியல் கட்சி தான் நடத்துகிறேன்.

அரசியல் என்று வந்த பிறகு தேர்தல் வந்துவிடும். தேர்தல் என்றால், வெற்றி, தோல்வி உண்டு. வெற்றி தோல்விகளை ஓட்டுக்கள் தான் நிர்ணயிக்க முடியும். ஓட்டுக்களுக்காக மற்ற கட்சிகளைப் போலத்தான் செயல்பட வேண்டியுள்ளது. அதே நேரம், அடிப்படை யில் நாங்கள் மற்ற கட்சிகளிடம் இருந்து வித்தியாசப்பட்டே இருக்கிறோம்.

இதயம்: வித்தியாசமான கட்சி என்கிறீர்கள், ஆனால் பா.ம.க. இன்னமும் வன்னியர்களின் கட்சி என்பது போலத்தானே அவர்களின் ஓட்டு வங்கியை சார்ந்து இருக்கிறது?

ராமதாஸ்: உங்களை மாதிரி பத்திரிகையாளர்கள் இப்படி ஒரு விஷயத்தை திரும்பத் திரும்ப சொல்லியே தவறான எண்ணத்தை விதைத்து விட்டீர்கள்.

பா.ம.க. குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறீர்கள். இப்படித் தான் ஒரு சில பத்திரிகைகளும் எங்களைத் தனிமைப் படுத்தியே எழுதிவருகின்றன.

ஆனால், நாங்கள் அப்படி இல்லை என்பதுதான் உண்மை. வன்னியர் அல்லாத பகுதிகளிலும் எங்கள் கட்சி நன்றாகவே வேரூன்றி உள்ளது. ஒருமுறை என்னுடன் வந்து பாருங்கள். அப்போது தெரியும். பா.ம.க. ஜாதி கட்சியா? பொதுவான மக்கள் கட்சியா? என்று

ஈ.வி.கே.எஸ் இளங்கோவன்

'இந்திரா காந்தியும், சஞ்சய் காந்தியும் தான் எனக்குப் பெரிய இன்ஸ்பிரேஷன்ஸ்' என்றபடியே பேச ஆரம்பித்ததார் (பெரியாரின் பேரரான) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் புதுத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்.

"எங்கப்பா ஈ.வி.கே. சம்பத் மாதிரியே நானும் காங்கிரஸ்தான். இந்த விஷயம் தான் பல பேர்க்குக் குழப்பமா இருக்கு. அதெப்படி பெரியார் குடும்பத்துல பிறந்துட்டு காங்கிரஸ் கட்சில இருக்காங்கன்னு என்கிட்டவே பல பேர் கேட்டிருக்காங்க. இதுபத்தி முதல்ல தெளிவுபடுத்த வேண்டியிருக்கு'' என்றபடியே விளக்கமாய் பேச ஆரம்பித்த இளங்கோவன், "1924, 25-ம் வருஷங்கள்ல, மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைவரா இருந்தப்ப எங்க தாத்தா பெரியப்பா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரா இருந்தார். அப்புறம் தான் திராவிடர் கழகம் ஆரம்பிச்சது. அதேமாதிரி, அப்பா சம்பத்,இந்திரா காந்தி இந்திய காங்கிரஸ் தலைவரா இருந்தப்போ இங்க தமிழ்நாடு கமிட்டிக்குத்

துணைத் தலைவரா இருந்தார். அதுபோல நானும் ஆரம்பத்துலேர்ந்து காங்கிரஸ்லதான் இருக்கேன்....'' என்று ஒரு ஃப்ளாஷ் பேக் விளக்கம் கொடுத்தார்.

இளங்கோவன் கல்லூரி நாட்களின் போது, பெரும்பாலும் கிளாஸுக்கு 'கட்' அடித்துவிடுவாராம். அப்போது ரொம்பவும் குறும்புக்காரராம். அவரை ஒழுங்காய் படிக்கச் சொல்லித் தூண்டியதே பெரியார்தானாம்.

“உங்கப்பாதான் ஒழுங்கா படிக்காம 'இண்டர்மீடியட்' டோட நின்னுட்டான். நீயாவது காலேஜ்ல படிச்சு பட்டம் வாங்கு'ன்னு பெரியார் அடிக்கடி சொல்லுவாரு.....'' என்று சொன்ன இளங்கோவனிடம், மற்ற தமிழக காங்கிரஸ் தலைவர்கள் பற்றி கேட்டோம்.

“மூப்பனார் மிக உயர்ந்த மனிதர். அந்த அளவுக்கு மிகவும் பாசத்தோடு பழகுவார். முதலில், எனக்கு இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவி கிடைத்ததே அவரது காலத்தில்தான். குழந்தைப் பருவத்தில் இருந்தே அவரோடு பழகி வருகிறேன். குமரி அனந்தன் மாநிலத் தலைவராக இருந்தபோது, ஈரோடுமாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்தேன். அப்போது அவரோடு பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பிறகு, தங்கபாலு காலத்தில்தான் தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றேன்.

அந்தப் பதவிளை அவர் பிறகு பறித்தது வேறு விஷயம். எம்.பி.சுப்பிரமணியம் காலத்தில் ஈரோடு நகர காங்கிரஸ் தலைவரானேன். எனக்கு முந்தி திண்டிவனம் ராமமூர்த்தி தலைவராக இருந்தபோது தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச் செயலாளராகவும் இருந்தேன். தவிர, INTUC - ன் போக்குவரத்து தொழிற்சங்கப் பிரிவுத் தலைவராகவும் இருந்திருக்கிறேன்....'' என்று பட்டியல் போடும் இளங்கோவ னுக்கு இரண்டு மகன்கள். இரண்டாவது பையனுக்கு சஞ்சய் காந்தி நினைவாகவும் , அப்பா நினைவாகவும் சேர்த்து 'சஞ்சய்சம்பத்' என்று பெயர்

வைத்திருக்கிறார்.

இளங்கோவனைப் பற்றி இன்னொரு சுவாரஸ்யமான தகவல் - இவரும் ஜெயலலிதாவும் சர்ச் பார்க் கான்வென்டில் ஒரே காலகட்டத்தில் படித்தவர்கள். ஜெயலலிதாவைவிட இவர் ஒரு வருடம் சீனியர்.

“இது ஜெயலலிதாவுக்கு ஞாபகம் இருக்குமோ இல்லையோ தெரியாது....'' என்கிறார் இளங்கோவன்.

‘மற்றபடி ஜெயலலிதா சொல்லியோ, மூப்பனார் சொல்லியோ தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவி எனக்கு வரவில்லை என்றும், சோனியாகாந்தியின் நேரடி நியமனப்படிதான் தலைவராகியுள்ளேன்’ என்றும் கூறும் இளங்கோவன்,

“திண்டிவனம் ராமமூர்த்தி, குமரி அனந்தன் ஆகியோர் கூட நியமனத் தலைவர்களாய் இருந்தார்கள். அப்படி இருக்கையில், திண்டிவனம் ராமமூர்த்தி எழுப்பியிருக்கும் சர்ச்சை வேலை இல்லாத ஆட்கள் செய்கிற காரியம்'' என்று பொரிந்து தள்ளினார்.

அவரேதொடர்ந்து, “நான் திவாரி காங்கிரஸ் போனதாகக்கூட கதை அளந்து விட்டிருக்கிறார்கள். நான் சிவாஜி கணேசனோடு ஒரு வருடம் த.மு.மு.விற்குப் போனது மட்டும்தான் உண்மை. திவாரி காங்கிரஸுக்குப் போயிருந்தால் 96 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக கிருஷ்ணகிரி தொகுதியில் என்னால் எப்படிப் போட்டியிட்டிருக்க முடியும்? அதுவும், திவாரி காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரை எதிர்த்தே. அதேபோல், ஜானகி அம்மா நம்பிக்கை வாக்கெடுப்பின் போது கொறடா உத்தரவை மீறி ஓட்டுப் போட்டதாகவும் சொல்கிறார்கள். அதுவும் தவறு. அதை யாராவது நிரூபித்தால் காங்கிரஸ் கட்சியை விட்டே போய் விடுகிறேன்'' என்றார்

சவாலாக.

'காங்கிரசை எப்படி பலப்படுத்தப் போகிறீர்கள்? ' என்றதற்கு,"முதலில் கட்சி அலுவலகம் இயங்க வாடகைக்கு இடம் பிடிக்க வேண்டும். முன்பு இருந்த தலைவருக்குக் கட்டடத்தை முறைப்படி கொடுக்க வேண்டும் என்ற நாகரீகம் கூட இல்லை. அலுவலகம் முறையாக இயங்க ஆரம்பித்த பிறகு, கிராமம் கிராமமாகப் போய் கட்சி வேலை பார்க்க வேண்டியதுதான்'' என்று படுஉற்சாகமாய் பதில் அளித்தார்.

"அ.தி.மு.க.வில் இருக்கும் உங்கள் அம்மா சுலோசனா சம்பத்தைப் பார்த்தர்களா?'' என்றால், "அடிக்கடி எல்லாம் அம்மாவைப் பார்க்க முடிவதில்லை. எங்காவது குடும்ப நிகழ்ச்சிகள்லதான் பார்த்துப்போம். அப்பக்கூட குடும்ப விஷயம்தான் பேசிப்போமே தவிர, அரசியல் மருந்துக்குக்கூட பேசறதில்லை'' என்று சிரித்துக் கொண்டே கூறுகிறார் இளங்கோவன்.

ஆர்.எம்.வீரப்பன்

கேள்வி: எம்.ஜி,ஆர். காலத்திலிருந்து அ.தி.மு.க. வின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர் நீங்கள். அக் கட்சியின் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஆர்.எம்.வீ: முக்கியமான தலைவராக இருந்தேனா இல்லையா என்பதைப் பொதுமக்கள் தான் கூற வேண்டும். தற்போது அ.தி.மு.க. வின் உருவம் சிதைந்து போயிருக்கிறது. தலைமையை மாற்ற முடியாத நெருக்கடியில் அக்கட்சி உள்ளது. எம்.ஜி.ஆர். தொடங்கி வைத்த அதன் இன்றைய நிலை துரதிஷ்டமானது. அதன் தலைவிதியைக் காலம் தான் முடிவு செய்ய வேண்டும்.

கே: அ.தி.மு.க.வின் இந்த வீழ்ச்சிக்கு யார் காரணம்?

ஆர்: நிச்சயமாக ஜெயலலிதாதான். தனிநபரால் ஒரு கட்சியே சீரழிந்து விட்டது. ஜெயலலிதாவின் ஐந்தாண்டு கால அராஜக ஆட்சி கட்சிக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

கே: ஜெயலலிதாவைத் தீவிரமாய் ஆரம்பத்தில் எதிர்த்த நீங்கள் மீண்டும் எப்படி அவருடன் திரும்பவும் சேர்ந்தீர்கள்?

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

ஆர்: அ.தி.மு.க.வின் ஆரம்பகாலத்தில் இருந்து அதன் வளர்ச்சியில் பங்கு பெற்றவன் என்ற உரிமை எனக்கு உண்டு. அக்கட்சியைப் பாதுகாத்து வளர்க்க கடமை எனக்கு அப்போது அதிகமாக இருந்தது. அந்த நேரம் ஜெயலலிதா எல்லோரும் நம்புகிற தலைவியாகவும் இருந்தார். எனவே அதை நான் 'பொதுநியதி'யாக ஏற்றுக் கொண்டேன். அதோடு 'துரோகி' என்கிற அவப்பட்டம் எனக்கு வந்து விடக் கூடாது என்பதிலும் கவன மாக இருந்தேன். ஜெயலலிதாவால் அழைக்கப்பட்டு. மரியாதையுடன் இணைந்தேன். காலத்தின் கட்டளை என்று இதைத்தான் அன்று சொன்னேன்.

கே: பிறகு எப்படி ஜெயலலிதாவுடன் உங்களுக்குப் பிணக்கு ஏற்பட்டது?

ஆர்: கட்சிக்குள் ஜெயலலிதா என்னைச் சேர்த்துக் கொண்டதே ஒரு தந்திரவேலை. அது பின்னாளில் தான் எனக்குப் புரிந்தது. என்னைப் போன்ற எம்.ஜி.ஆர். விசுவாசிகளுக்கு மக்கள் செல்வாக்கு வந்து விடுமோ என்று ஜெயலலிதா பயந்தார். அதனால் தந்திர நோக்கில் என்னைக் கட்சிக்குள் இழுத்துக் கொண்டார். அதே நேரம் தீண்டத்தகாதோர் மாதிரி ஒதுக்கி வைத்திருந்தார். என்னைப் பொறுத்த வரை எடுத்தேன், கவிழ்த்தேன் என்று இருக்காமல் சகிப்புத் தன்மையுடன் இருந்தேன். காலம் வரும் வரை காத்திருந்தேன்.

கே: அழகு திருநாவுக்கரசு, எஸ்.ஆர்.ராதா, ஜி.விஸ்வநாதன் போன்றவர்களும் எம்.ஜி.ஆர். பெயரில் அமைப்பு வைத்துள்ளனர். அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்தால் நல்லது தானே?

ஆர்: எனக்கும், அவர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. என்னை அவர்களுடன் சேர்த்து எடை போட வேண்டாம். எனக்கும், அவர்களுக்கும் இடையே ஒத்துவருகிறதா என்று முதலில் பார்க்க வேண்டும். எல்லோருமே தங்களைப் பெரிய தலைவர்களாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் பின்னால் என்ன சக்தி இருக்கி றது என்று பார்ப்பதில்லை. தனித்தனித் தலைவர்களாக இருப்பவர்கள் ஒன்று சேர்வது விடை காண முடியாத கேள்வி.

கே: தேர்தலுக்கு முன் திருநாவுரசு கூட உங்களோடு ரொம்ப நெருங்கி இருந்தாரே?

கேள்வி நேரம்

ஆர்: அ.தி.மு.க.வில் சாதாரண உறுப்பினராக இருந்த திருநாவுக்கரசு அந்தஸ்துள்ள தலைவராக உதவியிருக்கிறேன். செல்வாக்குள்ள மனிதராக அவர் வளர்ந்த பிறகு அதற்குக் காரணமான என்மீது குறி வைத்தார். ஏகப்பட்ட இடையூறுகள் செய்தார். ஜெயலலிதா அ.தி.மு.க.வை உடைத்த போது அதற்குப் பக்க பலமாக இருந்தார். ஜெயலலிதா காலில் விழுந்து விட்டார். எப்போதுமே, பணம், பதவி மீது தான் திருநாவுக்கரசுக்குக் குறி. அதற்காக அவர் எதுவும் செய்வார்.தமிழ்நாட்டின் முதல்வராக வர வேண்டும் என்ற ஆசை கூட அவருக்குண்டு. தேர்தலுக்கு முன் நானும், அவரும் பழகியதெல்லாம் ஒருவித நெருக்கடியால் தான்.

கே: சசிகலா கைது பற்றிச் சொல்லுங்கள்?

ஆர்: எதிர்ப்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஐந்தாண்டு கால ஆணவத் தின், அராஜகத்தின், ஊழலின், அக்கிரமத்தின் விளைவு குற்றவாளிகள் தண்டிக்கப்படத்தான் வேண்டும்.

கே: ஜெயலலிதாவிற்கும் பங்கு இருப்பதாக நினைக்கிறீர்களா?

ஆர்: ஜெயலலிதாவிற்குத் தெரியாமல் எந்த குற்றமும் நடக்கவில்லை, அவருக்கும் இதிலெல்லாம் பங்குண்டு. அவரும் தான் குற்றவாளி.

கே: ஊழல்களுக்கு ஜெயலலிதா- சசிகலா மட்டுமா பொறுப்பு? அதிகாரிகள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் நியாயவான் களா?

ஆர்: ஆட்சியின் போது தொடர்பிலிருந்த எல்லோருக்கும் பொறுப்பு உண்டு.

கே: ஜெயலலிதா, நரசிம்மராவ் ஆகிய இரண்டு பேரின் கூட்டணி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஆர்: ஒரே மாதிரி ஊழல் என்பதால் தான் தேர்தலில் ஒன்றாகக் கூட்டு வைத்தார்கள். யார் தாழ்வு, யார் உயர்வு என்று சொல்ல முடியாதபடி இருவரும் ஊழல் செய்துள்ளனர். நரசிம்மராவுக்கும் தண்டனை

கொடுக்க வேண்டும்.

கே: நடராஜனுடன் அ.தி.மு.க வினர் எந்தவித் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஜெயலலிதா திரும்பவும் அறிக்கை விட்டிருக்கிறாரே?

ஆர். நடராஜனுக்கு பெயர் வந்து அவர் தலைவராகி விடுவாரோ என்ற பயம் ஜெயலலிதாவுக்கு எப்போதும் உண்டு. அதன் விளைவுதான் இந்த அறிக்கை நாடகம்.

கே: உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

ஆர்: எம்.ஜி.ஆர். மன்றம் 40 வருடங்களுக்கு முன்னால் தோன்றிய அமைப்பு. தி.மு.க.வின் அப்போதைய வெற்றிக்கு அது காரணமாக இருந்தது. பின்னர் அ.தி.மு.க. வின் உட்பிரிவாகப் பணியாற்றிய எம்.ஜி.ஆர். மன்றத்தைப் பேரியக்கமாக அரசியல் ரீதியாக வளர்த்து எம்.ஜி.ஆர். பெயரைக் காப்பாற்றுவோம். கோர்ட்டில் வழக்கு இருப்பதால் அதன் முடிவு தெரியும் வரை எம்.ஜி.ஆர். கழகம் என்ற பெயரில் செயல்படுவோம்.

கே: ரஜினிகாந்த் விஷயத்தில் உங்களுக்கு 'நினைச்சது ஒண்ணு, நடந்தது ஒண்ணு' என்ற ஆதங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, உண்மையா?

ஆர்: இல்லை. நானும், ரஜினியும் எதை நினைத்தோமோ அது தான் நடந்துள்ளது. ஜெயலலிதா தோற்பார் என்று நினைத்தோம். அப்படியே நடந்தது. ஆதங்கமெல்லாம் மற்றவர்களுக்குத் தான்.

குமரி அனந்தன்

கேள்வி : ஸ்தாபன காங்கிரஸ், பிறகு இந்திரா காங்கிரஸ் இப்போது ராவ் காங்கிரஸ் என்று ரொம்பவும் சுருங்கி விட்டீர்களே?

பதில் : தென்னந்தோப்பு என்றும் சொல்லலாம். இன்னொருவருடைய தோப்பு என்றும் சொல்லலாம். தோப்பு தோப்புதான். இப்போதும் காங்கிரஸ் பேரியக்கம் தான்.

கே : ராஜேஷ் பைலட், கரணாகரன் போன்ற காங்கிரஸ் தலைவர்களே நரசிம்மராவிற்கு எதிராகப் பேசி வருகிறார்களே?

ப : கருணாகரனும், ராஜேஷ் பைலட்டும் பத்திரிகைகள் மூலமாக இப்படிப் பேசுவது சரியல்ல. நேரு காலத்தில் இப்படி இல்லை என்று அங்கலாய்ப்பவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நேரு காலத்தில் இப்படி யாரும் தலைமையை எதிர்த்துச் செயல்பட்டதில்லை.

கே : ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு தரும் காங்கிரஸின் போக்கு சந்தர்ப்பவாதம் தானே?

ப : லட்சியத்திற்காகக் கூட்டணி வைத்த காலம் உண்டு. இப்போது வெற்றிக்கான காலமாகி விட்டது. திமு.க. அரசைக் கலைக்க அப்போது அடுக்கடுக்கான சான்றுகளை வைத்தவர் ப. சிதம்பரம். இப்போது தி.மு.க. வுடன் கூட்டு. ராஜீவ், ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் போது

உடனிருந்தவர் மூப்பனார். அந்த ஒப்பந்தத்தை எதிர்த்த தி.மு.க.வுடன் அவர் கூட்டு வைத்துள்ளார். நாங்களோ சட்ட சபைக்கு உள்ளேயும் வெளியேயும் அ.தி.முக. செய்த தவறுகளை சுட்டிக்காட்டிக் கொண்டே அக்கட்சியுடன் உறவு வைத்துக் கொண்டோம். இதே அணுகுமுறையைத் தான் ஐக்கிய முன்னணி அரசை ஆதரிப்பதிலும் கடைப்பிடிக்கிறோம். சந்தர்ப்பவாதமெல்லாம் கிடையாது.

கே : தமிழ்நாடு காங்கிரஸ் பலவீனப் பட்டிருப்பதாகவும், தொண்டர்கள் எல்லாம் மூப்பனார் பக்கம் போய்விட்டதாகவும் கூறப்படுகிறதே?

ப : உண்மை அதுவல்ல. பிரமுகர்கள், தலைவர்கள் என்கிற வகையில் 60 சதம் பேர் அங்குள்ளனர். அவர்களை உருவாக்கிய தொண்டர்களில் 75 சதவீதம் பேர் எங்களிடம் தான் உள்ளனர். அங்கிருக்கும் 25 சதவீதத் தொண்டர்கள் கூட தேர்தலில் விரும்பாத கூட்டு அமைந்த கோபத்தில் போனவர்கள் தான்.

கே : பிறகெப்படி மூப்பனார் காங்சிரஸ் வெற்றி பெற முடிந்தது?

ப : இது பாத்திரம் அறிந்து போட்ட பிச்சை அல்ல. ஆத்திரம் வந்து போட்ட பிச்சை. ஆளுங்கட்சியின் நடைமுறை பிடிக்காமல் அதற்கு எதிராக விழுந்த வாக்குகள் இவை. மூப்பனார் காங்கிரஸைப் பொறுத்தவரை தாங்கள் தான் ஒரிஜினல் காங்கிரஸார் என்பது மாதிரி சதி செய்து ‘மாயமான்’ தோற்றம் தந்தார்கள் அதை மறுத்து உண்மையை வெளியே சொல்ல எங்களுக்கு அவகாசம் இல்லை.

கே : மூப்பனாரின் சதி என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

ப : தனிக்கட்சி விஷயமாக மூப்பனார் ஒரு நாள் என்னிடம் ஜாடை மாடையாகப் பேசினார். நான் பிடிகொடுக்கவில்லை. அதிலிருந்து என்னிடம் மறைத்தே செயல்பட்டார். இப்போது நான் கேள்விப்படுவது என்னவென்றால் பல மாதங்களுக்கு முன்பே அவர்கள் தி.மு.க.வுடன் கூட்டு பற்றிப் பேசிவிட்டார்கள் என்று. நரசிம்மராவையும் அவர்கள் ஏமாற்றிவிட்டனர் கடைசிநேரம் வரை மந்திரியாக இருந்து கொண்டே இந்தச்சதிச் செயலைச் செய்துள்ளனர். அருணாசலம், சிதம்பரம். ‘ராஜ்யசபா’ உறுப்பினர் பதவி விஷயத்தில் மூப்பனார் திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கிறார். ‘ராஜ்யசபா உறுப்பினராக இருந்தால் தேர்தல்

நேரத்தில் உதவும்' என்று என்னிடம் கூறினார் மூப்பனார். அதனால் அப்பதவி பீட்டர் அல்ஃபோன்சுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தார். அதனால் தான் என்னையும் அவர் புறக்கணித்தார்.

கே : தமிழ் மாநிலக் காங்கிரஸ், தன்மானம் உடையவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்களே?

ப : அதில் உண்மை கிடையாது. கருணாநிதிக்குப் பல்லக்குத் தூக்குவதால் போன மானம் திரும்ப வராது.

கே : நீங்கள் ஏன் தேர்தலில் தோற்று விட்டீர்கள்?

ப : தலைவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்று 1967ல் தீர்மானம் போட்டவன் நான். இந்தத் தேர்தலில் போட்டியிடாமல் இருந்திருக்கலாம். பிற மாநிலத் தலைவர்களின் வற்புறுத்தலால் போட்டியிட வேண்டிவந்தது. என் அரசியல் வாழ்வில் நடக்கக் கூடாத சம்பவம் இது. தலைமை, கட்டுப்பாடு என்ற வட்டத்தை விட்டு வெளியே வர முடியாத நிலையில் என்னால் அப்போது சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

கே : ஜெயலலிதா ஊழல்களுக்கு எதிரான அரசு நடவடிக்கைகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப : நான் பாதயாத்திரை சென்ற போது சாலைகளை அகலப்படுத்துவதற்காக மண்ணை வெட்டிப் போட்டிருந்தார்கள். மேற்கொண்டு வேலை நடக்கவில்லை. 'நெல் கொண்டு போகும் அளவும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்ற கம்பனின் வரிகள் ஞாபகத்துக்கு வந்தது. பில் கொண்டு போகும் அளவும் நில்லாய் நெடுஞ்சுவரே என்றார் காண்ட்ராக்டர்'' என்றுமாற்றிச் சொன்னேன் உடனே ஜெயலலிதா அனந்தனின் தமிழ் இவரைக் காப்பாற்றாது என்றார். அதை விமர்சனமாக அவர் ஏற்றிருந்தால் வரலாறே மாறிப் போயிருக்கும். அ.தி.மு.க. மீதான என் குற்றச்சாட்டுக்கள் இப்படியே தான் உள்ளன. சட்டம் அதன் கடமையைச் செய்வதில் தவறில்லை.

கே : இந்த விஷயத்தில் தி.மு.க. அரசு பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது என்று அ.தி.மு.க. வினர் கூறுகின்றனரே?

ப : தி.மு.க.வின் அணுகு முறையில் பழிவாங்கும் நடவடிக்கை எதுவும் இல்லை.

கே : நரசிம்மராவ் மீது சி.பி.ஐ. ஊழல் குற்றச்சாட்டு கூறியுள்ளதே?

ப : இதிலும் சட்டம் தன் கடமையை செய்வதையே விரும்புகிறேன். குற்றச்சாட்டு கூறப்படுவதாலேயே நரசிம்மராவ் குற்றம் செய்தவர் ஆகிவிட மாட்டார். அவர் தவறு செய்யவில்லை என்று விரைவிலேயே தெரியவரும்.

கே : அ.தி.மு.க. வினருடன் உங்களின் இப்போதைய உறவு முறை எந்த அளவில் உள்ளது?

ப : தேர்தல் முடிந்த பிறகு அது பற்றி எந்தப் பேச்சும் கிடையாது.

கே : தி.மு.க. ஆட்சி உங்களுக்கு திருப்தி அளிக்கிறதா?

ப : ஒரு காலத்தில் தவறு செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட கட்சி தான் தி.மு.க. கள்ளச்சாராயம் காய்ச்சுவது முதல் தமிழ் மக்களுக்கு உரிய பங்கைக் கேட்காமல் இருப்பது வரை தி.மு.க. தற்போது தவறு செய்கிறது. தேர்தலின் போது, கள்ளச்சாராயம் ஆறாக ஓடுவதாக கருணாநிதி கூறினார். இப்போதும் அதே ஆறு ஓடுகிறது. மதுவிலக்கைக் கொண்டுவருவோம் என்று கூறிவிட்டு மதுக்கடை ஏலம் நடத்துவது கண்டிக்கத்தக்கது. காவிரி நீர் பிரச்சனையில் தமிழக அரசின் பங்கை வாய்திறந்து இதுவரை கருணாநிதி கேட்கவேயில்லை.

கே : பெட்ரோல், டீஸல், கேஸ் விலை உயர்வு குறித்து முதல்வர் கலைஞர் கவலை வெளியிட்டிருக்கிறாரே?

ப : விலை உயர்வு நியாயமில்லை என்று கருணாநிதி கூறுகிறார். அப்படியானால் ஐக்கிய முன்னணியில் கூட்டணிக் கட்சிகளைக் கலந்து ஆலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவா இது? கருணாநிதியின் தி.மு.க.வை கலக்காமல் கவுடா இப்படி அறிவிக்கிறார் என்றால், கூட்டுப் பொறுப்புக்கு பொருள் இல்லையே? மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கருணாநிதியின் வாதம் இதன் மூலம் வலுவிழக்கிறதே.

கேள்வி நேரம்

கே : ரஜினி காந்தைக் காங்கிரஸுக்கு இழுக்க நீங்கள் கூட முயற்சி செய்தீர்கள், ஆனால் ரஜினி தி.மு.க., த.மா.கா. பக்கம் போய்விட்டது உங்களுக்கு ஏற்பட்ட தோல்விதானே?

ப : தோல்வி கிடையாது. ரஜினிகாந்தைச் சந்தித்தேன். 'தனக்கு எதுவும் தேவை இல்லை' என்று அவர் சொன்ன போது மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது போல உணர்ந்தேன். காமராஜ் ஆட்சி மலரும் எனக் கனவு கண்டேன். தலைமைக்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயத்தால் என் கனவு சிதைந்து போனது. ஆனாலும், மீண்டும் கனவு மலர் தோன்றுகிறது. பூக்கும் பூக்கள் எல்லாம் உதிர்ந்து விடுவதில்லை. கனி வரத்தான் போகிறது.

கே : அறக்கட்டளை மூப்பனார் வசம் இருக்கும் போது சத்தியமூர்த்தி பவனை எந்த அடிப்படையில் நீங்கள் உரிமை கொண்டாட முடியும்?

ப : மீனாட்சியம்மன் கோவில் அறங்காவலரால் ஆலயத்தையே சொந்தமாக்கிக் கொள்ள முடியுமா? மாநில அளவில் தொங்கிக் கொண்டிருக்கும் த.மா.கா. இந்திய தேசியக் காங்கிரஸின் சொத்தை எடுத்துக்கொள்வது நியாயமா? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறக்கட்டளை' என்பது தான் பெயரே. அறங்காவலர்களை நியமிக்கும் உரிமை உண்டு. 300 கோடி ரூபாய் சொத்து மதிப்புடைய அறக்கட்டளையை நீதி மன்றம் மூலம் மீட்டெடுப்போம். இந்த விஷயத்தில் கருணாநிதி அரசு எங்களுக்கு நீதியை வழங்கவில்லை.

கே : எப்படிச் சொல்கிறீர்கள்?

ப : மார்ச் 29ம் தேதி ராவ் கட்அவுட் எரிப்பு, துப்பாக்கியால் சுடுதல் போன்ற வன்முறைகள் நடந்தன. அப்படி எந்தச் சம்பவமும் நடக்க வில்லை என்று போலீஸ் கூறுகிறது. பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால் சத்திய மூர்த்தி பவனை யாரும் ஆக்கிரமிக்க வில்லை என்று அரசு கூறுகிறது. இதெல்லாம் ஒரு தலைப்பட்ச மான நியாயமற்ற அணுகுமுறை. இது கருணாநிதியால் ஏற்பட்டது.

பழ . நெடுமாறன்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மாநாடு நடத்த முற்பட்டதாகக் கைதாகி பிறகு விடுதலை செய்யப்பட்ட, தமிழீழ ஆதரவு மாநாட்டுக் குழுத் தலைவர் பழ. நெடுமாறனை சென்னையில் உள்ள அவரது வீட்டில் சந்தித்தோம்.

இதயம்: இந்தியாவில் எல்.டி.டி.ஈ. இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. அப்படி இருக்கும் போது, நீங்கள் அந்த அமைப்புக்கு ஆதரவாகச் செயல்படுவது எப்படிச் சரியாகும்?

பழ நெடுமாறன்:இப்போது கூட தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்திருக்கிறார்கள். ஆனால், தடை நீட்டிப்பிற்கான காரணத்தை மத்திய அரசு கூறவில்லை. முன்பு தடை செய்த போது, இரண்டு காரணம் கூறப்பட்டது.

ஒன்று - தமிழ்நாட்டையும் சேர்த்து 'அகண்ட தமிழகத்திற்காக' புலிகள் போராடுகிறார்கள். இரண்டு - தமிழர் மீட்சிப்படை என்ற பெயரில், இந்தியாவில் அவர்கள் கலகம் செய்கிறார்கள். இந்த இரண்டு காரணங்களுமே பொய்யானவை என நீதிமன்றத்திலேயே நிரூபிக்கப் பட்டு விட்டது.திரிகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களைக் கொண்ட தனித்தமிழீழத்துக்குத்தான் புலிகள் போராட்டம் நடத்துகிறார்கள்.

கேள்வி நேரம்

அவர்கள் இந்தியாவின் ஒரு சிறு பகுதியைப் பற்றிக்கூட ஒருபோதும் பேசியதில்லை, அதே போல், மீட்சிப் படை தொடர்பான ஒன்பது வழக்குகளிலும் குற்றம்சாட்டப்பட்ட அனைவருமே நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். புலிகளுக்கு எதிராகவும் அவர்களது ஆதரவாளர்களுக்கு எதிராகவும் தொடரப்பட்ட பதினைந்து வழக்குகளிலுமே ஒருவர் கூட குற்றவாளி என நிரூபிக்கப்பட வில்லை.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கிட்டு கப்பல் சம்பவம் தொடர்பாக தடாவில் கைதாகி அடுத்த ஐந்தாவது நாளே விடுதலை ஆனேன். இது நடந்தது 1996 ஜனவரி 22 ம் தேதியில். இருபதாம் தேதியில் சென்னை சிறையில்தான் இருக்கிறேன்.

விடுதலைக்குப் பிறகு மதுரை சென்றால் இருபதாம் தேதியன்று குண்டு வைப்புச் சதி தொடர்பாக, ரகசியக் கூட்டம் நடத்தியதாக மீண்டும் கைது செய்கிறார்கள்.அப்போது நீதிபதி சித்திக்தான் சொன்னார். "அப்படியென்றால் அவர் ஜெயிலில்தான் ரகசியக் கூட்டம் நடத்தியிருக்க வேண்டும்'' என்றுபட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடியபடி, 'பொய்யச் சொன்னாலும் பொருந்தச் சொல்லுங்கடா போக்கத்த பசங்களா' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

இதயம்: நீங்கள் சொல்வதுபோல தடைக்கான காரணங்களை மீறிப் பார்த்தால் கூட, ராஜீவ் கொலையில் சம்பந்தப் பட்ட இயக்கம் என்ற வகையில் அவர்களுக்கு ஆதரவு தருவது தவறுதானே....?

நெடுமாறன் : ராஜீவ் கொலை மிகவும் வருத்தத்துக்குரிய ஒன்றுதான் ஆனால் அக்கொலையின் புலன் விசாரணை முதல் இருபத்தியாறு பேருக்குத் தூக்குத்தண்டனை அளித்தது வரை எல்லாமே திட்டமிட்ட நாடகம்தான்.இக்கொலையில் சம்பந்தப்பட்ட பல முக்கியஸ்தர்கள் மறைக்கப் பட்டிருக்கிறார்க்ள். அதோடு வழக்கு விசாரணை ரகசியமாக நடத்தப்பட்டுள்ளது. நிருபர்கள் அனுமதிக்கப் படவில்லை. இதில் எதற்கு மூடு மந்திரம்? அது மட்டுமில்லை, தீர்ப்புக்குப் பிறகும் 19, பேர்களை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. அப்படியென்றால் கீழ்நீதிமன்றம் மீதும், விசாரணை செய்தவர்கள் மீதும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? எனவேதான் சொல்கிறேன் - விசாரணையே திட்டமிட்ட இருட்டடிப்பு என்று.

இதயம்: இருட்டடிப்பு என்று எதைச் சொல்கிறீர்கள்?

நெடுமாறன்: ஜெயின் கமிஷன் அறிக்கையையே எடுத்துக் கொள்ளுங்கள். சுப்பிரமணியசுவாமி, சந்திரசாமி எல்லாம் சரியாக விசாரிக்கப்படவில்லை என ஜெயின் கூறியிருக்கிறார். சி.பி.ஐ. அதிகாரியாக இருந்த நெல்லை ஜெபமணியின் மகன்கூட, தனக்குக் கிடைத்த தடயங்கள் அடிப்படையில், விசாரிக்க அனுமதி கிடைக்கவில்லை என்று கூறி பதவியையே ராஜினாமா செய்திருக்கிறார்.அது மட்டுமில்லை, அப்போது உள்துறை அமைச்சராக இருந்த சவான் கூட,'சர்வதேச சதி' நடப்பதாக பார்லிமென்டிலேயே கூறினார்.

யாசர் அராஃபத் கூடத்தான் சர்வதேச சதி இருப்பதாகக் கூறி ராஜீவை எச்சரிக்கை செய்தார். அவரை சி.பி.ஐ. கார்த்திகேயன் போய் விசாரித்து, என்ன, ஏது என்றாவது கேட்டாரா? இதையெல்லாம் பார்க்கிறபோதுதான் 'இருட்டடிப்பு' நடந்ததாகத் தோன்றுகிறது.

இதயம்: 'இருட்டடிப்பு'எது என்று குறிப்பிட்டுச் சொல்லுங்களேன்?

நெடுமாறன்: நேர்மையாக விசாரணை செய்யுங்கள். தானாகத் தெரிந்துவிட்டுப் போகிறது.

இதயம் : புலிகளுக்கு எதிரான அதிருப்தி தமிழ்நாட்டு மக்களிடம் இருக்கிறதே... இந்த உணர்வு எதைக் காட்டுகிறது?

நெடுமாறன்: மக்கள் உணர்வு, புலிகளுக்கு ஆதரவாகத்தான் இருப்பதாகவே கருதுகிறேன். ஒரு சில அடக்குமுறைச் சட்டம் காரணமாக மக்கள் தங்கள் உணர்வுகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியவில்லை. மற்றபடி அவர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள்.

ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வழக்கு நடத்த சாதாரண மக்களிடம் இருந்துதான் முப்பது, நாற்பது லட்ச ரூபாய் வசூலித்தோம். மக்கள் உணர்வு இவ்விஷயத்தில் நீறுபூத்த நெருப்பாக உள்ளது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இதயம்: சிதம்பரத்தில் நீங்கள் சமீபத்தில் நடத்த முயன்ற ஈழ ஆதரவு மாநாட்டுக்கு ஆதரவு இருந்ததா?

கேள்வி நேரம்

நெடுமாறன்: மாநாட்டுக்கு அனுமதி இல்லை என்று எங்கள் அனைவரையும் கைது செய்து, திருமண மண்டபம் ஒன்றில் வைத்தார்கள். மண்டபத்துக்கு வெளியே பலத்த போலீஸ் பாதுகாப்பு. சரிதான் என்று நிம்மதியாக, மண்டபத்துக்குள்ளேயே மாநாட்டை நடத்த ஆரம்பித்தோம். நடத்தினோம். மாலை ஆறு மணிக்கு எங்களை விடுதலை செய்துவிட்டதாகச் சொல்லி வீட்டுக்குப் போகச் சொன்னார்கள்.'உங்கள் இஷ்டத்துக்கு நாங்கள் விடுதலையாக முடியாது' என்று போலீசாரிடம் சொல்லிவிட்டு, இரவு ஒன்பது மணி வரை அங்கேயே மாநாடு நடத்தினோம். மாநாடு நன்றாக நடக்க வேண்டும் என்று முதல்வர் கலைஞர் மனதார விரும்பியிருப்பார் போல. அதனால்தான் இப்படி ஒரு நடவடிக்கை எடுத்து எங்களுக்கு உதவியிருக்கிறார். அவருக்கு நன்றி.

இதயம்: புலிகள் விஷயத்தில் கலைஞர் பேசுவது முன்னுக்குப் பின் முரணாக உள்ளதாகக் கூறப்படுகிறதே?

நெடுமாறன்: கலைஞரது பேச்சையெல்லாம் நாங்கள் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. தி.மு.க. என்றில்லை, அ.தி.மு.க. கூட ஈழப்பிரச்சினையைத் தங்கள் அரசியல் லாபத்துக்காக ஊறுகாய் போலத் தொட்டுக் கொள்கிறார்கள். இதே கலைஞர் நாளையே கூடவேறு ஏதாவது புதிதாகக் கூறலாம்.

இதயம்: 'புலிகள் நடமாட்டம்' என்ற அம்சம் இருக்கும் போது, தமிழக அரசாகட்டும் தமிழகக் கட்சிகள் ஆகட்டும் பக்குவமாகத்தானே இப்பிரச்சனையில் செயல்பட முடியும்?

நெடுமாறன்: புலிகள் நடமாட்டம் என்பதே பொய். வாழ்வா? சாவா? என்று போர்க்களத்தில் இருக்கும் புலிகள் இங்கே வரவேண்டியது அவசியமே முதலில் இல்லை. 1991 முதல் தமிழக அரசு 'புலிகள் நடமாட்டம் இல்லை' என அதிகாரப் பூர்வமாகத் தெரிவித்து விட்டு, அரசியல் ஆதாயத்துக்காக இப்படி மாற்றி மாற்றிப் பேசுவது சரியே இல்லை.

இதயம்: இலங்கைப் பிரச்சனையில் இப்போது மத்திய அரசு எடுத்திருக்கும் நிலை நடுநிலைமையான ஒன்றாகத் தானே வரவேற்கப்பட்டிருக்கிறது?

நெடுமாறன்: இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுத உதவியோ, ராணுவ உதவியோ செய்யாது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருப்பது நல்ல அம்சம்தான். ஆனால் மனிதாபிமான உதவிகள் செய்யலாம் என முன்னாள் பிரதமர் குஜ்ரால் போன்றவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். அப்படி உதவி செய்வதற்கு முன்பாக, எது மனிதாபிமான உதவி என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். சிங்கள ராணுவத்தினரை ஆயுதத்தோடு தப்ப விடுவது மனிதாபிமான உதவியாகாது. முப்பத்தைந்தாயிரம் சிங்கள வீரர்களும் முதலில் புலிகளிடம் ஆயுதங்களோடு சரணடையட்டும். பிறகு யுத்த கைதிகளாக நிற்கும் அவர்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பத்திரமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அப்படி அனுப்பி வைக்கப்படும் போது அவர்களுக்குத் தேவைப்படும் உணவு, விமானம் போன்ற உதவிகள்தான் மனிதாபிமான உதவி.

வங்காள தேசப் போரின்போது அப்படித்தான் நடந்தது. ஒரு லட்சம் பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்தபோது, அவர்களிடம் இருந்த ஆயுதங்களை வாங்கிக் கொண்டு அவர்களைப் பத்திரமாக அனுப்பி வைத்ததுதான் நமது வரலாறும்புலிகளை மறந்து விடுங்கள். தமிழர்கள் அங்கே சிங்கள ராணுவத்தால் ஒடுக்கப்பட்ட போது, மனிதாபிமான உதவி செய்ய வேண்டும் என்று ஏன் மத்திய அரசுக்குத் தோன்றவில்லை. இப்போது, சிங்கள ராணுவத்துக்கு மனிதாபிமான உதவி செய்யச் சொல்கிறவர்கள் அன்று தமிழர்களுக்கு உதவுமாறு ஏன் சொல்லவில்லை. இப்படிப் பட்டவர்களை தமிழர்களுக்கு விரோதிகள் என்றுதான் சொல்லுவேன்.

பீட்டர் அல்ஃபோன்ஸ்

காவிரி நீர் பிரச்சனையில், கர்நாடக மாநில அரசு மீண்டும் 'முருங்கை மரம் ' ஏறிவிட்டது. இப்பிரச்சினை தொடர்பாக, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில், பீட்டர் அல்ஃபோன்ஸ், ஜெயந்தி நடராஜன், அழகிரி,பாரமலை ஆகியோர், பிரதமரையும், குடியரசுத் தலைவரையும் சந்தித்துப் பேசியுள்ளனர். சந்திப்பு விவரம் மற்றும் காவிரி நீர் பிரச்சனை தொடர்பாக, த.மா.கா. பொதுச் செயலாளரும், ராஜ்யசபா உறுப்பினருமான பீட்டர் அல்ஃபோன்ஸ் நமக்களித்த பேட்டி இது.

பீட்டர் அல்ஃபோன்ஸ்: காவிரி நீர் பிரச்சினையில் தமிழ்நாட்டில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது. இந்த உணர்வுரீதியான கருத்துக்களை பிரதமர், குடியரசுத் தலைவரிடம் நேரில் விளக்கினோம். தேர்தல் பிரசாரம் மற்றும் கடுமையான அலுவல்களுக்கிடையேயும் பிரதமர் எங்களை உடனடியாகச் சந்தித்தார். நாங்கள் கூறிய கருத்துக்களை அவர் சரியாகப் புரிந்து கொண்டார். நாங்கள் சந்தித்த பிறகு கர்நாடக முதல்வர் ஜே.எச். பாட்டீலிடம் அவர் மூன்று முறை தொடர்பு கொண்டு பேசினார். அதேபோல் இப்பிரச்சனை தொடர்பாக ராமகிருஷ்ண ஹெக்டேவுடனும் பிரதமர் பேசினார். பிரதமரின் அணுகுமுறை திருப்தியாக இருந்தது.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

இதயம்: காவிரி பிரச்சினை தொடர்பாக, த.மா.கா., பிரதமரிடம் முன்வைத்த கோரிக்கை என்ன?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: காவிரி நீரைத் திறந்துவிட கர்நாடக மாநில அரசை, பிரதமர் மேலும் உறுதியாக நிர்ப்பந்திக்க வேண்டும் என்று கூறினோம்.அதேபோல் தணிணீர் திறந்து விடும் அளவு விகிதத்தையும் மாற்றி அமைக்க கர்நாடகம் முயல்கிறது.'பிலுகொண்டா' என்ற இடத்தில் 229 டிஎம்சி தண்ணீர் முழுமையாகக் கிடைக்கும். ஆனால், கர்நாடகா 205 டிஎம்சி நீரைத் திறந்து விடுகிற பட்சத்தில், நமக்குக் கிடைக்கும் நீரின் அளவும் பெரிதாகக் குறையும். இது பற்றியும் பிரதமரிடம் எடுத்துக் கூறினோம்.

இதயம்: இந்தப்பிரச்சனையை எல்லாம் பார்க்கும்போது, காவிரி நீர் ஒப்பந்தம் தோல்வி அடைந்து விட்டதாகத்தானே அர்த்தம்?

பீட்டர்அல்ஃபோன்ஸ்: அப்படி இல்லை. ஒப்பந்தம் சரியானதுதான். அதை நிறைவேற்றுவதில்தான் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதில் அரசியல் ரீதியிலான உறுதி இல்லாததுதான் இதற்குக் காரணம்.

இதயம்: அரசியல் உறுதி இல்லை என்று எதை வைத்துக் கூறுகிறீர்களா?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: தற்போது காவிரி நீர் பிரச்சினை ஓட்டு வங்கி சம்பந்தப்பட்ட பிரச்சினையாக உள்ளது. கர்நாடகாவில் தேர்தல் நடைபெற உள்ளது. இங்கே தண்ணீர் வேண்டும் என்ற ஒருமித்த உணர்வு இருப்பது போல, அங்கே தண்ணீர் தரக்கூடாது என்ற ஒருமித்த உணர்வும் உள்ளது. அந்த உணர்வுக்கு எதிராக, தண்ணீர் திறந்து விடக்கூறி பிரதமர் அம்மாநில அரசை வற்புறுத்தினால், பா.ஜ.க. தி.மு.க. கூட்டணிக்கு ஓட்டுக்கள் விழாது. அதனால்தான் பிரதமரால் இவ்விஷயத்தில் உறுதியான நிலை எடுக்க முடியவில்லை. தேர்தலுக்கு முன்பே கர்நாடகா இதுபோல் அடம் பிடித்திருந்தால் பிரதமர் தண்ணீர் திறந்துவிட வற்புறுத்தி இருப்பார்.

இதயம்: இப்பிரச்சினையில் தி.மு.க. வின் அணுகுமுறை பற்றி என்ன கருதுகிறீர்கள்?

கேள்வி நேரம்

பீட்டர் அல்ஃபோன்ஸ்: சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தல் பிரசாரத்தின் போது, தி.மு.க. மூன்று விஷயங்களை முக்கியமாக முன் வைத்தது. ஒன்று - காவிரி ஒப்பந்தம் வெற்றி பெற்று அதனால், தமிழகத்துக்குத் தண்ணீர் வரக் காரணமான பிரதமர் வாஜ்பாய். இரண்டு - கார்கில் வெற்றி. மூன்றாவதாக - சிறுபான்மை சமூகத்துக்குப் பாதுகாப்பு.

இம்மூன்று பிரச்சினைகளையும், வாக்குப்பதிவு நடந்த மறுதினமே தி.மு.க. கை விட்டு விட்டது. காவிரி நீர் பிரச்சினையில் இப்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆயிரம் ராணுவ வீரர்களைப் பலி கொண்ட கார்கில் யுத்தம் தேவையற்றது எனக் கருதும் சூழல் ஏற்பட்டுள்ளது. பிரதமருக்கும் நவாஸ் ஷெரீஃபுக்கும் ரகசியத் தொடர்பு இருப்பதாக, அந்நாட்டின் முக்கியத் தூதரே கூறுகிறார்.

தமிழ்நாட்டில் பிரதமர் பேசும் போது 370-வது சட்டப் பிரிவு, அயோத்தி கோயில் விவகாரம், பொது சிவில் சட்டம் ஆகிய அம்சங்களைக் கைவிட்டு விட்டதாகக் கூறினார். இப்போது, உத்திரப் பிரதேச மாநில தேர்தலிலோ இம்மூன்று பிரச்சனைகளையும் தான் பா.ஜ.க. முன் வைக்கிறது. அயோத்தி கோயில் கட்டப்படும் என்று வாஜ்பாய், அத்வானி ஆகிய முக்கிய தலைவர்களே கூறுகின்றனர், ஆக, இவர்கள் இரட்டை நாக்குப் பேர்வழிகள் என்பதுதான் உண்மை.

இதயம்: காவிரி நீர் பிரச்சினை தொர்டர்பாக, தமிழக அரசின் சார்பில் மூன்று அமைச்சர்கள் டெல்லி செல்வது பலன் தருமா?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: பலன் கிடைக்குமா? கிடைக்காதா என்று சொல்ல முடியாது. ஆனால், அரசின் சார்பில் அமைச்சர்கள் சென்று பேசுவது இயல்பான நடவடிக்கையே. இதற்கு அரசியல் முலாம் பூசி பிரச்சினையை அரசியல் ஆக்கக்கூடாது. நாங்கள் ஆட்சியில் இருந்தாலும் இதைத்தான் செய்வோம்.

இதயம்: ஓட்டு வங்கி அடிப்படையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை என நீங்கள்தான் கூறினீர்கள். அப்படிப் பார்த்தால் காவிரி நதி நீர் பிரச்சினை அரசியல் பிரச்சினைதானே?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: அதைத்தான் நானும் கூறுகிறேன். இரு

மாநில விவசாயிகளின் நலன் சார்ந்த பிரச்சினையை அரசியலாக்கக் கூடாது என த.மா.கா. வலியுறுத்துகிறது. இதில் அரசியல் லாபம் பார்ப்பது எங்கள் நோக்கமல்ல. உணர்வுகளைத் தூண்டி விடுவதால் பிரச்சினை தீர்ந்து விடாது. பீரங்கியைக் கொண்டு போயா தண்ணீர் திறந்து விட முடியும்?

இதயம்: காவிரி ஒப்பந்தம் தோல்வி அடைந்து விட்டதாக ஜெயலலிதா கூறி வருவது, சரிதான் என்பதுபோல ஒரு கருத்து நிலவுகிறதே?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: அதற்கென்ன செய்வது? டப்பாங்குத்து ஆடினால் கூட்டம் சேரத்தான் செய்யும். அதற்காக, அது, சாஸ்திரிய சங்கீதம் ஆகிவிடுமா என்ன?

இதயம்: காவிரி பிரச்சினைக்கு இறுதியான தீர்வு எப்போதுதான் கிடைக்கும் என நம்புகிறீர்கள்?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: இப்பிரச்சினையில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் தவிர்த்து, இரு மாநில விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆலோசனை கேட்க வேண்டும். அதற்காக, இரு மாநில அரசின் சார்பிலும் உயர்நிலைக் குழு அமைக்கப்பட வேண்டும். பிரச்சினை என்று வந்தால் அவர்கள் சந்தித்து விவாதித்துத் தீர்வு காண வேண்டும் என்பதுபோல முடிவு எடுக்க வேண்டும்.

இதயம்: காவிரி நீர் ஒப்பந்தம் வெற்றிகரமானது என உங்கள் தலைவர் மூப்பனார் முன்பு பாராட்டியுள்ளார். இப்போது அவரது நிலை என்ன?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: இப்போதும் ஒப்பந்தம் சதி என்பது தான் த.மா.கா. வின் நிலை. தலைவரின் நிலையும் அதுதான். ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது, எங்கள் தலைவர் ஒரு ஆலோசனை கூறினார். அதாவது, பருவ மழை பொய்த்து தண்ணீரைத் திறந்து விட'ஷரத்து' ஒன்றை ஒப்பந்தத்தில் சேர்க்குமாறு கூறினார். அதைச் செய்திருந்தால் இப்போது இப்பிரச்சினை வந்திருக்காது.

இதயம் : இது, பருவமழை பொய்த்ததால் வந்த பிரச்சினை இல்லையே?

கேள்வி நேரம்

பீட்டர் அல்ஃபோன்ஸ்: தவறு கர்நாடக மாநில அரசின் மீதுதான். உச்ச நீதி மன்றம், காவிரி நடுவர் மன்றம், பிரதமர் தலைமையிலான ஆணையம் என்று அதிகாரப் பூர்வமான அங்கீகரிக்கப்பட்ட விஷயத்தை கர்நாடகா ஏற்க மறுப்பது ஏற்புடையதல்ல. கண்டிக்கத்தக்கது தான்.

இதயம்: இப்பிரச்சினையில் மத்திய அரசும் எடுத்து வரும் நடவடிக்கை நம்பிக்கை அளிக்கும் படி உள்ளதா?

பீட்டர் அல்ஃபோன்ஸ்: பிரதமரும், முதல்வர் கருணாநிதியும் இவ்விஷயத்தில் இன்னமும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதே என் கருத்து. கர்நாடக மாநில அரசை அவர்கள் இதற்கு மேலும் நெருக்கிப் பிடித்து வலியுறுத்த வேண்டும். பார்க்கலாம்.

வைஜெயந்திமாலா

காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது, லோக்சபா உறுப்பினராகவும் பதவி வகித்த முன்னாள் நடிகை வைஜெயந்திமாலா பாலி, அண்மையில், எல்.கே.அத்வானி முன்னிலையில் பி.ஜே.பி.க்குத் தாவிவிட்டார். இந்திராகாந்தி, ராஜீவ் காந்தியால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்ட வைஜெயந்திமாலா, திடீரென்று காங்கிரசுக்கு எதிராக ஏன் எதிர்முகாமுக்குத் தாவினார் என அவரிடமே கேட்டோம்.

வைஜெயந்திமாலா : காங்கிரசின் நடவடிக்கை சரியில்லாததால் அக்கட்சியிலிருந்து வெளியேறினேன். அவர்களிடம் கொள்கை இல்லை. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறிவிட்டார்கள். எல்லாமே வாய்ப்பேச்சு தான். அந்த வெறுப்பு, ஆத்திரம்தான்..... ராஜினாமா செய்துவிட்டேன். மற்ற கட்சிகள் - ஆளும் அரசுகளைக் கவிழ்ப்பதுதான் காங்கிரஸின் கொள்கை. தாங்கள் மட்டுமே ஆள வேண்டும் என்ற ஆணவம் அவர்களிடம் உள்ளது.

இத்தனை வருடமாக காங்கிரஸில் இருந்திருக்கிறீர்கள். அப்போதெல்லாம் இது தெரியவில்லையா?

வைஜெயந்திமாலா : தெரிந்தது. ஆனால் தனி ஒருத்தியாக நான் என்ன

செய்துவிட முடியும்? ஆனாலும், என் கருத்துக்களைத் தலைமையிடம் கூறினேன். அவர்களோ பேசுவதற்குக்கூட சுதந்திரம் தரவில்லை. இடைஞ்சல் செய்தார்கள். அவப்பழி சுமத்தினார்கள். மனம் வெறுத்துப் போனது. திடீரென்று நான் இக்கட்சியை விட் வந்துவிடவில்லை. நீண்ட கால மனப் போராட்டத்திற்குப் பிறகே இந்து முடிவுக்கு வந்தேன்.

அப்படியென்றால், ராஜீவ், இந்திராகாந்தி ஆகியோரிடம் உங்களுக்கு விசுவாசம் இல்லை என்று ஆகிவிடாதா?

வைஜெயந்திமாலா : அந்தத் தலைவர்கள் மீது எனக்கு எப்போதும் விசுவாசம் உண்டு. அங்கு இருந்தவரை, என்னைப் போன்ற ஒரு விசுவாசியைப் பார்க்க முடியாது. இப்போது தலைமை சரியில்லை. காங்கிரஸ் வளர்வதற்கான அறிகுறிகளே இல்லை.

தலைமை சரியில்லை என்று யாரைச் சொல்கிறீர்கள்?

வைஜெயந்தி மாலா : சோனியா காந்தியைத்தான், அவரை என்னால் தலைவராக ஏற்க முடியாது. ராஜீவின் மனைவி என்கிற மரியாதை மட்டும்தான். அது எப்படி ஒரு அந்நிய நாட்டவரை நாம் தலைவராக ஏற்க முடியும்? அதுவும், சோனியாவுக்குப் பதவிப் பசி, அதிகாரப்பசி அதிகம். அதனால்தான் பி.ஜே.பி. ஆட்சியைக் கவிழ்த்தார். ஊழலுக்குத் துணை போனார்.

ஜால்ரா அடிப்பவர்கள்தான் அவருக்குத் தேவை. அவருக்கு ஆதரவாக இப்போது இத்தாலி உறவினர்கள்தான் உள்ளனர். இந்த அம்மையாரும், அந்த அம்மையாருமாய்ச் சேர்ந்து ஆட்சியைக் கவிழ்த்துவிட்டது நியாயமல்ல. இதில், ஜெயலலிதாவைப் பற்றிப் பேச எதுவுமே இல்லை.

இந்தத் தேர்தலில் நிற்க காங்கிரஸில் 'சீட்' தராததால்தான் நீங்கள் இந்த முடிவுக்கு வந்ததாகச் சொல்கிறார்களே?

வைஜெயந்திமாலா : காங்கிரஸில் 'சீட்' கொடுத்திருந்தால் கூட நான் தேர்தலில் நின்றிருக்க மாட்டேன். நான் வலியப் போய் என்றும் சீட் கேட்டதில்லை. கொடுத்திருந்தால்கூட வேண்டாம் என்றுதான்

சொல்லியிருப்பேன். தேர்தலில் நிற்க நானே தயாராக இல்லாதபோது, இப்படி ஒரு குற்றச்சாட்டு எப்படி வந்ததென்று தெரியவில்லை? பதவிக்காக, பணத்துக்காக அலையும் பழக்கம் எனக்குக் கிடையாது. பரதநாட்டியம், இறைவன் எனக்களித்த வரம். அந்தக் கலை என்னிடம் இருக்கும்போது, அதைவிடப் பெரிய பதவி வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

அப்படியென்றால், பி.ஜேபி. யில் நீங்கள் சேரக் காரணம் என்ன?

வைஜெயந்திமாலா கார்கில் விஷயத்தில் பி.ஜே.பி. பெருமைப்படும் வகையில் நடந்து கொண்டுள்ளது. கார்கில் விஷயத்தைக்கூட சோனியா விட்டு வைக்கவில்லை, அதையும் அரசியலாக்கிவிட்டார். அந்த அளவுக்கு சோனியாவிடம் பொய் முகம் உள்ளது. கார்கில் விஷயத்தில் பி.ஜேபி செய்ததுதான் சரி. காங்கிரஸ் செய்யத் தவறியதை, பி.ஜே.பி. செய்து காட்டியுள்ளது. பதவிக்காக அக்கட்சி சமரசம் செய்து கொள்ளவில்லை. தனிப் பெரும்பான்மை இருந்தாலும், கூட்டணி ஆட்சிதான் என வாஜ்பாய் கூறுகிறார். இந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும்?நான் அக்கட்சியில் சேரக் காரணம் தேச விசுவாசம்தான், கட்சி விசுவாசத்தைவிட தேச விசுவாசம் தான் எனக்கு முக்கியம்.

பி.ஜேபி.யில் உங்களுக்குப் பதவி கிடைத்தால் ஏற்பீர்களா?

வைஜெயந்திமாலா : திரும்பவும் சொல்கிறேன். எனக்குப் பதவி ஆசை கிடையாது. ராஜ்யசபா உறுப்பினர் பதவிகூட என் கலைத் திறனுக்காக குடியரசுத் தலைவர் கொடுத்ததுதான். காங்கிரஸ் கட்சி தரவில்லை. அது போல் கலையும், பரதமும்தான் எனக்குப் பதவிகள். என் இஷ்டப்படி நான் ஆடுவேன். மற்றவர்கள் இஷ்டத்துக்கு ஆடமாட்டேன். பதவி எனக்குக் கடைசி பட்சம்தான்.

திண்டிவனம் கே. ராமமூர்த்தி

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து அண்மையில் நீக்கப்பட்ட திண்டிவனம் கே. ராமமூர்த்தி, 'ஆமாம்', 'இல்லை' என்கிற ரீதியில் மிகவும் சுருக்கமாகவும், விரக்தியாகவும் நமக்களித்த பேட்டி இது.

இப்படி திடுதிப்பென்று உங்களை நீக்கிவிட்டு புதிய தலைவரை நியமித்திருக்கிறார்களே?

கட்சித் தலைமையில், முதலில் எங்களை கூப்பிட்டுப் பேசினார்கள். நான், குமரி அனந்தன், தங்கபாலு மூவருமே சென்றிருந்தோம். 'சேர்ந்து பணியாற்றுங்கள்' என்று சொன்னார்கள். அதற்கு என்ன அர்த்தம் என்று இதுவரை புரியவில்லை. மாநிலத் தலைமையை மாற்றப் போவதாக இரண்டாவது முறை சொன்னார்கள். தேர்தல் நடத்தி மாற்றுங்கள் என்றோம். மற்றபடி, நடப்பதை நாடறியும்.

குமரி அனந்தன், தங்கபாலு எல்லாம் உங்களுக்கு ஆதரவாகவா இருக்கிறார்கள்?

ஏதோ பத்திரிகைகளே படிக்காதது போல் கேட்கிறீர்களே?

அவர்கள்தான் தெளிவாக அறிக்கை விட்டிருக்கிறார்களே?

தலைமைப் பதவி பறிக்கப்பட்டது என்பதற்காக, காங்கிரஸ் ஆபீஸிக்கு பூட்டு போட்டு விட்டீர்களே?

நானும், தண்டாயுதபாணியும் பர்சனல் கியாரண்டி கொடுத்து எடுக்கப்பட்ட அலுவலகம் அது. வாடகை கொடுக்காவிட்டால் ஹவுஸ்ஓனர் யாரிடம் வந்து கேட்பார்? காங்கிரஸ் கட்சியா இதுவரை வாடகை கொடுத்தது?

இது ஒரு வகையில் தலைமைக்கு எதிரான செயலாகாதா?

தலைமையா? யார் அவர்கள்?

சோனியாகாந்தி தானே தலைவர்?

அவர் என்னிடம் இதுபற்றி எதுவும் கூறவில்லையே?

நீங்கள் இப்படி பூட்டு போட்ட விஷயம் திருட்டுத் தனமானது என்று அன்பரசு சொல்கிறாரே?

கண்டவனுக்கெல்லாம் என்னால் பதில் சொல்லிட்டு இருக்க முடியாது. தெருவுல போறவங்க வர்றவங்களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. இதையெல்லலாம் என்கிட்ட ஏன் கேட்கிறீங்க? பத்து மாசமாஆபீசுக்கே வரலைன்னு அவர்தானே சொன்னார். அவர்கிட்ட போய் கேளுங்களேன்.

மூப்பனார் சொல்லித்தான் இவ்வளவும் நடக்கற மாதிரி ஒரு டாக்' இருக்கே?

நல்ல ஜோக்.

இவ்வளவு நடந்து, உங்களை தனிமைப்படுத்தின பிறகும், கடைசி வரை காங்கிரஸ் தொண்டனா இருப்பேன்னு சொல்றீங்களே? எப்படி?

ஆமாம். கடைசி வரை காங்கிரஸ்லதான் இருப்பேன்.

அப்புறம் எப்படி காங்கிரஸ் உருப்படாதுன்னு முன்னாடி சொன்னீங்க?

அது ஒரு உணர்வுல சொன்னது. கட்சிக்கு உண்மையில்லாத ஒருத்தரு, சம்பந்தமில்லாத ஒருத்தர புதுசா தலைவரா போட்டிருக் காங்க. கொறடாவை எதிர்த்தே ஓட்டுப் போடலாம். தலைமைக்குக் கட்டுப்படாம இருக்கலாம். அப்படிப்பட்டவர் தலைவரா இருந்தா கட்சி எப்படி உருப்படும்? அதான் அப்படி சொன்னேன்.

ஒரு பக்கம் காங்கிரஸ் தொண்டனாவே இருப்பேன்கிறீங்க, இன்னொரு பக்கம் தலைமையோட புதிய முடிவுக்குக் கட்டுப் படமாட்டேன்னு சொல்றீங்க, ஏன் இந்த முரண்பாடு?

தலைமை தப்பு செய்தா அதைச் சுட்டிக்காட்டக் கூடாதுன்னு சொல்றீங்களா? காங்கிரஸ் ஜனநாயகப் பூர்வமான கட்சிதான்.

சரி, உங்க எதிர்ப்புக்கு, தலைமைல உள்ளவங்க என்ன பதில் சொன்னாங்க?

சொன்னாங்களா, இல்லையாங்கறதெல்லாம் வேற விஷயம்.

நீங்க தலைமைப் பொறுப்புல இருந்தப்ப உருப்படியா என்ன பண்ணிருக்கீங்க?

அது தொண்டர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி. என்னைப் பத்தி நானே தம்பட்டம் அடிக்கக்கூடாது. நான் தலைவரா பொறுப்பு ஏத்துக்கிட்ட தினம், கூட்டணி கட்சிக் காரங்களே, த.மா.கா.தான் உண்மையான காங்கிஸ்னாங்க. ஆனா, உண்மை அது இல்லையே? இந்தக் கட்சிக்கு என்ன செஞ்சேன்னு தொண்டர்களைக் கேட்டா தெரியும். நான் சொல்லணும்கிற அவசியம் இல்லை.

இப்ப சமீபகாலமா, த.மா.கா.வும் காங்கிரஸூம் நெருக்கமா இருக்காங்களே– மீண்டும் ஒரே கட்சியா இணைய வாய்ப்பிருக்கா?

மூப்பனார்கிட்ட போய் கேளுங்க.

காங்கிரஸ்ல எப்பவுமே தலைமைப்பதவி ஒரு பிரச்சினையாவே இருக்கே? ஏன்?

தேர்தல் நடத்தி தலைவரை தேர்ந்தெடுத்தாங்கன்னா நீங்க சொல்ற மாதிரி பிரச்சினையே வராது. இதைத்தான் நாங்க திரும்பத் திரும்ப சொல்றோம். உங்க மாதிரி நிருபர்களோ, வேண்டப்பட்ட ஆளுக்குத் தகுந்த மாதிரி தப்பாவும், 'ட்விஸ்ட்'பண்ணியும் எழுதறீங்க. இதையெல்லாம் எங்க போய்ச் சொல்றது?

இப்ப அடுத்த கட்டமா நீங்க என்ன பண்ணப் போறீங்க?

அடுத்து பண்ணப் போறதை இப்ப எப்புடி சொல்ல முடியும்?

மத்திய அமைச்சர் ரகுபதி

அரசியல் கட்சி நாளேடுகளில், 'தீக்கதிர்' 'முரசொலி'யைவிட, அ.தி.மு.க. வின் 'நமது எம்.ஜி.ஆரு'க்கு சர்க்குலேஷன் அதிகம். தங்கள் பெயர் எங்காவது 'கட்டம்'கட்டப் பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே, அ.தி.மு.க.வின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் முதல் கடைசி மட்ட நிர்வாகிகள் வரை பலரும் 'நமது எம்.ஜி.ஆரை' வாங்கிப் படிப்பது வழக்கம். அண்மையில், அக்கட்சியின் முக்கியஸ்தர்களான சேடப்பட்டி முத்தையா, ரகுபதி, கருப்பசாமி பாண்டியன் ஆகியோரும் இப்படி 'கட்டம்' கட்டப்பட்டுத் தான் கட்சியில் இருந்து, நீக்கப்பட்டுள்ளனர். 'நமது எம்.ஜி.ஆர்' பார்த்துதான், தான் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதை தெரிந்து கொண்டதாக முன்னாள் அமைச்சர் ரகுபதி நம்மிடம் கூறினார். அவர் காரசாரமாக நமக்களித்த பேட்டி...

இதயம் : நீங்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவோம் என எதிர்பார்த்தீர்களா?

ரகுபதி : கடந்த ஒரு மாதமாகவே கட்சியில் இருந்து நீக்குவார்கள் என எதிர்பார்த்தது தான். ஆனால், இப்படி முன்அறிவிப்பு ஏதும் இல்லாமல் திடுதிப்பென நீக்குவார்கள் என எதிர்பார்க்கவில்லை.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

கட்சிக்கு விரோதமாக ஒரு சிறு தவறுகூட செய்யாதவன் நான். அமைச்சராக இருந்த போதுகூட முறையாக, பொறுப்பாகச் செயலாற்றியவன். எந்த கோஷ்டி சிக்கலிலும் கூட மாட்டிக் கொண்டது கிடையாது. மற்றபடி, இந்த முடிவுக்காக நான் கொஞ்சம்கூட வருத்தப்படவில்லை.

இதயம் :நீங்கள் நீக்கப்பட்டதற்கான காரணம் என்னவாக இருக்கும்?

ரகுபதி: கட்சியில் தவறே செய்யவில்லை என்பதுகூட காரணமாக இருக்கும். எந்த ஊழல் வழக்கிலும் சிக்கவில்லை என்பதால், இவன் கட்சிக்கு லாயக்கில்லை என்றுகூட அந்தம்மா முடிவெடுத்திருக்கலாம்.

இதயம் : ஜெயலலிதாவின் இந்த அணுகுமுறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ரகுபதி : இது ஒரு அணுகுமுறையே இல்லை என்பதுதான் என் கருத்து, அ.தி.மு.க. சர்வாதிகார கட்சியாகி விட்டது. குலேபகாவலி கட்சியாகி விட்டது. நீதி, நியாயத்தை எல்லாம் ஜெயலலிதாவிடம் எதிர்பார்க்க முடியாது. அவர்களைப் பொறுத்த வரையில் மரண தண்டனையை நிறைவேற்றிய பிறகுதான், குற்றத்தை அல்லது காரணத்தைக் கூறுவார் கள்.

இதயம் : அந்தம்மாவை நீங்கள் எதிர்த்துப் பேசியதால் தான் அப்படி செய்ததாகக் கூறப்படுகிறதே?

ரகுபதி : ஆமாம். அந்தக் கட்சியில் ஜெயலலிதாவைத் தைரியமாக, தலைநிமிர்ந்து முகத்திற்கு எதிரே பேசிய ஒரே ஆம்பளை நான்தான். நீதிமன்ற நீதிபதிபோல நடந்துக்காதீங்கன்னே சொன்னேன்.

இதயம் : அப்படியென்றால் ஜெயலலிதா தன்னிச்சையாக எடுத்த முடிவுதான் இது என்கிறீர்களா?

ரகுபதி : அவர் எடுத்த முடிவுதான் . ஆனால் யாரோ சொல்லி, தூண்டி எடுக்கப்பட்ட முடிவு என்றும் சொல்கிறேன்.

இதயம் : யாரைசந்தேகப் படுகிறீர்கள்?

கேள்வி நேரம்

ரகுபதி : உறுதியாகவே சொல்கிறேன். சசிகலா சொல்லி, எடுக்கப்பட்ட முடிவுதான். அ.தி.மு.க. என்ற எம்.ஜி.ஆரின் கட்சி, மன்னார்குடி குடும்பத்தாரின் வலையில் சிக்கி தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இதயம் : இப்போது கட்சியில் இருந்து நீக்கியதற்காக, சசிகலா குடும்பம் மீது கோபப்படுகிறீர்கள், கட்சியில் இருந்தபோதே நீங்கள் இப்படி விமர்சனம் செய்திருக்கலாமே?

ரகுபதி : அப்படி பேசியதால் தான் இப்படி ஒரு முடிவு வந்திருக்கிறது. இப்போது பாருங்கள். பணமும், டாடா சுமோவும் கொடுத்து மாவட்ட செயலாளர் பதவிக்கு ஆள்தேடிக் கொண்டிருக்கிறார்கள். பழைய தலைவர்களிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்கிறார்கள். தம்பித்துரை ஒழுங்காக 'கப்பம்' கட்டாவிட்டால் அவரையும் நீக்கி விடுவார்கள். அப்படி ஒரு நிர்ப்பந்தம்.

இதயம் : உங்களையும் அப்படி நிர்ப்பந்தம் செய்தார்களா?

ரகுபதி : நிறைய தடவை நிர்ப்பந்தப் படுத்தியிருக்கிறார்கள். ஜெயலலிதா ஒரு 'சேடிஸ்ட்' என்று கூட சொல்வேன். கட்சி நிர்வாகி ஒருவர், புழுவாய்த் துடிக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர் அவர். அபாண்டமாக ஒருவர் மீது பழி சுமத்தி, அவர் படும்பாட்டை அணு அணுவாய் ரசிக்கும் அரக்கத்தனம் கொண்ட ஜென்மம்தான் ஜெயலலிதா. செல்வ கணபதி துரோகி, செங்கோட்டையன் துரோகி எனச் சொல்லி, சம்பந்தப் பட்டவர்களின் மன வருத்தத்தை ரசித்து மகிழும் சுபாவம் ஜெயலலிதாவுக்கு உண்டு. அது மட்டுமல்ல. அப்படி வருத்தப்ப'டுகிற நபரை நான்கு கோணத்தில், நான்கு கேமரா மூலம் படம் பிடித்து, தனியாக இருக்கும்போது போட்டுப் பார்க்கும் கேவலமான குணம் கொண்டவர்.

ஒரு தாய்க்கு ஐந்து பிள்ளைகள் இருந்து, மூன்று பிள்ளைகளுக்கு நோய் வந்தால், மற்ற இருவராவது நன்றாக இருக்க வேண்டுமே என்றுதான் தாயானவள் கவலைப் படுவாள். ஆனால், ஜெயலலிதாவோ, "மற்ற இரண்டு பேரும் நன்றாகவா இருக்கிறார்கள்? அவர்கள் கால்கள் ஒடியவில்லையா?'' என்று கேட்கும் சுபாவமுடையவர்.

இதயம் : காளிமுத்து போன்ற இரண்டாம் கட்ட தலைவர்கள், ஜெயலலிதா உரியவர்களுக்கு உரிய மரியாதை தருபவர் என்று சொல்லிருக்கிறாரே?

ரகுபதி : ஜெயலலிதா எப்படிப் பட்டவர் என்பது, காளிமுத்துவின் மனசாட்சிக்கு நன்றாகத் தெரியும். அதிலும், என்னைவிட அனுபவசாலி அவர். நன்றாகத்தெரியும். ஆனால் அவர் இப்போது சூழ்நிலைக் கைதியாக இருப்பதால் அப்படித்தான் பேசுவார்.

இதயம் : உங்களை கட்சியில் இருந்து நீக்கினால் பெரிதாக பாதிப்பு ஏதும் வந்துவிடாது என்று கூட ஜெயலலிதா நினைத்திருக்கலாம் இல்லையா?

ரகுபதி : இதற்குமுன் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் தோல்வி அடைந்ததால் அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கலாம். ஆர்.எம்.வீ திருநாவுக்கரசு போன்றவர்களும் பலமுறை கட்சியை விட்டுப் போய் பிறகு வந்தார்கள். கண்ணப்பன் முத்துச்சாமி போன்றவர்களும் இதே போல் நடந்து கொண்டார்கள். நாவலர் கூடத்தான் போய்விட்டு வந்தார். அதனால் ஜெயலலிதா நீங்கள் சொல்வதுபோல் நினைத்து செயல்பட்டிருக்கலாம்.

இதயம் : கட்சியில் இருந்து நீக்கப்படுகிறவர்கள் தோல்வி அடைகிறார்கள் என்றால், ஜெயலலிதா எடுத்த முடிவு சரிதான் என்பதுபோல ஆகிவிடாதா?

ரகுபதி : இரண்டாம் கட்டத்தலைவர்களிடம் ஒற்றுமை இல்லாததுதான் இதற்கு முக்கிய காரணம். யார் தலைவர் என்ற போட்டியிலேயே, இப்படி ஆகிவிடுகிறது. இல்லாவிட்டால், கண்ணப் பன், முத்துசாமிகூட அப்போதிருந்த சூழ்நிலையில் ஜெயித்துக் காட்டியிருப்பார்கள், 1995-ம் ஆண்டு, ஆர்.எம்.வீ. திருநாவுக்கரசு - இருவருக்கும் உதவி செய்வதற்காய் பெரிய சக்தியே காத்திருந்தது. அவர்களுக்குள் இருந்த பதவிப் போட்டி காரணமாக, முடிவும் வேறு விதமாகிவிட்டது.

இதயம் : இப்போது, நீங்கள் சேடப்பட்டி, கருப்பசாமி பாண்டியன்

கேள்வி நேரம்

நீக்கப்பட்டதன் முடிவு என்னவாக இருக்கும்?

ரகுபதி : தொண்டர்கள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. எம்.ஜி.ஆர். கட்சி என்பதால் அவர்கள் அ.தி.மு.க. வில் உள்ளனர். அவர்களுக்கு உண்மையைப் புரிய வைப்போம். மற்றபடி, நாங்கள் நல்ல நண்பர்களாக இதை ஆலோசனை செய்த பிறகே இது பற்றி முடிவெடுக்க முடியும்.

இதயம் : தனியாக கட்சியோ அமைப்போ துவங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா? ஏனென்றால், கருப்பசாமி பாண்டியன் கூட பெரிதாக சவால் விட்டிருக்கிறாரே?

ரகுபதி : அது என்ன முடிவு என்பதை நாங்கள் கூடிப் பேசிய பிறகுதானே சொல்ல முடியும். ஆனால், என்னைப் பொறுத்த வரையில் தனியாக அமைப்போ, கட்சியோ தொடங்கும் எண்ணம் துளிகூட கிடையாது. அப்படி யெல்லாம் செய்து இந்த இயக்கத்தை நடத்த முடியாது.

இதயம் : தி.மு.க. விற்கு நீங்கள் கட்சி மாறப் போவதாகவும் ஒரு பேச்சு அடிபடுகிறதே?

ரகுபதி : அப்படி ஒரு எண்ணம் இல்லை. ஆனால் எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. வை காப்பாற்றுவதற்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறோம். நீங்கள் தி.மு.க. என்று குறிப்பிட்டுக் கேட்டதற்காக சொல்கிறேன். கலைஞர் அரசு நல்ல ஆட்சியாகத்தான் இருக்கிறது. பணப்புழக்கம் நன்றாகவே இருக்கிறது. நல்லவேளை, ஜெயலலிதா ஆட்சிக்கு வரவில்லை. வந்திருந்தால் பணமே இருந்திருக்காது.

இதயம் : நீங்கள் இப்படிப் பேசுவதெல்லாம் தி.மு.க. விற்குச் சாதகமாகத்தானே அமையும்?

ரகுபதி : அதற்கென்ன செய்வது? தலைமை சரியில்லாததால் வந்த வினை இது. உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

இதயம் : தலைமை சரியில்லை என்கிறீர்கள், ஆனால் ஒருகாலத்தில் ஜெயலலிதாவுடன் மிக நெருக்கமாக இருந்தவர்தானே நீங்கள்?

ரகுபதி : வாஸ்தவம்தான். 1986-ல் கட்சி பொதுக்குழு கூடி ஜெயலலிதாவை நீக்க ஏற்பாடு செய்யப் பட்டது. பொதுக்குழு முடிகிற போது நான்தான் ஜெயலலிதாவிற்கு ஆதரவாகப் பேசினேன். அப்படி பேசிய ஒரே மாவட்டச் செயலாளர் நான்தான். எம்.ஜி.ஆர் இருந்த போதே ஜெயலலிதாவுக்கு விசுவாசமானவனாக இருந்தேன். அப்படி நான் செய்த பாவத்துக்குத் தான்· இப்போது தண்டனை அனுபவிக்கிறேன்.

டி.வி.நாராயணசாமி

பேரறிஞர் அண்ணா தி..க. வில் இருந்து விலகி,தி.மு.க. தொடங்கிய காலத்தில், அவரது பால்ய கால நண்பரும், நாடக நடிகருமான டி.வி.நாராயணசாமியையும் ,நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமியையும், கலையுலகம் சார்பில், கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களாக நியமித்தார்.

1944-ம் ஆண்டில் கும்பகோணத்தில் நடந்த முதல் திராவிடர் மாணவர் மாநாட்டில் அண்ணா, நடிகமணி டி.வி.நாரயணசாமியை அறிமுகம் செய்தார். அவர் நடிகர் எஸ். எஸ்.ஆரின் தங்கை கணவரும் கூட

"கலைத்தாய் எனக்களித்த முதல் புதல்வன் டி.வி.நாராயணசாமி. அவருக்காகவே, 'சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்' நாடகத்தை எழுதினேன். கணேசனாக இருந்தவரை 'சிவாஜி கணேசனாக' மாற்றியவர் டி.வி.நாராயணசாமி. பல பிரச்சினைகள் தீர எனக்கு உதவியவர். கே.ஆர். ராமசாமி, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்., ஆகியோரை இயக்கத்தின் பால் ஈடுபாடு கொள்ளச் செய்தவரும் அவரே,

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

இவர்களையெல்லாம் அவ்வப்போது அறிமுகம் செய்துவைத்து என்னிடம் கொண்டு சேர்த்த பெருமை, நாராயணசாமியைச் சாரும். 1967-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், அவருக்கு ஒதுக்கப்பட்ட தி.நகர் தொகுதியை ம.பொ.சி.க்காக விட்டுக் கொடுத்தவர். அவர் தி.மு.க.வின் அடிமரம்...?என அண்ணா அவரைப் பற்றி ஒரு நூலில் எழுதியுள்ளார்.

அண்ணாவின் நண்பரான அவரை, அண்ணாவின் பிறந்த நாளையொட்டிச் சந்தித்தோம்.வயதான அவர், தழுதழுத்த குரலில் நமக்களித்த பிரத்யேகப் பேட்டி இது.

"அண்ணாவைப் பின்பற்றி, வளர்ந்து பதவி சுகம் பெற்றவர்களை விட சிறு வயது முதலே நான் அவரை அறிவேன். மற்றவர்களிடம் பேச முடியாத எத்தனையோ அந்தரங்கமான விஷயங்களை இருவரும் பகிர்ந்து கொள்வோம். எனக்குச் சரியாசனம் கொடுத்தவர் அண்ணா. நெடுஞ்செழியன் போன்றவர்கள், நான் கூறிய பின்னரே அண்ணாவைப் பற்றி அறிந்து கொண்டனர்.

அண்ணாவைப் போன்ற மேதைமை நிறைந்த தலைவர் இன்று இல்லை. அவரைப் போன்ற எளிமையான தலைவரும் இன்று இல்லை. கர்வம் இல்லாத தலைவர் அவர். 1959-ம் ஆண்டு அண்ணா பிறந்த தின விழாவை முதன் முறையாக நாங்கள்தான் கொண்டாடினோம். பி.டி.ராஜன் தலைமையில் நடந்த அந்த விழாவிற்கு அன்றைய திரை உலகமே திரண்டு வந்தது. கருணாநிதி, அப்போது முக்கியத் துவம் இல்லாத நபராக ஓரத்தில் இருப்பார். நன்றாக கதைகள் எழுதுவார். நாங்கள் எல்லாம் தட்டிக் கொடுப்போம்அப்போது பிரபலமாகாம லேயே இருந்தார்.

1944-ல் 'சந்திரோதயம் 'நாடகத்தில் நான் கதாநாயகனாக நடித்தேன். அப்போது என்னைப் பார்ப்பதற்காக எம்.ஜி.ஆர். ஜன்னல் ஓரமாகக் காத்திருந்தார். அதை அவரே, 'நான் ஏன் பிறந்தேன்' கட்டுரையில் எழுதியுள்ளார்.

1976 வரை கட்சியின் பொதுக்குழு உறுப்பினராகத்தான் இருந்தேன். எஸ்.எஸ்.ஆர். கூட்டுத்தன்மை வேண்டும் என குரல் எழுப்பியபோது தான் பிரச்சனை ஆரம்பமானது. அவரைக் கட்சியிலிருந்து கருணாநிதி வெளியேற்றினார்.

கேள்வி நேரம்

நியாயம் கேட்கப் போன எனக்கு நோட்டீஸ் கொடுத்தார்கள். கருணாநிதியிடம் சர்வாதிகாரம் இருந்தது. அப்போது நெடுஞ்செழியனும் அங்கு இருக்கிறார். கட்சியைக் கைப்பற்றுவதில் கருணாநிதி குறியாக இருந்தார். கருணாநிதியின் சூழ்ச்சியால் கட்சியிலிருந்து குமுறலோடு வெளியேறினேன்.

கட்சியில் அண்ணா எவரையும் இழக்கமாட்டார். ஆனால் கருணாநிதி எவரையும் இழக்கத் தயங்கமாட்டார். கருணாநிதியின் மனசுக்குள் எப்போதும் ஒரு உள்நோக்கம் இருந்து கொண்டே இருக்கும். ஒருவரிடம் கை கொடுக்கும் அதே நேரம் அவரைப் பற்றி மனதுள் வேறுவிதமான எண்ணம் ஓடும் சுபாவமுடையவர் கருணா நிதி. தனக்கு ஜால்ரா அடிப்பவர்களையே அருகில் வைத்துக் கொள்வார்.

அவரின் எழுத்துக்கள் மீது இப்போதும் எனக்கு மரியாதை உண்டு. ஆனால், அவர் வேறு, அண்ணா வேறு, இருவரும் இருவேறு இயல்புடையவர்கள்.

கட்சியின் வளர்ச்சிக்காக கடைசிவரை நாங்கள்தான் பாடுபட்டோம்.கே.ஆர்.ராமசாமி, எம்.ஆர்.ராதா, மற்றும் என் வீட்டில் தான் கட்சி வளர்ந்தது. அப்படியெல்லாம் கருணாநிதி கட்சி வளர்ச்சிக்காக உழைக்கவில்லை.

எஸ்.எஸ்.ஆரின் வளர்ச்சி பொறுக்காமல், கட்சியிலிருந்து அவரை கருணாநிதி ஓரங்கட்டினார். இதை எதிர்த்ததால் எங்களையும் ஓரங்கட்டினார். தி.மு.க. அண்ணாவின் பாதையிலிருந்து மாறிவிட்டது. மதவாதக் கட்சியுடன் கூட்டுசேரும் அளவுக்குக் கொள்கையை இழந்துவிட்டது. அண்ணா, பெரியாரின் கொள்கைகளுக்கு இது மாறானது. அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காணாமல் போய்விட்டது.

சென்னையில் மட்டும் கருநிதிக்கு 548 வீடுகள் இருப்பதாக வாழப்பாடி ராமமூர்த்தி புகார் கூறினார். இதையெல்லாம் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்'' என்கிறார் டிவி.நாராயணசாமி.

தாமரைக் கனி

தாமரைக்கனி என்றாலே தடாலடிப் பேர்வழி, எதிர்க்கட்சிக் காரர்களை 'மெல்ல தட்டும்' புகழுக்குரியவர்... என்றெல்லாம் ஒரு இமேஜ் பொதுவாக இருக்கிறது. அப்படிப் பட்ட தாமரைக்கனி சமீபத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக கேரளாவுக்கு மாடுகளை ஏற்றிச் சென்ற லாரிகளை மடக்கிப் பிடித்துக் காப்பாற்றினார். தமிழக அரசு அவர் மீது வழக்குப் போட்டது. காஞ்சிப் பெரியவர் பசுக்களைக் காப்பாற்றியதற்காகப் பாராட்டினார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பசு வதை தடுப்பு மாநாடு காஞ்சிப் பெரியவர் தலைமையில் நடைபெற்றது. மத்திய சமூக நீதித்துறை அமைச்சர் மேனகா காந்தி, விஸ்வஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் உள்பட பல வி.ஐ.பி.க்கள் கலந்து கொண்ட அந்த மாநாட்டில், காஞ்சிப் பெரியவரின் அழைப்பின் பேரில் தாமரைக்கனியும் கலந்து கொண்டார்.

இந்த அளவுக்குப் பசு வதை தடுப்பில் தாமரைக்கனிக்கு அப்படி என்ன ஈடுபாடு?என்ற ஆச்சரியம் கலந்த சந்தேகம் நமக்கு. மாநாட்டில் கலந்து கொண்டு, திரும்பி தனது அறையில் தங்கியிருந்த தாமரைக்கனியைச் சந்தித்து நம் சந்தேகத்தைக் கேட்டோம்.

பரபரப்பான அரசியல்பண்ற நீங்க இப்ப திடீர்னு பசு,பாது காப்புன்னு இறங்கிட்டீங்களே— என்ன காரணம்?

கேள்வி நேரம்

திடீர்னு ஒண்ணும் பசுவைப் பாதுகாக்கப் போயிடலை. சின்னப்புள்ளைலேர்ந்து ஆடு, மாடு, கோழி, வளர்ப்புன்னா எனக்குப் பிடிச்ச விஷயம். நான் வீட்ல ஒரே புள்ளை. அக்கா, தங்கச்சி, அண்ணன்,தம்பி எல்லாம் கிடையாது. அதனால, இந்த ஜீவராசிகளையே உடன்பிறப்பா நினைச்சுப் பழகறேன். பாசமா இருப்பேன். எங்க வீட்ல மாட்டுக்கெல்லாம் லெட்சுமி, ஆண்டாள், பொற்கொடி, இன்ப நிலான்னுதான் பேரு. ஆடுகளுக்கு மாடசாமி, சங்கிலிக்காளைன்னு பேரு. கோழிக்குப் பேரு கண்ணகி.

லெட்சுமிங்கற மாட்டு பேர்லதான் எங்க அப்பா 'சீட்டுக்' கம்பெனி நடத்தி நல்லா முன்னுக்கு வந்தாரு.

இப்பவும் உங்க வீட்ல இதையெல்லாம் வளர்க்கிறீங்களா?

ஆமாம். மாடு வளர்க்கறதை ஒரு புண்ணியமாவே நினைக்கிறேன். பசுங்கறது கோமாதா. மனுஷங்கள்ல சைவமோ, அசைவமோ - இரண்டு பேருமே பால் குடிக்கறாங்க. சொல்லப் போனா, 'வைக்கோல்'ல செஞ்ச கன்னுகுட்டியக் காட்டி பால் கறந்துக்கறான். சொந்தமா வீடு கட்டினாகூட முதல்லல பசுவைத்தான் உள்ள அனுப்பறோம். பசுவோட 'கோமியத்து'க்கும் நல்ல மரியாதை.

மத்த மிருகம் எல்லாம் உருமுறப்போ, பசு மட்டும்தான் 'அம்மா'ன்னு கத்துது. அதுக்குப் பேச வாயில்லையே தவிர, மனுஷனை விட பலவிதத்துல உயர்வாதான் இருக்கு. வீட்ல யாராவது செத்துட்டா அது சாப்பிடாது! அழுதுகிட்டே இருக்கும். அதப் போய் தோலுக்காகவும், மாமிசத்திற்காகவும் கடத்திக் கொல்றாங்க. பார்த்துகிட்டு சும்மா இருக்க முடியுமா?

சமீபத்துல கூட கடத்தின மாடுகளை நீங்க மடக்கிப் புடிச்சீங் இல்லே... அது பத்தி?

சினிமால வர்ற மாதிரி அது ஒரு பெரிய கதை. எங்க ஊர்ல பசுப் பாதுகாப்புக் குழுன்னு ஒண்ணு இருக்கு. அதுலேர்ந்து என்கிட்ட புகார் கொடுத்தாங்க. கேரளாவுக்கு மாடுகள் கடத்தறதப் பத்தி சட்டசபைல பேசுங்கன்னு கேட்டாங்க. அந்தக் கோரிக்கை நியாயமா பட்டதால சரின்னு சொன்னேன். உடனே பிரதமர் வாஜ்பாய்க்கு

ஃபேக்ஸ் பண்ணினேன். அவரும் நடவடிக்கை எடுக்கறதா பதில் அனுப்பினாரு.

அந்த சமயத்துல மாடுகளைக் கடத்தறாங்கன்னு தகவல் வந்ததும் அதிகாரிகள் கிட்ட சொன்னேன். ஒருத்தரும் வரலை. அப்புறம் நாங்களே ஆட்டோல போயி மடக்கிப் புடிச்சோம். ஒரு லாரிய மடக்கறதுக் காக ரொம்ப தூரம் ஆட்டோல போனேன். என்மேல லாரி ஏத்திக் கொல்லக்கூட பார்த்தாங்க. வள்ளியம் பட்டி விலக்குங்கற இடத்துல மாடு கடத்தியவங்களுக்குத் தி.மு.க ஆளுங்க ஆதரவுவேற. ஐம்பதாயிரம் ரூபா கை மாறியிருக்கு. ஜான், முருக பூபதி, தேசியப்பன்னு காசு வாங்கின ஆளுங்களோட பேர் கூட சொல்லுவேன். எல்லாத்தையும் மீறி மக்கள் என் பக்கம் இருந்ததால மாடுகளை நகராட்சி இடத்துலேயே வெச்சிருந்தோம். நானே புல்லு, வைக்கோல் எல்லாம் போட்டேன். அன்னிக்கு ராத்திரி தூங்கவே இல்லை. தி.மு.க. மாவட்டச் செயலாளர் கே.கேஎஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் மாடுகடத்தினவங்களுக்கு ஆதரவா தலையிட்டும் ஒண்ணும் பண்ண முடியலை. நியாயம்தான் ஜெயிச்சது.

நீங்க இப்படி நேரடி நடவடிக்கை எடுத்ததைத்தான் சங்கராச்சாரியார் பாராட்டினாரா?

ஆமாம். மாடுகளைக் காப்பாத்தின அன்னைக்கு விடிகாலை அஞ்சு மணிக்குத்தான் படுக்கப் போனேன். எல்லா பேப்பர்லயும் நியூஸ் வந்துச்சி. பேப்பர் படிச்சுப் பார்த்த காஞ்சி சாமி, உடனே உதவியாளரை விட்டு எனக்கு போன்ல பேசச் சொல்லிருக்கார். அவரும் பேசினார். சாமி என்னைப் பார்க்கணும்னு சொன்னவுடனே மறுநாளே திருவானைக்கா வலுக்குப் போனேன். கும்பாபிஷேகத்துக்கு அங்க வந்திருந்தார். என்கிட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேல பேசி பாராட்டினார். இருபது வருஷத்துக்கு முன்னாடி எங்க ஊர் சிவன் கோவில்ல வெச்சு அவரைப் பார்த்ததை ஞாபகமா சொன்னாரு. அப்படிஒரு ஞாபக சக்தி. அதான் சாமியா இருக்கார். எனக்கு எத்தனையோ பாராட்டு கிடைச்சிருக்கு. ஆனா, எல்லாத்துக்கும் சிகரம் வெச்ச மாதிரி சாமியோட பாராட்டை நினைக்கிறேன்,

காஞ்சிபுரத்துல நடந்த பசுவதைத் தடுப்பு மாநாட்டில் நீங்களா கலந்துக்கிட்டீங்களா? அழைச்சாங்களா?

கேள்வி நேரம்

சாமிகள் தான் அழைச்சார். அது ஒரு பெருமை எனக்கு. மேனகா காந்தி, அசோக் சிங்காலை எல்லாம் சாமிகளே அறிமுகப் படுத்தி வெச்சார். எங்க ஊர்ல மாடு கடத்தினப்ப தடுத்தேன் இல்லையா? அதுக்காக, அரசுத் தரப்புல என்மேல ஒரு 'கேஸ்' போட்டாங்க. அதை கவர் மெண்ட் வாபஸ் வாங்கணும்னு மாநாட்டுல எல்லோரும் பேசினாங்க. அதனால, அதையும் இப்ப வாபஸ் வாங்கிட்டாங்க. அது என் மேல மட்டும் போடப்பட்ட வழக்கு இல்லை. காஞ்சி சாமிகள் மேல, பசு பக்தர்கள் மேல போடப்பட்ட வழக்கு. அதனால தான் அரசு தன்னோட தவறை உணர்ந்து வழக்கை வாபஸ் வாங்கியிருக்கு.

நீங்க அ.தி.மு.க.ல ஒரு பிரமுகர். பசுப் பாதுகாப்புக் கோரிக்கையை ஆர்.எஸ்.எஸ் ஆட்கள் தீவிரமா வலியுறுத்தறாங்க... அந்த வகைல பார்க்கறப்ப நீங்க அவர்கள் பக்கம் போற மாதிரி தெரியுதே?

பசுங்கறது தெய்வம்ங்க. ஆர்.எஸ்.எஸ். ஆட்கள்தான் அதைக் காப்பாத்தனும்னு இல்லை. ஜாதி, மத, கட்சி, வித்தியாசம் இல்லாம யார் வேணும்னாலும் குரல் கொடுக்கலாம். அதோட, என் தொகுதில எல்லா மக்களுக்கும் பிரதிநிதி நான். நியாயமா யார் கேட்டாலும்நான் செஞ்சாகணும். அப்படித்தான் பசுக்களைக் காப்பாத்தினேன். ஆர்.எஸ்.எஸ். ஸும், பி.ஜே.பி.யும் தான் பசுக்களைப் பாதுகாக்கணும்னு சட்டம் எதுவும் இல்லை.

அரசியல்ல நீங்க ஒரு முரட்டுத்தனமான ஆள் மாதிரி வெளில பேச்சு இருக்கு... ஆனா, பசு பாதுகாப்புல இப்படி ஆர்வமா இருக்கீங்களே? எப்படி?

நான் அடிப்படையில ரொம்ப இரக்கமான ஆளுங்க. என்னைய ஈஸியா ஏமாத்திப்புடலாம். ஆனா, வெளில அடிச்சுடுவேன். வெச்சுடுவேன்கிற மாதி 'இமேஜ்' இருக்கு. அதுகூட நல்லதுக்குத்தான். அரசியல்ல அப்படி இருந்தாதான் சமாளிக்க முடியும். கொஞ்சத்துக் குக் கொஞ்சமாச்சும் பயப்படுவாங்க. இல்லாட்டி நம்மளையே வித்துப்புடுவாங்க. அதான் அப்படி ஒரு முரட்டு இமேஜ் இருக்கட்டும்னு விட்டுட்டேன்

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

இணைய இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலிருந்து........

அரசியல், சமூக ஆர்வமுடைய பத்திரிகையாளரான நீங்கள் ஸ்ரீ சாயிமார்க்கம் போன்ற ஆன்மிக பத்திரிகையை எப்படி ஆரம்பித்தீர்கள் என்று விளக்க முடியுமா?

அடிப்படையில் நான் ஒரு ஜர்னலிஸ்ட். நக்கீரனில் இன்வெஸ்டிகேடிவ் நிருபராக சென்னையில் வாழ்க்கையை தொடங்கினேன். ராஜ் டிவி. செய்தி இலாகாவில் சீனியர் சப்-எடிட்டராக இருந்துள்ளேன். கேப்பிடல் மார்க்கெட், இதயம் பேசுகிறது பத்திரிகைகளில் எல்லாம் சிறப்பு செய்தியாளராக பணி புரிந்துள்ளேன். இந்தியா - டுடே யில் கதை எழுதியுள்ளேன். கதை, கவிதை, கட்டுரை என பல்வேறு நூல்களை எழுதியுள்ளேன். இந்நிலையில், வேலையில் எனக்கு ஒரு சரிவு ஏற்பட்டது. சினிமா, பத்திரிகை, டிவி-யில் இருப்பவர்களுக்கு இதுதான் நிலை. அப்படி ஒரு நிலையில் மிக அதிகமாக சிரமப்பட்டேன். அது ஒரு நவராத்திரி நேரம். சாயிபாபா பக்தை ஒருவர் என் மீது இருந்த அன்பின் காரணமாக சாயி சத்சரித்திரம் கொடுத்து படியுங்கள், நல்லது

நடக்கும் என்றார். நான் அதைப் படித்து பிரமித்துப் போனேன். உடனே பாபாவுடன் அப்படி ஒரு அற்புதமான ஈடுபாடு ஏற்பட்டது. காப்மேயர், நெப்போலியன் ஹில், எம்.எஸ். உதயமூர்த்தி, கண்ணதாசன் நூல்களைப் படித்துப் பழகியிருந்த எனக்கு சாயிசத்சரித்திரம் பெரிய நம்பிக்கையை கொடுத்தது. அந்த நம்பிக்கை தான் பிறகு பத்திரிகையாக மாறியது.

சாயி சத்சரிதத்தை முழுவீச்சில் படித்து முடித்ததும் அதில் உள்ள மேற்கோள்களை, குறிப்பாக "நம்பிக்கை மொழிகளை சிறு நூலாக அச்சிட்டு இலவசமாக வெளியிட அப்போது ஆசைப்பட்டேன். ஆனால், நானே எதிர்பாராத வகையில் அந்த எண்ணம் பாபாவிற்காக ஏன் பத்திரிகை தொடங்கக் கூடாது என்ற எண்ணமாக விரிவடைந்தது.

ஸ்ரீ சாயிமார்க்கம் பத்திரிகை எப்போது தொடங்கப் பட்டது. அதற்கான நோக்கம் என்ன?

ஸ்ரீ சாயிமார்க்கம் 2002- மே மாதம் ஸ்ரீ ராமநவமி முதல் வெளி வருகிறது. பத்திரிகை தொடங்கி இது ஏழாவது வருடம். ஷீரடி சாயி பாபாவிற்காக முழுமையான பத்திரிகை எதுவும் இல்லாத நிலையில், அவர் பெயரில் ஒரு மாதப்பத்திரிகை தொடங்க வேண்டும், அதை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பது மட்டுமே எனது முதல் நோக்கமாக இருந்தது. இப்போது அந்த நோக்கம் அனுபவம் காரணமாக விசாலம் அடைந்திருக்கிறது.

ஸ்ரீ சாயிமார்க்கம் தொடங்கிய உங்களுக்கு பாபா மீது பக்தி ஏற்பட்டது எப்படி?

நான் முதன் முதலாக சாயி சத்சரித்திரம் படித்த போது பாபாவைப் பற்றி எதுவுமே தெரியாது. அதேபோல, பத்திரிகைத் துறையில் இருந்ததாலோ அல்லது அதற்கு முன் கல்லூரி நாட்களில் கம்யூனிஸ்டுகளின் தொடர்பு இருந்ததாலோ என்னவோ எனக்கு அவ்வளவாக பக்தி கிடையாது.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்

இத்தனைக்கும் ஆசாரமான குடும்பம் எங்களுடையது. பஜனை மரபில் சம்பிரதாய பஜனையையும், சீதா கல்யாண பக்தியையும் கொண்டு வந்த புதுக்கோட்டை கோபால கிருஷ்ண பாகவதர் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். அவர் எனக்குத் தாத்தா. எங்கள் அப்பா அவரோடு கூடவே இருந்தவர். கோபால கிருஷ்ண பாகவதருக்கும் பாபா இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நரசிம்ம சுவாமிஜி சாயி சமாஜம் தொடங்கிய போது, எங்கள் தாத்தாவின் பஜனையை வைத்துக் கொண்டுள்ளார். சாயி சமாஜ மாநாடு ஒன்றில் நீதிபதி ரேகே வந்த போது எங்கள் தாத்தாவும் அதில் பங்கு கொண்டார். அவர் ஷீரடி சாயி பாபாவையும் ஆராதித்து வந்தார்.

இவையெல்லாம் பின்னாட்களில் தான் எனக்குத்தெரியும்.

எஸ். லெக்ஷ்மிநரசிம்மன்



கலை, இலக்கிய, சமூக, ஆன்மிக, அரசியல் பேட்டிகள்

இவர் புதுக்கோட்டையைச் சேர்ந்தவர். ஸ்ரீசாயிமார்க்கம் என்ற ஆன்மிக இதழை 7 வருடங்களாக நடத்தி வருகிறார். எஸ்.எல். நரசிம்மன் என்ற பெயரில் பாம்புச் சுவடுகள் என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.

கேள்வி நேரம் என்ற இந்நூலில் இவர் பல்வேறு முக்கிய பத்தி ரிகைகளில் பேட்டி கண்டு எழுதிய பிரபலங்களின் பேட்டிகள் சுவாரஸ்யமான முறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

தற்போது சென்னையில் முழுநேரப் பத்திரிகையாளராக இருக்கிறார். தீக்கதிர் நாளிதழில் சிறப்புச் செய்தியாளராக இருந்தவர். நக்கீரன், கேப்பிடல் மார்க்கெட் பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் நிருபராகவும் இருந்தவர். ராஜ் டி.வி. செய்திப் பிரிவில் சீனியர் சப்-எடிட்டராகப் பணியாற்றியுள்ளார். தினமணி, அமுதசுரபி, துக்ளக், இதயம் பேசுகிறது, தராசு போன்ற இதழ்களில் எழுதியுள்ளார்.

'ஒரு' என்ற பெயரில் சிறு பத்திரிகை நடத்தியுள்ளார். ஜெயநரசிம்மன் கதைகள், எழுத்தாளர் டைரி, பெண்ணியம் - சமூகம் ஆகியன இவர் எழுதிய நூல்கள். பயப்படாதே நான் இருக்கிறேன் என்ற சாயிபாபா குறித்த புத்தகமும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய மகான் ராமானுஜர் வாழ்க்கை வரலாற்று நூல் விகடன் பிரசுர வெளியீடாக வந்துள்ளது.

ஒரு நிருபரின் டயரி என்கிற இவரது பத்திரிகை அனுபவக் கட்டுரை நூலும், குருப்பெயர்ச்சியும் எட்டாமிடத்து சந்திரனும் என்ற சிறுகதை நூலும், கடவுளிடம் பேசும் கவிதைகள் என்ற கவிதை நூலும் அண்மையில் வெளிவந்துள்ளன.

